Sangathamil
# சங்கத்தமிழ்

குரல் – 120 | சர்வதேச மின் செய்தித்தாள் | மே 01 2026




**சுதந்திரம் வேண்டிக் கிளர்ந்தெழும் ஓர் இனம்
பொருளாதார வாழ்வில்
தன் சொந்தக்காலில் நிற்க வேண்டும்.
அத்தகைய
இனத்தால்தான் சுதந்திரத்தை அனுபவிக்க
இயலுமென்பது நியதியாகும்.**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன்

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

NISHANTHAN LAW OFFICE
SERVICES
- Purchasing a Residential Property
- Selling a Residential Property
- Residential Mortgage Refinancing
- Wills and Powers of Attorney
NOTARY SERVICES
NEW LOCATION
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
39 Devonshire Ave., Markham ON L3S 3P2
McCowan Rd & Devonshire Ave. (Between Steeles & Denison St)

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
- AUDIT
- REVIEW ENGAGEMENT
- NOTICE TO READER
- BUSINESS ADVISORY
- CONTROLLERSHIP SERVICES
- CORPORATE TAXES
- PERSONAL TAXES
- FINANCIAL PLANNING
- CRA AUDITS
- PAYROLL
- BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 402 - 1585 Markham Rd, Scarborough ON M1B 2W1
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

JRS AUTO TECH
Call Subas
Cell: 416-206-9489
Office: 416-628-4399
AC $119.99 +
OIL CHANGE $59.99 +
USED TIRE $74.99 +
BRAKES JOB $299.99 +
7 DAY - OPEN: 9 AM - 9PM
2655 Lawrence Ave., E, Unit 05
Scarborough ON M1P 2S2
ALL MECHANICAL & ELECTRICAL REPAIRS
SERVICE@JRSAUTOTECH.CA

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D
Personal Injury Lawyer
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்கிட என்னை அழையுங்கள்!
Kaja Sivalingam
Sales Representative
647-338-5252
skajaruban@gmail.com
Higher Standard Agents... Higher Results!
HOMELIFE/GTA REALTY INC.
5215 Finch Ave E, Suite 203, Scarborough ON M1S 0C2 OFFICE: 416-321-6969

Muhunthan Sivathasan (Danny)
Graphic Designer & Printer
Silver Print House
Digital Printing, Graphics & Publication
D'impression numérique, les graphiques et la publication
437 423 5460
Silverprinthouse@gmail.com
Please call & book an appointment before visiting... I will provide the adress after booking....

உங்கள் விருப்பத்திற்கேற்ப வீடு, வியாபாரம் வாங்க, விற்க நம்பிக்கையுடன் நாடுங்கள்
ST THINKING OF BUYING OR SELLING
Suresh Theivendram
Broker
416.890.7179
realtorsuresh@outlook.com

RIGHT AT HOME REALTY INC.
JEY RASATHURAI MBA, BBA (Hons)
REALTOR & MORTGAGE BROKER
- Mortgage, Line of Credit, Refinance, Renewal
- Private 1st,2nd & 3rd Mortgages - No Income Verification
- Solutions for Power of Sale Issues
- Buying & Selling & Lease Commercial & Residential Properties
301-305 Milner Ave, Toronto ON M1B 3V4
Cell : 416-624-4843
Bus : 416-816-9011
"NO PROMISES BUT SOLUTIONS"

Kurinchi
Beauty & Makeup
647.918.9742

ACCIDENT HAPPENS!
But your injuries don't have to last a lifetime.
TRUST ARAM LEGAL SERVICES!
ONE CALL - WE WILL HANDLE IT ALL!
Motor Vehicle Accident? Questions? Get Answers
ARAM Legal Services
Selva Thiyagarajah
416-618-1447
www.aramlegal.ca

## விளம்பரத் தொடர்பிற்கு அழையுங்கள்: 437.345.4203



**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

ஒரு புதிய பிறப்பு அறிவித்தல் தளம்

இறந்தவரின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்கு துயர அறிவிப்புக்கு எமது https://Thuyarpakirvu.com இணையம் செயல்படுகிறது. நீங்கள் "துயர் பகிர்வு" இணையத்தில் ஒரு இரங்கல் செய்தியை வெளியிடும் போது, அந்த விபரங்களை ஒரு சில நிமிடங்களில் உலகத்தின் அனைத்து பாகங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இதன் மூலம் நாமும் உங்களுடன் பயணிக்கிறோம்.

மேலும்... சாவு அறிவித்தல், கண்ணீர் வணக்க பகிர்வு, நினைவு நாள் வணக்க பகிர்வு, ஆண்டு நினைவு நாள் வணக்க பகிர்வு, நன்றி நவில்...!

தொடர்புகளுக்கு
437 345 4203
thuyararivitthal@gmail.com

Thuyarpakirvu.com

# தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

சுயநிறைவான, தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாக வேண்டும் என்பதே எனது விரும்பம். மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரிமையுடைய சனநாயக ஆட்சிமுறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.







# சங்கத்தமிழ்

## தொடர்புகளுக்கு

**தொலைபேசி**

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**இணையத்தளம்** (Website)

**www.sangathamil.ca**

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பரதாரர் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# வீரியமுள்ள வித்து

# லெப். கேணல்

# கில்மன் (காந்தன்)




தாக்குதல்கள் செய்வதற்காக அவர்களைப் பாதுகாக்க வேண்டியதாகவும் அவர்கள் பாதுகாப்பாக இருப்பதற்குத் தாக்குதல் செய்ய வேண்டியதுமான களச்சூழலை அப்போது அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்தனது.

ஒவ்வொரு கணத்திலும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டியிருந்த சிரமங்கள் ஏராளம். அவர்கள் சந்தித்த எந்தத் துயர் மலையாலும் துளிகூட அவர்களை நிலைகுலையச் செய்ய முடியவில்லை. ஒவ்வொரு வீரனின் உள்ளமும் உறுதியால் இழைக்கப்பட்டு தேசப்பற்றினால் வைரம் பெற்றிருந்தது. எவ்வளவு கடினத்திற்குள்ளும் விடுதலைக்காய் உழைக்கும் அவர்களின் உழைப்பு வீச்சுள்ளதாய் இருந்தது. அத்தனை வீரத்திற்கும் விடுதலைப்பற்றிற்கும் தலைமைப் பற்றையும் உருவாக்கி வழிநடத்துபவன் யார்?

திருமலையின் காட்டு மரங்களும், மேட்டு நிலங்களும், ஆறுகளும், சதுப்பு வெளிகளும் முகம் மறக்காமல் குரல் மாறாமல் அறிந்து வைத்திருப்பது அவனைத்தானே. ஏன் எதிரி கூட அவன் பெயரை அறிந்து வைத்திருக்கலாம். ஏனென்றால் இவன்தான் அவர்களைப் பலதடவை தொல்லைப்படுத்தியும் இழப்புகளை கொடுத்தும் முகாமுக்குள் முடக்கியும் அவர்களின் எதிர்பார்ப்பு எதையும் நிறைவேற்ற முடியாமலும் அவலத்தையும் ஏமாற்றத்தையும் அவர்களிற்குப் பரிசாகக் கொடுத்திருந்தான். எப்படி அவர்கள் இவனை மறந்திருக்க முடியும்?

ஒவ்வொரு உள்ளமும் உதடும் சேர்ந்து உச்சரிக்கும் பெயர்தான் கில்மன்...

கில்மன்.

அங்கே அந்த உயர்ந்த காட்டிற்குள் ஒவ்வொரு போராளிக்கும் அருகிலிருந்தபடி அவர்களை வீரமாகவும் சகிப்புணர்வுள்ள விடுதலைப் போராளிகளாகவும் வளர்த்துக் கொண்டிருந்தான் கில்மன்.

ஒரு சாதாரண போராளியே ஓய்வுறக்கம் இல்லாது செயற்பட வேண்டிய அந்த நாட்களில் அவர்களின் தளபதியாக அந்த அணியின் ஒட்டு மொத்தத் தேவைகளையும் அணி எதிர்கொள்ள வேண்டிய பிரச்சினைகளையும் நிறைவேற்ற வேண்டிய பணிகளையும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய அவனது உழைப்பு கனதியானதாக இருக்கும்! கடினம் நிறைந்ததாக இருக்கும்!

கில்மன்... எப்படியிருப்பான்?



கில்மன் என்ற பெயர் கொண்ட விடுதலை நெருப்பின் தோற்றம் இப்படித்தான் இருக்கும். சரித்து வாரப்பட்ட தலைமுடி. செந்தளிப்போடு அனைவரையும் வசீகரிக்கும் பரந்த முகம் கருணையையும் கண்டிப்பையும் பிரதிபலிக்கும் பார்வை. சராசரியான உயரம். கம்பீரத்தோடு கூடிய நிமிர்வான தோற்றம். எப்போதும் அமைதியான சிந்தனை. வலுப்பட்டுக்கொண்டு பார்வையைத் தன்பாடே அலையவிடும் சுபாவம். இதுதான் அவனின் வெளித்தோற்றம். அவனுக்குள் கிளர்தெழும் உணர்வுகைள வரைபுகளுக்குள் வடிவமாக்கிவிட முடியாது.

அது மூன்றாம் ஈழப்போரின் ஆரம்ப காலம். அவன்தான் திருமலைக் காட்டிற்குள் வரலாற்றைக் காப்பாற்ற வரலாறு படைத்துக்கொண்டிருக்கும் வீரர்களை வழிநடத்தும் தளபதியாக இருந்தான்.

அந்த அணி அங்கு நகர நினைத்ததே தன்மேலுள்ள பெரிய வரலாற்றுப் பணியொன்றின் தேவையை நிறைவேற்றத்தான். வன்னியின் காடுகளுக்குள்ளிருந்து உருவான சாள்ஸ் அன்ரனி எனும் சீலனின் பெயர்கொண்ட சிறப்புப் படையணியை தலைவர் அவசரமாகத் தலைநகர் அனுப்பியிருந்தார்.

எங்கள் வரலாற்றுப் புகழ்மிக்க தலைநகர் பூமி, சிங்களக் குடியேற்றங்கள் என்ற மறைப்பில் இனவாத கறையான்களால் அழிக்கப்பட்டது. நகரங்களிற் படிப்படியாகச் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கும் அரச படைகளிடம் திருமலைக் காட்டுப் பிரதேசமும் ஏறத்தாழப் பறிபோன நிலையிலிருந்தது. மக்களின் குடியிருப்பு நிலங்கள் எமது கட்டுப்பாட்டிலிருந்து பறிபோனால் காடுகளுக்குள்ளிருந்துவிட்டு பாதுகாப்பாகப் பெரும் படையணியாக உருவாகி தாக்குதல்களைச் செய்து ஒரு காலத்தில் அவற்றைக் கைப்பற்றலாம். காடுகளையும் இழக்க நேர்ந்தால் அந்த மாவட்டத்தில் பின் சிறு தாக்குதல் செய்யவே சிரமமாய் இருக்கும். கால் வைக்கவே அதிகமான உயிர்விலை கொடுக்க வேண்டியிருக்கும். தலைநகருக்கான தாக்குதல் தளத்தை இழந்து போய்விடுவோம். தொடர்ச்சியான எமது பாரம்பரிய நிலம் துண்டாடப்பட்டு வந்தது. எனவே, காட்டையும் காட்டின் கரையோரங்களையும் பாதுகாப்பாக வைத்திருக்கவேண்டும் என்ற தேவை ஏற்பட்டது.

அழிந்துபோய்க்கொண்டிரக்கும் வரலாற்றுச் சுவடியொன்றைப் பாதுகாக்கும் பணியைப்போல முக்கியமானதாகவும் அவசர சிகிச்சை பெறும் நோயாளிக்குத் தேவைப்படும் இரத்ததானம் போல விரைவுபடுத்த வேண்டியதாகவும் இருந்தது அந்தப்பணி.

நிலையான பாதுகாப்புள்ள முகாமோ நிலமோ கட்டுப்பாட்டில் இல்லை. உணவு முதற் கொண்டு மருத்துவம் ஈறாக எந்த விநியோகங்களிலும் நம்பிக்கையில்லை. தங்கிடங்கள் இல்லாமையினால் மழையும், வெயிலும் அச்சுறுத்தல்கள். அதிகமானவர்களுக்குப் பழக்கப்படாத புதிய சூழல். இப்படி, தொடராக இருக்கும் கேள்விகளுக்கெல்லாம் விடை தேடினால் அது கில்மனிடம் தான் கிடைக்கும் என்றே தலைவர் உணர்ந்திருக்க வேண்டும்.

அந்தப் பணியினை நிறைவேற்றவெனத் தெரிவுசெய்யப்பட்ட படையணி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி. சீலன் பிறந்த மண்ணில் அவனது பெயர் தாங்கிய படையணி தாக்குதல் நடவடிக்கைக்காகப் புறப்பட்டது. அங்கே எதிர்கொள்ளப்போகும் நெருக்கடிகள் ஏற்கனவே கணிக்கப்பட்டன.

ஏனெனில் சாள்ஸ் அன்ரனிப் படையணி தோற்றம் பெற்றபோது இவன் பயிற்சி ஆசிரியனாகவே கடமையாற்றினான். சகல ஆயுதங்களின் தன்மைகளையும் பயிற்சி நுட்பங்களையும் நேரடியான அனுபவத்தில் நன்கு அறிந்திருந்தான். வேவு அணிக்குப் பொறுப்பாக இருந்து பல இடங்களிலும் வேவுத் தகவல்கள் திரட்டியிருப்பதோடு, மேலாளர்கள் (அதிகாரிகள்) பயிற்சிக் கல்லூரியில் அவன் படித்த நாட்களிற் கற்றுக்கொண்ட நிர்வாகம் தொடர்பான அறிவும் தந்திரம் தொடர்பான அறிவும், பல தாக்குதல்களுக்குத் தலைமையேற்றிருந்த அனுபவமும் சமர்களில் விநியோகத்தை வழிடத்திய பரிச்சயமும் அவற்றிற்கு மேலாக அவனிடமே கூட விருக்கும் கனிவாக ஒவ்வொரு போராளியின் மனதையும் அரவணைக்கும் தன்மையும் இவன்தான் அந்தப் பணிக்கு ஏற்றவன் என்ற உண்மையை உணர்த்தியது.

கில்மன் சகல துறைகளிலும் வல்லமையும் அனைவரையும் வழிநடத்தும் ஆளுமையும் கொண்டவனாக இருந்தான். நெருக்கடி நிறைந்த களச்சூழலுக்குள் தாக்குதல் இலக்கு ஒன்றைத் தெரிவுசெய்து, வேவு பார்த்து திட்டம் தீட்டுவது, அணி-களை ஒன்றாக்கி பயிற்சி கொடுப்பது, தாக்குதலுக்கு அணிகளை நகர்த்துவது, கைப்பற்றிய ஆயுதங்களையும் காயக்காரர்களையும் பாதுகாப்பாகக் கொண்டுவந்து சேர்ப்பது, பின்னணி மருத்



துவ ஏற்பாடு செய்வது, களஞ்சியப்படுத்துவது இப்படி ஒவ்வொரு தாக்குதலுக்கு முன்னுக்கும் பின்னுக்கும் ஏராளமான அச்சுறுத்தல்கள் காத்திருந்தன. எப்போதும் எதிரியின் தாக்குதலை எதிர்கொள்ளவேண்டிய அச்சுறுத்தல்களுக்கும் அதை முறியடித்துவிடும் விழிப்புணர்வுடனேயே அவர்களின் பணிகள் ஒவ்வொன்றும் நிறைவேற்றின.

ஒவ்வோர் அணிகளுக்கும் இடையே கிலோமீற்றர்க் கணக்கில் நீண்டு விரிந்திருக்கும் காட்டை ஊடறுத்து நுழைவதற்கு அவனது கால்களைத் தவிர வேறு எந்த ஊர்தியையும் பயன் படுத்த வசதியில்லை. அவன் பயன்படுத்துவதுமில்லை. அனைத்து இடங்களிற்கும் ஓயாது அவன் நடந்து செல்வான். வியர்வை சிந்தச் சிந்த, மூச்சு வாங்க வாங்க அவனது நடை தொடர்ந்தது. அந்தக் காட்டுப் பகுதியில் அவன் சுவடு படாத இடம் இல்லையென்றே சொல்லலாம்.

நீண்ட நடையும் அவனது ஓயாத உழைப்பும் அவனின் விடுதலைக் கனவினைப்போல வைரம் பெற்றிருந்தன. சிறுசிறு தாக்குதல்களைச் செய்து எமது கால்களைத் திருமலைக்காட்டில் வலுவாகப் பதித்துக்கொண்டிருக்கவே அணிகள் எதிர்கொள்ள வேண்டிய நெருக்கடிகளும் பெருகிக்கொண்டே இருந்தன.

ஒருவேளை உணவுக்கே காத்திருக்கவேண்டியும் உணவு எடுக்கச்சென்று சண்டையிட வேண்டியதுமான சூழல் இறுக்கத்தில் இருந்தாலும் கில்மனின் அன்பும் அரவணைப்பும் ஒவ்வொரு போராளியையும் உறுதியான உளவுரணோடு இருக்கச் செய்தது. எப்போதும் எளிமையாய் உடையணிந்துகொண்டு எல்லோருடனும் அன்பாய்ப் பழகிக்கொண்டிருக்கும் அவன்தான் குறுகிய காலத்தில் அந்தப் பிரதேசத்தின் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினான்.

ஆங்காங்கே எதிரிகள் மேலே தாக்குதல்கள் மேற்கொண்டு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. திறமையோடு சண்டை செய்த வீரர்களை இதய நிறைவோடு பாராட்டி அடுத்த சண்டைக்கு அனைவரையும் தயார்ப்படுத்துவான்.

நீண்ட காத்திருப்பின், பெரும் சிரமத்தின் பின் கிடைக்கின்ற அளவுச் சாப்பாட்டைச் சாப்பிடுவதற்காக கில்மனும் ஒரு போராளியைப்போல் சமையற்கூடம் வந்து காத்துக்கொண்டிருப்பான். கையில் ஒரு கோப்பையோடு, அமருவதற்கு வசதியான ஒரு மரக்குற்றியில் அமர்ந்தபடி எங்காவது தூரச்சிந்தித்துக் கொண்டிருப்பான்.

மரக்குற்றியில் அமர்ந்திருக்கும் அவனது நெஞ்சின் ஒரு மூலையிற் பழைய நினைவுகளும் உட்கார்ந்திருக்கும். சில நாட்களில் தள்ளாடும் முதியவரின் நடையைப்போல தளர்ந்த நடையில் நினைவுகள் உலாவத்தொடங்கும்.

அவன் இந்தப் போராட்டத்திற் பங்களிப்புச் செய்த தொடக்க நாட்களும் ஊருக்குள் அந்தக் இந்தக்கதை கசிந்தபோது அவன் எதிர்கொள்ள வேண்டியிருந்த அச்சுறுத்தலும் எங்கோ தூரத்தில் ஒரு நாடகம் நடப்பதைப்போல அவனை உணரவைக்கும். உறவுகள் ஒவ்வொன்றின் குரலும் தொலைவிலிருந்து கேட்பதாய் இருக்கும்.

சின்ன வயதிலேயே அவன் இயக்கத்தின் ஆதரவாளனாகத் தீவிரமாய் உழைத்தபோது இந்திய இராணுவம் அவனைப் பின்தொடர ஆரம்பித்தது. அவனும் அவனது குடும்பமும் எதிர்கொண்ட துன்பங்கள்... பின் அனைத்துத் துயரங்களுக்கும் தீர்வு காணவேண்டுமென்ற இலட்சியத்தோடு போராட்டத்தில் இணைந்துகொண்டான் (13.07.1990). இப்படி நினைவுகள் அலைமோதும் பயிற்சிப் பாசறையில் ஒவ்வொரு பயிற்சியிலும் திறமையான அவனின் செயற்பாட்டால் அவனின் விடுதலைப் பற்றை நிலையைச் சரியான முறையில் இனங்கண்டுகொள்ள வைத்தது பாசறையில் அவனுடைய பொறுப்பாளர்களால்.

எதிர்காலத்தில் தளபதியாக வரப்போகும் அந்த விதை ஆரம்பத்திலேயே வீரியமுள்ளதாகவே வெளிவந்தது. அந்த விருட்சத்தை, அதன் விலாசத்தை அது உருவாக்கப்போகும் விசாலத்தை ஆரம்பத்திலேயே இனங்காட்டியது அவனின் இயல்புகளும் செயல்களும்.

அதற்குப்பின் கிடைத்த சந்தர்ப்பத்தில் அவன் காட்டிய திறமை, தொடர்ந்து வந்த களவாழ்வில் வெளிப்பட்ட அவனது தனித்தகைமை, அதனால் ஆரம்பத்தில் பயிற்சி ஆசிரியனாய், பின் விநியோகப் பொறுப்பாளனாய், வேவு அணிகளின் நடத்துனனாய் அவன்பணி வளர்ச்சிப்படியில் ஏறிக்கொண்டிருந்தது. அதிகாரிகள் பயிற்சிக்கல்லூரிப் படிப்பு முடிந்து வந்ததும் அவன் ஏற்றுக்கொண்ட "பலவேகய-2"ற்கான விநியோக நடவடிக்கை இவனை ஒரு தளபதி என்று கூறக்கூடியளவு ஆளுமை நிறைந்ததாக உருவாக்கியிருந்தது. போராட்ட வாழ்வின் அந்த ஆரம்பப் பகுதியிலேயே தலைவருக்கு அவனை இனங்காட்டியது.

பின் 1992ஆம் ஆண்டு மாவீரர் நாளுக்கு சமராக அமைந்த வளலாய்த் தொடர் காவலரண் மீதான தாக்குதல் நடவடிக்கையில் ஒரு பகுதிக்கு கட்டளை வழங்குபவனாக கில்மன் நியமிக்கப்பட்டபோது, அந்தச் சமரின் முடிவில் அவனது போர்த் திறமை, கட்டளை வழங்கும் ஆற்றல் சந்தேகத்திற்கு இடமற்றவாறு நிரூபிக்கப்பட்டன. மூத்த தளபதிகளால் பேசப்படுபவனாகக் கில்மன் மாறினான். இதன் படிநிலை வளர்ச்சியின் உயர்வாய், தலைவரின் நம்பிக்கையின் வெளிப்பாடாகச் பின்னாளில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதியாகக் கில்மன் நியமிக்கப்பட்டு தலைநகர்க்காடுகளில் அவன் கால்கள் நடந்தன.

ஓய்வறியாத அவன், வரைபடத்தை விரித்துப் பார்த்தபடியோ எழுதுவதற்கும் வாசிக்கவும் தெரியாத போராளிகளுக்கும் பாடம் சொல்லிக் கொடுத்துக்கொண்டோ இருப்பான். அங்கே எதிர்கொண்ட தாக்குதல்கள் ஒவ்வொன்றிற்கும் பின் கில்மனின் முகமே சிரிப்போடு தெரியும்.

காடு எதிரியின் வசமிருந்து எமது வசப்பட்டபோது அதனைச் சகித்திருக்கமுடியாத எதிரி அதனால் எதிர்காலத்தில் உருவாகக்கூடிய சிக்கல்களை உணர்ந்தவனாய் திருமலை வந்திருக்கும் எமது தாக்குதல் அணிமீது காடுகளை நோக்கிப் பெருமெடுப்பிலான இராணுவ நடவடிக்கை ஒன்றிற்குத் திட்டமிட்டான். 31.05.1995 "ராமசக்தி-03" என்ற இராணுவ நடவடிக்கை எமது வசமிருந்த காடுகளை நோக்கி அலைபுரண்டு வந்தது. கில்மன் இதனை முன்னுணர்ந்து இருந்தானோ என்னவோ உடனே செயலில் இறங்கினான். தனது அணிகளை எதிர்ச் சமரிற்குத் தயாராக்கினான். செயல்முறைத் தாக்குதல் திட்டத்தை வகுத்து அதனை விளங்கவைத்தான். முன்னேறி வந்த எதிரிக்கு மூக்குடைத்து அனுப்பும் மூர்க்கத்தோடு அணிகளை வழிநடத்தினான் கில்மன்.




அலைபுரண்டதுபோல் காடுகளில் முன்னேறிய எதிரிப்படை துவண்டுபோய்ப் பின்வாங்கியது. சும்மாவல்ல, தனது கேணல் தர, கப்டன் தர அதியுர் அதிகாரிகளையும் இழந்து பத்துப் படையினரின் உடல்களையும் விட்டு ஆயுதங்களையும் கைவிட்டு அவமானத்தைக் கையிலேந்தியவாறு அவர்ககளைப் பின்வாங்க வைத்தான் அன்று கில்மன். அரச தரப்புத் பதினேழுபேர் கொல்லப்பட்டும் 35 பேர் காயமடைந் ததாகவும் பலர் காணாமற்போயுள்ளதாகவும் கூறி விடயத்தைச் "சடைய" முனைந்தது. சிறிய அணி. பெரியசமர். வெற்றி சாதாரணமானதல்லவே! ஆனால் ஒருநாள் (28.06.1995) செய்தி வந்தது.

தலைநகரில் சீலனின் பெயர் தாங்கிய படையணியைத் தலைவனின் எதிர்பார்ப்புக்கு அமையத் வெற்றிநடை போட வைத்து எம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்திக் கொண்டிருந்த கில்மன் வீரச்சாவாம். எதிரி மீது தாக்குதல் நடத்த முயன்றபோது வெடிவிபத்தாம். அவனை அறிந்தவர்களுக்கு இடிவிழுந்தது போல் இருந்தது. இனிக் கில்மன் என்றொருவன் இல்லை. இனிக் கில்மனின் ஆளுமை உயராது? அந்த வெடிமருந்து பொய்த்துப் போயிருந்தால்... எவ்வளவு நன்றாய் இருக்கும்! மனம் நப்பாசையில் துடித்தது.

- துளசிச்செல்வன்
விடுதலைப்புலிகள் - வைகாசி, ஆனி, 2003

# தமிழீழச் செய்திகள்



# யாழ். பல்கலைக்கழகத்தில் அன்னை பூபதியின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் வார நிகழ்வு அரம்பம்

15.04.2026

தமிழர் தாயகத்தில் இந்திய இராணுவம் புரிந்த அடக்குமுறைக ளுக்கு எதிராகத் தொடர்ச்சியாக 31 தினங்கள் உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த ஈகத்தைத் தாய். அன்னை பூபதியின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் வார ஆரம்ப நிகழ்வுள செவ் வாய்க்கிழமை (14.03.2026) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொது நினைவுத் தூபியடியில் இடம்பெற்றது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் இந் நிகழ்வு நடைபெற்றது.











# அன்னை பூபதியின் நினைவு ஊர்தி திருகோணமலை சென்றடைந்தது

16.04.2026

அன்னை பூபதியின் 38ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படம் தாங்கிய ஊர்தி இன்று (16) காலை திருகோணமலை சிவன் கோவிலடியை சென்றடைந் தது.

இதன்போது பொதுமக்கள் அன்னாரது உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து, தீபச் சுடரேற்றி மலர் தூவி வணக்கம் செலுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து திருகோணமலையின் முக்கிய பகுதிகளிலும் அவருடைய உருவப்படத்திற்கு பொது





மக்களால் மலர் வணக்கம் செலுத்தப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் கடந்த 9ஆம் திகதி யாழ்ப்பாணம் நல்லூர் ஈகைச்சுடர் லெப். கேணல் திலீபனின் நினைவாலயத்தில் இருந்து ஆரம்பமான ஊர்திப் பவனியானது வடக்கு, கிழக்குப் பிரதேசங்கள் முழுவதும் ஊர் வலமாக சென்று, இறுதி நாளில் மட்டக்களப்பில் உள்ள தியாக தீபம் அன்னை பூபதியின் சமாதி அமைந்துள்ள பகுதியை சென்

www.sangathamil.com



"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# தையிட்டி விகாரை: காணிகளை அளவிட முயல்வது காணி சுவீகரிப்பின் முதல் படியா? காணி உரிமையாளர்களின் கலந்துரையாடலில் ஆராய்வு

15.04.2026

யாழ். தையிட்டி விகாரை அமைந்துள்ள காணியை அளவீடு செய்யும் பணிகளுக்கு காணி உரிமையாளர் சம்மதம் தெரிவித்தால், அதனால் ஏற்படக்கூடிய சாதக, பாதக நிலைமைகள் தொடர்பாக நேற்றைய தினம் புதன்கிழமை (15) மாலை கலந்துரையாடப்பட்டது.

தையிட்டி காணி உரிமையாளர்களின் ஏற்பாட்டில் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் உள்ளிட்ட அரசியல் தலைவர்கள், சட்டத்தரணிகள் மற்றும் சிவில் சமூகப் பிரதிநிதிகள் கலந்துகொண்டு தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

காணியினை அளவீடு செய்வதனால், காணிக்கான வரைபடத்தினை பெற்றுக்கொள்வதனால், காணிகளை உறுதிப்படுத்த அவை உதவியாக இருக்கும். தற்போது வரையில் 17 காணி உரிமையாளர்கள் தமது காணி உறுதிகளோடு இருந்தாலும், அவர்களின் காணிகளை அடையாளம் காண முடியாத நிலைமை காணப்படுகிறது.

காணிகளை அளவீடு செய்ய அனுமதிப்பதன் ஊடாக அவற்றுக்கான வரைபடங்களை பெற்றுக்கொள்ள முடியும். வரைப்படங்களின் அடிப்படையில் காணிகளை அடையாளம் கண்டு, தொடர்ந்தும் காணி விடுவிப்புக்கான போராட்டத்தை முன்னெடுக்க முடியும்.

அதேவேளை, காணிகளை அளவீடு செய்ய சம்மதித்தால், அதனைக் கொண்டு காணிகளை சுவீகரித்துவிடுவார்களோ என்ற நியாயமான சந்தேகம் காணி உரிமையாளர்களுக்கு இருப்பதனால், காணி அளவீடு செய்யும் பணிகளுக்கு அனுமதிக்கும் போது, “இந்த காணிகளை விடுவிக்கும் நோக்குக்காக மாத்திரமே காணிகளை அளவீடு செய்ய சம்மதிக்கிறோம். வேறு எந்த நோக்கங்களுக்காகவும் நாம் காணிகளை அளவீடு செய்ய சம்மதிக்கவில்லை” என தொனிப்பட சட்டத்தரணிகள் மூலம் சம்மத கடிதங்களை நில அளவை திணைக்களத்திற்கு சமர்ப்பித்த பின்னர், காணிகளை அளவீடு செய்ய அனுமதித்தால், பிற்காலத்தில் காணிகளை சுவீகரிக்க முயன்றால், சட்டப் போராட்டங்களையும் நடாத்த முடியும் என பெரும்பாலோனோர் கருத்து தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

இதேவேளை, இலங்கையின் நீதித்துறையை, சட்டங்களை நாம் நம்பி நம்பி ஏமாந்துபோயுள்ளோம். நீராவியடி பிள்ளையார் கோவிலடியில் பிக்குவின் உடலை தகனம் செய்ய நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்தது. அதனை மீறியும் உடல் தகனம் செய்யப்பட்டது.

குருந்தூர் மலையில் கட்டுமானத்தை நிறுத்தச் சொல்லி தடை உத்தரவு வழங்கப்பட்டது. அதனையும் மீறி விகாரை கட்டப்பட்டது மாத்திரமின்றி, தடை உத்தரவு பிறப்பித்த நீதிபதிக்கு அழுத்தங்களை கொடுத்தமையால், அவர் நாட்டை விட்டே தப்பிச் சென்றுள்ளார்.

இவ்வாறான நிலையில், தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை அளவீடு செய்ய சம்மதித்தால், அதனை சுவீகரிப்புக்கான முதல் படியாக கொண்டு, எதிர்காலத்தில் இவ்வளவு காணிகளும் தையிட்டி விகாரைக்கு என வர்த்தமானி அறிவித்தல் ஊடாக இலகுவாக காணிகளை சுவீகரித்துக்கொள்வார்கள்.

எந்தவொரு இடத்திலும், காணிகளை அளந்து விடுவிக்கவில்லை. அவர்கள் காணிகளை விடுவிக்கட்டும், காணி உரிமையாளர்கள் அளந்து தமது காணிகளை எல்லைப்படுத்திக்கொள்வார்கள்.

காணிகளை அளந்துதான் விடுவிப்போம் என சொல்வதில் ஏதோ மர்மம் இருக்கிறது.

அதேநேரம் தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளில் 17 பேரே காணி உறுதிகளோடு அடையாளம் காணப்பட்டுள்ளனர். இன்னும் சிலரிடம் உறுதிகள் இல்லாமலும், காணி உரிமையாளர்களை அடையாளம் தெரியாமலும் இருக்கிறது. அவ்வாறான காணிகளை ‘உரிமை கோரப்படாத காணிகள்’ என அரசாங்கம் சுவீகரிக்க வாய்ப்புக்கள் உள்ளன.

எனவே நாம் காணிகளை அளவீடு செய்ய சம்மதிக்காமல், விகாரையை முற்றாக அகற்று என தொடர்ந்து போராடி விகாரையை அகற்ற வைக்க வேண்டும்.

காணிகளை அளவீடு செய்து சிலரின் காணிகளை மாத்திரம் விடுவித்து ஏனைய காணிகளை சுவீகரிக்கும் எண்ணம் கூட அவர்களுக்கு இருக்கலாம். எனவே நாம் தொடர்ந்து விகாரையை அகற்று எமது காணிகளை விடுவி என போராடுவதே சிறந்தது என கருத்து தெரிவித்தனர்.







இறுதியில் காணிகளை அளவீடு செய்ய சம்மதிப்பதா? இல்லையா என்ற எந்த முடிவும் எட்டப்படாத நிலையில், கூட்டம் நிறைவடைந்துள்ளது.

குறித்த காணிகளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அளவீடு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், காணிகளை அளவீடு செய்ய சம்மதிப்பதா, இல்லையா என்ற முடிவுக்கு காணி உரிமையாளர்கள் வரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்த கருத்தை உடன் வாபஸ் பெற வேண்டும்!

## இலங்கை இந்து சமயத் தொண்டர் சபை

16.04.2026

வவுனியா வெடுக்குநாறி மலையில் காணப்படும் தடயங்கள் அனைத்தும் பௌத்தத்துக்குரியது எனத் தெரிவித்தது மட்டுமல்ல விரைவில் வர்த்தமானிப்படுத்தப்படும் எனவும் பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி தெரிவித்த கருத்துக்கு இலங்கை இந்துசமயத் தொண்டர் சபை கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. அமைச்சர் வெளியிட்ட கருத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் எனவும் இலங்கை இந்துசமயத் தொண்டர் சபை வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை இந்துசமயத் தொண்டர் சபையினர் வியாழக்கிழமை (16.04.2026) இரவு கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளனர்.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
வெடுக்குநாறி மலை தொடர்பாகப் பௌத்த சாசன அமைச்சர் சுனில் செனவி வியாழக்கிழமை (09.04.2026) நாடாளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்கு கடுமையான கண்டனத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

வெடுக்குநாறிமலை என்பது தமிழர்களின் பாரம்பரிய வழிபாட்டுத் தளமாக நீண்டகாலமாக இருந்து வருகின்றது. இங்கு வழிபாட்டு முறைமை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயமாக நீண்ட காலமாகச் சைவசமயத்தவர்களால் வழிபாடு நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அப் பகுதி மக்களின் வரலாறு, கலாச்சாரம் மற்றும் தொடர்ச்சியான ஆன்மீகச் செயல்பாடுகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறான சூழலில் எந்தவிதப் பரந்த ஆய்வும் இல்லாமல் ஒருதலைப் பட்சமாக இத் தளம் பௌத்த மதத்தினருக் குரியது என அறிவிப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும். இந்த ஆட்சியாளர்கள் இதன்மூலம் மிகத் தெளிவாகத் தமது இனவாத, மதவாதப் போக்கினைக் கடைப்பிடிக்கிறார்கள் என்பதற்கு இதைவிட ஆதாரம் தேவையில்லை. இது மிக மோசமான அதி கார துஷ்பிரயோகமாகும். இதனால், இன முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும்.



இத்தகைய அறிவிப்புக்கள் வரலாற்று உண்மைகளை மறைக்கும் முயற்சியாகும். தமிழ்மக்களினது மத மற்றும் கலாச்சார உரிமைகளை மீறும் செயலாகும். சமூக நல்லிணக்கத்தைப் பாதிக்கும் அபாயத்தை ஏற்படுத்தும். பல இன, பல மத மக்கள் இணைந்து வாழும் நாட்டில் பொறுப்பான பதவியிலுள்ளவர்கள் சம நிலையுடனும், நியாயத்துடனும் கருத்து வெளியிட வேண்டும். எந்தவொரு சமூகம் அல்லது மதத்தினரின் உரிமைகளையும் புறக்கணிக்கும் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பெரும் பாதிப்புக்களை உருவாக்கக் கூடும்.

வெடுக்குநாறிமலை தொடர்பாகச் சுயாதீன மற்றும் உண்மையான விஞ்ஞான ரீதியான ஆய்வு நடத்தப்பட வேண்டும். அப் பகுதி மக்களின் வரலாற்று மற்றும் வழிபாட்டு உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். இவ்விடயத்தில் நீதியும், சமத்துவமும் நிலைநிறுத்தப்பட வேண்டும் எனவும் அந்த ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

www.sangathamil.com

# தையிட்டி காணிகள் விடுவிக்கும் நோக்கில் அரசாங்கம் செயற்படுவதாகத் தெரியவில்லை!

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன்

16.04.2026

யாழ். தையிட்டி விகாரை பிரச்சினை சர்வதேச நாடுகளால் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றது. எதிர்வரும் நாட்களில் அமைச்சர்கள் குழு வெளிநாட்டுக்கு செல்லவுள்ளது. அதனாலேயே வெளிநாடு செல்வதற்கு முன்னர் தையிட்டி பிரச்சினையைத் தீர்ப்பது போன்று காட்டிக்கொள்வதற்காக அவசர அவசரமாக காணி உரிமையாளர்களோடு கலந்துரையாடப்பட்டுள்ளது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் புதன்கிழமை (15) நடைபெற்ற 'தையிட்டி : அடுத்து என்ன?' எனும் தலைப்பில் தையிட்டி காணி உரிமையாளர்களுக்கும் சிவில் சமூக பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தையிட்டி விகாரையின் பெயர்ப்பலகையில் சிறீலங்கா இராணுவத்தினரால் கட்டப்பட்டு அவர்களால் பராமரிக்கப்படுகின்ற விகாரை என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த விகாரை பாதுகாப்பு அமைச்சுக்கு சொந்தமானதா என்ற ஒரு கேள்வியும் எழுகின்றது.

விகாரை அமைந்திருக்கும் காணி உரிமையாளர்கள் அந்த விகாரையின் வாசலுக்குக் கூடச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது.

தென்பகுதியில் குழப்பங்கள் ஏற்படும் எனக் கூறிக்கொண்டு தையிட்டி விகாரைக்கு பலத்த பாதுகாப்பு தொடர்ந்தும் வழங்கப்படுகின்றது. இதன் அர்த்தம் அந்த விகாரையில் இருக்கக்கூடிய ஒரு துண்டு நிலத்தைக் கூட விடுவிக்க முடியாது என்பதே ஆகும்.

தையிட்டி விகாரைப் பிரச்சினை சர்வதேச நாடுகளால் மிகவும் உன்னிப்பாக அவதானிக்கப்படுகின்றது.

அண்மையில் வருகை தந்திருந்த ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தையிட்டி விகாரைப் பிரச்சினை தொடர்பாகவும் எங்களோடு கலந்துரையாடியிருந்தார். அந்த விகாரைப் பிரச்சினை தொடர்பாக தாங்கள் தொடர்ந்தும் அவதானித்து வருகிறார்கள் எனவும் எங்களிடம் தெரிவித்திருந்தார்.

தையிட்டி விவகாரம் தொடர்பில் உலக நாடுகளால் இந்த அரசாங்கத்திற்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது.

எதிர்வரும் நாட்களில் அமைச்சர்கள் குழு வெளிநாட்டுக்குச் செல்லவுள்ளது. அதனாலேயே வெளிநாடு செல்வதற்கு முன்னர் தையிட்டிப் பிரச்சினையைத் தீர்ப்பது போன்று காட்டிக்கொள்வதற்காக அவசர அவசரமாக காணி உரிமையாளர்களோடு கலந்துரையாடப்பட்டுள்ளது.

வேறு இடங்களில் காணிகளை சுவீகரிக்கின்ற போது எழுத்து மூலமான அறிவிப்பின் மூலமே காணிகளை சுவீகரிக்கிறார்கள். ஆனால் தையிட்டி விகாரைப் பிரச்சினையில் நடப்பதோ வேறு விதமாக உள்ளது.

நில அளவைகள் திணைக்களம் எந்தக் கட்டளையின் அடிப்படையில் இந்தக் காணிகளை அளவீடு செய்வதற்கு தயாராகின்றது? எழுத்து மூலமாகக் கட்டளைகள் எதுவும் வழங்கப்பட்டிருக்கின்றதா? அவ்வாறாயின் என்ன தேவைக்காக குறித்த காணிகள் அளவிடப்படுகின்றன என அந்த எழுத்து மூல ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்ற கேள்வி எழுகின்றது.

மக்களுக்கு காணிகளை விடுவிப்பதற்காகவே இந்த அரசாங்கம் காணிகளை அளவீடு செய்கின்றது என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

குருந்தூர் மலையிலும் அகழ்வுப் பணிகளை மாத்திரமே செய்வோம், எதுவித கட்டுமானப் பணிகளும் இடம்பெறாது என அப்போதைய புத்தசாசன அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார். ஆனால் தற்போது ஒரு விகாரை முழுமையாக கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. இப்படி தையிட்டி பகுதியிலும் பிரச்சினை கைமீறிப்போன பின்னர் எதிர்ப்புக் காட்டி எதுவித பலனும் இல்லை.

தையிட்டிப் பகுதியில் தொடர்ந்தும் ஆக்கிரமிப்புகள் இடம்பெற்று வருகின்றன. மூன்று வருடங்களாக இடம்பெறும் தொடர்ச்சி



யான போராட்டங்கள் காரணமாகவே அந்த ஆக்கிரமிப்புகள் கட்டுப்படுத்தப்பட்டன. இல்லையெனில் அந்த இடம் முழுவதுமே ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும்.

தையிட்டி காணி உரிமையாளர்கள் மாற்றுக் காணிகளை பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கின்றனர் என வடக்கு மாகாண ஆளுநர் அபத்தமான பொய் ஒன்றை அண்மையில் கூறியிருந்தார்.

தொடர்ந்தும் தையிட்டி விகாரை பகுதியைச் சூழ உள்ள காணிகளுக்குப் பொலிஸ் மற்றும் இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. இவற்றையெல்லாம் அவதானிக்கின்றபோது காணிகளை விடுவிக்கும் நோக்கிலேயே அரசாங்கம் செயற்படுகின்றது என்ற உத்தரவாதம் இல்லை என்றே கூற வேண்டும்.

அரசாங்கம் காணிகளை அளவீடு செய்து மக்களுக்கு வழங்கும் என்பதனை எழுத்து மூலமாக அறிவிக்குமானால் காணிகளை அளவீடு செய்வதற்கான அனுமதி வழங்குவது தொடர்பில் சிந்திக்கலாம். ஆனால் அப்படி ஓர் எழுத்துமூல உத்தரவாதத்தை தராத நிலையில் அளவீட்டுப் பணிகளை அனுமதிக்க முடியாது என்றார்.

# வெடுக்குநாறி மலை தமிழர்களின் பூர்வீக நிலம்: புத்தசாசன அமைச்சரின் கருத்து பௌத்தமயமாக்கலின் வெளிப்பாடே!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ். தவபாலன்

16.04.2026

வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலை, தமிழர்களின் பூர்வீக நிலமாகும். புத்தசாசன அமைச்சரின் கருத்து பௌத்தமயமாக்கலின் வெளிப்பாடே என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ். தவபாலன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இன்று (16) நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.






அவர் மேலும் கூறுகையில்,

புத்தசாசன அமைச்சர் வெடுக்குநாறி மலை பௌத்தத்திற்குரியது எனக் கூறியுள்ளார். இதனை ஏற்க முடியாது.

வவுனியா வடக்கு வெடுக்குநாறி மலை ஆலய வழிபாடுகளுக்கு செல்பவர்களை கடந்த அரசாங்கங்களைப் போன்று ஜேவிபி அரசாங்கமும் கைது செய்ய முனைகிறதா என்ற கேள்வி எழுகிறது.

வெடுக்குநாறி மலை ஆலயம் அமைந்துள்ள இடத்தில் இருந்து 15 கிலோமீற்றர் தூரத்துக்குள் தான் 24 மில்லியன் ரூபாய் செலவில் ஜேவிபியால் கொண்டுவரப்படுகின்ற கிவுல் ஓயா திட்டம் செயற்படுத்தப்பட இருக்கின்றது.

மிகப் பெரிய காடுகளை அழித்து இந்த கிவுல் ஓயாத் திட்டம் கொண்டுவரப்பட இருக்கின்றது. அதற்கு எதிரான விமர்சனங்கள், போராட்டங்கள் இடம்பெற்று வரும் நிலையில் வெடுக்குநாறி மலை தொடர்பில் புத்ததாசன அமைச்சர் தெரிவித்த கருத்தும் வவுனியா வடக்கை முழுமையாக ஆக்கிரமித்து சிங்கள பௌத்தமயமாக்கலை தான் ஜேவிபியும் கொண்டு செல்கின்றதா என்ற கேள்வியை எழுப்புகிறது.

அந்த வகையில் பௌத்தமயமாக்கலை மேற்கொள்கின்ற மற்றும் மலைகள், தொல்லியல் சின்னங்கள் இருக்கின்ற இடங்களையும் பௌத்தமயமாக்குகின்ற செயற்பாட்டை வன்மையாக கண்டிக்கின்றோம்.

இங்கு சைவ வழிபாடு நீண்டகாலம் இடம்பெற்று வந்திருக்கின்றது. 2024ஆம் ஆண்டு சிவராத்திரி வழிபாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தினார்கள். நாங்கள் சிறை வரை சென்று வந்துள்ளோம்.

எந்த துன்பங்கள் வந்தாலும் எங்களது ஆலயத்தையும் வரலாற்றையும் விட்டுக் கொடுக்க தயாராக இல்லை. அது தமிழர்கள் வாழ்ந்த பூர்வீக நிலம். 1990 காலப்பகுதியில் இந்த ஆலயத்தில் வழிபட்டமைக்கான ஆதாரங்கள் கூட உள்ளன.

பல ஆதாரங்கள் மற்றும் முன்னர் வாழ்ந்தவர்களது வரலாற்று கருத்துக்கள் இருக்கின்றது. இது முற்று முழுதாக தமிழர்களது பூர்வீக இடம். அங்கு சைவ வழிபாட்டை அழிப்பதற்கும் பௌத்தமயமாக்கலை மேற்கொள்வதற்கும் ஜேவிபி எடுத்து வரும் முயற்சியை ஒருபோதும் அனுமதிக்க முடியாது.

இவர்களது செயற்பாடு இவ்வாறு தொடருமானால், மக்களை திரட்டி பெரியளவிலான போராட்டங்களை எல்லா இடங்களிலும் நடத்தும் நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம்.

வெகுவிரைவில் வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை பாதுகாப்பதற்காகவும் புத்தசாசன அமைச்சரின் கருத்துக்கு எதிராகவும் மக்களை திரட்டி போராட தயாராகி வருகின்றோம். அதற்கான அழைப்பையும் விடுக்கின்றோம்.

அனைத்து தரப்புகளும் எமது வழிபாடுகளை பாதுகாக்கின்ற அத்தனை அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். இந்தப் போராட்டத்தை பெரியளவில் செய்து எமது இருப்பை பாதுகாக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

# கடற்தொழில் அமைச்சருடனான சந்திப்பில் எமது நிலைப்பாடுகளை தெரிவிக்க அனுமதிக்கவில்லை!

## தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்

16.04.2026

எமது காணிகளை அளவீடு செய்வது தொடர்பில் கடற்தொழில் அமைச்சர் நடாத்திய ஊடக சந்திப்பில் நாமும் கலந்துகொண்டு அமைச்சருக்கு முன்னால் எமது நிலைப்பாடுகளை ஊடகங்களுக்கு தெரிவிக்க விருப்பம் தெரிவித்த போது எமக்கு அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.



தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை அளவீடு செய்யும் பணிகள் வெள்ளிக்கிழமை (17) நடைபெறவுள்ள நிலையில், காணிகளை அளவிடுவதற்கு சம்மதிப்பதா, இல்லையா? என்பதனை தீர்மானிப்பது தொடர்பில் காணி உரிமையாளர்களால் யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் புதன்கிழமை (15) கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் ஆரம்பத்தில் காணி உரிமையாளர்கள் கருத்து தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறியிருந்தனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

காணி உறுதி உள்ளவர்களின் காணிகளை தான் அளவீடு செய்யப் போகிறார்கள். காணி உறுதி இல்லாதவர்களின் காணிகள் தொடர்பான நிலைப்பாடு என்ன என்பது தொடர்பாகவோ, அதற்கான தீர்வு தொடர்பாகவோ எதுவும் எமக்கு அறியத் தரப்படவில்லை.

விகாரை அமைந்துள்ள காணிகளை விடுவிப்பது தொடர்பில் கொழும்பில் பெப்ரவரி 17ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தான் எமது 17 பேரின் காணி உறுதிகளும் உண்மையானவை என உறுதி செய்துள்ளார்கள். அதன் பின்னர் அந்த காணிகளுக்கான வரைபடங்களை கீறுவதற்காக காணிகளை அளவீடு செய்வது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அது தொடர்பில் காணி உரிமையாளர்கள் எங்களுக்கு எதுவும் தெரியப்படுத்தாமல், சுமார் 2 மாதங்களின் பின்னர் கடந்த 11ஆம் திகதி சனிக்கிழமை எம்மை மாவட்ட செயலகத்திற்கு அழைத்து காணிகளை அளவீடு செய்யப் போகிறோம். அதற்கு உரிமையாளர்கள் சம்மதிக்க வேண்டும் எனச் சொன்னார்கள்.

அதில் எங்களுக்கு பல சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளன. காணி விடுவிப்பு தொடர்பிலான கூட்டம் என இதுவரை மூன்று கூட்டங்கள் கொழும்பில் நடைபெற்றுள்ளன.

விகாராதிபதியை கூட்டத்திற்கு அழைத்துச் செல்வார்கள். எமக்கு கூட்டம் தொடர்பில் எதனையும் அறிவிக்க மாட்டார்கள். கூட்டத்தில் என்ன கதைக்கப்பட்டது என்று யாரும் எமக்கு கூற மாட்டார்கள். ஊடகங்களுக்கும் அவை தொடர்பில் எதனையும் கூறமாட்டார்கள். கூட்ட அறிக்கைகளை கூட நாம் கேட்டு, எமக்கு அதனை தந்ததில்லை.

காணிகளை அளவீடு செய்ய வேண்டும் என கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட விடயத்தை இரு மாதங்களின் பின்னர் எமக்கு குறுகிய கால இடைவெளியில் அழைப்பு விடுத்து, கூறி காணியை அளவீடு செய்ய சம்மதம் கோருகின்றனர். அதற்கு சம்மதிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் நாம் மற்றவர்களுடன் கலந்துரையாடி ஒரு தீர்வினை பெற எமக்கு கால அவகாசம் தரக்கூடாது என்பது போன்றே செயற்பட்டுள்ளனர்.

காணி அளவீட்டுப் பணிகள் காணி விடுவிப்புக்காக மட்டுமே என்பதை உறுதி அளிக்கவேண்டும் என கோரினோம். அப்படித் தர முடியாது என மாவட்ட செயலர் கூறினார்.

சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் காணிகளை விடுவிப்பதற்காகத் தான் காணி அளவீடுகளை மேற்கொள்ளவுள்ளோம் என கூறியதால், அந்த கூட்டத்தின் கூட்ட அறிக்கை தரச் சொல்லி கேட்டோம். அதனை அவர்கள் தரவில்லை.

சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தின் பின்னர் கடற்தொழில் அமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது நாமும் அந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு, அமைச்சர் ஊடகங்களுக்கு கூறும் கருத்துக்களை நேரில் செவிமடுக்க வேண்டும் எனவும், அதே ஊடக சந்திப்பில் அமைச்சர் மாவட்ட செயலர் முன்பாக நாமும் எமது நிலைப்பாட்டை ஊடகங்கள் வாயிலாக தெரிவிக்க வேண்டும் என கோரினோம்.

ஊடக சந்திப்பில் காணி உரிமையாளர்கள் அமைச்சருடன் சரிக்கு சரி அமர முடியாது என சொல்லி, ஊடக சந்திப்பில் எம்மை கலந்துகொள்ள அனுமதிக்கவில்லை. அமைச்சரின் ஊடக சந்திப்பு முடிவடைந்த பின்னர் மாவட்ட செயலக வளாகத்தில் பிறிதொரு இடத்தில் வைத்தே நாம் ஊடகங்களுக்கு எமது நிலைப்பாட்டை கூறினோம்.

தம்மை சாதாரணமானவர்கள் என்றும் ஜனாதிபதி கூட சாதாரணமானவர்களுடன் சாதாரணமாக உரையாடுவார் என கூறுபவர்கள், கடற்தொழில் அமைச்சருடன் சரிக்கு சமனாக இருந்து ஊடகங்களை சந்திக்க அனுமதிக்க மாட்டோம் என எமக்கு கூறியுள்ளார்கள். இவர்களின் செயற்பாடுகளை பார்க்கும்போது, எமக்கு சந்தேகங்கள் வருகின்றன என தெரிவித்தனர்.

# யாழ்ப்பாணத்தின் எட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலான வரலாற்றை விளக்கும் நூல் கொழும்பில் வெளியீடு!


15.04.2026

யாழ்ப்பாணத்தின் சுமார் எட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலான ஆரம்பகால வரலாற்றை ஆதாரங்களின் அடிப்படையில் விளக்கும் புதிய நூலை வெளியிட்டிருக்கும் பேராசிரியர் எஸ்.பத்மநாதன், யாழ் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களை ஆராய்ந்ததன் மூலம் மிக நீண்டகாலத்துக்கு முன்னரான சமூகம் மற்றும் பண்பாட்டை அடையாளம் காணமுடிந்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.



பேராசிரியர் எஸ்.பத்மநாதனின் “Glimpses of an Ancient Civilization, Society and Culture in Jaffna 300 BC-AD 500” (கி.மு 300 - கி.பி 500 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் பண்டைய நாகரிகம், சமுதாயம் மற்றும் கலாசாரம் குறித்த பார்வை’ எனும் ஆய்வு நூலின் வெளியீட்டு விழா கடந்த வார இறுதியில் (11.04.2026) கொழும்பிலுள்ள சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது.

பேராசிரியர் பத்மநாதனின் இந்த நூல் யாழ்ப்பாணத்தின் சுமார் எட்டு நூற்றாண்டுகளுக்கும் மேலான ஆரம்பகால வரலாற்றை, குறிப்பாக நாகர்களின் வரலாற்றைப் பற்றி மிக நுணுக்கமாகவும், தெளிவாகவும் ஆராய்கிறது. தொல்பொருளியல் சான்றுகள் மற்றும் ஒப்பீட்டு வரலாற்று ஆய்வுகளின் அடிப்படையில் எழுதப்பட்டுள்ள இந்நூல் யாழ் மாவட்டத்துக்கே உரிய தனித்துவமான பொருளாதாரம் மற்றும் கலாசாரத்தைப் பின்பற்றி வாழ்ந்த ஒரு




சமூகம் பற்றிய கதையை வாசகர்களுக்குக் கூறுகிறது.

சிரேஷ்ட ஜனாதிபதி சட்டத்தரணி கே.கனக ஈஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகெண்ட இந்நிகழ்வில் கலாநிதி ஜே.எம்.சுவாமிநாதன், கலாநிதி பி.ஏ.ஹுசைன்மியா மற்றும் கலாநிதி ஜெஹான் பெரேரா ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

அதன்படி பகிரப்பட்ட பொதுவான வரலாற்றுக் கூறுகளை எடுத்துரைப்பதன் ஊடாக சமூகங்களை ஒன்றிணைக்கும் சக்தியாக இந்த நூல் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி சட்டத்தரணி கனக ஈஸ்வரன், ‘வரலாறு என்பது கடந்த காலத்தைப்



பற்றியது மாத்திரமல்ல. மாறாக அது உள்ளீர்த்தல், நீதி மற்றும் எமது எதிர்கால சந்ததியினருக்காக நாம் விட்டுச்செல்ல விரும்பும் நாடு என்பன பற்றிய இன்றைய தேர்வுகளுக்கான வழிகாட்டியுமாகும்’ எனக் குறிப்பிட்டார்.

அதேவேளை அறிவைத் தரும் அறிஞர்கள் பலர் இருப்பதாகவும், இருப்பினும் ஒரு நாடு தன்னைத் தானே புதிய கோணத்தில் பார்ப்பதற்கு உதவும் மிகச்சில அறிஞர்களில் பேராசிரியர் பத்மநாதனும் அடங்குவதாகவும் கலாநிதி ஜெஹான் பெரேரா தனது உரையில் பாராட்டு வெளியிட்டார்.

அதேபோன்று நிகழ்வில் உரையாற்றிய கலாநிதி ஹுசைன்மியா, கல்வெட்டு ஆதாரங்களின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பகுதியில் ஒரு தனித்துவமான தமிழ் அரசியல் கட்டமைப்பு உருவானமைக்கான சாத்தியப்பாடுகளை இந்நூல் முன்வைப்பதாகத் தெரிவித்தார்.

நிறைவாக நிகழ்வில் உரையாற்றிய பேராசிரியர் பத்மநாதன், ‘கடந்த 100 ஆண்டுகளில் அகழ்வாராய்ச்சிகள் மூலம் கிடைக்கப்பெற்ற, இதுவரை பயன்படுத்தப்படாத வரலாற்றுத் தகவல்களின் அடிப்படையிலேயே இந்த நூல் எழுதப்பட்டிருக்கிறது. யாழ் மாவட்டத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களை ஆராய்ந்ததன் மூலம் மிக நீண்டகாலத்துக்கு முன்னர் நிலவிய சமூகம் மற்றும் பண்பாட்டை எம்மால் அடையாளம் காண முடிந்துள்ளது’ என்றார்.

www.sangathamil.com

# யாழ். பல்கலைக்கழகத்தில் அன்னை பூபதியின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல்

19.04.2026

ஈழத் தமிழர்களின் உரிமைப் போராட்ட வரலாற்றில் அகிம்சை வழியில் போராடித் தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகத்தாய் அன்னை பூபதி அவர்களின் 38 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாண பல்கலைக்கழக பொதுத்தூபியில் இன்றைய நாள் ஈகைச்சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்து மலர் வணக்கம் செலுத்தப்பட்டு நினைவுகூறப்பட்டது.









# அன்னை பூபதியின் நினைவாலயத்தில் அன்னை பூபதியின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல்

19.04.2026

அன்னை பூபதி அவர்களின் தியாகச் செயலை நினைந்து வீரவணக்கத்துடன் நினைவு வணக்கம் செலுத்தப்பட்டது.

ஈகைச்சு சுடர் அன்னை பூபதி அவர்கள் அகிம்சை வழியில் நின்று உண்ணாநோன்பு இருந்து எமது தமிழ் சமூகத்திற்காக உயிர்நீத்த வீரத் தாய் ஆவார்.











அன்னை அவர்களின் ஈகத்தை நினைவுகூறும் வகையில் அவர் உயிர்நீத்த நாளான சித்திரை 19 ஆம் திகதி மட்டக்களப்பு நாவலடியில் அமைந்துள்ள நினைவிடத்தில் வணக்க நிகழ்வு இடம்பெற்றது.

**கொண்ட கொள்கையில் நம்பிக்கையும், அந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் கட்டப்பட்ட உறுதியும், அந்த உறுதியின் நெருப்பாக எரியும் விடுதலை வேட்கையும் எம்மிடமுள்ளவரை, எமது இலட்சியப் பயணம் வெற்றியில் முடியுமென்பது நிச்சயம்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# அன்னை பூபதிக்கு வவுனியாவில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினால் நினைவு கூரப்பட்டது

19.04.2026



அன்னை பூபதியின் 38வது ஆண்டு நினைவு தினம் வவுனியாவில் இன்று தமிழர் தாயகத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினால் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

அஞ்சலி நிகழ்வானது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளினால் வவுனியா ஏ9 வீதியில் 3356 வது நாளாக சுழற்சி முறை போராட்டத்தில் ஈடுபடும் பந்தலில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது அன்னை பூபதியின் திருவுருவ படத்திற்கு விளக்கேற்றி, மலர் வணககம் செலுத்தப்பட்டது.

நினைவேந்தல் நிகழ்வு அமைதியான முறையில் இடம்பெற்றதுடன், அன்னை பூபதியின் தியாகம் மற்றும் உரிமை கோரிய போராட்டங்கள் மீண்டும் நினைவுகூரப்பட்டன.

இதேவேளை அன்னை பூபதி அவர்களின் நினைவு நாள் தமிழர் தாயகத்தில் தொடர்ந்தும் உணர்வுப்பூர்வமாக நினைவு கூரப்படட்து குறிப்பிடத்தக்கது.

# ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வனின் நூல்கள் சிறீலங்கா சுங்கத் திணைக்களத்தால் தடுத்து வைப்பு: சிவில் சமூகம் கடும் கண்டனம்!

19.04.2026



ஈழத்தின் பிரபல தமிழ் கவிஞரும் நாவலாசிரியருமான தீபச்செல்வனின் கவிதைத் தொகுப்புகள் சுங்கத் திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டமை மற்றும் அது தொடர்பாக கலாசார அமைச்சு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து, சிங்கள மற்றும் தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இணைந்து தமது கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

இந்தியாவில் அச்சிடப்பட்டு இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட தீபச்செல்வனின் ஐந்து நூல்களைக் கொண்ட 360 பிரதிகள், கடந்த மார்ச் மாதம் 18ஆம் திகதி சுங்கத் திணைக்களத்தால் தடுத்து வைக்கப்பட்டன.

இது தொடர்பில் கலந்துரையாட கடந்த 17ஆம் திகதி கிளிநொச்சியிலிருந்து கொழும்புக்கு அழைக்கப்பட்ட எழுத்தாளர் தீபச்செல்வன், வெறும் கையுடன் திருப்பி அனுப்பப்பட்டுள்ளார். தேசிய கலைக் குழுவின் அவதானிப்பு அறிக்கையைப் பெற்ற பின்னரே இறுதி முடிவு எடுக்கப்படும் என அமைச்சில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு ஏமாற்று நடவடிக்கை என எழுத்தாளர்கள் சாடியுள்ளனர்.

கலாசார அமைச்சுக்கும் இந்த சட்ட விவகாரத்திற்கும் நேரடித் தொடர்பு இல்லாத நிலையில், தணிக்கை அறிக்கைகளை கோருவதன் நோக்கம் என்ன? அந்த அறிக்கையின் உள்ளடக்கத்தை பகிரங்கப்படுத்தாதது ஏன்? என கேள்விகள் எழுப்பப்பட்டுள்ளன.

இலங்கை அரசியலமைப்பின் படி கருத்துச் சுதந்திரம் என்பது அடிப்படை உரிமையாகும். தான் எதிர்கொண்ட அநீதிகள் குறித்தே தீபச்செல்வன் எழுதியுள்ளாரே தவிர, பயங்கர வாதத்தை அவர் ஊக்குவிக்கவில்லை. தமிழ் மற்றும் முஸ்லிம் எழுத்தாளர்களின் படைப்புகளை மட்டும் இலக்கு வைத்து தணிக்கை செய்வது பாரிய அச்சுறுத்தல் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தீபச்செல்வனின் கவிதைத் தொகுப்புகளை எவ்வித தணிக்கையுமின்றி உடனடியாக விடுவிக்குமாறும், படைப்பாளிகள் அச்சமின்றி எழுதுவதற்கான பாதுகாப்பான சூழலை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.


## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.thuyarpakirvu.com**

# திருகோணமலையில் அன்னை பூபதியின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல்!

19.04.2026




திருகோணமலை சமூக அமைப்புகளின் ஏற்பாட்டில் அன்னை பூபதியின் 38ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை (19) திருகோணமலை குளக்கோட்டன் மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது அன்னாரின் உருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து, விளக்கேற்றி, மலர்தூவி வணக்கம் செலுத்தப்பட்டது.

குறித்த நிகழ்வில் அரசியல்வாதிகள், சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு வணக்கம் செலுத்தியிருந்தார்கள்.

# ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் அன்னை பூபதியின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல்!

19.04.2026

இந்திய இராணுவத்தின் அடக்குமுறைக்கு எதிராக 31 நாட்கள் சாகும் வரை உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தியாகத்தாய் அன்னை பூபதியின் 38ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (19) முல்லைத்தீவு கள்ளப்பாடு பகுதியில் அமைந்துள்ள வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனின் மக்கள் தொடர்பகத்தில் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

அந்தவகையில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நினைவேந்தல் நிகழ்வில், அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கு சுடரேற்றப்பட்டதுடன், மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர்தூவி உணர்வெழுச்சியுடன் வணக்கம் செலுத்தப்பட்டது.




குறித்த வணக்க நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் மகாதேவா குணசிங்கராசா, சமூகசெயற்பாட்டாளர் கிருஸ்ணபிள்ளை சிவகுரு உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திலே நாம் பயணிக்க வேண்டிய தேவை இருக்கின்றது

## மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. சிறிநாத்

19.04.2026

காலங்கள் கடந்தாலும் தென்னிலங்கை தேசியவாதம் எம்மை ஏமாற்றிக் கொண்டிருந்தாலும், எமக்கான விடுதலைக்கான தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திலே நாம் பயணிக்க வேண்டிய தேவை இருக்கின்றது என இலங்கை தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ.சிறிநாத் தெரிவித்தார்.

இன்று நடைபெற்ற அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார். அவர் இதன்போது மேலும் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்பு, அதற்கு முன்னராகத் தமிழ் மக்கள் தங்கள் இன விடுதலைக்காகப் பல்வேறு பட்ட வகையிலே போராடி உரிமைகளுக்காகப் பயணித்துக் கொண்டிருக்கின்ற நேரத்திலே அன்றைய காலகட்டங்கள் அகிம்சை ரீதியாகவும் ஆயுதப் போராட்ட வரலாறு ரீதியாகவும் போராடிக் கொண்டு வந்த சூழலிலே, ஆயுதப் போராட்ட வரலாறு வலுப்பெற்றுத் தமிழ் மக்களுக்கான ஒரு உருவெடுத்திருந்த அல்லது வலிமையாக இருந்த சந்தர்ப்பத்திலே, பிராந்திய வல்லாதிக்கத்திற்கு எதிராக அவர்கள் எவ்வாறு சுதந்திரம் பெற்றுக்கொண்டார்களோ, அதை நினைவுபடுத்தி அவ்வாறான ஒரு வழியிலே தமிழ் மக்களுக்காக ஒரு மிதவாத அடிப்படையில் அகிம்சை வழியிலே போராடிய எங்களுடைய அன்னை பூபதி அவர்களின் தியாகதீபம் தாயவர்களின் நினைவினை இந்த நாளில் நினைவுகூறுகின்றோம்.

உண்மையிலே நாங்கள் என்ன செய்தியை இந்த மக்களுக்குக் கொண்டு செல்ல இருக்கின்றோம்? நாங்கள் வரலாற்றிலே ஒடுக்கப்பட்ட, உரிமைகள் பறிக்கப்பட்ட இனமாக வந்து கொண்டிருக்கின்ற சந்தர்ப்பத்திலே, நாம் பல வகையிலும் எமது மக்களுக்காக எமது தமிழ்த் தேசியத்திற்காகப் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

நாம் தனியே தீவிரவாதப் போராட்ட அல்லது ஆயுதப் போராட்ட வரலாற்றில் மட்டும் பயணித்தவர்கள் அல்ல. தமிழ் மக்களுக்காக அரசியல் தலைவர்கள் மற்றும் பொதுமக்கள் பல விட்டுக் கொடுப்புகளுடன், உயிரிழப்புகளையும் உடைமைகளையும் இழந்து தங்கள் மிதவாதப் போராட்டங்களையும் வரலாறு காணாத வகையிலே செய்திருக்கின்றார்கள்.

அந்த வகையிலே உண்மையிலே ஒரு நெஞ்சுரத்துடன் மிதவாத அகிம்சை வழியிலே போராடுவது என்றால், ஒரு மிகப் பெரிய பொறுமையும் மிகப்பெரிய நிதானமும் மிகப்பெரிய உறுதியும் வேண்டும்.

அந்த வகையிலே விடுதலைப் போராட்ட காலத்திலே விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக அல்லது தமிழ் மக்களின் தேச விடுதலைக்காக, தமிழ் மக்களின் தேசியத்திற்காக அன்னை பூபதி அவர்கள் தனது இன்னுயிரை மிக ஒரு அரும்பெரும் தியாகத்துடன், ஒரு மிகத் துணிவுடன் தனது சேவையைத் தமிழ் மக்களுக்காக வழங்கியிருந்தார்.

அவருடைய தியாகம், அவருடைய உயிர் துறப்பு என்ன சொல்கின்றது? தமிழ் மக்களுக்காகத் தொடர்ச்சியாக நாங்கள் அனைவரும் தமிழ்த் தேசியத்தின் வழியிலே பயணிக்க வேண்டும். அது எந்த வகையான விடுதலைப் போராட்டமாக இருந்தாலும் நாம் எமது தமிழ்த் தேசியப் பாதையிலிருந்து விலகாமல், தமிழ்த் தேசியத்திற்காக அர்ப்பணிப்புடன் தமிழ் மக்கள் பயணியுங்கள் என்ற செய்தியை அவர் எங்களுக்குத் தந்திருக்கின்றார்.

அந்த வகையிலே இன்றும் பல நெருக்கடிகளைச் சமகாலத்திலே நாம் எமது தாயக நிலம் சம்பந்தமாகவும் தமிழ்த் தேசியம் சம்பந்தமாகவும் பல நெருக்கடிகளைச் சந்தித்திருந்தாலும், தமிழ் மக்கள் மிக நெஞ்சுறுதியுடனும் மிக ஒரு ஒர்மையுடனும் போராட வேண்டிய சந்தர்ப்பம் இருக்கின்றது.

காலங்கள் கடந்தாலும் தென்னிலங்கை தேசியவாதம் எம்மை ஏமாற்றிக் கொண்டிருந்தாலும், எமக்கான விடுதலைக்கான தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திலே நாம் பயணிக்க வேண்டிய தேவை இருக்கின்றது.

அன்னையின் அந்த அர்ப்பணிப்புக்காக நாம் அந்த விடயத்திலே ஒன்றுபட்டு, கட்சிகளின் பேதம் மறந்து தமிழ்த் தேசியத்திற்காக நாம் இன்று ஒன்று சேர்ந்திருக்கின்றோம்.

மிக முக்கியமாக இன்று அந்த ஊர்தியை நீங்கள் கொண்டு வந்திருக்கின்றீர்கள், இந்த பிரதேசம் எங்கும் அந்த செய்தியைத் தமிழ் மக்களுக்கும் இளம் சந்ததியினருக்கும் கொண்டு சென்றிருக்கின்றீர்கள்.

உண்மையிலே அந்த விடயத்திலே நான் உங்களைப் பாராட்டு



கின்றேன். கடந்த பல வருடங்களாக நீங்கள் இந்த அர்ப்பணிப்பான செயலை, வருகின்ற இளம் சந்ததியினருக்கு இந்த செய்தியை நீங்கள் கொண்டு செல்கின்றீர்கள்.

வருகின்ற இளம் சந்ததியினருக்கு தமிழ்த் தேசியம், தமிழ் விடுதலை, தமிழ் மக்களின் பாரம்பரியம், தமிழ் மக்களின் கலாச்சாரம் சம்பந்தப்பட்ட விடயங்களை உறுதியான வகையிலே கொண்டு செல்வதற்கான இந்தத் தாயகச் செயலணியின் செயற்பாடுகளை நாம் உண்மையாகப் பாராட்ட வேண்டிய தேவை இருக்கின்றது.

அதற்கு அப்பால் இந்த இடத்தை நாம் மிகவும் புனரமைப்பு ரீதியாக மக்கள் வந்து வழிபடுகின்ற, அஞ்சலி செலுத்துகின்ற இடமாக மாற்றியமைக்க வேண்டிய தேவையும் இருக்கின்றது.

அதற்கு அப்பால் எமது தமிழ்த் தேசியத்தின் ஞாபகார்த்தங்களை அல்லது அந்த அடையாளங்களைப் பாதுகாக்க வேண்டிய இடமாக இருக்கின்றது.

இதற்காகச் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், அதிகாரிகள் எல்லாம் சேர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், நானும் அதற்குச் சகல வழியிலும் ஒத்துழைப்பு வழங்குவேன்.

எமது தியாகதீபம் அன்னை பூபதி அவர்களின் ஞாபகார்த்தம், அவருடைய அர்ப்பணிப்பு, அவருடைய செயற்பாடு அடுத்த சந்ததியினருக்கு எமக்கு, எமது இனத்துக்கான விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு தியாகமாகக் கொண்டு செல்லப்பட வேண்டும். அதற்கு நாம் ஒன்று சேர்ந்து பயணிக்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக்கொள்கின்றேன் என்றார்.

# தீபச்செல்வனின் ஐந்து வகையான நூல்கள் சிறீலங்கா சுங்கத்திணைக்களத்தில் தடுத்து வைப்பு: மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு!

21.04.2026



சிறீலங்கா சுங்கத்திணைக்களத்தில் தனது புத்தகங்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை தொடர்பாக எழுத்தாளர் தீபச்செல்வன் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை முறைப்பாடு செய்துள்ளார்.

இந்தியாவில் இருந்து தீபச்செல்வனுக்கு முகவரி இடப்பட்டு அனுப்பப்பட்ட ஐந்து வகையான புத்தகங்களின் 360 பிரதிகள் சிறீலங்கா சுங்கத் திணைக்களம், கடந்த மார்ச் 18ஆம் திகதி முதல் தடுத்து வைத்துள்ளது.

இது தொடர்பில் எழுத்தாளர்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு வரும் நிலையில், இன்றைய தினம் மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்தில் முறைப்பாடு செய்த தீபச்செல்வன், அது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்,

நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு எதிரான கருத்துகள் எனது புத்தகத்தில் உள்ளதாகவும் பாதுகாப்பு மற்றும் கலாச்சார அமைச்சின் அனுமதி உடன் புத்தகங்கள் விடுவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

அந்நிலையில், கடந்த 17ஆம் திகதி கலாச்சார அமைச்சில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

அதில், எனது இலக்கிய எழுத்துச் செயற்பாடுகள் குறித்தும் குறித்த புத்தகங்களினுடைய முக்கியத்துவம் குறித்தும் எனது கருத்துக்களையும் தெரிவித்தேன்.

இலங்கை கலைக் கழகத்தின் உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டதுடன் என் சார்பில் சிங்கள தமிழ் எழுத்தாளர்களும் சட்டத்தரணியும் கலந்து கொண்டனர்.

எனினும் புத்தகங்கள் என்ன காரணங்களுக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளன என்பதை இதன்போது குறிப்பிடவில்லை.

புத்தகங்கள் விடுவிக்கப்படும் என எதிர்பார்த்து சென்ற வேளையில் புத்தகங்கள் தொடர்பில் இந்த தீர்வும் கிடைக்கவில்லை.

இதற்காக சிங்கள படைப்பாளிகள் இளைஞர்கள் பலரும் குரல் கொடுத்து வருகின்ற நிலையில் அரசாங்கம் சில மூத்த சிங்கள எழுத்தாளர்களை வைத்து இந்த புத்தக தடுப்புக்கு நியாயத்தை கற்பிக்க முயல்கிறது.

அதில் ஒரு சிங்கள எழுத்தாளர் தனக்கு தமிழ் தெரியாது என்றும் என்னுடைய புத்தகங்களை வாசிக்கவில்லை என்றும் ஆனால் இவற்றில் நல்லிணக்கத்திற்கு பாதிப்பு தரும் விடயங்கள் உள்ளன என்றும் கூறுவது எந்த வகையில் ஏற்படையது?

புத்தகத்தை வாசிக்காமல் இவ்வாறு கருத்து கூறுகிறார்கள். இதுவே இனவாதமும் பாரபட்சமும் ஆகும்.

இந்த நிலையில் உடனடியாக என்னுடைய புத்தகங்கள் விடுவிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தியும் இது என் மீதான அடிப்படை மனித உரிமை மீறல் என்பதினாலும் யாழ்ப்பாணத்தில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழவில் முறைப்பாடு ஒன்றினை பதிவு செய்துள்ளேன் என தெரிவித்தார்.

# யாழ். ஆயர் இல்ல சிற்றாலய முன்றலில் ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவேந்தல்!

21.04.2026



உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் இடம்பெற்று இன்றுடன் 7 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் நாட்டின் அனைத்து தேவாலயங்களிலும் விசேட மத வழிபாடுகள் இடம்பெற்றன.

யாழ். மறைமாவட்டத்தில், மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜெபரட்ணம் தலைமையில் யாழ்ப்பாண ஆயர் இல்ல சிற்றாலய முன்றலில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்த இடத்தில் சுடரேற்றப்பட்டு வழிபாடும் வணக்க நிகழ்வுகளும் இடம்பெற்றது.

நிகழ்வில் யாழ். மறைமாவட்ட அகவொளி குடும்பநல நிலைய இயக்குநர் அருட்தந்தை மனுவேற்பிள்ளளை டேவிட் அவர்களால் அஞ்சலி உரையும் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.





**தமிழர்களுடன் சமாதான சகவாழ்வை நடத்துவதா அன்றி தமிழர்களை பிரிந்து செல்ல நிர்ப்பந்திப்பதா என்பது சிங்கள தேசத்தின் அரசியற் போக்கில்தான் தங்கியிருக்கிறது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# மட்டக்களப்பில் உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கான நினைவேந்தலும்: போராட்டமும்!

21.04.2026

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் 7வது ஆண்டு நினைவேந்தல் இன்று செவ்வாய்க்கிழமை (21) மட்டக்களப்பு நகரின் பல்வேறு பகுதிகளில் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டது.

இன்று காலை 9.05 மணியளவில் சீயோன் தேவாலய முன்றலில் நினைவேந்தல் ஆரம்பமானது.






இதன்போது பாதிக்கப்பட்ட குடும்பத்தினர், பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கண்ணீர் மல்க, மலர் வணக்கம் செலுத்தி, சுடரேற்றி குண்டுத்தாக்குதலில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்ந்தனர்.

அதனைத் தொடர்ந்து, மட்டக்களப்பு காந்தி பூங்காவில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் முன்னாள் மாநகர சபை முதல்வர் சிவம் பாக்கியநாதன் தலைமையில் வணக்க நிகழ்வுகள் நடைபெற்றன.

இதில் மாநகர சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு மௌன வணக்கம் செலுத்தினர்.

அதேவேளை, கல்லடி பாலத்துக்கு அருகில் அமைந்துள்ள நினைவுத் தூபியில் கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் சர்வ மதத் தலைவர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் மற்றும் உயிரிழந்தவர்களின் உறவினர்கள் ஒன்றிணைந்து வணக்கம் செலுத்தினர்.

சீயோன் தேவாலயத் தாக்குதலில் 14 சிறுவர்கள் உட்பட 31 பேர் தமது இன்னுயிர்களை இழந்தனர். 80-க்கும் மேற்பட்டோர் படு




காயமடைந்த நிலையில், ஒரு சிறுமி தனது கண்பார்வையை முழுமையாக இழந்ததுடன், இருவர் இன்றும் இடுப்புக்கு கீழ் இயங்க முடியாத நிலையில் படுக்கையில் இருந்து வருகின்றனர்.

ஒரு தந்தை தனது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவரைப் பறிகொடுத்துவிட்டு இன்றும் நீதிக்காக ஏங்கி நிற்பது அங்கிருந்த அனைவரையும் நெகிழச் செய்தது.

நினைவேந்தல் நிகழ்வுகளின் நிறைவில், "எமக்கான நீதி எங்கே?" என்பது போன்ற வாசகங்கள் அடங்கிய சுலோகங்களை ஏந்தியவாறு மக்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஏழு ஆண்டுகள் கடந்தும் இந்தத் தாக்குதலின் பின்னணியில் உள்ள சூத்திரதாரிகள் கண்டறியப்படாமை குறித்தும், பாதிக்கப்பட்டவர்களுக்கான முறையான நீதி இன்னும் எட்டப்படாமை குறித்தும் இதன்போது கடும் அதிருப்தி வெளியிடப்பட்டது.

சுமார் ஒரு மணிநேரம் நடைபெற்ற இந்த அமைதிப் போராட்டமானது, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்மையான நீதியை உரிய தரப்பினர் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையுடன் நிறைவடைந்தது.








# யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்டனர்!

22.04.2026

சிறீலங்கா அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் இன்று புதன்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் ஊடகவியலாளர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்து பல்வேறு அரச நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார்.

இதனொரு அங்கமாக தையிட்டி விவகாரம் தொடர்பில் ஆராயவும் யாழ்.மாவட்ட செயலகத்தில் கூட்டமொன்று திட்டமிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் அங்கு செய்தி சேகரிக்க சென்ற ஊடகவியலாளர்கள் கலந்துரையாடல் ஆரம்பிக்க முன்னர் காணொளிகளை பதிவு செய்த நிலையில், கூட்டத்தில் ஊடகவியலாளர் இருக்க முடியாது எனவும் கலந்துரையாடல் முடிந்த பின்னர் வருமாறும் மாவட்ட செயலக ஊடக பிரிவு உத்தியோகத்தரால் அறிவுறுத்தப்பட்டது.

கலந்துரையாடல் தொடர்பாக அழைப்பு விடுக்கப்பட்டே ஊடகவியலாளர்கள் பங்கேற்றமை தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்ட போதும் ஏனைய நிகழ்வுகளுக்கே அழைப்பு விடுக்கப்பட்டது எனவும் கூட்டத்தில் இருக்க முடியாது என தெரிவிக்கப்பட்ட நிலையில் ஊடகவியலாளர்கள் கலந்துரையாடல் அறையில் இருந்து வெளியேறினர்.




மாற்றம், வெளிப்படைத்தன்மை தொடர்பாக அதிகம் வலியுறுத்தும் தற்போதைய அரசாங்கத்தின் அமைச்சரவை

அமைச்சர் பங்கேற்ற கூட்டத்தில் ஊடகவியலாளர் இருக்கவே முடியாது என தெரிவிக்கப்பட்டமை ஊடகவியலாளர்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வவுனியாவில் கவனயீர்ப்புப் போராட்டம்!

22.04.2026

வடக்கு, கிழக்கு பகுதிகளில் அரசினால் முன்னெடுக்கப்படும் பௌத்தமயமாக்கல் செயற்பாடுகளை கண்டித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இன்று (22) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா தபாலகத்திற்கு அருகாமையில் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சங்கம் இந்த போராட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தது.






இதன்போது பலர் பௌத்தமயமாக்கலை கண்டிப்பதோடு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் தீர்வும் இதுவரை கிடைக்காததை வலியுறுத்தி, பதாதைகளை ஏந்தியவாறும், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியத்தின் கொடிகளை தாங்கியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். அல்லைப்பிட்டியில் சிறீலங்கா பொலிசாரினால் கொல்லப்பட்ட சிறுவனுக்கு நீதிகிட்டுமா?

23.03.2026

யாழ். அல்லைப்பிட்டியில் சிறீலங்காப் பொலிசாரினால் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்தில் சிறுவன் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில், சம்பவத்துடன் தொடர்புடைய பொலிசாரைக் கைது செய்து, நீதிமன்றில் முற்படுத்துமாறு, ஊர்காவற்துறை நீதவான் சிறீலங்கா குற்ற புலனாய்வு பிரிவினருக்கு உத்தர விட்டுள்ளார்.

அல்லைப்பிட்டி பகுதியில் கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி கடமையில் இருந்த சிறீலங்காப் பொலிசார் தமது கட்டளையை மீறி வாகனத்தை செலுத்தினார் என பொலிசார் மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில், 17 வயது சிறுவனான அருள் பயஸ் உயிரிழந்திருந்தார்.

சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்றைய தினம் புதன்கிழமை ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன்போது, கடந்த வழக்கு தவணையில் குறித்த சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றப்புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்டவர்கள் நலன் சார்ந்து மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் விண்ணப்பம் செய்ததை அடுத்து, நீதிமன்று, விசாரணைகளை குற்றப்புலனாய்வு பிரிவினருக்கு மாற்றுமாறு பொலிஸ் அதிபருக்கு உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில், குற்றப்புலனாய்வு பிரிவினர் பல வழக்குகள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுப்பதனால், கடும் வேலை பளு காரணமாக வழக்கு விசாரணைகளை மத்திய குற்றப்புலனாய்வு பணியகத்திற்கு பரப்படுத்துவதாக கடந்த 07ஆம் திகதி திகதியிடப்பட்ட கடிதம் ஊடாக மன்றுக்கு பொலிஸ் அதிபர் அறிவித்திருந்தார்.

அதனை தொடர்ந்து மத்திய குற்றப் புலனாய்வு பணியகம் வழக்கினை பாரமெடுத்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.



இந்நிலையில் நேற்றைய வழக்கு விசாரணையின் போது, மத்திய குற்றப்புலனாய்வு பணியக அதிகாரிகள் மன்றில் முன்னிலையாகி, ஊர்காவற்துறை பொலிசாரின் குறிபேடுகள், விசாரணை அறிக்கைகள், சம்பவத்திற்கு பயன்படுத்தப்பட்ட துப்பாக்கிகள் என்பவற்றை தாம் பாரம் எடுத்துள்ளதாகவும், நீதிச் சேவை ஆணைக்குழுவின் சுற்றிக்கைக்கு அமைவாக துப்பாக்கிகளை, யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும், தாம் தொடர் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக மன்றில் தெரிவித்திருந்தனர்.

தமிழீழ தேசிய துக்க நாள்
தமிழ் இன அழிப்பு நாள்
Genocide Day
National Mourning Day of Thamileelam
மே May 18
In 2009 Over 146, 6797 Eelam Thamils Murdered, 70,000 Thamils unaccounted
Ontario Government Recognized Thamil Genocide Education Week (11May to 18 May) in Canada
முள்ளிவாய்க்கால் நினைவு நாள் Mullivaikkal Remembrance Day

# எமது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதாக கூறும் அரசாங்கம் இதுவரை ஆக்கபூர்வமாக எதனையும் செய்யவில்லை எனக் கூறி நெடுந்தீவில் மக்கள் போராட்டம்

24.04.2026

யாழ்ப்பாணம், நெடுந்தீவில் பல வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்படாத மக்களின் அடிப்படை பிரச்சனைகளை தீர்க்க கோரி கவனயீர்ப்புப் போராட்டம் நெடுந்தீவு மகாவலித்துறையில் இன்றைய தினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.







போராட்டத்தின் போது, பல்வேறு கோசங்களை எழுப்பியதுடன், பதாதைகளை ஏந்தியவாறு கருப்பு துணிகளை கட்டியும் உழவு இயந்திரத்தில் கேலிச்சித்திரங்களை காட்சிப்படுத்தியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. தொடர்ந்து மகாவலி இறங்குதுறையிலிருந்து நெடுந்தீவு பிரதேச செயலகம் வரை மக்கள் பேரணியாக சென்று பிரதேச செயலரிடம் ஜனாதிபதி, ஆளுநர், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கான மகஜர்களைக் கையளித்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கருத்து தெரிவிக்கும் போது,

கடந்த பல தசாப்த காலமாக நெடுந்தீவில் காணப்படும் குடிநீர் பிரச்சனை, போக்குவரத்து பிரச்சனை, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் மக்கள் பல இன்னல்களை அனுபவித்தவருகின்றனர்.

வரலாற்று பிரசித்தி பெற்ற சுற்றுலாத்தலமான காணப்படும் நெடுந்தீவில் மக்களின் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்வதாக அரசாங்கம் குறிப்பிட்டு வருகின்ற போதிலும் இதுவரையும் எவ்வித நடவடிக்கைகளையும் ஆக்கபூர்வமாக முன்னெடுக்கவில்லை.

குறிப்பாக தற்போது கடல் போக்குவரத்தில் ஈடுபடும் நெடுந்தாரகை படகில் நூறு பேரை மாத்திரமே ஏற்றிச்செல்லும் நிலை காணப்படுகிறது.

அதிலும் என்பது பேர் அரச உத்தியோகத்தர்களாக இருப்பதனால் பொதுமக்கள் இருபது பேரை மாத்திரமே ஏற்றிச் செல்லமுடிகிறது. இதனால் பெரும்பாலான பொதுமக்கள் பயணிக்க முடியாது புறக்கணிக்கப்படும் நிலை தொடர்ந்து காணப்படுகிறது என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.













# திருக்கோணேசுவரர் ஆலயப் பகுதியில் சிறீலங்கா விமானப்படைக்கு ரேடார் அமைக்க இடம் கோரல்!

## ஆலய நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை உறுப்பினர் ஜெயசங்கர்

24.04.2026

திருக்கோணேஸ்வர ஆலய பகுதியில் சிறீலங்கா விமானப் படையினால் ரேடார் அமைக்க இடம் கோரப்பட்டுள்ளதாகவும் இத்திட்டத்திற்கு அனைத்து மக்களும் எதிர்ப்பு வெளியிட வேண்டும் என ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபை உறுப்பினர் ஜெயசங்கர் கருத்து தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

திருக்கோணேஸ்வர ஆலய நம்பிக்கை பொறுப்பாளர் சபையின் முதலாவது அங்கத்தவராக நான் இருக்கின்றேன். அத்துடன் ஆலயத்திற்கு 40 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றி வருகின்றேன்.

திருக்கோணஸ்வர ஆலயமானது 247 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. இதற்கு பிரித்தானியர் ஆட்சியில் வழங்கப்பட்ட சி.வி 217 என்ற இலக்கம் கொண்ட செம்பு உறுதி இந்தியாவில் உள்ள ஆதீனம் ஒன்றில் இன்னமும் பாதுகாப்பாக இருக்கின்றது இந்நிலையில் ஆலய பகுதிகள் ஒவ்வொரு படையாலும் ஆக்கிரமிக்கப்பட்டு வருவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

திருக்கோணேஸ்வர வாசலில் முதலாவதாக கேணி இருந்த இடத்தை மூடி சிறீலங்கா இராணுவமும் அதனைத் தொடர்ந்து மத்தியில் பொலிஸ் கொட்டேச்சும் அதனைத்தொடர்ந்து நந்தி மலையில் கடற்படைத் தளமும் அமைந்துள்ளது.

இந்த நிலையில் ஆகாயப்படைத் தளத்திற்கும் இடத்தைக் கொடுத்தால் எமது நிலம் எங்கே என்று சிந்திக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுகின்றோம்.

இதனால் கோணேசரின் இருப்பிடம் மட்டுமல்லாமல் சுற்றுலாத் துறையும் பாதிக்கப்படும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்தும் இல்லை.

ரேடார் கருவியை சீனக்குடா பகுதியிலேயே அமைக்க முடியும்




அதைவிடுத்து இங்கே அமைப்பதன் நோக்கம் என்ன என்றும் சிந்திக்க வேண்டியிருக்கிறது. எனவே அனைத்து திருகோணமலை மக்களும் இதற்கு எதிர்ப்பு வெளியிட்டு நில அபகரிப்பை தடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

# பொருளாதாரத் தடையிலிருந்து புத்தகத் தடை வரை: தமிழ் இனத்தின் மீதான தொடரும் அடக்குமுறைகளை நிறுத்து!

கிளிநொச்சி ஊடக அமையம்

24.04.2026

கிளிநொச்சி ஊடக அமையம்
Kilinochchi Media Forum
කිලිනොච්චි මාධ්‍යය සංසදයට
பதிவு இல: வட.மா/கலு/பண்/கிளி/கரை/2017/03
Registration No:NP/M.E/CUL/KLI/KAR/2017/03
கிளிநொச்சி
kilinochchi

இலங்கையில் சிறுபான்மை தமிழ் மக்கள் மீது முன்னெடுக்கப்பட்டு வரும் தொடர்ச்சியான அடக்குமுறைகளின் ஒரு அங்கமாக, தற்போது தமிழ் எழுத்தாளர்களின் படைப்புகள் மற்றும் நூல்கள் மீது இலங்கை அரசு விதித்து வரும் தடைகளை கிளிநொச்சி ஊடக அமையம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இது மிக மோசமான ஜனநாயக மறுப்பு மாத்திரமன்றி, தமிழ் இனத்தின் சிந்தனைச் சுதந்திரத்தின் மீது தொடுக்கப்பட்டுள்ள பண்பாட்டு யுத்தமாகும் என கிளிநொச்சி ஊடக அமையம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யுத்த காலத்தில் தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடை, மருந்துத் தடை, விவசாயத் தடை என வாழ்வாதாரத்தின் மீது தாக்குதல் நடத்திய பேரினவாத அரசு, யுத்தம் முடிவடைந்த பின்னரும் தடைகளைத் தொடர்ந்த வண்ணமே உள்ளது. தமிழ் மக்கள் தமது இறந்த உறவுகளை நினைவுகூரத்தடை, ஜனநாயக ரீதியாகப் போராடத் தடை, சொந்த நிலங்களில் வாழ்வதற்குத் தடை என நீண்டு செல்லும் இந்த வரிசையில், இப்போது தமிழ் எழுத்தாளர்களின் 'எழுத்துச் சுதந்திரமும்' நசுக்கப்படுகின்றது.

கிளிநொச்சி எழுத்தாளர் தீபச்செல்வனின் பயங்கரவாதி, சயனைட் 'எழுத்தால் நான் யுத்தம் செய்கின்றேன்' நூல்கள் தடுத்து வைக்கப்பட்டன, பின்னர் பயங்கரவாதி, சயனைட் நூல்கள் விடுவிக்கப்பட்டு எழுத்தால் நான் யுத்தம் செய்கின்றேன்' நூல் இன்றுவரை சுங்கப் பிரிவினால் விடுவிக்கப்படாமல் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

அதேபோல், எழுத்தாளர் சோபாசக்தியின் 'லைடன்தீவு-மண்டைதீவு படுகொலைகளும் புதைகுழிகளும்', பி. இரயாகரனின் 'அரசியல் அநாதைகள்', ம. மதிவண்ணனின் 'நெரிந்து', டிலுக்சன் மோகனின் 'படுபட்சி' உள்ளிட்ட மிக முக்கியமான நூல்கள் அரசினால் தடுத்து வைக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களின் வரலாற்றுப் பதிவுகளை அழிக்கும் முயற்சியாகும்.

எழுத்துச் சுதந்திரம் என்பது ஜனநாயகத்தின் உயிர்நாடி: சர்வதேச ரீதியில் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் குறித்துப் பேசுகின்ற இலங்கை அரசு, உள்நாட்டில் தமிழ் எழுத்தாளர்களின் பேனா முனைகளை முறிக்க முயல்வது அப்பட்டமான மனித உரிமை மீறலாகும். வரலாற்றின் வலிகளைப் பதிவு செய்வதும், சமூகத்தின் அவலங்களை எழுதுவதும் ஒரு எழுத்தாளனின் கடமையாகும்.

அத்தகைய படைப்புகளைப் 'பயங்கரவாதம்' என்ற முலாம் பூசித் தடுப்பது, ஒரு இனத்தின் ஆன்மாவைச் சிதைப்பதற்குச் சமமானது எனத் தெரிவித்துள்ள கிளிநொச்சி ஊடக அமையம்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து தமிழ் நூல்களையும் நிபந்தனையின்றி உடனடியாக விடுவிக்க வேண்டும்.

தமிழ் எழுத்தாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அச்சமின்றித் தமது கருத்துகளைப் பதிவு செய்வதற்கான சூழலை அரசு உறுதிப்படுத்த வேண்டும்.

ஜனநாயகத்தின் நான்காவது தூணான ஊடக மற்றும் எழுத்துச் சுதந்திரத்தை நசுக்கும் செயற்பாடுகளை அரசு உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளதோடு, எந்தவொரு அடக்குமுறைச் சட்டங்களாலும் உண்மையை மறைத்துவிட முடியாது. பேனா முனைகளை முறிப்பதன் மூலம் வரலாற்றைத் துடைத்துவிட முடியாது என்பதை அரசுக்கு வலியுறுத்திக் கூறுகிறோம். தமிழ் எழுத்தாளர்களின் உரிமைக்காகவும், கருத்துச் சுதந்திரத்திற்காகவும் கிளிநொச்சி ஊடக அமையம் என்றும் முன்நிற்கும் குரல் கொடுக்கும் என

# முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள மாற்றுவலுவுடைய மற்றும் முன்னாள் போராளி குடும்பங்களின் மேம்பாடுகுறித்து ஆராய்வு

25.04.2026

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, வள்ளிபுனம் பகுதியில் அமைந்துள்ள ஒளிரும் வாழ்வு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் அலுவலகத்திற்கு வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரில் சென்றுள்ளார்.

அந்தவகையில் ஒளிரும் வாழ்வு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் செயலாளர் குமாரவேலு அகிலனின் அழைப்பையேற்று இவ்வாறு நேரில் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் மாற்றுவலுவுடையோரது குடும்பங்களினதும், முன்னாள் போராளிகளின் குடும்பங்களினதும் வாழ்வாதார மற்றும் கல்விமேம்பாடு குறித்து ஆராய்ந்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

ஒளிரும்வாழ்வு மாற்றுத்திறனாளிகள் அமைப்பானது மாற்றுவலுவுடைய குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாடு, மாற்றுவலுவுடைய பிள்ளைகளின் கல்வி மற்றும் பராமரிப்பு உள்ளிட்ட விடயங்களில் தமது சேவைகளையாற்றிவருகின்றது.

அந்தவகையில் ஒளிரும்வாழ்வு மாற்றுத்திறனாளிகள் அமைப்பானது விசேட தேவையுடையோருக்கான விசேட கல்வியை வழங்கும் செயற்பாட்டில் எழுத்தறிவித்தல், மகிழ்வூட்டல், தொழிற்கல்வி உள்ளிட்ட விடயங்களில் கவனஞ்செலுத்தி வருகின்றது.

இந்நிலையில் தற்போது புதுக்குடியிருப்பு பிரதேசசெயலகத்தின் கீழ் இயங்கிவரும் குறித்த அமைப்பினை, வலயக்கல்விப் பணிமனையின் கீழ் கொண்டுவருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமென இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அவ்வாறு வலயக்கல்விப்பணிமனையின் கீழ் குறித்த ஒளிரும் வாழ்வு அமைப்பு கொண்டுவரப்பட்டால் விசேட தேவையுடையோருக்கான கற்றல் செயற்பாடுகளை இன்னும் வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு உதவியாக இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை பெரும்பாலான மாற்றுவலுவுடையோரின் குடம்பங்களுக்கு 'அஸ்வெசும' கொடுப்பனவுகள் வழங்கப்படுவதில்லையெனவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், அனைத்து மாற்றுத்திறனாளிகளின் குடும்பங்களுக்கும் 'அஸ்வெசும' நலன்புரிக் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அத்தோடு கடந்த அரசாங்கங்களின் ஆட்சிக்காலத்தில் தொழில்களில் ஈடுபடும் புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகளுக்கு வட்டிவீதம் குறைந்த இலகுமுறை கடன் வழங்கப்பட்டதாகவும், தற்போது வழங்கப்படுவதில்லை என இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் சுட்டிக்காட்டப்பட்டதுடன், தொழில்செய்யும் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளுக்கு இலகுமுறை கடன் வழங்கும் செயற்பாட்டை மீண்டும் வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதேபோல் கடந்த கால ஆட்சியாளர்களால் புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகளுக்கு ஒரு இலட்சம் ரூபா வாழ்வாதாரக் கொடுப்பனவு வழங்கப்பட்டதாகவும், அந்த வாழ்வாதாரக் கொடுப்பனவு அனைத்து புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகளுக்கும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. எனவே குறித்த அவ்வாறு வாழ்வாதார கொடுப்பனவு வழங்கப்படாத முன்னாள் போராளிகளுக்கு அந்தக் கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமெனவும் இதன்போது நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது.

அதேவேளை படுக்கையிலுள் மாற்றுத்திறனாளிகளுக்கான பராமரிப்பிற்கான விசேட கொடுப்பனவு, மாற்றுத்திறனாளிகளுக்கு மருத்துவக்கொடுப்பனவு, இருக்கைமலசல கூட வசதிகளை ஏற்படுத்துவது தொடர்பான கோரிக்கைகளும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முன்வைக்கப்பட்டது.





இந்திலையில் தம்மிடம் எழுத்து மூலமான கோரிக்கைகளைக் கையளிக்குமாறு கோரிய நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன், குறித்த கோரிக்கைகள் தொடர்பாக தம்மால் கவனஞ் செலுத்தப்படுமெனத் தெரிவித்தார்.

மேலும் இதன்போது ஒளிரும் வாழ்வு மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பராமரிப்பிலுள்ள விசேடதேவையுடைய பிள்ளைகளுடன் கலந்துரையாடிய நாடாளுமன்ற உறுப்பினர், அவர்களின் கலைநிகழ்வுகளையும் பார்வையிட்டார்.

## தமிழ் மக்களின் போராட்டம் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக்கொள்ளும் அரசியல் சுதந்திரத்திற்கான போராட்டம்.

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

# ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் உட்பட ஏனைய தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்படுவதைக் கண்டித்து கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம்

26.04.2026

சிறீலங்கா அரசினால் ஈழத்து எழுத்தாளர் தீபச்செல்வன் உட்பட ஏனைய தமிழ் எழுத்தாளர்களின் நூல்கள் தொடர்ந்து தடுத்து வைக் கப்படுவதைக் கண்டித்தும், கருத்துச் சுதந்திரத்தை நிலை நாட்ட வலியுறுத்தியும் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன் பாக மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் இன்றைய தினம் நடைபெற்றது.













# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் ஆரம்பம்

27.04.2026

யாழ். செம்மணி மனித புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் இன்றைய தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாண நீத வான் நீதிமன்ற நீதவான் எஸ். லெனின்குமார் முன்னிலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியில் இதுவரையில் இரண்டு கட்டங் களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணிகளின் போது, 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட் டுள்ளன.

இந்நிலையில் மேலும் எலும்புக்கூடுகள் அப்பகுதிகளில் காணப் படுவதால் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை முன்னெடுக்க வேண்டும் எனவும், அதற்காக 08 வார கால பகுதி தேவை என சட்ட வைத்திய அதிகாரி மன்றில் விண்ணப்பம் செய்ததற்கு அமைவாக மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன் றினால் அனுமதி வழங்கப்பட்டது.





இந்நிலையில் பருவமழை மற்றும் காலநிலை சீரின்மை காரணமாக மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளை முன்னெடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டதுடன், புதைகுழிக்குள் மழை வெள் ளமும் நிறைந்து காணப்பட்டது.

இரண்டாம் கட்ட அகழ்வு பணிகள் 45 நாட்கள் முன்னெடுக் கப்பட்டு, செப்டெம்பர் 06ஆம் திகதியுடன் நிறைவு பெற்ற நிலை யில் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகள் தற்போது சுமார் 08 மாத கால பகுதிக்கு பின்னர் மீண்டும் இன்றைய தினம் திங்கட் கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக 2 கோடியே 10 இலட்சம் ரூபா நிதி, நிதியமைச்சினால் விடுவிக் கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது

# யாழ். வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் நாச்சிமார் ஆலயம் விடுதலை!

28.04.2026

யாழ்ப்பாண படைத்தலைமையகத்தை கிளிநொச்சிக்கு இடமாற்றம் முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ச தரப்பு குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.







இந்நிலையில் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்கு - நாகர் கோவில் பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற நாச்சிமார் ஆலய வளாகத்திலிருந்து சிறீலங்கா இராணுவத்தினர் முழுமையாக வெளியேறியுள்ளனர்.

கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக இராணுவத்தின் கட்டுப் பாட்டில் இருந்த குறித்த ஆலயப்பகுதியிலிருந்து, இராணுவத் தினர் எவ்வித உத்தியோகபூர்வ அறிவிப்புகளுமின்றி திடீரென செவ்வாய்க்கிழமை (27) அன்று வெளியேறியுள்ளனர். இரா ணுவத்தின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து, நீண்ட காலத்தின் பின்னர் அப்பகுதிக்குச் சென்ற பக்தர்கள் தற்போது ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளனர்.

இருப்பினும், ஆலயத்திலிருந்து வெளியேறிய இராணுவத் தினர், அங்கிருந்த அனைத்துக் கட்டடங்களையும் இடித்துத் தரைமட்டமாக்கிவிட்டுச் சென்றுள்ளனர்.

எனினும் பலாலி உயர்பாதுகாப்பு வலயப்பகுதியிலுள்ள ஆல யங்கள் மற்றும் தேவாலயங்களிலிருந்து படையினர் வெளி யேறவோ முகாம்களை மூடவோ பின்னடித்துவருவது குறிப் பிடத்தக்கது.

# யாழ். தையிட்டி சட்டவிரோத விகாரை விவகாரம்: கடித தலைப்பில் உறுதி மொழி வழங்கவில்லை!

28.04.2026

கடித தலைப்பில் உறுதி மொழி வழங்கவில்லை என்றே காணி உரிமையாளர்கள் குழப்பம் விளைவித்து , அளவீட்டு பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கவில்லை என அதிகாரிகள் தரப்பினர் குற்றம் சாட்டியுள்ளனர்.



தையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணிகளின் அளவீட்டு பணிகள் இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்ட இருந்தது.

அதன் போது, காணி உரிமையாளர்கள் "காணிகளை விடுவிக்கும் நோக்குடனையே அளக்கின்றோம்" என எழுத்தில் உறுதி மொழி வழங்க வேண்டும் என அதிகாரிகளிடம் கோரி இருந்தனர்.


அதற்கு இவ்வாறான உறுதிமொழிகளை அதிகாரிகளாக நாம் எழுத்தில் வழங்க முடியாது அதற்கான அதிகாரங்கள் எம்மிடம் இல்லை என கூறியுள்ளனர்.

நீண்ட இழுபறியின் பின்னர் காணி அளவீட்டு பணிக்களுக்காக வந்திருந்த நில அளவை திணைக்களம், தொல்லியல் திணைக்களம், புத்த சாசன அமைச்சின் அதிகாரிகள் மாவட்ட செயலர், பிரதேச செயலர் உள்ளிட்ட 07 தரப்பினரும் ஒரு கடிதத்தில் ஒப்பம் வைத்து கையெழுத்திட்டனர்.

அதிலும் திருத்தங்கள் தேவை என கூறி, மறுபடியும் ஒரு கடிதம் எழுதி, அதிலும் திருத்தங்கள் சொல்லி, மூன்றாவது கடிதத்தினை ஏற்றுக்கொண்டனர்.

ஆனாலும், அதனை ஒரு திணைக்களத்தின் கடித தலைப்பில் எழுதி, அதற்கு கீழ் 7 அதிகாரிகளும் கையெழுத்து வைக்க வேண்டும் என கோரினார்கள்.

நாங்கள் ஏழு அதிகாரிகளும் வெவ்வேறு திணைக்களத்திற்கு உரியவர்கள். ஒரு திணைக்களத்தின் கடித தலைப்பின் கீழ் ஏழு பேரும் ஒப்பமிட முடியாது. அதிகாரிகளாக எழுத்து மூல உறுதி மொழி வழங்கும் அதிகாரமே எமக்கு இல்லாத போதிலும், ஒரு பொதுவான கடிதத்தில் உறுதிமொழி தந்தும் அதனை ஏற்கா முடியாது விட்டால் அளவீட்டு பணிகளை கைவிடுவோம் என கூறி காணி அளவீட்டு பணிகளை கைவிட்டதாக அதிகாரிகள் தரப்பில் கூறப்பட்டுள்ளது.


2026.04.28

பொதுமக்களின் காணிகளை அளவீடு செய்து உரிமையாளர்களிடம் கையளிக்கும் நோக்கில் தையிட்டி தெருக (J/250) காணி அளவீடு

MBRCA/NH/DEV/02/ARCH-NED

S. G. Pallyaguruge — Add: Sec.
M. Pirathepan — GA, Jaffna
S. Sutheesnar — DS, Tellippalai
P. Wijith Rohan Fernando — Chairman, OMK
E. A. S. Wickramathilake — D.G. Archaeology
K. S. M. K. Silva — All. comm. - Buddhist Aff.
S. Sutheesnar, Divisional Secretary, Valikamam North, Tellippalai
28.4.2026

# ஊடகவியலாளர் தராக்கி டி.சிவராமின் 21ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு

28.04.2026

படுகொலை செய்யப்பட்ட சிரேஷ்ட ஊடகவியலாளர் "தராக்கி டி.சிவராமின்" 21 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பில் நடைபெற்றது.



குறித்த நிகழ்வானது காந்தி பூங்காவில் அமைந்துள்ள படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் ஞாபகார்த்த நினைவுத்தூபியில் இன்று (28.04.2026) நடைபெற்றது.

இதன்போது சிவராமின் உருவப்படத்திற்கு மட்டக்களப்பு மாநகர மேயர் சிவம்.பாக்கியநாதனும், சிரேஸ்ட ஊடகவியலாளர் இரா. துரைரெத்தினமும் இணைந்து மலர் மாலை அணிவித்தனர்.

கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம் ஆகிய ஊடக அமைப்புக்களின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாநகர மேயர் சிவம். பாக்கியநாதன், சிரேஸ்ட ஊடகவியலாளர் இரா.துரைரெத்தினம், ஊடக அமைப்புக்களின் உறுப்பினர்கள், என பலர் இதன்போது கலந்து கொண்டிருந்தனர்.

தொடர்ந்து ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு, மலர் வணக்கம் செலுத்தி அகவணக்கம் செலுத்தப்பட்டது.

பின்னர் சிவராமின் ஊடகப் பணிதொடர்பில் சிரேஸ்ட ஊடகவியலாளர்களான செ.பேரின்பராசா, இரா.துரைரெத்தினம் மற்றும் கிழக்கு மாகாண ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வ.சக்திவேல் ஆகியோர் உரையாற்றினர்.



# யாழ். செம்மணியில் மனிதப் புதைகுழியிலிருந்து இரண்டு எலும்புக் கூடுகள் முழுமையாக மீட்பு!

29.04.2026

யாழ்ப்பாணம் செம்மணி சித்துப் பாத்தி இந்துமயானத்தில் அமைந்துள்ள மனித புதைகுழியின் மூன்றாம் கட்டத்தின் மூன்றாவது நாள் அகழ்வு பணிகளானது இன்றையதினம் (29.04.2026) முன்னெடுக்கப்பட்டது.

இது குறித்து சட்டத்தரணி ரனித்தா ஞானராஜா கருத்து தெரிவிக்கையில், இன்றைய அகழ்வப் பணியின் போது ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூடு இலக்கங்களான 217 மற்றும் 220 ஆகிய இலக்கங்களை கொண்ட எலும்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டு நீதிமன்றத்தின் கண்காணிப்புக்கு கொண்டு செல்லப்பட்டது.

ஏற்கனவே வடமேற்கு பகுதியில் அகழ்வு பணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் சில என்பு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அதில் எத்தனை எலும்பு தொகுதிகள் காணப்படுகின்றன என்பது சுத்தப்படுத்தப்பட்ட பின்னரே தெரியவரும். ஏற்கனவே கொடுக்கப்பட்ட தொல்லியல் ஆய்வறிக்கையின்படி இந்த அகழ்வு 1.5 அடியிலிருந்து 2 அடி ஆழமான நிலத்தில் தான் இதுவரை காலமும் என்பது தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டன.

ஆகவே அகழ்வு பணிகளின் ஆழமானது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படும் அகழ்வு பணிகளின் போதே தீர்மானிக்கப்படும். ஸ்கான் பரிசோதனை செய்யப்படும்போதும் தெரிவு செய்யப்பட்ட பகுதியை அந்த ஸ்கேனுக்கு உட்படுத்தப்பட்டது.



பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பகுதிகளில் அகழ்வு பணிகளை முன்னெடுப்பதோடு, ஏனைய இடங்களில் என்பு தொகுதிகள் இல்லையா என்பதை உறுதிப்படுத்துவதற்கு மீண்டும் ஒரு ஸ்கேன் பரிசோதனை செய்யப்பட வேண்டும்.

குறித்த பகுதியில் உள்ள மண்ணானது கறுப்பு நிறத்தில் இருப்பதால் அதில் ஏதாவது சான்று பொருட்கள் இருக்குமா என்ற கோணத்தில் ஆய்வு செய்வதற்காக மண்ணினை அரித்து எடுக்கின்ற நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது என்றார்.

# பாசறைப்பாணருக்கு தமிழீழ மண்ணில் புகழ் வணக்கம்

30.04.2026

பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா அவர்களின் நினைவு வணக்க நிகழ்வு போராளிகள் நலன்புரிச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இன்றையதினம் வியாழக்கிழமை தமிழீழம் - யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா மண்டபத்தில் எழுச்சிபூர்வமாக இடம்பெற்றது.






மாவீரரின் தந்தையால் பொதுச்சுடர் ஏற்றப்பட்டு, பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பாவின் திருவுருவ படத்திற்கு மதத் தலைவர்கள் மலர்மாலை அணிவிக்கப்பட்டது. தொடர்ந்து நினைவுச் சுடர்களும் ஏற்றப்பட்டு மலர் வணக்கம் செலுத்தும் நிகழ்வும் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றது.

பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா அவர்களின் நினைவாக கவிஞர் மாணிக்கம் ஜெகன் அவர்களின் வரிகளில் விமலின் இசையமைப்பில் கேதீஸ்வரனால் பாடப்பட்ட பாடல் ஒன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தொடர்ந்து மதத் தலைவர்கள், பாராளுமன்ற உறுப்பினர், மற்றும் தமிழ்த்தேசிய செயற்பாட்டாளர்களது நினைவுரைகளும் இடம்பெற்றன.

# யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக் கூட்டுத் தொகுதியின் தொகை 240ஆக உயர்வு!

30.04.2026

யாழ். செம்மணி மனிதப் புதைகுழியில் மூன்றாம் கட்ட அகழ்வு பணியில் இன்றைய தினம் வியாழக்கிழமை ஒரு மனித எலும்புக் கூட்டு தொகுதி அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் இதுவரையான காலப்பகுதியில் செம்மணி மனித புதைகுழியில் இருந்து அகழ்ந்து எடுக்கப்பட்ட மனித எலும்புக் கூட்டு தொகுதிகளின் எண்ணிக்கை 240ஆக அதிகரித்துள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வு பணிகளின் நான்காம் நாள் அகழ்வு பணிகள் இன்றைய தினம் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது ஒரு மனித என்பு கூட்டு தொகுதி அடையாளம் காணப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை நேற்றைய தினம் புதன்கிழமை அகழ்வு பணிகளின் போது சந்தேகத்திற்குரிய வகையில் புதைகுழிக்குள் கறுப்பு நிற மண் காணப்பட்டமையால், அவற்றை அரித்து எடுக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதன் போது அதனுள் இருந்து ஒரு நாணயக்குற்றி மீட்கப்பட்ட நிலையில், அதனை சான்று பொருளாக அடையாளப்படுத்தி பாதுகாக்கப்பட்டுள்ளது.



நாளைய தினம் விடுமுறை நாள் என்பதால், அரை நாள் பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது

# எமது காணியை விடுவிப்பதற்காக நடக்கும் கூட்டங்களுக்கு ஏன் எங்களை அழைப்பதில்லை? யாழ். கையிட்டி சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணி உரிமையாளர்கள் கேள்வி

30.04.2026

சட்டவிரோத விகாரை அமைந்துள்ள காணிகளை விடுவிப்பதற்காக என நடைபெறும் கூட்டங்களுக்கு காணி உரிமையாளர்கள் ஆகிய எங்களை அழைப்பதில்லை. அங்கே என்ன கதைத்தார்கள் என சொல்வதில்லை. கூட்ட அறிக்கைகள் கேட்டால் அவற்றை தருவதில்லை எமக்கு தருவதில்லை.

கடந்த 11ஆம் திகதி காணி அளவீடு செய்ய போதாக மாவட்ட செயலகத்திற்கு எம்மை அழைத்து கூட்டம் நடத்தினார்கள். அந்த அறிக்கையை கேட்டால், அது கூட்டமில்லை கலந்துரையாடல் அதுக்கு அறிக்கை எழுதவில்லை என்கின்றனர். சில நாட்களுக்கு முன்னர் நடந்த கூட்டத்தையே கூட்டம் இல்லை என்கின்றனர்.

காணி அளவீட்டு பணிகளை முன்னெடுக்க இருந்த அன்றைய தினம் விகாரைக்குள் குருந்தூர் மலை விகாராதிபதி காணப்பட்டார். அவர் ஏன் அங்கே வந்தவர்? அவர் எப்படிப்பட்டவர் என எல்லோருக்கும் தெரியும்.

நாம் கொழும்பில் இருந்து வந்த திணைக்கள அதிகாரிகளிடம் உறுதி மொழி கேட்கவில்லை. அவர்களை யார் என்றே எமக்கு தெரியாது. நாம் எமது மாவட்ட செயலரோ அல்லது தெல்லிப் பளை பிரதேச செயலரோ தமது அலுவலக கடித தலைப்பில் அதனை எழுதி தர சொல்லியே கேட்டோம். அதற்கு அவர்கள் சம்மதிக்கவில்லை எனில், அவர்களுக்கே காணிகளை அளந்த பிறகு என்ன நடக்கும் என தெரியாது என்பதால் தான் அவர்கள் அவ்வாறு தர மறுத்தனர்.

அன்றைக்கு அவர்கள் எங்களுக்கு தந்த கடிதம் உத்தியோக பூர்வ கடிதமாக எந்த திணைக்கள கோவைக் குள்ளும் இருக்காது. அந்த கடிதம் எம்மிடம் மட்டுமே இருக்கும். அரச ஆவணமாக திணைகள கோவைகளுக்குள் அந்த கடிதம் இருக்காது.




அதனால் தான் நாம் கடிதத் தலைப்பில் கடிதம் கேட்டோம். அவ் வாறு தந்தால் தான் அதொரு ஆவணமாக கோவைக்குள் இருக் கும். கடிதத்திற்கு என தொடர் இலக்கம் இருக்கும். அவ்வாறான கடிதமே சட்ட ரீதியான ஆவணமாக இருக்கும் என மேலும் தெரிவித்தார்.

# எமது பூர்வீக நிலத்தில் இராணுவம் தேங்காய் பறிக்கிறது!

## முல்லை. கேப்பாபிலவு மக்கள்

30.04.2026

எமது பூர்வீக நிலத்தில் இராணுவம் தேங்காய் பறிக்கிறது. நாம் வீதியில் நின்று பார்த்துக்கொண்டிருக்கின்றோம் கேப்பாபிலவு இராணுவ பிரதான வாயிலுக்கு முன்பாக எதிர்வரும் மே 1 ஆம் திகதி அடையாள ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அனைத்து தரப்பினரையும் ஆதரவு தந்துதவுமாறு கேப்பாபிலவு மக்கள் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தனர்.

கேப்பாபிலவு காணி விடுவிப்பு தொடர்பாக கேப்பாபிலவு மக்களால் நினைவூட்டல் கடிதம் ஒன்று புதன்கிழமை (29) முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன் அவர்களை சந்தித்து கையளிக்கப்பட்டது.

அதன் பின்னர் இவ்விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த கேப்பாபிலவு மக்கள்,

கடந்த 17 வருடங்களாக தமது பூர்வீக வாழ்விடத்தை கோரி அரசிடம் நீதி கேட்டு வருகின்றோம். கடந்த மாதம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் அமைச்சர் உபாலி சமரசிங்க தங்களை சந்தித்து காணி விடுவிப்பு தொடர்பாக சாதகமான முடிவை பெற்றுத்தருவதாக கூறியிருந்தார். பல மாதங்கள் கடந்தும் எந்த முன்னேற்றமும் இல்லாததால், இன்றையதினம் மாவட்ட அரசாங்க அதிபருக்கும் அவர் ஊடாக அமைச்சருக்கும் காணி விடுவிப்பு தொடர்பான நினைவூட்டல் கடிதம் ஒன்றினை கையளிக்க கேப்பாபிலவு மக்கள் சென்றிருந்தனர்.

அதேவேளை, மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடிய போது காணி விடுவிப்பு தொடர்பாக எவ்வித சாதகமான பதிலும் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் குற்றம்சாட்டினர்.

மேலும், இடம்பெயர்ந்து மீள்குடியமர்த்தப்பட்ட காலத்தில் மாதிரி கிராமம் அமைக்கப்பட்டு 300-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் அங்கு குடியமர்த்தப்பட்டதாகவும், அக்குடும்பங்களுக்கு காணி மற்றும் வீடுகள் வழங்கப்பட்டதாகவும் கூறினர்.

அவர்களின் கூற்றுப்படி, ஏறத்தாழ 255 குடும்பங்களுக்கு சொந்த காணி மற்றும் மாற்றுக் காணி வழங்கப்பட்டுள்ள நிலையில், 55 குடும்பங்களுக்கு இதுவரை சொந்த காணி கிடைக்கவில்லை. மேலும், 11 குடும்பங்களுக்கு மாற்றுக் காணியும் வழங்கப்படாமல் உள்ளதாக தெரிவித்தனர்.

இவர்கள் வாழ்வாதாரமாக கடல், கரை மற்றும் விவசாய நிலங்களை நம்பியிருந்த போதிலும், பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினர்.

“போர் முடிவடைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் மக்களின் வாழ்விடத்தில் இன்னும் பாதுகாப்பு செயலகம் என்ற பெயரில் காணி அபகரிப்பு தொடர்வது தேவையற்ற ஒன்று. ஜனாதிபதி உடனடியாக தலையிட்டு மக்களின் காணியை மக்களுக்கே மீள வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்” என அவர்கள் வலியுறுத்தினர்.

மேலும், தமது வாழ்வாதாரங்களும் தொழில்துறைகளும் முடக்கப்பட்டுள்ளதைக் கண்டித்து வருகின்ற மே மாதம் 1ஆம் திகதி தொழிலாளர் தினத்தன்று கேப்பாபிலவு இராணுவ பிரதான வாயிலுக்கு முன்பாக அடையாள ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு அனைத்து நலன்விரும்பிகள், பொது மக்கள் மற்றும் அமைப்புகள் இணைந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர்கள் அழைப்பு விடுத்தனர்.




கடந்த 17 வருடங்களாக தமது பூர்வீக நிலத்தில் குடியேற முடியாமல் தவித்து வருவதாகவும், பல மாவட்ட அரசாங்க அதிபர்கள் மாறிய போதிலும் தாங்கள் மாதத்திற்கு ஒருமுறை அல்லது இருமுறை வந்து நில விடுவிப்பு குறித்து தொடர்ந்து கேட்டு வருவதாகவும் தெரிவித்தனர். இன்றைய சந்திப்பின் போது, மாவட்ட அரசாங்க அதிபரை நேரில் சந்திக்க முன் அனுமதி பெற வேண்டும் என்றும், ஊடகங்களை ஏன் அழைத்து வந்தீர்கள் என கேட்கப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மேலும், பல ஜனாதிபதிகளை நேரில் சந்தித்திருந்தாலும் தற்போதைய ஜனாதிபதியை சந்திக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும், புதுக்குடியிருப்புக்கு வந்தபோதும் சந்திக்கும் வாய்ப்பு மறுக்கப்பட்டதாகவும் குற்றம் சாட்டினர்.

“எமது பூர்வீக நிலத்தில் இராணுவம் தேங்காய் பறிக்கிறது. எமது நிலத்தில் உள்ள வளங்களை அவர்கள் பயன்படுத்துகின்றனர். நாம் வீதியில் நின்று பார்த்துக்கொண்டிருக்கின்றோம். இது எவ்வகையிலும் நியாயமல்ல. எமது கேப்பாபிலவு மண்ணில் எங்களை வாழ விடுங்கள் என்பதே எமது கோரிக்கை” என அவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர்.

# 05.05.1976




# தமிழீழ விடுதலைப்புலிகள் பிறப்பு




# எரிபொருள் தொடர்பில் கனடியப் பிரதமரின் அதிரடி அறிவிப்பு (?)

15.04.2026

கனடாவில் அதிகரித்து வரும் எரிபொருள் விலையைக் குறைக்கும் வகையில், பெட்ரோல் மற்றும் டீசல் மீதான மத்திய கலால் வரியை (Federal Fuel Excise Tax) தற்காலிகமாக ரத்து செய்வதாகப் பிரதமர் மார்க் கார்ணி அறிவித்துள்ளார்.

மத்திய அரசின் இந்த அறிவிப்பின்படி, சாதாரண பெட்ரோல் லிட்டருக்கு 10 காசுகளும் (10 Cents), டீசல் லிட்டருக்கு 4 காசுகளும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வரி நீக்கம் வரும் ஏப்ரல் 20ஆம் திகதி தொடங்கி, செப்டம்பர் 7ஆம் திகதி (Labor Day) வரை அமலில் இருக்கும். அமெரிக்கா - ஈரான் இடையிலான பதற்றம் காரணமாக உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை பெரும் ஏற்ற இறக்கத்தைச் சந்தித்து வருகிறது.

கடந்த பிப்ரவரி இறுதியில் மோதல் தொடங்கியதில் இருந்து, உலகின் ஐந்தில் ஒரு பங்கு எரிபொருள் கடத்தப்படும் "ஹார்முஸ் நீரிணை" (Strait of Hormuz) வழியாகச் செல்லும் கப்பல் போக்குவரத்து முடங்கியுள்ளது.

இதன் விளைவாக, கனடாவின் சில பகுதிகளில் பெட்ரோல் விலை லிட்டருக்கு 40 காசுகளுக்கும் மேலாக அதிகரித்துள்ளது. பிரதமர் மார்க் கார்ணியின் இந்த அறிவிப்பு போதாது என்று எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொய்லிவ்ரே (Pierre Poilievre) விமர்சித்துள்ளார்.

எரிபொருள் மீதான ஜிஎஸ்டி (GST) உள்ளிட்ட அனைத்து வரிகளையும் இந்த ஆண்டு இறுதிவரை ரத்து செய்ய வேண்டும் என்பதே தங்களின் கோரிக்கை என்று அவர் கூறினார்.

இதன் மூலம் ஒரு குடும்பத்திற்கு சராசரியாக 1,200 டொலர் வரை சேமிக்க முடியும் என்று அவர் வாதிட்டார்.

இந்த வரிச்சலுகை செப்டம்பர் மாதத்திற்குப் பிறகும் நீட்டிக்கப்படுமா என்ற கேள்விக்கு எரிசக்தித் துறை அமைச்சர் டிம் ஹாட்சன் (Tim Hodgson) பதிலளிக்கையில், "செப்டம்பர் மாதத்



தில் நிலவும் நிதிச் சூழல் மற்றும் உலகளாவிய நிலவரங்களைக் கருத்தில் கொண்டு உரிய முடிவு எடுக்கப்படும் என கதவைத் திறந்து வைத்துள்ளார்.

1995ஆம் ஆண்டு முதல் பெட்ரோல் மீது 10 காசுகளும், 1987 முதல் டீசல் மீது 4 காசுகளும் மத்திய கலால் வரியாக வசூலிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் கனடியர்களுக்கு பலத்த அதிர்ச்சியைக் கொடுத்த மார்க்கம் வாகன விபத்து வழக்கின் தீர்ப்பு!

17.04.2026

கனடாவில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய். மகள் மற்றும் மகன் ஆகிய இலங்கைத் தமிழர்கள் மூன்று பேர் வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்ட வழக்கில், சாரதி மீதான குற்றச்சாட்டுகளை நீதிபதி தள்ளுபடி செய்து அநீதியான முறையில் தீர்ப்பை வழங்கியண விடயம் கனடாவில் மாத்திரமல்ல உலகத் தமிழர்கள் மத்தியிலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

***முக்கியமாக என்ன நடந்துள்ளது?***

2022 அக்டோபர் 12 அன்று Markham (மார்க்கம்) பகுதியில் நடந்த இந்த விபத்தில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உயிரிழந் தனர். வழக்கு விசாரணை Newmarket (நியூமார்க்கட்) நீதிமன்றத்தில் நடைபெற்றது.

***நீதிபதி Mark Edwards வழங்கிய தீர்ப்பின் படி:***

1. சாரதி மீது குற்றம் நிரூபிக்க போதுமான ஆதாரம் இல்லை என்று கருதப்பட்டது,
2. மது அருந்தல், அதிக வேகம் போன்ற நேரடி குற்றச்சாட்டுகள் இல்லை என கூறப்பட்டது,
3. சூரிய ஒளி, வெளிச்சம், கவனச்சிதறல் போன்ற காரணிகள் விபத்துக்கு காரணமாக இருந்திருக்கலாம் என ஏற்றுக்கொள்ளப்பட்டது,

இதன் அடிப்படையில், சாரதியான Anthony Baglieri குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்டார்.

***ஏன் இது பெரிய சர்ச்சையாக மாறியது?***

இந்த தீர்ப்பு பலருக்கும் ஏற்றுக்கொள்ள முடியாததாக இருக்கக் காரணங்கள்:

1. சிக்னல் மீறல் (சிவப்பு விளக்கு) குறித்த சிசிடிவி ஆதாரங்கள் இருந்ததாக கூறப்படுகிறது,
2. மூன்று உயிரிழப்புகள் - அதுவும் ஒரே குடும்பம்,
3. "கவனச்சிதறல்" போன்ற காரணங்கள் இத்தகைய பெரிய விளைவுக்கு போதுமான விளக்கமா? என்ற கேள்வி,
4. சமூக நீதி மற்றும் சட்ட நீதி இரண்டிற்கும் இடையிலான வேறுபாடு,

***சமூகத்தின் எதிர்வினை***

இந்த தீர்ப்புக்குப் பிறகு:
1. 100-க்கும் மேற்பட்ட தமிழ்க் கனடியர்கள் நீதிமன்றம் முன் திரண்டனர்,




2. "நீதி வேண்டும்" என்ற கோஷங்கள் எழுப்பப்பட்டன,
3. பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆதரவு பெருகியது,
4.மேல்முறையீடு செய்யப்படலாம் என்ற தகவலும் வெளியாகியுள்ளது,

***சட்ட ரீதியாக பார்க்கும்போது***

இது ஒரு முக்கியமான புள்ளி:

குற்றவியல் வழக்குகளில், நீதிமன்றம் "சந்தேகத்திற்கு இடமின்றி குற்றம் நிரூபிக்கப்பட வேண்டும்" என்ற அடிப்படையில் தீர்ப்பு வழங்கும். அதாவது:

1. விபத்து நடந்தது மட்டும் போதாது,
2. அது குற்றமான கவனயீனம் (Criminal Negligence) என்பதை உறுதியாக நிரூபிக்க வேண்டும்,

இந்த அளவுக்கு ஆதாரம் இல்லையென நீதிபதி கருதியிருக்கலாம்.

***ஆனால் சமூக கேள்வி இன்னும் நீடிக்கிறது***

சட்ட ரீதியாக தீர்ப்பு வந்தாலும், மக்கள் மனதில் எழும் கேள்விகள்:


1. உயிரிழப்புகளுக்கு பொறுப்பு யார்?
2. சாலை பாதுகாப்பு எப்படி உறுதி செய்யப்படும்?
3. இத்தகைய தீர்ப்புகள் எதிர்கால வழக்குகளுக்கு என்ன தாக்கம் ஏற்படுத்தும்?

***அடுத்த கட்டம் என்ன?***

1. மேல்முறையீடு (Appeal) செய்ய வாய்ப்பு உள்ளது,
2. பொதுமக்கள் அழுத்தம் வழக்கை மீண்டும் கவனத்திற்கு கொண்டு வரலாம்,
3. சாலை பாதுகாப்பு சட்டங்களில் மாற்றம் கோரப்படலாம்.

சுமார் மூன்று வருடங்களாக நடைபெற் இந்த வாகன விபத்து வழக்கின் தீர்ப்பு கடந்த 17ம் திகதி வெள்ளிக்கிழமையன்று கனடாவின் நியூமார்க்கட் நகர நீதி மன்றத்தில் வழங்கப்பெற்ற போது நீதி மன்றில் கூடியிருந்து 500க்கும் மேற்பட்ட தமிழ்க் கனடியர்கள் வியப்புடனும் கவலையுடனும் நீதிமன்ற அறையை விட்ட வெளியேறினர்.





**"நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிது என்று வாழுங்கள் நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்கு சிறியவர்களே, எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது."**

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்

# கனடாவின் தபால் திணைக்களம் 1.57 பில்லியன் டாலர்கள் நட்டத்தை எட்டியது!

21.04.2026

கனடாவின் அரச நிறுவனமான “கனடா போஸ்ட்” (Canada Post), 2025ஆம் நிதியாண்டில் வரிக்கு முந்தைய நஷ்டமாக 1.57 பில்லியன் டாலர்களைப் பதிவு செய்துள்ளது.

இது அந்த நிறுவனத்தின் வரலாற்றிலேயே பதிவான மிகப் பெரிய நஷ்டம் என திங்கட்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2024ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2025இல் நஷ்டமானது 728 மில்லியன் டாலர்கள் (சுமார் 86.7%) அதிகரித்துள்ளது.

2018ஆம் ஆண்டு முதல் இதுவரை கனடா போஸ்ட் நிறுவனம் ஒட்டுமொத்தமாக 5 பில்லியன் டாலர்களுக்கும் அதிகமான இழப்பைச் சந்தித்துள்ளது.

நவீன காலத்திற்கு ஏற்ப மாற்றமடையாத பழைய விதிமுறைகள், பெருகி வரும் போட்டி மற்றும் தொழிலாளர் சங்கங்களுடனான இழுபறி போன்ற காரணங்களால் நிறுவனத்தின் நிதிநிலை மோசமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிறுவனத்தின் நிதி நிலைமை மிகவும் தீவிரமாக உள்ளது; நாட்டை நவீனப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம், என அந்நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இந்த நிதி நெருக்கடியைச் சமாளிக்கும் ஒரு பகுதியாக, கனடா முழுவதும் வீடு வீடாகச் சென்று தபால்களை வழங்கும் முறையை (Door-to-Door Delivery) நிறுத்துவதாகக் கடந்த வாரம் அதிரடி அறிவிப்பை வெளியிட்டது.

இதன் மூலம் ஆண்டுக்குச் சுமார் 400 மில்லியன் டாலர்களைச் சேமிக்க முடியும் என ஒட்டாவா மதிப்பிட்டுள்ளது.

இழந்த நிதித்தன்மையை மீட்டெடுக்கவும், இன்றைய பொருளாதாரச் சூழலுக்கு ஏற்ப கனடா மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கவும் “மாற்றத்தக்க நடவடிக்கைகளை” முன்னெடுத்து வருவதாக கனடா போஸ்ட் தெரிவித்துள்ளது.




# இளையோரை சமூக ஊடகங்களைப் பயன்படுத்த தடை விதிக்கவுள்ள முதல் கனேடிய மாகாணம் மனிடோபா!

26.04.2026

கனேடிய மாகாணமொன்று இளையோர் சமூக ஊடகங்களை பயன்படுத்த தடை விதிக் கவுள்ளது.

கனடாவின் மனிடோபா மாகாண முதல்வர் வாப் கினூ (Wab Kinew) சனிக்கிழமை வெளியிட்ட அறிவிப்பின்படி, இளையோர் சமூக ஊடகங்கள் மற்றும் AI Chatbots-ஐ பயன் படுத்துவதற்கு தடை விதிக்கப்பட உள்ளது.

இது கனடாவில் முதல் முறையாக அமுல்படுத்தப்படும் சட்டமாகும்.

வாப் கினூ கூறியதாவது, சமூக ஊடகங்கள் “இன்ஃபினிட் ஸ்க்ரோல்” மூலம் பயனர்களை அடிமைப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதனால் இளையோர்களுக்கு மன அழுத்தம், கவலை, மனச்சோர்வு போன்ற பிரச்சினைகள் அதிகரிக்கின்றன.

“சில ‘லைக்ஸ்’ மற்றும் ‘என்கேஜ்மெண்ட்’ பெயரில் குழந்தைகளை பாதிக்கின்றனர். இதன் மூலம் சில தொழில்நுட்ப நிறுவனங்கள் அதிக பணம் சம்பாதிக்கின்றன” என அவர் விமர்சித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் 16 வயதுக்குக் குறைவானவர்களுக்கு சமூக ஊடக கணக்குகளைத் தடை செய்த சட்டத்தைப் போலவே இந்தத் திட்டம் அமையும்.

அங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்ட ஒரு மாதத்தில் சுமார் 5 மில்லியன் சிறுவர்களின் கணக்குகள் நீக்கப்பட்டன.

சமூக ஊடகங்களுடன் AI Chatbots-ஐயும் மனிடோபா அரசு தடை செய்யும் முயற்சியில் உள்ளது. இதனால், இளையோர்களின் மனநல பாதுகாப்பு மற்றும் சமூக பாதுகாப்பு மேம்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல், கனடாவின் பிற மாகாணங்களும், பிரான்ஸ், இந்தோனேஷியா, வியட்நாம் போன்ற நாடுகளும் இளைஞர்களுக்கான சமூக ஊடக வயது வரம்புகளை பரிசீலித்து வருகின்றன. மனிடோபா வின் இந்த முடிவு, உலகளாவிய விவாதத்திற்கு வழிவகுக்கும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.



# வட்டி விகிதத்தில் மாற்றமில்லை: தொடர்ந்து நான்காவது முறையாக 2.25 சதவீதமாக தொடரும்

## கனடாவின் மத்திய வங்கி

29.04.2026

கனடாவின் மத்திய வங்கியான பேங்க் ஆஃப் கனடா, தனது கொள்கை வட்டி விகிதத்தை (Key Policy Interest Rate) தொடர்ந்து நான்காவது முறையாக 2.25 சதவீதமாகவே தக்கவைப்பதாக அறிவித்துள்ளது.

குறுகிய காலத்தில் பணவீக்கம் (Inflation) அதிகரிக்கக்கூடும் என்ற எச்சரிக்கையையும் வங்கி விடுத்துள்ளது.

தற்போது எரிசக்தி விலைகள் உயர்ந்து வருவதால், பணவீக்கம் ஏப்ரல் மாதத்தில் சுமார் 3 சதவீதத்தை எட்டும் என்று வங்கி கணித்துள்ளது.

எனினும், அடுத்த ஆண்டு தொடக்கத்தில் இது மீண்டும் வங்கியின் இலக்கான 2 சதவீதத்திற்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது குறித்துப் பேசிய வங்கி ஆளுநர் டிஃப் மேக்லம், “சர்வதேச எரிசக்தி விலையேற்றம் மற்றும் உணவுப் பொருட்களின் விலை உயர்வு கனடியர்களைப் பொருளாதார ரீதியாக நெருக்குதலுக்கு உள்ளாக்கி வருகிறது,” என்று தெரிவித்தார்.

கனடாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) வளர்ச்சி குறித்த கணிப்புகளில் பெரிய மாற்றமில்லை. அமெரிக்கா விதித்துள்ள வர்த்தக வரிகள் (Tariffs) மற்றும் ஈரான் போர் போன்ற உலகளாவிய சூழல்கள் கனடாவின் ஏற்றுமதி மற்றும் வணிக முதலீடுகளில் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

கச்சா எண்ணெய் விலை தொடர்ந்து அதிகரித்து, அது மற்ற பொருட்களின் விலையிலும் எதிரொலித்தால், வட்டி விகிதங்கள் அடுத்தடுத்து உயர்த்தப்படலாம் என தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா புதிய வர்த்தகக் கட்டுப்பாடுகளை விதித்து, அது கனடாவின் பொருளாதார வளர்ச்சியைப் பாதித்தால், வளர்ச்சியை ஊக்குவிக்க வட்டி விகிதம் குறைக்கப்படலாம் என குறிப்பிட்டுள்ளார்.





## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

**www.sangathamil.com**

# தமிழ் நாட்டுச் செய்திகள்



# தமிழ் நாட்டில் மீன்பிடித் தடைக்காலம் இன்று முதல் நடமுறைக்கு: 15 ஆயிரம் விசைப்படைகுகள் கடலுக்குச் செல்லாது நிறுத்தம்

15.04.2026



தமிழ்நாட்டில் 2 மாத கால மீன்பிடித் தடைக்காலம் இன்று (15.04.2026 - புதன்கிழமை) முதல் அமலுக்கு வருவதால் 15 ஆயிரம் விசைப்படகுகள் கடலுக்குச் செல்லாது நிறுத்தம்.

தமிழ்நாடடின் வங்காள விரிகுடா, மன்னார் வளைகுடா மற்றும் பாக் நீரிணை கடல் பகுதிகளில் ஏப்ரல், மே, யூன் மாதங்களை மீன் உள்ளிட்ட கடல்வாழ் உயிரிகளின் இனப் பெருக்க கால மாக, மத்திய மீன்வளத்துறை அமைச்சகம் கண்டறிந்துள்ளது.

மீன் வளத்தை பெருக்கும் நோக்கில் இந்தக் காலகட்டத்தில் விசைப்படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் மூலம் மீன் பிடிக்கத் தடை விதிக்கப்படுகிறது.

அதன்படி தமிழ்நாட்டில் இந்த ஆண்டுக்கான 61 நாள் மீன்பிடித் தடைக்காலம் இன்று (புதன்கிழமை) முதல் அமலுக்கு வரு கிறது. இந்த தடை யூன் 14 வரை 61 நாட்களுக்கு நடை முறையில் இருக்கும்.

இந்த தடைக்காலத்தில் தமிழ் நாட்டு அளவில் கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, திருவாரூர், கடலூர், விழுப்புரம், செங்கல்பட்டு, திருவள்ளூர், சென்னைஉள்ளிட்ட 14 மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 15 ஆயிரம் விசைப் படகுகள் மற்றும் இழுவைப் படகுகளும் கடலுக்குச் செல்லாமல், மீன்பிடித் துறைமுகத்தில் நிறுத்தி நங்கூர மிடப்பட்டிருக்கும்.

இந்த இரண்டு மாதங்களில் மீனவர்கள் தங்கள் படகுகளை சீரமைக்கப் பயன்படுத்திக் கொள்வார்கள். மீன்பிடித் தடைக் காலம் அமலுக்கு வந்தவுடன் தமிழகத்தில் மீன்களின் விலை யும் உயரத் தொடங்கும்.

# தமிழகத்தில் ரூ.1,262 கோடி மதிப்பில் பணம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல்!

## தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்

22.04.2026

தமிழகத்தில் நேற்று (ஏப்.21) மாலையுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த நிலையில், இதுவரை ரூ.1,262 கோடி மதிப்பில் பணம், பரிசுப் பொருட்கள் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட் டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்துள்ளார். இதில் ரொக்கப் பணம் மட்டும் ரூ.543 கோடி என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இதுவரை 4.18 இலட்சம் தபால் வாக்குகள் பதிவாகி உள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் நாளை (ஏப்.23) ஒரே கட்ட மாக நடைபெற உள்ள நிலையில், தேர்தலை ஒட்டி மேற்கொள் ளப்பட்டுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக அர்ச்சனா பட்நாயக் செய்தி யாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறுகையில், "தமிழகத்தில் தேர்தல் பணியில் உள்ள அரசு ஊழியர்கள் இன்று வரை தபால் ஓட்டுக்களை போட முடியும். இதுவரை 4,18,541 வாக்குகள் போடப்பட் டுள்ளன.

தமிழகத்தில் 33,133 இடங்களில் மொத்தம் 75,064 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 249 மாதிரி வாக் குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெண் பணியா ளர்கள் நடத்தும் வாக்குச்சாவடிகள் 325 ஆக உள்ளது, இளை ஞர்கள் மட்டுமே நடத்தும் வாக்குச்சாவடிகள் 79 ஆக உள்ளது. 5,949 வாக்குச்சாடிகள் பதற்றமானவை என கண்டறியப் பட்டுள்ளன.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக 1,06,418 வாக்குச்சாவடி இயந்திரங்கள் கையிருப்பில் உள்ளன. இதேபோல், 75,064 கட்டுப்பாட்டு கருவிகளும், 75,064 விவி பேட் கருவிகளும் கை யிருப்பில் உள்ளன. தேர்தல் பணிக்கு போதிய அளவு இயந் திரங்கள் கையிருப்பில் உள்ளன. வாக்குச்சாவடி இயந்திரங்கள் மற்றும் கன்ட்ரோல் யூனிட் ஆகியவற்றை பொருத்தவரை 20 சதவீதம் அளவுக்கு கூடுதலாக உள்ளன. விவிபேட் 30 சதவீதம் அளவுக்கு கூடுதலாக கையிருப்பில் உள்ளது.

வாக்குப்பதிவு மையங்களில் 3 இலட்சத்து 60 ஆயிரத்து 68 அதி காரிகள் பணியில் இருப்பார்கள். பாதுகாப்புப் பணிகளில் மொத்தம் 83,875 காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள் ளார்கள். கால் சென்டர் (எண் - 1950), மீடியா கண்காணிப்பு, செலவு கண்காணிப்பு, வாக்குப்பதிவு கண்காணிப்பு என மொத்தம் 4 கட்டுப்பாட்டு அறைகள் முழு வீச்சில் செயல்பட்டு வருகின்றன.

தேர்தலை ஒட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு பணிகள் காரணமாக இதுவரை ரூ.1,262 கோடி மதிப்பில் தங்கம், மதுபானங்கள், பரிசுப் பொருட்கள், ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இவற்றில், ரூ.543 கோடி அளவுக்கு




ரொக்கமாக பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

சமூக ஊடக பதிவுகள் தொடர்பாக 243 விளக்கங்கள் அளிக்கப் பட்டுள்ளன. 163 புகார்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2,180 தவறான சமூக ஊடக பதிவுகளின் யுஆர்எல் பிளாக் செய்யப்பட்டுள்ளது. பல்வேறு தரப்புகளில் இருந்து 5,634 புகார்கள் பெறப்பட்ட நிலையில், அவற்றில் 17 புகார்கள் நிலுவையில் உள்ளன. அவற்றுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மே 4ஆம் தேதி மொத்தம் 62 மையங்களில் வாக்குகள் எண்ணப்பட உள்ளன. இவ்வாறு அவர் தெரிவித்தார்" என்றார்.

# 2026 தேர்தலில் தமிழகத்தில் 84.41 % வாக்குப் பதிவு

24.04.2026

அமைதியான முறையில் நடந்த 2026 தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், மாலை 6 மணி நிலவரப்படி 84.41% சதவீத வாக் குகள் பதிவாகியுள்ளன. அதிகபட்சமாக கரூரில் 91.97% வாக் குகள் பதிவாகியுள்ளன. குறைந்தபட்சமாக கன்னியாகுமரியில் 75.48% வாக்குகள் பதிவாகியுள்ளன. 6 மணிக்குப் பின் டோக்கன் பெற்றவர்களுக்கு வாக்களிக்க 2 மணி நேரம் அவ காசம் வழங்கப்பட்டுள்ளது.

தலைநகர் சென்னையில் மாலை 6 மணி நிலவரப்படி 83.18% வாக்குகள் பதிவாகியுள்ளன. இவற்றில் தொகுதி வாரியாகப் பார்த்தால் சென்னை டாக்டர் ராதாகிருஷ்ணன் நகரில் அதிக பட்சமாக 89.20% வாக்குகளும், குறைந்தபட்சமாக மயிலாப் பூரில் 74.46% வாக்குகளும் பதிவாகியுள்ளன.

தமிழகத்தில் இதுவரை பதிவானதில் அதிக வாக்கு சதவீதம் என்றால் 2011இல் 77.8 % வாக்குகள் பதிவானதுதான். அதற்கு முன்னதாக 1967இல் 76.57% வாக்குகள் பதிவானதே அதிக பட்ச வாக்குப் பதிவு சாதனையாக இருந்தது. 1957 முதல் இது வரை தமிழக சட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குப் பதிவு சதவீதங்களின் விவரம்:

1957இல் 47% வாக்குகள்
1962இல் 71% வாக்குகள்
1967இல் 76.57% வாக்குகள்
1971இல் 71% வாக்குகள்
1977இல் 61.58% வாக்குகள்
1980இல் 61.58% வாக்குகள்
1984இல் 73.47% வாக்குகள்
1989இல் 69.69% வாக்குகள்
1991இல் 63.92% வாக்குகள்
1996இல் 66.95% வாக்குகள்



2001இல் 59.07% வாக்குகள்
2006இல் 70.22% வாக்குகள்
2011இல் 77.8% வாக்குகள்
2016இல் 74.26% வாக்குகள்
2021இல் 71.28% வாக்குகள்

www.sangathamil.com

# சுவாதி கொலை வழக்கில் கைதான ராம்குமார் மரணம்: வழக்கை முடித்து வைத்ததை எதிர்த்த மனு தள்ளுபடி!

25.04.2026

சுவாதி கொலை வழக்கில் கைதான ராம்குமார் சிறையில் மரணம் அடைந்தது தொடர்பான வழக்கை முடித்து வைத்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து ராம்குமாரின் தந்தை தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் பொறியாளர் சுவாதி கடந்த 2016ஆம் ஆண்டு கொலை செய்யப்பட்ட வழக்கில் கைதான ராம்குமார் அதே ஆண்டு சிறையில் மின்சார வயரை கடித்து தற்கொலை செய்து கொண்டதாக கூறப்பட்டது.

இதுதொடர்பான வழக்கை தேசிய மனித உரிமைகள் ஆணையம் காவல் ஆணையர் அறிக்கையின் அடிப்படையில் கடந்த 2020இல் முடித்து வைத்தது. இந்த உத்தரவை எதிர்த்து ராம்குமாரின் தந்தை பரமசிவம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

அதில், சென்னை காவல் ஆணையரின் அறிக்கை அடிப்படையில் ராம்குமார் மரணத்தை தற்கொலை என முடிவு செய்து தேசிய மனித உரிமைகள் ஆணையம் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து அது தொடர்பாக மீண்டும் விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும், எனக் கோரியிருந்தார்.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஏ.பாலாஜி மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையம் தரப்பில் வழக்கறிஞர் வி.டி.பாலாஜி, காவல்துறை தரப்பில் கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் கே.எம்.டி. முகிலன் ஆகியோர் ஆஜராகி வாதிட்டனர்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், இந்த வழக்கில் காவல்துறை, மனித உரிமை ஆணைய புலன் விசாரணைக்குழு ஆகியவற்றின் விசாரணை அறிக்கைகளின் அடிப்படையில் தான் தேசிய மனித உரிமைகள் ஆணையம் இந்த வழக்கை முடித்து வைத்து உத்தரவிட்டுள்ளது. ஆணையத்தின்




அந்த உத்தரவில் தலையிட எந்த காரணமும் இல்லை எனக் கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

# பேரறிவாளன் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் ஆனார்

27.04.2026

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் 31 ஆண்டுகள் சிறை தண்டனை அனுபவித்து, உச்ச நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட ஏ.ஜி. பேரறிவாளன், இன்று முறைப்படி வழக்கறிஞராகப் பதிவு செய்துள்ளார்.

எந்த நீதிமன்றப் படிகளில் மூன்று தசாப்தங்களாகத் தனக்கான நீதிக்காகக் காத்திருந்தாரோ, அதே சென்னை உயர் நீதிமன்றத்தில் இன்று அவர் கருப்பு அங்கி அணிந்து வழக்கறிஞராகத் தனது புதிய பயணத்தைத் தொடங்கியுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்று சிறையில் இருந்த பேரறிவாளன், தனது சிறை வாசத்தின் போது கல்வியில் மிகுந்த ஆர்வம் காட்டினார். சிறையிலிருந்தபடியே 10, 12ஆம் வகுப்புகளில் சிறப்பான மதிப்பெண்கள் பெற்ற அவர், பின்னர் முதுகலை படிப்பை (MCA) முடித்தார்.

தொடர்ந்து, சட்டப் படிப்பின் மீது ஆர்வம் கொண்ட அவர், ஜாமீனில் இருந்த காலத்திலும் விடுதலையான பின்னரும் தனது சட்டப் படிப்பை (LLB) முழுமையாக நிறைவு செய்தார். கடந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் உச்ச நீதிமன்றம் தனது சிறப்பு அதிகாரமான 142வது சட்டப்பிரிவைப் பயன்படுத்தி பேரறிவாளனை விடுவித்தது.




விடுதலையான பின் சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்த அவர், தற்போது தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி Bar Council ல் வழக்கறிஞராகப் பதிவு செய்துள்ளார்.

"குற்றவாளியாக நின்ற அதே இடத்தில், இன்று நீதியை நிலைநாட்டும் வழக்கறிஞராகப் பேரறிவாளன் உயர்ந்திருப்பது ஒரு வரலாற்றுத் தருணம்" எனப் பலரும் சமூக வலைத்தளங்களில் பாராட்டு தெரிவித்து வருகின்றனர்.

இதன் மூலம் அவர் தனது நீண்ட காலப் போராட்டத்திற்குப் பிறகு ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளார்.

# தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் எழுச்சிக் குரல் 'தேனிசை செல்லப்பா' காலமானார்!

24.04.2026

ஈழ விடுதலைப் போராட்டப் பாடல்கள் மற்றும் உணர்ச்சிமிகு தமிழ் பாடல்கள் மூலம் உலகத்தமிழர்களின் இதயங்களில் இடம்பிடித்த புகழ்பெற்ற பாடகர் "தேனிசை செல்லப்பா அவர்கள் இன்று (08.04.2026)இயற்கை எய்தினார். அவருக்கு வயது 85 ஆகும்.

திருநெல்வேலி மாவட்டம் சிங்கிலிப்பட்டி கிராமத்தில் 1941, ஏப்ரல் 21 அன்று பிறந்தவர் செல்லப்பா. இவரது கலைப்பயணம் தமிழக அரசியல் களத்தில் இருந்தே தொடங்கியது.

முன்னாள் அமைச்சர் சி.பா. ஆதித்தனார் அவர்கள் நடத்திய அரசியல் மேடை ஒன்றில் பாடப் பாடகர்கள் யாரும் முன்வராத சூழலில், துணிச்சலுடன் மேறியேறிய செல்லப்பா, தனது கணீரென்ற குரலால் அனைவரையும் ஈர்த்தார். இதனைத் தொடர்ந்து ஆதித்தனாரின் அரசியல் பிரசாரங்களில் நிரந்தரப் பாடகராக நியமிக்கப்பட்ட அவர், திராவிட இயக்க மேடைகளிலும் தொடர்ந்து முழங்கி வந்தார்.

1964இல் சிறீமாவோ ஒப்பந்தத்தின்படி மலையகத் தமிழர்கள் அகதிகளாக இந்தியா அனுப்பப்பட்டபோது, அவர்களின் வலியைப் பிரதிபலிக்கும் வகையில்,

"செந்தமிழா மனம் பொங்குதடா.. சிங்களர் கொடுமை மிஞ்சுதடா.." என்ற பாடலை ஏ.எல். நாராயணன் வரிகளில் பாடினார். இந்தப் பாடல் தமிழகம் மற்றும் ஈழத்தில் பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது.

ஈழப் போராட்டமும் தேனிசை செல்லப்பாவும் விடுதலைப் புலிகளின் செய்தித்தொடர்பாளர் பேபி சுப்பிரமணியம் அவர்களின் அறிமுகத்தால், ஈழப் புரட்சிப் பாடல்களைப் பாடத் தொடங்கினார்.

1990ஆம் ஆண்டு ஈழத்திற்கு நேரடியாக அழைக்கப்பட்ட அவர், யாழ்ப்பாணக் கோட்டை மைதானத்தில் சுமார் 5 இலட்சம் மக்கள் திரண்டிருந்த பிரம்மாண்ட மேடையில் தனது பாடல்களால் உணர்ச்சிப் பெருக்கினை ஏற்படுத்தினார்.

தமிழீழம் மற்றும் உலகப் பரப்பு எங்கும் இவர் நடாத்திய இசைக் கச்சேரிகள் இன்றும் தமிழ் மக்களால் பேசப்படுபவை. கவிஞர்கள் காசி ஆனந்தன், புதுவை இரத்தினதுரை ஆகியோரின்



வரிகளுக்குத் தனது குரல் மூலம் உயிர் கொடுத்தவர்.

## முக்கிய அறிவித்தல்

**தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**

sangathamilcanada@gmail.com

# பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா அவர்களின் இறுதிவணக்க நிகழ்வு











**ஒரு போரின் வெற்றியைத் தீர்மானிப்பது ஆட்பலமோ, ஆயுதபலமோ அல்ல; அசைக்கமுடியாத மனவுறுதியும், வீரமும், விடுதலைப் பற்றுமே வெற்றியை நிர்ணயிக்கும் குணாம்சங்கள்.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-




# ஹோர்முஸில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ஆறு மாதங்கள் வரை ஆகலாம்?

23.04.2026

ஹோர்முஸ் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ஆறு மாதங்கள் வரை ஆகலாம் என பென்டகன் மதிப்பீடு தெரிவிக்கிறது.

போர் முடிவடைந்தவுடன், ஈரான் புதைத்த கண்ணிவெடிகளை ஹோர்முஸ் நீர் வழிச் சந்தியிலிருந்து முழுமையாக அகற்றுவதற்கு ஆறு மாதங்கள் வரை ஆகலாம் என்று அமெரிக்க சட்டமியற்றுபவர்களுடன் பகிரப்பட்ட பென்டகனின் மதிப்பீட்டை மேற்கோள் காட்டி, வாஷிங்டன் போஸ்ட் புதன்கிழமை செய்தி வெளியிட்டது.

உலகின் ஐந்தில் ஒரு பங்கு எண்ணெயையும், அதன் இயற்கை எரிவாயுவின் பெரும்பகுதியையும் கடத்தும் ஒரு முக்கிய கப்பல் போக்குவரத்துப் பாதையான இந்த நீரிணை, ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேலியப் போர் தொடங்கியதிலிருந்து பெருமளவில் மூடப்பட்டிருப்பதால், எரிசக்தி விலைகள் கடுமையாக உயர்ந்துள்ளன .

போஸ்ட் பத்திரிகையின் அறிக்கையின்படி, ஈரான் அந்த நீர் வழிப்பாதையிலும் அதைச் சுற்றியும் குறைந்தது 20 கண்ணிவெடிகளைப் புதைத்திருக்கக்கூடும் என்றும், அவற்றுள் சில ஜிபிஎஸ் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தொலைவிலிருந்து மிதக்கவிடப்பட்டிருப்பதால் அவற்றைக் கண்டறிவது கடினமாக உள்ளது என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு இரகசியக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

போர் முடிவதற்குள் கண்ணிவெடி அகற்றும் பணிகள் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என பென்டகனின் மதிப்பீடு தெரிவித்தது.

இருப்பினும், பென்டகன் செய்தித் தொடர்பாளர் ஷான் பார்னெல், அந்தச் செய்தித்தாளிற்கு அளித்த பேட்டியில், அதன் தகவல் தவறானது என்று கூறினார்.

ஈரானின் புரட்சிகரப் பாதுகாப்புப் படை, கண்ணிவெடிகள் இருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படும் 1,400 சதுர கிலோமீட்டர் பரப்பளவிலான அபாய மண்டலத்தை அறிவித்துள்ளது.

கண்ணிவெடிகள் குறித்த கவலைகள் தொடர்ந்து அதிகரித்து வருவதால், பாதுகாப்பான வழித்தடங்கள் குறித்து நிறுவனங்களுக்குத் தெளிவு தேவை என்று கடந்த வாரம் யேர்மன் கப்பல் போக்குவரத்து நிறுவனமான ஹபாக்-லாய்டின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார்.




# தாக்குதலிலிருந்து தப்பினார் அமெரிக்க ஜனாதிபதி: துப்பாக்கிதாரி கைது

26.04.2026

வாஷிங்டன் டி.சி.யில் நடைபெற்ற செய்தியாளர்களின் இரவு விருந்தில் துப்பாக்கிச் சூடு நடத்தியவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக ட்ரூத் சோஷியல் தளத்தில் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார்.



வாஷிங்டன் டி.சி.யில் இது ஒரு மறக்க முடியாத மாலைப் பொழுது. இரகசிய சேவைப் பிரிவினரும் சட்ட அமலாக்கத் துறையினரும் மிகச் சிறப்பாகச் செயல்பட்டனர். அவர்கள் விரைவாகவும் துணிச்சலுடனும் செயல்பட்டனர். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் கைது செய்யப்பட்டுள்ளார். விவகாரங்கள் தொடரட்டும் என்று நான் பரிந்துரைத்துள்ளேன். ஆனால், சட்ட அமலாக்கத் துறையின் வழிகாட்டுதலின்படியே முழுமையாகச் செயல்படுவோம் என்று அவர் ஒரு பதிவில் எழுதியிருந்தார்.

அவர்கள் விரைவில் ஒரு முடிவை எடுப்பார்கள். அந்த முடிவு எதுவாக இருந்தாலும், இந்த மாலைப் பொழுது திட்டமிட்டதை விட மிகவும் வித்தியாசமாக இருக்கும், மேலும் நாம் அதை மீண்டும் செய்ய வேண்டியிருக்கும் என்று அவர் கூறினார்.

கடந்த ஆண்டுகளில் இந்த நிகழ்ச்சியைப் புறக்கணித்த டிரம்ப், இப்போது முதல் முறையாக இதில் கலந்துகொள்கிறார்.

வெள்ளை மாளிகை செய்தியாளர் இரவு விருந்தில் டிரம்ப் மேடையிலிருந்து இறக்கி இரகசிய சேவைப் பிரிவினர் பாதுகாத்தனர்.

வாஷிங்டன், டி.சி.யில் உள்ள வாஷிங்டன் ஹில்டன் ஹோட்டலின் லாபிக்குள் நுழைவதற்கு முன்பு எந்தப் பாதுகாப்புச் சோதனையும் நடத்தப்படவில்லை என்று ஓ தளத்தில் பதிவிட்டுள்ளார்.



வெள்ளை மாளிகையையும் டிரம்ப் ஜனாதிபதி பதவிக் காலத்தையும் செய்தி சேகரிக்கும் மற்ற பத்திரிகையாளர்களுடன் கொமடோவ்ஸ்கியும் அந்த நிகழ்வில் கலந்துகொண்டார்.

ஆனால், அந்த இரவு விருந்தில் கலந்துகொண்ட பத்திரிக்கையாளர்கள், அரசியல்வாதிகள் மற்றும் பிறர், ஹோட்டலுக்குள் இருக்கும் விருந்தினர் மண்டபத்திற்குள் நுழைவதற்கு முன்பு, கடுமையான பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, அவர்களது பைகளும் சோதிக்கப்பட்டன.

# ஓபெக் அமைப்பிலிருந்து விலகுகிறது ஐக்கிய அரபு அமீரகம்

28.04.2026

பெட்ரோலிய ஏற்றுமதி நாடுகளின் கூட்டமைப்பான ஓபெக் (OPEC) அமைப்பிலிருந்து வரும் மே 1-ஆம் திகதி முதல் விலகுவதாக ஐக்கிய அரபு அமீரகம் (UAE) அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

எண்ணெய் உற்பத்தியில் முன்னணியில் உள்ள ஒரு நாடு இந்த முடிவை எடுத்துள்ளது சர்வதேச எரிசக்தி சந்தையில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய அரபு அமீரகத்தின் இந்த முடிவுக்குப் பின்னால் பல பொருளாதார மற்றும் அரசியல் காரணங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

ஓபெக் அமைப்பின் உற்பத்தி வரம்புகள் (Quotas) மிகக் குறைவாக இருப்பதாக அமீரகம் நீண்டகாலமாக அதிருப்தி தெரிவித்து வந்தது.

தனது எண்ணெய் உற்பத்தித் திறனை அதிகரிக்கப் பெருமளவில் முதலீடு செய்துள்ள நிலையில், அதிக எண்ணெயை உலகச் சந்தையில் விற்க அமீரகம் விரும்புகிறது.

தனது நாட்டின் நீண்டகாலப் பொருளாதார மற்றும் எரிசக்தித் திட்டங்களுக்கு அதிக சுதந்திரம் தேவைப்படுவதால் இந்த முடிவை எடுத்ததாக அமீரகத்தின் ஊடகமொன்று தெரிவித்துள்ளது.




ஓபெக் அமைப்பின் தலைமையாகக் கருதப்படும் சவூதி அரேபியாவுக்கும், ஐக்கிய அரபு அமீரகத்துக்கும் இடையே அண்மைக்காலமாக நிலவி வரும் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியான பனிப்போரும் இதற்கு ஒரு முக்கிய காரணமாகப் பார்க்கப்படுகிறது.

தற்போது ஈரான் போர் மற்றும் ஹார்முஸ் நீரிணை (Strait of Hormuz) மூடப்பட்டுள்ள சூழலில், உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விநியோகம் ஏற்கனவே கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.



இன்று சர்வதேச சந்தையில் பிரெண்ட் கச்சா எண்ணெய் (Brent Crude) விலை ஒரு பேரலுக்கு 111 டாலருக்கும் அதிகமாக வர்த்தகம் செய்யப்படுகிறது.

ஓபெக் அமைப்பிலிருந்து அமீரகம் வெளியேறுவதால், எதிர்காலத்தில் அந்த அமைப்பு எண்ணெய் விலையைத் தீர்மானிக்கும் வலிமையை இழக்கக்கூடும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

# நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி அவர்களின் 38ஆவது ஆண்டு நினைவு நாளில் அடையாள உண்ணா நோன்புப் போராட்டம்

21.04.2026

தமிழீழ சுயநிர்ணய அமைப்பினால், ஐக்கிய இராச்சியத்தில் நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி அவர்களின் 38வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, அடையாள உண்ணாநோன்புப் போராட்டம் மிகுந்த எழுச்சியுடன் லண்டன் நகரில் பிரதமர் அலுவலகமான 10 Downing Street முன்பு, ஞாயிற்றுக்கிழமை 19.04.2026 அன்று காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற்றது.



இந்நிகழ்வு தமிழீழ தேசியக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

ஐக்கிய இராச்சியத்தின் தேசியக் கொடியை தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் தலைவர் முனைவர் சொக்கலிங்கம் யோகலிங்கம் அவர்கள் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக் கொடியை முன்னாள் போராளி முகுந்தன் அவர்கள் ஏற்றிவைத்தார். தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் செயலாளர் முனைவர் அருணாசலம் ராஜலிங்கம் அவர்கள் பொதுச்சுடரை ஏற்றிவைத்தார்.

நாட்டுப்பற்றாளர் அன்னை பூபதி அவர்களை நினைவுகூரும் விதமாக, நினைவுச் சுடரை செல்வி வளந்திஜா அவர்கள் ஏற்றி வைத்தார். மாலை அணிவிப்பு நிகழ்வில், ஒருங்கிணைப்பாளர்கள் ரஜீத்தா மற்றும் நிந்துயா அவர்கள் அன்னை பூபதி அவர்களின் நினைவுச் சிலைக்கு மாலை அணிவித்தனர்.

முதல் மலர் வணக்கத்தையும் விளக்கேற்றத்தையும் ஒருங்கிணைப்பாளர் ரவிகரன் துவாரகன் அவர்கள் ஆரம்பித்து வைத்தார். இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் தொண்டர்கள் அனைவரும் மலர் வணக்கம் செலுத்தினர்.

அகவணக்க நிகழ்வில், தாயக விடுதலைக்காக உயிர்நீத்த மாவீரர்கள், அப்பாவிகளாக உயிரிழந்த தமிழ் மக்கள், மாமனிதர்கள், நாட்டுப்பற்றாளர்கள் மற்றும் குறிப்பாக அன்னை பூபதி





அவர்கள் ஆகியோரின் நினைவாக அகவணக்கம் செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அடையாள உண்ணாநோன்புப் போராட்டம் ஆரம்பமானது.

**நிகழ்வின் போது:**
அன்னை பூபதி அவர்களைப் பற்றிய தேசப்பற்று பாடல்கள் பாடப்பட்டன, உரைகள் மற்றும் கவிதைகள் வழங்கப்பட்டன, 100-க்கும் மேற்பட்டோர் அடையாள உண்ணாநோன்பில் பங்கேற்றனர், இந்நிகழ்வில் தமிழீழ சுயநிர்ணய அமைப்பின் தலைவர் முனைவர் யோகலிங்கம் அவர்களின் உரையும், செயலாளர் முனைவர் ராஜலிங்கம் அவர்களின் உரையும், தேசிய செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்களின் உரைகளும் இடம் பெற்றன.

நிகழ்வின் இறுதியில், பங்கேற்ற அனைவருக்கும் பலரசம் வழங்கப்பட்டு, அடையாள உண்ணாநோன்பு நிறைவுற்றது.

பின்னர் கொடி கையேற்பும் மற்றும் உறுதியேற்பும் இடம்பெற்று நிகழ்வு நிறைவடைந்தது.



இந்த நிகழ்வை ராகவன் மற்றும் வளந்திஜா அவர்கள் திறம்பட ஒருங்கிணைத்து நடத்தி வைத்தனர்.

தமிழீழ சுயநிர்ணய அமைப்பு (UK)
admin@msdte.org
www.msdte.org

“தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்”

“தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்”












## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com







சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

**உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?**

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை
உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

# சுதந்திர தமிழீழத் தனியரசே எமது தேசியப் பிரச்சனைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதை எமது மக்கள் எப்பொழுதோ தீர்மானித்து விட்டார்கள்.

**–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –**



எமக்கு முன்னால், காலவிரிப்பில், ஒரு புதுயுகம் எமக்காகக் காத்திருக்கின்றது. எமக்கு பின்னால் கடந்த காலத்தில், இரத்தம் தோய்ந்த விடுதலை வரலாறு நீண்டு செல்கின்றது. மானிடத்தின் விடுதலைக்காக மாபெரும் தியாகங்கள் புரிந்த வரலாற்றுப் பெருமையுடன், எமது விடுதலை இயக்கம் பிறக்கப்போகும் புது யுகத்தில் காலடி எடுத்து வைக்கின்றது.

இப்புது யுகம் எமக்குச் சொந்தமானது, அநீதியையும் அடக்குமுறையையும் எதிர்த்து நீதிக்கும் சுதந்திரத்திற்குமாகப் போராடி மக்களுக்கு சொந்தமானது. இப்புது யுகத்தில், எமது மக்களின் நெடுங்காலக் கனவு நிறைவுபெறும். இத்தனை காலமும் எமது மக்கள் பீடித்த துன்பமும் துயரமும் அகன்று எமது மக்களுக்கு விடிவு பிறக்கும். எமது மண்ணுக்கு விடுதலை கிட்டும். எந்த இலட்சியத்திற்காக எமது மாவீரர்கள் போராடி மடிந்தார்களோ அந்தப் புனித இலட்சியம் இப்புது யுகத்தில் நிறைவுபெறும்.

இந்த மகத்தான வெற்றி முழு உலகத்தையும் வியப்பிலும் திகைப்பிலும் ஆழ்த்தியிருக்கின்றது. இது ஒரு சாதாரண போரியல் சாதனையல்ல, போரியற்கலையின் ஒரு ஒப்பற்ற உலக சாதனை யாகவே இவ்வெற்றி கருதப்படும். இவ்வெற்றியின் விஸ்வரூப பரிமாணம் கண்ட எமது எதிரி மட்டுமல்ல, எதிரிக்குப் பக்கபலமாக நின்று, பயிற்சியும், ஆயுதமும் பண உதவியும் வழங்கிவந்த உலக நாடுகளும் மலைத்துப்போய் நிற்கின்றன.

ஓயாத அலைகள் மூன்றாகக் குமறிய இப்பெருஞ்சமர் ஒரு சில நாட்களில் இமாலய சாதனையைப் படைத்தது.

கடலோரம் கட்டிய மணல்வீட்டுக்கு நிகழ்ந்த கதிபோலச் சந்திரிகாவின் போர்த்திட்டத்தை விடுதலைப் புலிகளின் ஓயாத அலைகள் அடித்துச் சென்றுள்ளது. இச்சமரில் நாம் ஈட்டிய மாபெரும் வெற்றியின் விளைவாக இராணுவச் சமபலம் எமக்குச் சார்பாகத் திரும்பியிருக்கின்றது. புலிகள் இயக்கத்தைப் பலவீனப்படுத்தி, இராணுவ மேலாதிக்க நிலையைப் பெற்றுவிடவேண்டுமென்ற சந்திரிகாவின் ஐந்தாண்டு கால பகீரத முயற்சியை நாம் ஒரு சில நாட்களில் முறியடித்துள்ளோம்.

மனித உரிமைகளை மதியாத சிங்கள இனவாத அரசியலும், அதன் தமிழர் விரோதப் போக்கும் தமிழ் மக்களுக்கு ஒரேயொரு மாற்று வழியையே திறந்து வைத்திருக்கின்றது. அது தான் போராடிப் பிரிந்து சென்று தனியரசை உருவாக்கும் ஒரே வழி, இந்த வழியில்தான் சிங்கள தேசம் தமிழினத்தை தள்ளிக்கொண்டிருக்கின்றது.

சுதந்திர தமிழீழத் தனியரசே எமது தேசியப் பிரச்சனைக்கு இறுதியான, உறுதியான தீர்வு என்பதை எமது மக்கள் எப்பொழுதோ தீர்மானித்து விட்டார்கள். எமது மக்களின் சுதந்திர அபிலாசையை சிலுவையாக தோளில் சுமந்து, இத்தனை ஆண்டுகளாக எமது இயக்கம் இர்தம் சிந்திப் போராடி வருகின்றது. இன்று, எமது சுதந்திரப் பயணத்தில், அந்த நீண்ட விடுதலை வரலாற்றில், ஒரு முக்கியமான திருப்பத்தை அடைந்துவிட்டோம்.

*(1999ஆம் ஆண்டு மாவீரர் நாள் உரையில் இருந்து)*


Lucksme
Gold House
Traditional of Trust & Quality
மின்னும்
பொன் நகை
மிஞ்சும் புன்னகை
காலத்தை வெல்லும்
கலை நுட்பத்துடன்
மின்னும் பொன் நகையால்
மேலும் ஒளிரும்
உங்கள் புன்னகை
திருமணத்திற்கு தேவையான தாலிக்கொடிகள் குறித்த நேரத்தில் செய்து தரப்படும்
உங்கள் இராசிக்கேற்றபடி அதிஸ்டக்கற்களில் தங்கநகைகள் செய்து தரப்படும்
பழைய தங்க நகைகள் அதி கூடிய விலைக்கு வாங்கப்படும்
416 - 587 - 8000
G9 - 2900 Markham Road, Scarborough ON M1X 1E6


Shiyara
Financial Services
(An Agency for the Real Estate, Mortgages & Finance)
BUSINESS LOANS - LINE OF CREDITS
MORTGAGES
SECOND MORTGAGES
REFINANCING
FAST SERVICE
CALL:
KRISHNA
647 308 6069
Shiyara@ymail.com
ENJOY THE FREEDOM OF BETTER CREDIT


★ திருமணம்
★ பூப்புனித நீராட்டு விழா
★ பிறந்தநாள்
★ பரதநாட்டிய அரங்கேற்றம்
மற்றும் எல்லாவித
வைபவங்களுக்கான தலை, முக
அலங்காரங்கள் உங்கள்
விருப்பத்திற்கேற்ப
சிறந்த முறையில் ...
Kurinchi
Beauty Creations
Bridal ★
Non- Bridal ★
Saree Pleating & Draping ★
Hair Flowers & Bouquet ★
and more.
தொடர்புகளுக்கு:
647.918.9742
Kurinchi_Beauty_Creation
Beauty by Salu

# இது காலம் கனிந்த நேரம்

- புதுவை இரத்தினதுரை -



காற்று எங்கும் வியாபித்துளது.
கலங்காதே!
மூச்சை உள்வாங்கி வெளியேவிடு.
சுவாசம் சீராகும்.
முள்ளந்தண்டை நிமிர்த்தி
கை காலை உதறு
தளையறுந்து போகும்.
உனக்கு விலங்கிட எவரால் முடியும்?
நீ காலில் நசியும் சிறு புழு அல்ல
உன்னைக் கையால் கசக்கமுடியாது.
நீ யார்?
உரத்துக் கேள் பதில் வரும்.
நீ யார்?
மனிதன் மட்டுமல்ல...
நீ மனிதனிலும் தமிழன்.
பயமறியாத பரம்பரை வித்து.
நல்லூரின் "இராசவாசலில்" தேடிப்பார்
இந்தமண் உனதென்ற "தோம்பு" கிடைக்கும்.
"பண்டாரவளவை" உழுதுபார்
உன் பூட்டி வணங்கிய "மாடவிளக்கும்"
பொங்கிப் படைத்த "பித்தளைத் தாம்பாளமும்"
வரலாறெழுதிய "எழுத்தாணியும்" வந்து சேரும்.
வல்லிபுரக்கோவில் மணலைக் கிளறிப்பார்
நீ யாரென்ற தடயங்கள் தட்டுப்படும்.
இந்தளவும் இருக்கிறதே
இன்னுமேன் கட்டுண்டு கிடக்கின்றாய்.
எல்லாவற்றையும் மண்ணுள் புதைத்துவிட்டு
ஏன் இருப்பிழந்து இருக்கின்றாய்.
தமிழனே! நம்பிக்கையுடன் எழுவாய்
இரவு கரைந்து, கரைந்து
வைகறைப் பொழுதோடு கலக்கும்.
குங்குமச் சாந்தில் குளித்து
கிழக்கின் திரை விலத்தி
சூரியன் சுடர்விழி மலர்வான்.
விடியும் பொழுது உனக்கு விரைந்து வருகிறது.
வரவேற்க ஆரத்தித் தட்டுடன் ஆயத்தமாகு.
ஆனால்
புலரும் பொழுதுக்காகப் போராட வேண்டும்
என்பதைமட்டும் எண்ணிக்கொள்.
குஞ்சு கொத்தாமல்... முட்டை உடையாது.
கூழாகிப் போனால்... குஞ்சு பிறவாது.
வாழ்வுவரும் வழியில்
வேதனை வேலிகளைத் தாண்ட நேரிடும்.
குருதியில் குளித்தபடிதான் புதிய பிரசவம்.
தலைப்பிரசவம் தாய்க்கே தெரியும்.
போராடிப் பெற்றால்தான்
விடுதலையின் விலை தெரியும்.
காலம் வந்து கதவைத் தட்டும் போது
சாவியைத் தயாராக வைத்திருப்பவன் புத்திசாலி
மூகூர்த்த நேரத்தில்
தாலியைத் தொலைப்பவன் முட்டாள்.
முற்றிச் சரிந்த வயலுக்குள்
அரிவாளுடன் இறங்குபவன் அறிவாளி.
ஏர்கொண்டு இறங்கினால்...
புத்தியிலேதோ பிசகிருக்க வேண்டும்.
இது காலம் கனிந்த நேரம்.
தோளின் சுமையை
அடுத்த தலைமுறைக்கும் சுமத்தாதே.
பயணத்தை உன் கால்களே முடிக்கட்டும்.
இப்போது வேண்டும் வீரம்
நாணல் போலக் கூனல் கூடாது.
ஊசியிலை மரங்கள் போல நிற்பவன்
விழுந்தாலும் நினைக்கப்படுவான்.
மணிமுடியும், கவசமும் தாங்கிய
பெருமைக்குரிய பிறப்புடையவனே!
அடையாள அட்டையும்,
அகதிப்படிவமும் சுமக்கின்றாயே
நினைத்துப் பார்!
நெஞ்சு கொதிக்கவில்லையா?
சாளரத்தைத் திறந்து வெளியே பார்.
குஞ்சுகள் கூட
அணிவகுத்துப் போகின்றனர்.
முரசம் முழங்க முன்னேறுகின்றனர்.
முடிந்தால் அவர்களுடன் முன்னேறு
இல்லையேல் என்ன செய்வதா?
வாழ்த்துக்கூறி வழியனுப்பு.
வெற்றியுடன் வீடு திரும்பும் வரை
அவர்கள் நினைவாக
வாழ்ந்துகொள்.
அது போதும்.





வைகாசி – 1994 – எரிமலை




# வரலாறு சொல்லும் பாடம்

## தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு

– தமிழீழக் கல்விக் கழகம் –







உண்ணா நோன்பில்
லெப். கேணல் திலீபன்



இந்தச்சாவு தமிழ் மக்களின் மனதிலே பெரும் அலையைத் தோற்றுவித்தது. இலங்கை-இந்திய உடன்படிக்கையின் நேர்மையிலும், இந்திய அரசின் தலையீட்டில் உள்ள நேர்மையிலும், இந்திய அமைதிப்படையின் நேர்மையிலும் தமிழ் மக்களுக்குப் பெருத்த ஐயம் நிலவியதால், விடுதலைப் புலிகளின் "பின்னே மக்கள் அணிதிரண்டனர்." உணர்ச்சி வெள்ளம் கரை புரண்டோடத் தொடங்கியதும், இந்திய அரசு மீண்டும் புலிகளுடன் 28.09.87 இல், ஒரு பொருத்தனை செய்து கொண்டது. இதன்படி இடைக்கால மாகாணசபையைத் தாமதமின்றி அமைக்க ஒப்புக்கொண்டது. இந்த மாகாணசபையின் 12 உறுப்பினர்களில் முதலமைச்சர் உட்பட 7 பேரை விடுதலைப்புலிகளுக்கு வழங்க உடன்பட்டது. எனினும் புலிகளின் பட்டியலில் முதலமைச்சர் பதவிக்குக் குறித்துரைக்கப்பட்ட பத்மநாதனின் பெயரை ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஏற்க மறுத்தார். பத்மநாதன் அந்த வேளையிலே போராட்டக் காரணங்களுக்காகக் குற்றஞ் சாட்டப்பட்ட பல தமிழர்களில் ஒருவராக இருந்தார். உடன்படிக்கையின் 2.11 பிரிவு வெறும் ஏட்டு எழுத்தாக இருந்தது. அரசியற் கைதிகளை, சிங்கள அரசு ஒப்பந்தத்தின்படி விடுதலை செய்யவில்லை. ஆனால், சிறை, வழக்கு என்ற காரணம் காட்டி பத்மநாதனின் பெயரை ஏற்க மறுத்தது. பத்மநாதன் பின்னர் சிங்கள ஆட்சியாளரால் மட்டக்களப்பு அரச அதிபராகப் பணியமர்த்தப்பட்டு அண்மையில்தான் ஓய்வு பெற்றார் என்பது கூர்ந்து நோக்க வேண்டியதொன்றாகும்.


### பன்னிரு வேங்கைகளின் வீரச்சாவு

பொதுமன்னிப்பு வழங்கப்பட்டிருந்த நிலையில், கடற்புறாவிலே கடலில் சென்ற விடுதலைப்புலி உறுப்பினர்களில் 17 பேரை, சிறீலங்கா கடற்படை அவர்கள் ஆயுதம் தாங்கியிராத போது கைது செய்து, பலாலி முகாமுக்குக் கொண்டு வந்து அடைத்து வைத்தது. விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர்களான புலேந்திரன், குமரப்பா போன்றோரும் இந்த 17 பேரிலே அடங்குவர். விடுதலைப்புலிகள் இந்தியாவிடம் முறையிட்டனர். ஆனால், இந்தியா எதுவும் பேசாதிருந்த நிலையில், உடன்படிக்கையை மீறி, தமிழ்ப்புலிகளை, கொழும்புக்குக் கொண்டுசெல்ல சிறீலங்கா அரசு முயற்சி செய்தது.

அதன் விளைவாக 17 பேரும் சயனைட் அருந்த, 12 பேர் சாவைத் தழுவிக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து தமிழ் நிலத்திலே ஏற்பட்ட கொதிப்பும் ஆற்றமுடியாத உணர்வலைகளுந்தான் இந்திய அமைதிப்படைக்கெதிரான போராக வெடித்தது. விடுதலைப்புலிகள் முதலில் இந்தியப் படைகளைத் தாக்கவில்லை. உடன்படிக்கையை மீறிய இலங்கை அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்ற முயற்சிகளை எதிர்த்தே கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் தாக்குதலைத் தொடுத்தனர். 09.10.1987இல். சிறீலங்கா அரசு விடுதலைப்புலிகளைத் தடை செய்யும் அறிவிப்பை வெளியிட, அதேநாள் நள்ளிரவுக்குப் பின், இந்தியப்படை திடீரென விடுதலைப்புலிகளுக்கெதிரான தனது இராணுவ நடவடிக்கையைத் தொடங்கியது.

### தவிர்க்கமுடியாத நிலையில் இந்தியப் படைகள் மீது புலிகளின் தாக்குதல்

இந்தியாவோடு போர் ஒன்றைத் தொடுப்பதற்குப் புலிகள் விரும்பவில்லை. இந்திய அரசின் தெளிவற்ற அரசியற் கொள்கையினால் ஈழத்தமிழ் மக்கள் மீண்டும் ஒருமுறை ஆயுதம் தாங்க, கட்டாயப்படுத்தப்பட்டனர். 09.10.1987 நள்ளிரவு "நிதர்சனம்" என்னும் புலிகளின் ஒலிபரப்புக் கருவிகளை இந்தியப்படை கையகப்படுத்தியது. 10.10.87இல் முரசொலி, ஈழமுரசு என்னும் பத்திரிகைப் பணிமனைகள் இந்தியப்படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. இதனைத் தொடந்துதான் 10.10.87 பி.ப.2 மணியளவில், விடுதலைப்புலிகள் இந்திய அமைதிப்படையை எதிர்க்கத்தொடங்கினர். இந்திய அரசு விடு



*கிருஸ்ணயர், வாஜ்பாய், வி.பி.சிங், சந்திரசேகர், எம்.ஜி.ஆர், ஆலடி அருணா, நெடுமாறன், என்.டி.ராமராவ், வை.கோபாலசாமி, கருணாநிதி, ஜெயலலிதா, வீரமணி.*

தலைப்புலிகளை ஒடுக்குவதிலும் அவர்கள் ஆயுதங்களைக் களைவதிலும் காட்டிய வேகத்தை.

உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கான அழுத்தத்தைச் சிறீலங்கா அரசுமீது செலுத்துவதிற் காட்டவில்லை. தனது இரும்புக்கரத்தால் தமிழர்களின் உணர்வுகளைத் திருகி எறியவே முடிவு செய்து, இலட்சக்கணக்கான துருப்புக்களைத் திரட்டியது; எறிகணை விமானக்குண்டுவீச்சு மூலம் தமிழீழத்தைக் காயப்படுத்தத் தொடங்கியது.

உடன்படிக்கையின்பேரில் தனக்குக்கிடைத்த அனுகூலங்களைச் சிறீலங்கா அரசு அமைதியாக அறுவடை செய்து கொண்டிருந்தது. இந்திய அமைதிப்படை வந்த பிறகு சிறீலங்கா இராணுவத்தில் ஒருவீரருக்குக்கூடச் சிறுகாயம் இல்லை; உயிரிழப்பு இல்லை; போர்ச் செலவு குறைந்தது. சிங்களப் பகுதிகளின் அபிவிருத்தி கிடுகிடுவென வளரத் தொடங்கியது. தமிழ்ப் பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்கள் அமோகமாய் நடந்தன. இந்தியாவின் செலவிலே இந்தியப்படைகளைக்கொண்டு தமிழர்களுக்கெதிரான போரை சிறீலங்கா நடத்திக்கொண்டு, தெற்கிலே ஜே.வி.பியின் வன்முறைக்கு தான் முகம் கொடுத்துக் கொண்டிருந்தது.



விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்பட்ட 18 இந்தியப் படையினரில் முதற்றொகுதியினர்



விடுதலைப் புலிகளால் வவுனியாவில் வைத்து விடுவிக்கப்பட்ட இரண்டு இந்தியப் படையில் ஒருவருடன் புலிகள்

தம்மீது திணிக்கப்பட்ட இந்தியப் போருக்கு விடுதலைப்புலிகள் முகம் கொடுத்த போதும், போர் நிறுத்தம் செய்து அரசியற் பிரச்சினையைப் பேசித்தீர்க்கும்படி பலமுறை இந்தியாவை வேண்டினார்கள். தம்மாற் கைது செய்யப்பட்ட இந்தியப்படையினரை விடுவித்து, தம் நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினர். ஆயுதக் களைவைத் தவிர மறுபேச்சில்லை என்ற போக்கில், இந்திய அமைதிப்படை தமிழர் மீதான கொடிய போரை மேலும் மேலும் கூர்மைப்படுத்தியது. மனித நீதி இழந்த எவருமே இந்திய அரசின் இந்த முடிவை ஏற்கவில்லை. சிங்கள ஜெயவர்த்தனாவின் படை "முத்தியராக" இந்தியா ஏன் இயங்க வேண்டும் என நீதிபதி வி.ஆர் கிருஷ்ணஐயர் ஒருகட்டுரையினை எழுதினார்.

"இந்தியப்படை புலிகளோடு யுத்த நிறுத்தம் செய்து சிறீலங்கா அதிபரை உடன்படிக்கையை நிறைவேற்றும்படி அழுத்தம் கொடுக்க வேண்டும். இல்லையேல் தங்களது தலைவிதியைத் தாங்களே எழுதும்படி விலகிவிடவேண்டும்" என்று அவர் உறுதிபடக்கூறினார். இந்தியாவின் அன்றைய தலைமை அமைச்சர் வாஜ்பாய் முன்னாள் தலைமை அமைச்சர்களான வி.பி.சிங். வி.எஸ்.சந்திரசேகர், முன்னாள் தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் முன்னாள் ஆந்திர முதல்வர் என்.டி.ராமராவ் முன்னாள் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ச் பெர்னாண்டஸ் அண்மையில் மறைந்த முன்னால் தமிழக அமைச்சரும் சட்டபேரவைத் தலைவருமான கா.காளிமுத்து ஆகியோரும் இந்திய அரசின் புலிகள் மீதான நடவடிக்கைகளைக் கடுமையாகச்சாடினர்.



பிரேமதாசா

"தமிழீழப் போராளிகள் நிராயுதபாணிகள் ஆக்கப்பட்டால் அடுத்த கணமே இந்தியப்படைகளை விலக்குமாறு சிறீலங்கா அரசு கேட்கும். இதன் பிறகு தமிழர்களில் அக்கறை செலுத்தப் போவது எவர்?" என்று கேள்வி எழுப்பினார் ஆலடி அருணா. வை.கோபாலசாமி. நெடுமாறன், முரசொலிமாறன், கலைஞர் கருணாநிதி, ஜெயலலிதா, வீரமணி போன்ற தமிழகத் தலைவர்கள் எல்லோருமே இந்திய இராணுவத்தின் முறையில்லாப் போரைக்கண்டித்தனர். இந்திய அமைதிப் படை தமிழீழத்தில் நிகழ்த்திய போரின் விளைவு சொல்லும் தரமன்று. உயிரிழப்புக்கள், பாலியல் வல்லுறவு என்று குருதி ஆறு ஓடத் தொடங்கியது. இந்திய அரசு மிகப் பிடிவாதமாக ஆயுதக்களைவு என்ற பெயரில் தமிழர்கள் மீது போரைத் தொடுத்திருந்தாலும் சிங்களப் பேரினவாதத்தினை மனநிறைவடையச் செய்வோ உடன்படிக்கையைச் செயற்படுத்தவோ அவர்களால் முடியவில்லை என்பதே உண்மை.

அரசுக்குத் துணைபோன சிலரைக் கொண்டு. ஒருபொம்மை மாகாண சபையை உருவாக்குவதில் இந்தியாவின் இராணுவ வல்லமை வெற்றி கண்டாலும், தமிழர்களின் உள்ளத்தையோ. சிங்களவரது இனவாதத்தையோ வெற்றி கொள்ள முடியாமல், அதிபர் பிரேமதாசாவினால் அவமானப்படுத்தப்பட்டு வெளியேறிய வரலாற்றுக்கரியைத்தன் மீது பூசிக் கொண்டது. சிறீலங்கா அரசு அரசியற் கைதிகளை விடுவிக்கத் தவறியது. அவசரகாலச் சட்டத்தை வடக்கு கிழக்கு மாகாணங்களில் நீக்கத் தவறியது.



விடுதலைப்புலிகள், பிரேமதாசா பேச்சுவார்த்தை

கிழக்கு மாகாணத்திலே சிங்கள ஊர் காவற்படையைக் கலைக்கவில்லை. இராணுவத்தை முகாமுக்குள் முடக்கவில்லை. தமிழ்ப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றத்தை மும்முரப்படுத்தியது. வாக்களித்தவாறு வடக்குகிழக்கு மாகாணங்களை ஒன்றிணைக்கவில்லை. சிறையிலடைக்கப்பட்டவர்களுக்குப் பொதுமன்னிப்பு அளிக்கவில்லை.

சிறீலங்கா அரசின் இத்தனை முரண்பாடுகளையும் இந்திய அரசு கண்டுகொள்ளவில்லை. இந்திய அரசைப் பொறுத்தவரை வடக்குக்கிழக்குக்கான இடைக்கால அரசை அமைக்கவில்லை. தமிழ்க் காவற்றுறையை ஆக்கவில்லை. விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக்களைந்த அதே வேளையில், புலிகளை வேட்டையாடத் துடித்துத் கொண்டிருந்த ஈ.பி.ஆர்.எல்.எப் போன்ற தமிழ்க்குழுக்களை ஆயுதபாணிகளாக்கியது. உடன்படிக்கைக்கு மாறாக, புலி உறுப்பினர்களை சிறீலங்கா அரசின் பிடியில் சாகவிட்டது. இதனாற்றான், விரும்பத்தகாத ஒருபோரை இந்தியாவிற்கெதிராகச் செய்ய வேண்டிய நிலை ஈழத்தமிழருக்கு ஏற்பட்டது. உடன்படிக்கைகள் பேச்சுவார்த்தைகளால் ஏமாற்றப்பட்ட கசப்புணர்வு தமிழ்மக்களைப் பொறுத்தவரை இத்தோடு முடிந்து விடவில்லை. சிங்கள பௌத்த பேரினவாதம் என்றைக்குமே இந்திய விரோத நிலைப்பாட்டையே கடைப்பிடித்தது. இந்த விரோத உணர்வைத் தூண்டிவிட்டு ஜே.ஆரின் பின் பிரேமதாசா சிறீலங்காவின் அதிபரானார். பதவிக்கு வந்ததுமே இந்திய இராணுவத்தை அவமானத்தோடு திரும்பவைத்தார். இந்தியப் பிரதமர் ராஜீவைப் பிடரியிலடித்து அவமானப் படுத்திய இனவெறியனான ரோகன விஜிதமுனியைச் சிறையிலிருந்து விடுவித்து இந்தியாவை அவமானப்படுதினார்.

## அவமானத்தோடு திரும்பியது இந்தியப்படை

சிறீலங்கா வெளிநாட்டு இராணுவ உளவுத்துறையினை ஏற்கவே கூடாது. இந்திய நலனுக்கு ஊறுவிளைவிக்கும் வகையிலே, திருமலைத் துறைமுகத்தை வேறு ஒருவர் பாவிக்க அனுமதிக்கக் கூடாது. திருமலை எண்ணெய்க் களஞ்சியம் இந்திய இலங்கை கூட்டுமுயற்சியாக இருக்கவேண்டும். வெளிநாட்டு ஒலிப்பரப்பு நிறுவனங்களுக்கு ஒலிப்பரப்பு வசதிகளைத் தவிர்ந்த இராணுவ உளவுத்துறைக்கு பயன்படுத்தும் வசதிகள் வழுங்கப்படக்கூடாது. என்ற தனது நலன் தொடர்பான உடன்படிக்கைகூட நிறைவேறாத நிலையில், இந்தியப்படை இராணுவ அரசியல் தோல்விகளோடு இந்தியா திரும்பியது.

பிரேமதாசா தமிழர் பிரதிநிதிகளான புலிகளுடன் பேசி ஒரு சண்டை நிறுத்த உடன்படிக்கைக்கு வந்திருந்தார். இராணுவ வல்லமையால் நியாயம் அற்றமுறையிலே தேர்ந்து எடுக்கபட்டவர்களால் ஆளப்படும் வடக்குகிழக்கு மாகாணசபையைக் கலைப்பது. அரசியல் யாப்பில் 06ஆவது திருத்தத்தை நீக்குவது. தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பது எனப் புலிகளோடு அவர் ஒருப்பட்டிருந்தார். அரசியல் அமைப்பின் ஆறாவது சட்டத் திருத்த நீக்கம் புலிகளின் மீதான தடையை நீக்குவதோடு தாயகம் பற்றிய அமைதியான தீர்வுக்கு வழி வகுக்கக்கூடும் என்றும் தமிழ் மக்கள் நினைத்தனர்.

- தமிழர் ஏமாற்றப்பட்ட வரலாறு தொடரும்....

www.sangathamil.ca




# வல்வைப் படுகொலை 13 மே 1997

யாழ்மாவட்டத்தில் பருத்தித்துறைப் பகுதியில் வல்வைக்கிராமம் உள்ளது. 10.05.1985 அன்று சிறீலங்கா இராணுவம் வல்வைக் கிராமத்தைச் சுற்றி வளைத்தது 24 இளம் ஆண்களை கைது செய்தது. அங்குள்ள ஒரு பொதுமண்டபத்தில் இவர்கள் அனைவரும் அடைக்கப்பட்டனர். பின்னர் இம்மண டபத்தின் மேல் குண்டு வீசப்பட்டு அங்கு அடைத்து வைக்கப்பட்டிருந்த 24 ஆண்களும் கொல்லப்பட்டனர். அதே சமயத்தில் அவ்வூர் கோவில் கேணியருகே மேலும் 12 பொது மக்கள் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப் பட்டனர். இதைவிட மேலும் 34 பொதுமக்கள் அன்று கொல்லப்பட்டனர். அவ்வூரில் அன் றைய தினம் 70 பொதுமக்கள் சிறீலங்கா இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# முள்ளிவாய்க்கால் படுகொலை – 13 மே 1997

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறை பற்றுக் பிரதேச செயலர் பிரிவில் முல்லைத்தீவு நகரத்திலிருந்து பரந்தன் வீதியில் சுமார் ஐந்து கி.மீ. தொலைவில் அமைந்துள்ள கிராமமே முள்ளிவாய்க்கால் மேற்குப் பிரதேசமாகும். இக்கிராமத்தின் பொருளாதாரம் மீன்பிடி, விவ சாயம் என்பனவற்றிலேயே தங்கியுள்ளது.

1997ஆம் ஆண்டில் முள்ளிவாய்க்கால் கிரா மத்தில் யாழ்ப்பாணம், வடமராட்சி கிழக்குப் போன்ற பல்வேறு பகுதிகளிலுமிருந்து போர்ச் சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வந்த மீன வக் குடும்பங்கள் இங்குள்ள கடற்கரை யோரங்களில் செறிவாகக் குடியேறி கடற் றொழிலில் ஈடுபட்டுவந்தார்கள்.

13.05.1997ஆம் ஆண்டு முற்பகல் விமானப் படையின் “கிபிஉ” விமானங்கள் இப்பகுதியில் கரைவலை மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வர்கள் மீது குண்டுத்தாக்குதலை நடத்தியதில் கரைவலைத் தொழிலில் ஈடுபட்டுக்கொண் டிருந்த ஒன்பது மீனவர்கள் உயிரிழந்ததுடன், வீதி புனரமைப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்த மூவர் உட்பட பத்துப் பேர் காயமடைந்தனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. ஆறுமுகம் சிவாஸ்மகேந்திரம் - கடற் றொழில் 38
02. நாகராசா தவரத்தினராசா - விவசாயம் 24
03. சின்னையா ஆறுமுகம் - கடற்றொழில் 68
04. பொன்னம்பலம் பாக்கியராசா - கடற் றொழில் 60
05. சுப்பிரமணியம் அஜந்தன் - கடற்றொழில் 15
06. சிவகுரு மகேந்திரன் - கடற்றொழில் 39
07. சிவகரன் துதிகரன் - கடற்றொழில் 18
08. மல்லி - 42
09. இராமசிங்கம் இராசையா - கடற்றொழில் 73

இச்சம்பவத்தில் காயப்பட்டோர்களின் கிடைக் கப்பெற்ற விபரம் (பெயர் தொழில்)

01. ரவீந்திரன் 28
02. செ.கோணேஸ்வரன் 33
03. ஆ.சுதன் 20
04. கதிர்காமு சிங்கம் 25
05. கணபதிப்பிள்ளை நாகலிங்கம் 48
06. செல்வநாதன் சிறீபத்மநாதன் 31
07. க.கணேசலிங்கம் -
08. ஜெ.ரவிக்குமார் 15

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# உதயன் பணிமனைப்படுகொலை – 02 மே 2006






ஊடகங்கள் ஒரு நாட்டிற்கும் சமூகத்திற்கும் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படு கின்றன. இவ் ஊடகங்கள் சுதந்திரமான முறையில் செயற்படும் போதே அவற்றால் சிறப் பாகவும் நடு நிலைமைத் தன்மை யாகவும் செயற்படமுடியும். இலங்கையின் ஊடகங் களின் சுதந்திரம் பல வருடங்களாகப் பறிக்கப் பட்டு வருகின்றது. அந்தவகையில் யாழ்ப் பாணம் உதயன் பத்திரிகை நிறுவனம் மீதான தாக்குதலும் ஊடக சுதந்திரத்திற்கு சாவு மணியடிக்கும் சம்பவமாகவே அமைகின்றது.

02-05-2006 அன்று மாலை உதயன் பணி மனை தனது வழமையான பணிகளுடன் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது. அடுத்த நாள் பத்திரிகைக்கான தயாரிப் படுத்தலில் பணியாளர்கள் ஈடுபட்டுக்கொண்டி ருந்தனர். இவ்வேளையில் இரவு 7.30 மணியளவில் உதயன் பணி மனையினுள் புகுந்த சிறீலங்கா இராணு வத்தினரும் ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் அங்கு பணிபுரிந்து கொண் டிருந்த பணியாளர்கள் மீது கண் மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டனர். இதில் இரண்டு பணியாளர் உயிரிழந்தனர் மூன்று பேர் படுகாயமடைந் தனர். மேலும் அங்கு பல இலட்சம் ரூபா பெறு மதியான சொத்துக்களும் சேதமாக்கப்பட்டன. இத்தாக்குதலானது தமிழ் ஊடகத்துறைக்கு பெரும் அச்சுறுத்தலாக அமைவ துடன் மிகவும் காட்டு மிராண்டித்தனமானது என இலங்கை பத்திரிகையாளர் சங்கம், இலங்கை ஊடக வியலாளர் ஒன்றியம், ஊடகத்துறை அமைப் புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் தமது கண்டனங்களை வெளியிட்டனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பஸ்ரியன் ஜோர்ச் சகாயதாஸ் (சுரேஸ்), 30
02. இராசரத்தினம் ரஞ்சித்குமார், 28

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)






# உதயன் பணிமனைப் படுகொலை 02 மே 2006





# நெல்லியடிப் படுகொலை – 04 மே 2006

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் முச்சக்கர வண்டியில் சென்று கொண்டிருந்த இளைஞர்கள் மீது இலங்கை இராணுவத்தினாரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஏழு இளைஞஉகள் உயிரிழந்தனர்.

இச்சம்பவமானது 04-05-2006 அன்று பிற்பகல் 2.15 மணியளவில் யாழ் வடமராட்சி நெல்லியடிச்சந்திக்கு 300 மீற்றர் தொலைவில் நவின்டிலில் அமைந்துள்ள சிறீலங்கா இராணுவத்தினரின் புலனாய்வுத்துறை முகாமிற்கு அண்மையாக இடம்பெற்றது. இவர்கள் சகநண்பர் ஒருவரின் விருந்து உபசாரத்தில் கலந்து கொள்வதற்காக முச்சக்கரவண்டிகளில் சென்றுகொண்டிருக்கும் போது இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்திற்கு சற்று முன்னதாக இப்பகுதி இராணுவமுகாம் மீது கைக்குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது. இதில் மூன்று இராணுவப் புலனாய்வாளர்கள் காயமடைந்தனர். அதன் பின்னரே இப்படு கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. செல்வராசா சுமன், 22
02. வேலுப்பிள்ளை நிமலன், 21
03. நாகரத்தினம் நகுலேஸ்வரன், 18
04. பாலச்சந்திரன் கிரிசாந்தன், 18
05. தாமோதரம்பிள்ளை சர்மிலன், 17
06. நவரட்ணராஜா நாசண்ணா, 19
07. சுப்பிரமணியம் சுபாஸ், 19

நன்றி: வட கிழக்கு மனித உரிமைகள் செயலகம் - தமிழினப் படுகொலைகள் (1956-2008)

# மந்துவில் படுகொலை – 06 மே 2006

யாழ். மந்துவில் கோலத்தம்மன் ஆலய கும்பாபிஷேக முன் ஏற்பாடுகளைச் செய்வதற்காக 06.05.2006 அன்று இரவு எட்டு இளைஞர்கள் ஆலயத்தில் தங்கியிருந்து பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். அப்போது இரவு 7.00 மணியளவில் அப்பகுதிக்கு வந்த இலங்கை இராணுவத்தினர் அங்கிருந்தவர்களை விசாரித்துவிட்டுச்சென்றனர். பின்னர் இரவு 11.00 மணியளவில் மீண்டும் வேறு ஒரு இராணுவ அணி அப்பகுதிக்கு வந்தது. அதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12.00 மணியளவில் ஜீப் வாகனம் ஒன்று அங்கே வந்ததைத் தொடர்ந்து பின்னிரவு 1.00 மணியளவில் துப்பாக்கி வேட்டுச்சத ்தங்கள் கேட்டன. அதனைத் தொடர்ந்து அவலக் குரல்கள் கேட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். இராணுவ அச்சம் காரணமாக வீடுகளுக்குள் முடங்கிக்கிடந்த மக்கள் காலை வேளையில் தமது உறவுகளைத் தேட ஆரம்பித்தனர். அப்போது ஆலயத்தின் தேர்முட்டி சுவர்ப்பகுதியிலும் வீதி ஓரங்களிலும ் மண்ணால் மறைக்கப்படட் இரத்தத் தடயங்கள் காணப்பட்டன.

பின்னர் இவர்களது உயிரற்ற உடல்கள் வடமராட்சிக்கும் தென்மராட்சிக்கும் இடையிலுள்ள கப்பூது கண்டல் காட்டுப்பகுதியில் இருப்பதாகக் கூறப்பட்ட போதும் பின்னர் அப்பகுதியில் சடலங்கள் எதுவும் இல்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தகவல் தெரிவித்தனர். இப்பகுதிக்கு மக்கள் எவரும் செல்ல அனுமதிக்கப்படவில்லை. காணமற்போன எட்டுப் பேரும் இலங்கை அரசபடைகளினாலேயே படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என அப்பகுதிமக்கள் கூறுகின்றனர். இது தொடஉபாக இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, சாவகச்சேரி பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. கந்தசாமி பரிமேலழகன், 22
02. இரத்தினம் தயாரூபன், 21
03. பொன்னம்பலம் பார்த்தீபன், 22
04. வைகுந்தவாசன் வைகுந்தகுமார், 22
05. இராமச்சந்திரன் இராசகுமார், 24
06. செல்வரட்ணம் சிவானந்தன், 24
07. மார்க்கண்டு புஸ்பகாந்தன், 26
08. இராசநாயகம்பிள்ளை சிவானந்தமூர்த்தி, 35

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை

# அல்லைப்பிட்டிப் படுகொலை – 13 மே 2006








இலங்கையின் வடபுலத்தில் உள்ள யாழ் மாவட்டத்தின் தீவகப்பகுதியானது யாழ்நகரில் இருந்து தென்மேற்காக 15 கிலோ மீற்றர் துராத்தில் அமைந்துள்ளது. இப்பிரதேசம் இலங்கை கடற்படையினரது பூரண கட்டுப் பாட்டுப் பிரதேசத்தில் உள்ளது. 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ஆம் நாள் சிறீ லங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலி களுக்கும் இடையில் சமாதான ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னரும் அல்லைப்பிட்டி சோதனைச் சாவடியில் மக்கள் அடையாள அட்டை, உடற் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதன் பின் னரே தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட்டு வந் தனர். இப்பிரதேசத்தில் கடற்படையினருடன் இணைந்து ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் செயற் பட்டு வருகின்றனர். இலங்கையின் புதிய சனாதிபதியாக மகிந்த ராஜபக்ஷ தெரிவு செய்யப்பட்ட பின்னர் தமிழ்மக்கள் மீதான வன் முறைச் சம்பவங்கள் தீவிரப்படுத்தப்பட்டன. அதன் ஒரு அங்கமாக அல்லைப்பிட்டி, வேலணை, புளியங்கூடல் ஆகிய இடங்களில் 13-05-2006அன்று இடம்பெற்ற படு கொலைச்சம்பவமானது அமைகின்றது.

யாழ் தீவகம் அல்லைப்பிட்டியில் 13-05-2006 அன்று இரவு அல்லைப்பிட்டி பிலிப் நேரியார் தேவாலயத்திற்கு அண்மையிலுள்ள செல்லத் துரை அமலதாஸ் என்பவரது வீட்டில், அயலி லுள்ள மக்களும் இராணுவ அச்சம் காரண மாக இரவில் தங்குவது வழக்கமாக இருந்தது. அன்றும் அப்படியே அங்கு கூடியிருந்தனர். அவ்வேளை அப்பகுதிக்கு வாகனங்களில் வந்த கடற்படையினர் அப்பகுதி வீடுகளிற்குள் சென்று மின் விளக்குகளை அணைத்து விடுமாறு ஒட்டுக்குழுக்கள் மூலம் மிரட்டினர். பின்னர் அமலதாஸ் என்பவரது வீட்டிற்குச் சென்று அங்கு உறங்கிக் கொண்டிருந்த பொது மக்கள் மீது கண்மூடித்தனமாக துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதில் அவ்வீட்டில் தங்கியிருந்த 11 பேரில் 08பேர் உயிரிழந்தனர். இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர் உள்ளடங்குவர். இதில் தமது பெற்றோருடன் உறங்கிக்கொண்டிருநத் 04 மாதச்சிறுவனும் 04 வயதுச் சிறுவனும் பரிதாபகரமாக உயி ரிழந்தார்கள். காயமடைந்த ஏனையோரை வைத்தியசாலைக்கு கொண்டுசெல்ல அனு மதிக்கப்படாததால் காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்தார்.


இதே வேளை சில கடற்படையினர் புளியங் கூடலிலுள்ள சண்முகலிங்கம் என்பவரது வீட்டுக்குள் புகுந்து அக்குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேரைச் சுட்டுக்கொன்றனர். அடுத் தாக வங்களாவடி என்ற இடத்தில் தேனீர்ச் சாலை உரிமையாளரான செந்தூரன் என் பவரது வீட்டிற்குள் புகுந்து செந்தூரன் என் பவரைச் சுட்டுக்கொன்றனர். இவ்வாறாக அன்றிரவு 13 பொதுமக்கள் உயிரிழந்தனர். பல பொதுமக்கள் காயப்படுத்தப்பட்டனர். பல கடைகள், பல இலட்சம் பெறுமதியான சொத் துக்கள் அழிக்கப்பட்டன.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. பாலசாமி கேதீஸ்வரன், 25
02. கேதீஸ்வரன் அனெக்ஸஸ்தர், 25
03. கேதீஸ்வரன் தனுஷ்காந், 04
04. கேதீஸ்வரன் யதுசன், 04 மாதம்
05. ஆபிரகாம் றொபின்சன், 28
06. செல்லத்துரை அமலதாஸ், 28
07. கணேஸ் நவரட்ணம், 50
08. யோசப் அந்தோனிமுத்து, 64
09. சின்னத்துரை சிவநேசன், 46
10. எம்.சண்முகலிங்கம், 60

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலையப்படுகொலை 10 மே 2009

முல்லைத்தீவில் 10.05.2009 ஒரே இரவில் 2,000 பொதுமக்கள் படுகொலை செய்யப் பட்டார்கள். சனிக்கிழமை 10 மே 2009 இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை “பாதுகாப்பு வலயத்தில்” சிறீலங்கா இரா ணுவம் கண்மூடித்தனமாக எறிகணை வீச்சு நடத்தியது, எராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 2,000 க்கும் மேற்பட்ட பொதுமக்களை படுகொலை செய்ததாக வன்னியில் உள்ள மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. தற்காலிக மருத்துவமனையில் இறந்த உடல்கள் எல்லா இடங்களிலும் சிதறிக் கிடந்தன. சர்வதேச அளவில் தடைசெய்யப் பட்ட இராசயன (கிளஸ்டர்) குண்டுகள் மற்றும் மல்ரி ராக்கெட் மற்றும் பீரங்கிகளிலிருந்து சுடப்பட்ட குண்டுகள் போன்ற ஒவ்வொரு வகையான ஆபத்தான ஆயுதங்களாலும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்பட்ட பகுதி ஒரு கொலைக் களமாக மாற்றப்பட்டு இருந்தது. இறந்த உடல்கள் பதுங்கு குழி களிலும், தார்ச்சாலைக் கூடாரங்களுக் குள்ளும் காணப்பட்டன.






# சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதல்களினாலும் மற்றும் பட்டினியாலும் முள்ளிவாய்க்காலில் பொதுமக்கள் படுகொலை - 01.05.2009

சிறீலங்கா இராணுவம் முள்ளிவாய்க்கால் மீது பீரங்கி, மோட்டார் மற்றும் மல்டி-பேரல் ராக்கெட் லாஞ்சர் (MBRL) துப்பாக்கிச் சூட்டை முடுக்கிவிட்டது, இது முள்ளிவாய்க்கால் கிராமத்தில் வெள்ளிக்கிழமை 09 முதல் பொதுமக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தியது. வெள்ளிக்கிழமை காலை 30 மணி. மாலை முழுவதும் பல மணிநேரம் ஷெல் தாக்குதல் தொடர்ந்ததால் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டனர். தற்காலிக மருத்துவமனையின் மருத்துவ ஊழியர்கள் காயங்களால் இறந்தவர்களின் இறப்புகளை மட்டுமே தெரிவிக்க முடிந்தது. 110 காயமடைந்த பொதுமக்கள் மாலை 4:30 மணி வரை அனுமதிக்கப்பட்டனர். கடந்த இரண்டு நாட்களுக்கு முன்னர் தாக்குதலுக்கு உள்ளான முள்ளிவாய்க்கால் வைத்தியசாலையில். காயமடைந்தவர்களில் 27 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலினால் பலர் கொல்லப்பட்டனர், அவர்களது உறவினர்களால் புதைக்கப்பட்டனர் அல்லது எரிக்கப்பட்டனர்.

வியாழக்கிழமை சுமார் 200 பொதுமக்கள் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவர்களில் 39 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

முள்ளிவாய்க்காலுக்கு வடக்கே கடுமையான துப்பாக்கிச் சூடு மற்றும் கடுமையான துப்பாக்கி சூட்டுப் பரிமாற்றம் இடம் பெற்றது பதிவாகியுள்ளது, அங்கு பொதுமக்கள் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதற்குள் கிராமத்தின் நெரிசலான தெற்குப் பகுதிகளை நோக்கி  பொதுமக்கள் தப்பி ஓடினர்.

கடந்த 24 மணி நேரத்தில் பொதுமக்கள் இரவும் பகலும் பதுங்கு குழிக்குள் இருக்க வேண்டியிருந்தது. பலர் உறங்கிக் கொண் டிருந்த போது கொல்லப்பட்டதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில், சிறீலங்கா அரசாங்கம் வேண்டுமென்றே மனிதாபிமான பொருட்களை வாரக்கணக்கில் மட்டுப்படுத்தியதால் முல்லை மண்ணில்  பட்டினி நிலவியது.



ஏப்ரல் 30 2009 ஆம் திகதி இரவு தூக்கத்தில் தந்தையும் அவரது குழந்தையும் சிறீலங்கா இராணுவத்தின் தாக்குதலில் பலி































# சிறீலங்கா இராணுவம் நோயாளிகளை குறிவைத்து எறிகணை வீசியதில் 64 பேர் மருத்துவமனையில் படுகொலை - 02.05.2009

சிறீலங்கா இராணுவம் சனிக்கிழமையன்று எஞ்சியிருந்த ஒரே ஒரு தற்காலிக மருத்துவமனையை இரண்டு முறை தாக்கியது, 64 நோயாளிகள் மற்றும் உறவினர்களைக் படுகொலை செய்தது, 87 பேர் காயம் அடைந்தனர். சுமார் 9 மணியளவில் சிறீலங்கா இராணுவத்தினால் எவப்பட்ட இரண்டு பீரங்கி குண்டுகள் முள்ளிவாய்க்காலில் உள்ள மருத்துவமனையை தாக்கப்பட்டது: காலை 09:00 மணிக்கு 23 பேரைக் கொன்று, 34 பேரைக் காயப்படுத்தியது, பின்னர் காலை 10:30 மணியளவில் பல குண்டுகள் வீசப்பட்டன, 41 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 53 பேர் படு காயப்படுத்தினர். மூன்று நாட்களுக்கு முன்பு மருத்துவமனை வளாகத்தின் துல்லியமான ஆயங்களை வரைபடமாக சிறீலங்கா இராணுவத்திற்கு வழங்கியதை அடுத்து, தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ICRC மற்றும் இலங்கை விமானப்படையின் ஆளில்லா வான்வழி விமானங்கள் (UAV) ஆகியன மருத்துவமனை பகுதியை கண்காணித்து வந்தன. எனினும் பொதுமக்களை நிர்ப்பந்திப்பதற்காகவே இந்த படுகொலை கணக்கிடப்பட்டுள்ளது என மீட்பு பணியாளர் ஒருவர் கூறியது, மகிந்த ராஜபக்சவின் செய்தியுடன் வெள்ளியன்று வீசப்பட்ட துண்டுப் பிரசுரங்களை மேற்கோள் காட்டி பொதுமக்களை சிறீலங்கா இராணுவத்தின் பக்கம் வருமாறு கேட்டுக் கொண்டார்.




இதில் பெண் தொண்டர் மருத்துவர் சம்பவ இடத்திலேயே பலியானார். மூன்று மருத்துவ ஊழியர்கள் காயம் அடைந்தனர், அவர்களில் ஒருவர் செயலிழந்தார்.

தற்காலிக மருத்துவமனையின் பிரதான OPD காலை 9:00 மணியளவில் மருத்துவமனை வெளிநோயாளிகளால் மிகவும் பரபரப்பாக இருந்தபோது தாக்கப்பட்டது. 400க்கும் மேற்பட்ட காயமடைந்த நோயாளிகள் கட்டிடத்திலும் அதைச் சுற்றியும் தங்க வைக்கப்பட்டனர்.

மருத்துவமனையின் தாக்குதலுக்கு உள்ளான பகுதியை மருத்துவ ஊழியர்களும் தன்னார்வலர்களும் சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோது இரண்டாவது தாக்குதல் நடந்தது.

ICRC உடன் ஒருங்கிணைக்கும் மருத்துவ ஊழியர் ஒருவர், கடந்த முறை மருத்துவமனை தாக்கப்பட்டபோது, மூன்று நாட்களுக்கு முன்பு மருத்துவமனையின் ஆயங்களை வரைபடமாக்கி இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்திற்கு வழங்கியதை உறுதி செய்தார்.

அரசு பொதுமக்களை இடமாற்றம் செய்ய விரும்பும் ஒவ்வொரு முறையும் மருத்துவமனை மீது இலக்கு தாக்குதல்கள் நிகழ்கின்றன, மீட்புப் பணியாளர் மேலும் கூறினார்.









# முள்ளிவாய்க்கால் பகுதியில் சிறீலங்கா படையின் தாக்குதல்களில் 15 குழந்தைகள் உட்பட 45 பொதுமக்கள் படுகொலை – 08.05.2009

சிறீலங்கா இராணுவம் வியாழன் மற்றும் வெள்ளி முழுவதும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதற்குள் உள்ள முள்ளிவாய்க்காலில் உள்ள பொதுமக்களின் இலக்குகள் மீது கொத்துக் குண்டுகளுடன் கடுமையான ஷெல் தாக்குதல்களை தொடர்ந்தது மேற்கொண்டது.



சிறீலங்கா விமானப்படையின் கண்காணிப்பு விமானம், பொது மக்களை குறிவைக்கப்பட்டு, மக்கள் செறிவான இடங்களின் ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதலை சிறீலங்கா இராணுவம் வழங்கியதால், பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர் மற்றும் பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

வெள்ளிக்கிழமை மட்டும் குறைந்தது 242 பொதுமக்கள் காய மடைந்ததாக பதிவு செய்யப்பட்டுள்ளனர். காயமடைந்தவர்களில் 15 குழந்தைகள் உட்பட 45 பேர் பலியாகியுள்ளதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வெள்ளிக்கிழமை மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்ட பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் முள்ளிவாய்க்கால் கிழக்கில் கூழ் உணவு எடுக்கக் காத்திருந்தபோது காயமடைந்தவர்கள் என அறியப்படுகின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட மனிதாபிமான பொருட்களைப் பெறுவதற்காக வரிசையில் நின்ற மக்கள் மீது வியாழக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது. ஐசிஆர்சி வாகனங்களும் தாக்கப்பட்டன. இருப்பினும், வியாழக்கிழமை 400 காயமடைந்தவர்களை ICRC கொண்டு செல்ல முடிந்தது. ஆனால், வெள்ளிக்கிழமை ICRC கப்பல் கடுமையான ஷெல் தாக்குதல் தொடர்ந்ததால் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களை கொண்டு செல்ல ஐசிஆர்சியால் முடிக்க முடியவில்லை.














# முல்லைத்தீவில் இருந்து ICRC கப்பல் புறப்பட்டபோது சிறீலங்கா இராணுவத்தினர் பீரங்கித் தாக்குதல் 'பாதுகாப்பு வலயத்தின்' மீது மேற்கொண்ட தாக்குதலின் போது பெரும் பொதுமக்கள் உயிரிழப்பு. 09.05.2009

சிறீலங்கா இராணுவம் சனிக்கிழமை காலை 7:00 மணியளவில் பாதுகாப்பு வலயத்தின் மீது கடுமையான எறிகணைத் தாக்குதல்களை முடுக்கிவிட்டுள்ளது. ஒரு மணி நேரத்திற்குள், 50 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் முள்ளிவாய்க்காலில் உள்ள ஒரு சிறுவர் பாடசாலையில் இயங்கும் தற்காலிக மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். மருத்துவமனை வட்டாரத் தகவல் சனிக்கிழமை இரவு தெரிவிக்கப்பட்டது. 120,000 முதல் 165,000 வரையிலான பொதுமக்கள் நெரிசலுக்கு மத்தியில் போதிய மனிதாபிமான பொருட்கள் இல்லாமல் பட்டினி கிடக்கும் 8 சதுர கிலோமீட்டர் பகுதியில் சிறீலங்கா இராணுவம் ஆனது பீரங்கி மற்றும் மோட்டார் தாக்குதல்களை சரமாரிகளை முடுக்கிவிட்டுள்ளது. சர்வதேச சமூகத்திற்கு சிறீலங்கா உறுதியளித்த போதிலும், கனரக ஆயுதங்கள் இன்னும் பாதுகாப்பு வலயத்தை நோக்கி இலக்கு வைக்கப்பட்டது.

ICRC கப்பல் ஊடாக 30MT பொருட்கள் மட்டுமே சனிக்கிழமை வன்னியை அடைந்தது . தாக்குதல்கள் காரணமாக பாதுகாப்பு வலயத்தின் கரையை அடையத்தவறிய ICRC கப்பல், பின்பு பாதுகாப்பு வலயத்தை அடைந்து 450 காயமடைந்தவர்களையும் அவர்களது பாதுகாவலர்களையும் புல்மோட்டைக்கு கொண்டு செல்ல முடிந்ததும்.

சிறீலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலால் பெருமளவு பொதுமக்கள் உயிரிழப்புகள் ஏற்பட்டது, இறந்தவர்கள் அவர்கள் கொல்லப்படும் இடத்தில் புதைக்கப்படுகிறார்கள் அல்லது எரிக்கப்படுகிறார்கள்.

மருத்துவமனையில் உடனடி முதலுதவி வழங்க முடியவில்லை, மேலும் கடுமையான மருந்துப் பற்றாக்குறையால் பல தீவிர நோய்வாய்ப்பட்ட மற்றும் காயமடைந்த பொதுமக்களைக் காப்பாற்ற மருத்துவர்களால் முடியவில்லை.

















# முள்ளிவாய்க்கால் பகுதியில் 120,000 தொடக்கம் 165,000 தமிழ் மக்கள் மீது உணவுத் தடை – 09.05.2009
























# முள்ளிவாய்க்கால் பகுதியில் ஒரே இரவில் 2,000 பொதுமக்கள் படுகொலை – 10.05.2009

சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை காலை வரை "பாதுகாப்பு வலயம்" மீது சிறீலங்கா இராணுவம் நடத்திய கண்மூடித்தனமான சரமாரியான ஷெல் தாக்குதல்களில் ஏராளமான பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 2,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டதாக வன்னியில் உள்ள மருத்துவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தற்காலிக மருத்துவமனை. இறந்த உடல்கள் எல்லா இடங்களிலும் சிதறிக்கிடக் கிடந்தனர்.

மேலும் 814 காயமடைந்தவர்கள் காலை 9:25 மணி வரை தற்காலிக மருத்துவமனைக்குச் சென்றடைந்தனர் என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட கொத்து குண்டுகள் மற்றும் மல்டி பீப்பாய் ராக்கெட் லாஞ்சர்கள் மற்றும் பீரங்கிகளில் இருந்து வீசப்படும் குண்டுகள் போன்ற அனைத்து வகையான கொடிய ஆயுதங்களும் பாதுகாப்பு வலயம் என்று அழைக்கப்படுவதை கொலைக்களமாக மாற்ற பயன்படுத்தப்பட்டன.






முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்திற்குட்பட்ட மீட்புப் பணியாளர்கள் கொத்துக் குண்டுகள், பல்குழல் றொக்கட் ஏவுகணைகள் மற்றும் பீரங்கிகளைப் பயன்படுத்தி சிறீலங்கா இராணுவத்தால் சனிக்கிழமை இரவு மற்றும் ஞாயிற்றுககிழமை காலை பாரிய அளவில் படுகொலை செய்யப்பட்ட பின்னர் 1200 க்கும் மேற்பட்ட சடலங்களை எண்ணியுள்ளனர் என்று வன்னி வட்டாரங்கள் தெரிவித்தன. இன்னும் கூடுதலான உடல்கள் கண்டுபிடிக்கப்படாமல் இருக்கலாம் என்றும், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை உயரக்கூடும் என்றும் தொழிலாளர்கள் அஞ்சுகின்றனர். பல நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளதாகவும், முள்ளிவாய்க்காலில் உள்ள தற்காலிக மருத்துவமனையில் மருந்துப் பற்றாக்குறை இன்னும் பல உயிரிழப்புகளுக்கு வழிவகுக்கும் என்றும் மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். இதேவேளை, முள்ளிவாய்க்கால் வைத்தியசாலை ஊழியர்கள், பிற்பகல் 3.00 மணி வரை தெரிவித்துள்ளனர். மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்ட உடல்களின் எண்ணிக்கை 378, காயமடைந்தவர்கள் மொத்தம் 1122. இறந்தவர்களில் 106 பேர், காயமடைந்தவர்களில் 251 பேர் குழந்தைகள் என்றும் ஊழியர்கள் தெரிவித்தனர்.

கிரேசியன் தர்மராசா என்ற அர்ப்பணிப்புள்ள தாதியர் உத்தியோகத்தரின் ஒட்டுமொத்த குடும்பமும் ஷெல் தாக்குதலில் அழிந்துவிட்டது.

பதுங்கு குழிகளிலும் தார்ப்பாய் கூடாரங்களுக்குள்ளும் இறந்த உடல்கள் காணப்படுகின்றன.

கொல்லப்பட்டவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் சரியான எண்ணிக்கை இன்னும் கண்டறியப்படவில்லை.

67 குழந்தைகள் உட்பட 257 உடல்கள் மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன.

காயமடைந்தவர்களில் 112 பேர் குழந்தைகள்.



இறுதியாக முள்ளிவாய்க்காலில் உள்ள கனிஷ்ட பாடசாலையில் இயங்கி வரும் தற்காலிக வைத்தியசாலையானது நிலைமையை சமாளிக்க வார்த்தைகளால் கூறமுடியாதவாறு போராடி வந்தாக மருத்துவ வட்டாரங்கள் இருந்த தகவல்களில் தெரிய வந்தது.

"சர்வதேச சமூகமும் ஐ.நாவும் ஒரு அரசாங்கத்திற்கு கிட்டத்தட்ட பகிரங்கமான ஒப்புதல் அளித்ததன் மூலம் ஒரே நாளில் இவ்வளவு பாரிய பொது மக்களை அரசியல் ரீதியாகப் பரிசோதித்தது வரலாற்றில் இதுவே முதல் முறை" என்று கொழும்பில் உள்ள மனித உரிமை நிபுணர் ஒருவர் செய்தியைக் கேட்டதும் விவரித்தார்.

ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் போரை முடிக்க இந்தியா கொழும்பை தூண்டியதன் விளைவாகவே இந்த பாரிய படுகொலைகள் நடந்துள்ளதாக நம்பப்படுகிறது, கொழும்பில் உள்ள அரசியல் வட்டாரங்கள் மேலும் கூறுகையில், "பயங்கரவாதத்திற்கு எதிரான போர்" "பொதுமக்கள் மீதான போர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. ஒபாமா நிர்வாகத்தின் காலம்.

ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வரை தணிந்த குண்டுவெடிப்பு நண்பகல் 12:00 க்குப் பிறகு அதிகரித்தது, சிறீலங்கா விமானப் படை போர் விமானங்கள் 12:45 மணிக்கு இரண்டு குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டன. ஞாயிற்றுக்கிழமை, பாதுகாப்பு மண்டலத்திற்குள் இருந்து வட்டாரங்கள் தெரிவித்தன.

இறந்தவர்களின் எண்ணிக்கை தொடர்வதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர். இலங்கை அரசால் இதுவரை இல்லாத அளவுக்கு மோசமான மனிதப் படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் உண்மையான எண்ணிக்கை சில நாட்களுக்குத் தெரியவில்லை.

# முல்லைத்தீவு பாதுகாப்பு வலையப் படுகொலை 10 மே 2009














# முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பகுதியில் சிறீலங்கா படையினரின் தாக்குதல்களில் 3,200 பொதுமக்கள் படுகொலை – 11.05.2009



1,30,000க்கும் அதிகமான பொதுமக்கள் வசிக்கும் முள்ளிவாய்க்கால் மற்றும் வட்டுவாகல் பகுதிகளில் பாதுகாப்பு வலயம் (யுத்தமில்லாத வலயம்) என்று அழைக்கப்படும் பகுதிகள் மீது அனைத்து விதமான கனரக ஆயுதங்களையும் பயன்படுத்தி இடைவிடாத சரமாரியான ஷெல் தாக்குதல்களை சிறீலங்கா இராணுவம் முடுக்கிவிட்டது.

போதிய பதுங்கு குழிகள் மற்றும் தங்குமிடங்கள் இல்லாமல் தஞ்சம் அடைந்தனர். 7 சதுர கிலோமீட்டர் பரப்பளவில் மட்டுப் படுத்தப்பட்ட அல்லது மறுக்கப்பட்ட பொருட்கள் காரணமாக மருந்து மற்றும் உணவு பற்றாக்குறைக்கு மத்தியில் பொது மக்கள் உயிரிழப்புகள் அதிகரித்து தொடங்கியது. திங்களன்று தமிழர்கள் புனர்வாழ்வு அமைப்பின் (TRO) கள அலுவலகத் தின் தலைவர் லாரன்ஸ் கிறிஸ்டி, திங்களன்று பொதுமக்களின் இறப்பு எண்ணிக்கை ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் திங்கள் காலை வரை 3,200 க்கும் அதிகமானோர் கொல்லப் பட்டதாகக் கூறினார். இனப்படுகொலையை நிறுத்துவதற்கு பாதுகாப்பதற்கான பொறுப்பை (R2P) உடனடியாக அழைக்கு மாறு அவர் IC க்கு அழைப்பு விடுத்துள்ளார்.

திங்கட்கிழமை அதிகாலையில் பல பொதுமக்கள் உயிரிழந்துள் ளதாக ஆரம்ப தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிறீலங்கா இராணுவத்தின் நடவடிக்கையில் பீரங்கிகள், 50 கலிபர் இயந்திர துப்பாக்கிகள், பீரங்கிகள், மோட்டார் மற்றும் மல்டி-பேரல் ராக்கெட் லாஞ்சர் (MBRL) துப்பாக்கிகளைப் பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு நடத்தின.

தற்காலிக மருத்துவமனையில் 50% க்கும் அதிகமான ஊழியர்கள் தங்கள் குடிசைகள் மற்றும் குடியிருப்புகள் தாக்குத லுக்கு உள்ளாகியுள்ளதால், அவர்கள் பணிக்கு வரவில்லை என்று மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய நாடுகள் சபையும், இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற வல்லரசுகளும் கடந்த 5 மாதங்களில் செயல்படத் தவறிவிட்டன, அந்த நேரத்தில் 10,000 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப் பட்டனர் மற்றும் 20,000 பேர் காயமடைந்தனர், திரு. கிறிஸ்டி முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து விடுக்கப்பட்ட அவசர முறையீட்டில் கூறினார்.

# சிறீலங்கா அரச படைகளின் தாக்குதலில் முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையில் 47 பொதுமக்கள் படுகொலை – 12.05.2009



செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணியளவில் சிறீலங்கா இராணுவம் பீரங்கி குண்டுகளை வீசியதில் குறைந்தது 47 பொதுமக்கள், நோயாளிகள் மற்றும் நிர்வாக அதிகாரி கே.தர்ம குலசிங்கம் கொல்லப்பட்டனர். முள்ளிவாக்காலில் இயங்கி வந்த தற்காலிக மருத்துவமனை மீதான தாக்குதலில் குறைந் தது 55 நோயாளிகள் படுகாயமடைந்தனர். முள்ளிவாய்க்கால் சிறுவர் பள்ளியில். கடந்த 3 நாட்களுக்குள் சுமார் 2,000 காய மடைந்த நோயாளிகள் கப்பலில் ICRC கொண்டு செல்லப் படுவதற்காகக் காத்திருந்தபோது தாக்குதல் நடத்தப்பட்டது. வன் னியில் கடந்த 3 நாட்களில் 2,600க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சிறீலங்காப் படைகளின் தாக்குதலில் கொல்லப்பட்டுள்ளனர்.

# முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையில் பொதுமக்கள் படுகொலை – 12.05.2009















# சிறீலங்கா அரச படைகளின் தாக்குதல்களினால் தற்காலிக மருத்துவமனையில் பேரழிவு - 13.05.2009

"மருத்துவமனையைப் பார்த்து, பொதுமக்கள் அழுவதைக் கேட்கும்போது, நீங்கள் பேரழிவை மட்டுமே உணர்கிறீர்கள்" என்று முள்ளிவாய்க்கால் தற்காலிக மருத்துவமனையின் முக்கிய மருத்துவ ஊழியர்கள் புதன்கிழமை ஊடகங்களுக்குத் தெரிவித்தார். பல குழந்தைகள், நோயாளிகள், மருத்துவ ஊழியர்கள், தன்னார்வ மருத்துவர் மற்றும் ஐசிஆர்சி ஊழியர் உட்பட 100 க்கும் மேற்பட்ட பொதுமக்கள், மருத்துவமனை வளாகம் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பிரதேசத்தை குறிவைத்து சிறீலங்கா இராணுவத்தின் பீரங்கி தாக்குதலில் கொல்லப்பட்டனர். தார்பாய் குடிசைகள். 5 நாட்களுக்குள் மூன்றாவது முறையாக குறிவைத்த சிறீலங்கா இராணுவப் படைகளுக்கு மருத்துவ மனைப்பகுதி முக்கிய இலக்காக மாறியுள்ளதால் மருத்துவமனை சில மருத்துவ ஊழியர்களுடன் போராடி வருகிறது. ஜெனீவா உடன்படிக்கைகளை முற்றிலுமாக புறக்கணித்த சிறீலங்கா இராணுவம் ஆல் கொலைக்களமாக மாற்றப்பட்ட இரண்டு கரையோர முனைகளில் இருந்து சிறீலங்காப் படையினால் துப்பாக்கி சூடுகள் No Fire Zone என்று அழைக்கப்படுபவை முழுவதும் மேற்கொண்டனர். பொதுமக்கள் பட்டினியால் போராடி பதுங்கு குழிகளுக்கு கீழ் வாழ்கின்றனர்.

பலியானவர்களில் பலர் குழந்தைகள் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். புதன்கிழமை படுகாயமடைந்தவர்களில் 40 பேர் குழந்தைகள்.

அவர்களின் தலைக்கு மேல் ஷெல் மற்றும் துப்பாக்கிச் சூடுகளுக்கு மத்தியில் தெற்கு நோக்கிச் செல்லும் வாகனங்களால் சாலையில் நெரிசல் ஏற்பட்டதால் மருத்துவமனை வளாகத்திற்கு வெளியே ஏற்பட்ட உயிரிழப்புகள் குறித்து எந்த அறிக்கையும் கிடைக்கவில்லை. கடந்த 24 மணி நேரத்தில் 200 முதல் 500 பேர் கொல்லப்பட்டதாக ஆரம்ப மதிப்பீடுகள் வேறுபடுகின்றன.

பாதுகாப்பு வலயத்திற்குள் 2,000க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் சுமார் 1,000 நோயாளிகள் அவசரமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற இருந்த நிலையில், ஆனால் மருந்துகள் இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். படுகாயமடைந்த 250 பேருக்கு புதன்கிழமை சிகிச்சை அளிக்கப்பட்டது. சிறீலங்கா இராணுவம் சரமாரி தாக்குதல்களின் மருத்துவமனையை சீர்குலைத்ததால் சிலருக்கு மட்டுமே சிகிச்சை அளிக்கப்பட்டது, மருத்துவ ஊழியர்கள் மற்றும் நோயாளிகள் பதுங்கு குழிகளுக்கு கீழ் தங்குமிடம் தேட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

ஐ.சி.ஆர்.சி கப்பல் அவர்களை வெளியேற்றும் முன் காயங்களில் பலர் இறக்க வேண்டும். கடும் சண்டையால் காயமடைந்தவர்களை வெளியேற்ற முடியாமல் ஐசிஆர்சி கப்பல் திருகோணமலை துறைமுகத்திற்கு தொடர்ந்து இரண்டாவது நாளாக காலியாகத் திரும்பியது. கப்பலால் சுமார் 25 மெட்ரிக் டன் உணவு மற்றும் பிற அத்தியாவசிய பொருட்களை இறக்க முடியவில்லை.



100 இறந்த உடல்களில் 30 உடல்கள் அடையாளம் காணப்பட்டு உறவினர்களால் கைப்பற்றப்பட்டன.

கொல்லப்பட்ட தன்னார்வ மருத்துவர் செந்தில்குமரன் என அடையாளம் காணப்பட்டது. மருத்துவமனை ஊழியர் கோபால கிருஷ்ணனும் உயிரிழந்தார். கொல்லப்பட்ட ICRC ஊழியர் மயூரன் சிவகுருநாதன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அவரது தாயும் சிறீலங்கா இராணுவத்தினன் ஷெல் தாக்குதலில் கொல்லப்பட்டார்.

தற்காலிக மருத்துவமனையின் அருகாமையில் இன்னும் 75 சடலங்கள் அடையாளம் காணப்பட்ட மற்றும் அடையாளம் காணப்படாத நிலையில் உள்ளன. தற்போதுள்ள சூழ்நிலையில் இறந்தவர்களின் உடல்களை எடுக்க முடியாது என உறவினர்கள் சிலர் தெரிவித்துள்ளனர்.


















**எமது துன்ப வரலாற்றை நாமே பதிய வேண்டும். நீத்தார் நினைவுச் சின்னங்களை உரிய முறையில் உங்கள் கிராமங்களில் கட்டியெழுப்பும் பொறுப்பு தமிழ் மக்களாகிய எம்முடைய கடமை.**













# கந்தரோடையிலும் வட இலங்கையிலும் கண்ட ஆதிகால நாணயங்கள் பகுதி – 1

## பண்டைய யாழ்ப்பாணத்தின் கந்தரோடை நாகரிகம்

### அறிமுகம்:

### இலங்கையில் ஆதிகால நாணயங்கள்

இலங்கையில் காணப்படும் நாணயங்களை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: ஒன்று உள்ளூர் நாணயங்கள், மற்றது வெளி நாட்டு நாணயங்கள். இலங்கையில் தொல்லியல் அகழ்வுகளில் காணப்படும் மிகப் பழமையான நாணயங்கள் இந்திய நாட்டு நாணயங்களாகும். அவை அங்கிருந்து இந்திய வர்த்தகர்கள் மூலம் இங்கு வந்த நாணயங்களாகும். இவ்வாறு வெளிநாட்டிலிருந்து வந்த மற்றைய நாணயங்களில் கிரேக்க, உரோம, பாரசீக, அரேபிய, சீன, போர்த்துக்கேய, டச்சுக்கார, பிரித்தானிய நாணயங்கள் குறிப்பிடத்தக்கவை. இலங்கையில் காணப்படும் வெளிநாட்டு நாணயங்களில் பெருந்தொகையானவை தமிழ் நாட்டு நாணயங்களாகும்.

இலங்கையின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழாய்வுகளிலும், மேலாய்வுகளிலும் இந்திய நாட்டு மௌரிய, குசான, குப்த, சாதவாஹன, தென்னிந்திய சங்ககால நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாணயங்கள் இலங்கையில் பல இடங்களில் காணப்பட்ட போதிலும் குறிப்பாக அநுராதபுரம், மாந்தை, அக்குறுகொடை, கந்தரோடை, யாழ்ப்பாணக் கோட்டை, வல்லிபுரம், பூநகரி ஆகிய மையங்களில் அதிக அளவில் காணப்படுகின்றன. இவை பண்டைக்காலப் பெருநகரப் பகுதிகளும், வணிக மையங்களுமாகும். உரோமக் குடியரசிலிருந்தும், உரோமானியப் பேரரசிலிருந்தும் (Republic of Rome and Imperial Rome) கி.மு. 300க்கும் – கி.பி. 500க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் வெளியிடப்பட்ட நாணயங்கள் கந்தரோடை மற்றும் யாழ்ப்பாண மையங்களிலும், மாந்தையிலும் பெருமளவில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. (Codrington 1924; Sivasamy 1974; Seyone 1998; Bopearachchi 1998, 1999; Pushparatnam 2001, 2002; Carswell 2013).



கந்தரோடையில் போல்பீரிஸ் கண்ட முத்திரை நாணயம்

Image Source - H.W. Codrington

இந்த வெளிநாட்டு நாணயங்களை மாதிரியாகக் கொண்டே உள்ளூர் நாணயங்கள் தயாரிக்கப்பட்டன. இவற்றில் அச்சுக்குத்திய அல்லது உருவங்கள் பதித்த இலங்கை நாணயங்கள் சாதவாஹன, சங்ககால நாணயங்களின் மாதிரிகளிலே வெளியிடப்பட்டன. இவ்வகையான நாணயங்களாக திஸ்ஸ, யானை – சுவாஸ்திக்கா, சிங்கம் – சுவாஸ்திக்கா, கட்டமிட்ட மரம் – சுவாஸ்திக்கா ஆகிய நாணயங்களைக் கூறலாம் (Codrington, H.W. 1924: 22). மிச்சினர், இந்த இலங்கை நாணயங்கள் சங்க கால பாண்டிய நாணயங்களின் அகத்துண்டல் எனக் கருதுகிறார் (Michiner, M. 1998: 629). புஷ்பரட்ணம், இந்த இலங்கை நாணயங்களில் சங்ககால, சாதவாஹன நாணயங்களின் தாக்கங்கள் இருப்பதாகக் கூறுகிறார் (Pushparatnam, P. 2002: 70).

யானையும், மரமும், மூன்று சிகரங்கள் கொண்ட குன்றும், மத்தளமும் உள்ள உருவங்கள் கொண்ட இலங்கை நாணயங்கள் பாண்டியப் பெருவழுதி நாணயங்களின் மீள்பதிப்புகள் எனக் கூறப்படுகிறது (Krishnamurthy, R. 1997: 47). திஸ்ஸ வகை நாணயங்களில் ஒரு வட்டமும் அதன்மேல் ஒரு பிறை வடிவும் காணப்படுகின்றன. இதை நந்திபாத வடிவம் என்பர். இது ஒரு திமில் (ஏரி) கொண்ட காளையின் தலையை பிரதிநிதிப்படுத்துவதாகக் கூறுவர். இந்த வடிவம் பாண்டிய மற்றும் சாதவாஹன நாணயங்களில் காணப்படுகிறது (Gupta, P.L. 1965: 15).



வட இந்தியாவில் கி.மு. 600-500 ஆண்டுக்காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டு கந்தரோடை அகழ்வுகளில் கண்ட வெள்ளி முத்திரை நாணயங்கள்

ஆந்திர தேசத்து அச்சுக்குத்தி முத்திரை பதித்த (Punch-marked) நாணயங்களில் மூன்று மெல்லிய இலைகள் காணப்படும். சாதவாஹன நாணயங்களில் இவை தடித்த புதர் இலைகளாக இருக்கும். இந்த முத்திரை நாணயப் பாரம்பரியம் இலங்கையில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கை நாணயங்களில் காணப்படும் சிங்க உருவம் ஆந்திரதேச நாணயங்களில் காணப்படுவது போல உள்ளது. ஆனால் ஒரு கம்பத்தில் பதித்த ஸ்வாஸ்திக்கா இலங்கைக்கு உரிய தனியான அமைப்பாகத் தெரிகிறது. இம்மாதிரியான நாணயங்கள் இந்தியாவில் காணப்படவில்லை. இந்திய நாணயங்கள் இலங்கை நாணயங்களின் தோற்றத்திற்கு உந்துதலாக இருந்த போதிலும், காலப்போக்கில் இலங்கை தனது தனித்துவமான சொந்த வடிவங்களை உருவாக்கியுள்ளது(Pushparatnam, P. 2002: 71).

தென்னிந்தியாவின் தமிழக நாணயங்கள் அவற்றை வெளியிட்ட அரசர்களின் சின்னங்களையோ அல்லது அரச முத்திரைகளையோ பதிவு செய்தன. இந்த இலச்சினைகள், அரசர்களையும் அரசுகளையும் அடையாளம் காண வைத்தன. எட்டாம் நூற் றாண்டுக்கு முற்பட்ட இலங்கை நாணயங்களில் இப்படியான இலச்சினைகளைக் காண முடியவில்லை.

நாணயவியலாளர் கொட்றிங்டனும் (1924: 24-25), அவருக்கு முந்திய வரலாற்றாசிரியர்களும் இலங்கை நாணயங்களில் கண்ட பெரும்பாலான சின்னங்கள் பௌத்த மதத்தைக் குறிப்பிடுவதாகக் கொண்டு அவை சிங்கள அரசர்களால் வெளியிடப்பட்டிருப்பதாக அறிவித்தார்கள். அதே சமயம் இலங்கையில் காணப்பட்ட நாணயங்களில் தமிழ் எழுத்துகளோ அல்லது தமிழர் சின்னங்களோ காணப்பட்டால் அவை தமிழ் நாட்டிலிருந்து வர்த்தகர்களாலோ, அரசியல் காரணங்களுக்காகவோ அல்லது கலாசாரத் தொடர்புகளினாலோ கொண்டுவரப்பட்டிருக்கின்றன என முடிவெடுத்தார்கள். சற்று ஆழமாக ஆய்வு செய்திருந்தார்களேயானால் அவை உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நாணயங்கள் என்பதை அறிந்திருப்பார்கள்.

இலங்கையின் பல செல்வாக்குமிக்க அறிஞர்கள் 13ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இலங்கையில் தமிழ் மக்களின் பாரிய குடியேற்றங்களோ அரசுகளோ எதுவும் இருக்கவில்லை என்னும் கருத்தைக் கொண்டிருந்தார்கள். அதன் காரணமாக இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட பல பண்டைய தமிழ் நாணயங்கள் சேர, சோழ, பாண்டிய, பல்லவ, விஜயநகர, நாயக்கர் கால நாணயங்கள் என வலுவான ஆதாரமேதுமின்றி வகைப்படுத்தப்பட்டன. இந்த வகைப்பாட்டிற்குள் அடங்காத நாணயங்கள் தவறாக அடையாளம் காணப்பட்டன, அல்லது மிக மோசமான நிலையில் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டன.

### வட இலங்கை நாணயங்கள்

வட இலங்கையில் ஆதிகால முத்திரை நாணயங்களிலிருந்து ஐரோப்பியர் காலத்தைய நாணயங்கள் வரை பல மையங்களில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. வல்லிபுரம், நாகர் கோயில், புலோலி, மட்டுவில், மானிப்பாய், பண்டத்தரிப்பு, தெல்லிப்பளை, கந்தரோடை, தொல்புரம், சுழிபுரம், வட்டுக் கோட்டை, அல்லைப்பிட்டி, மண்கும்பான், நாரந்தனை, புங்குடு தீவு, ஆனைக்கோட்டை, யாழ்ப்பாணக் கோட்டை, நல்லூர், பூநகரி, மாந்தை, வரணி, கச்சாய், உடுத்துறை, முல்லைத்தீவு என இன்னும் பல இடங்களில் பண்டைய நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இந்நாணயங்களின் நீண்ட காலப் பரவல் காணப்பட்ட இடங்களாக கந்தரோடை, பூநகரி, மாந்தை மற்றும் யாழ்ப்பாணக் கோட்டை ஆகிய மையங்களைக் கூறலாம் (Pushparatnam, P. 2002: 24-25; 2021).

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்று-தொல்லியல் துறைப் பேராசிரியராக இருந்த பரமு புஷ்பரட்ணம் வட இலங்கை நாணயவியல்துறை விற்பன்னராவார். அவர் யாழ்ப்பாண மற்றும் வன்னிப் பிரதேசங்களிலிருந்து ஆயிரக்கணக்கான நாணயங்களைச் சேகரித்து அவற்றின் காலவரிசைப்படி, அவை உள்ளூர் அல்லது வெளிநாட்டு நாணயங்கள் என வகைப்படுத்தியிருக்கிறார். ஒரு குறிப்பிட்ட மையத்தில், ஒரு குறிப்பிட்ட அகழ்வு மட்டத்தில், ஒரு குறிப்பிட்ட வகையான மட்பாண்ட ஓடுகளுடன் இடம்பெறும் நாணயங்கள் நம்பகமாக ஒரு காலவரிசையைத் தருகின்றன. இலங்கைத் தமிழரின் நாணயவியல் ஆய்விற்கு பேராசிரியர் பரமு புஷ்பரட்ணம் ஆற்றிய பங்கு அளப்பரியது. இக்கட்டுரையில் இடம்பெறும் பல நாணயங்கள் அவரது சேகரிப்பிலிருந்து பெற்றுக் கொண்டவை




கந்தரோடையில் கிருஷ்ணராசா கண்ட முத்திரை நாணயம் – காலம் கி.மு. 300

Image Source - S. Krishnarajah, 1998

யாகும். அவருக்கு எமது நன்றிகள் உரியது.

வட இலங்கையில் காணப்படும் நாணயங்களில் உள்ளூரில் தயாரிக்கப்பட்டவையும், வெளிநாடுகளிலிருந்து வர்த்தகத் தொடர்புகளாலும், கலாசாரப் பரிமாற்றங்களாலும் இங்கு வந்தடைந்த நாணயங்களும் அடங்கும். வெளிநாட்டு நாணயங்கள் அவை உற்பத்தி செய்யப்பட்ட நாடுகளின், அவை தயாரிக்கப்பட்ட காலத்தைய அரசியல் மற்றும் வர்த்தக உறவுகளை



கந்தரோடை அகழ்வுகளில் கண்ட லக்ஷ்மி நாணயங்கள்

Image Source - ப. புஷ்பரட்ணம்

மதிப்பீடு செய்ய உதவுகின்றன. உள்ளூரில் தயாரிக்கப்பட்ட நாணயங்கள் ஒரு நாட்டின் அரசு, குடியேற்றம், மொழி, எழுத்து, சமயம், பண்பாடு ஆகியவற்றை அறிய உதவுகின்றன.

ஐரோப்பியர் காலத்திற்கு முற்பட்ட வட இலங்கை நாணயங்கள் கி.மு. 600ஆம் ஆண்டுக்காலம் முதல், கி.பி. 1500 ஆண்டுக் காலம் வரை காணப்படுகின்றன. அவைகளில் காணப்படும் சின்னங்களும், அவற்றின் காலமும் இந்த மண்ணின் பரந்துபட்ட வணிக - பொருளாதாரத் தொடர்புகளையும், அரசியல் மற்றும் சமய நடவடிக்கைகளையும், இக்காலப்பகுதியில் மக்களின் கலாசார முன்னேற்றத்தையும் எடுத்துக் காட்டுகின்றன.

வட இலங்கையின் தொல்நகரமான கந்தரோடை பண்டைய நாணயங்கள் பொதிந்து கிடக்கும் ஒரு மையமாகும். வரலாற்றறிஞர் போல் பீரிஸ் கந்தரோடையில் ஒரு மாத கால ஆய்வில் 35 அச்சுக்குத்திய வெள்ளி நாணயங்களையும், 75 லக்ஷ்மி நாணயங்களையும், 150 உரோம நாணயங்களையும் கண்டெடுத்திருக்கிறார்.

**நாணயத் தொடர் 1**
**ஆதி இந்திய வெள்ளி முத்திரை நாணயங்கள் கி.மு. 600 – 300.**
**நாகர்கால முத்திரை நாணயங்கள் கி.மு. 300.**

1917ஆம் ஆண்டில் இடம் பெற்ற கந்தரோடை அகழ்வுகளில்



இந்த லக்ஷ்மி நாணயத்தில் வலது கையில் ஏந்திய தாமரைத் தண்டும், மறுபக்கத்தில் ஒரு தண்டில் பொருத்தப்பட்ட சுவாஸ்திக்கா சின்னமும் காணப்படுகிறது
Image Source - ப. புஷ்பரட்ணம்

கி.மு. 600ஆம் ஆண்டிற்கும் கி.மு. 300ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தைய வெள்ளியினாலான அச்சுக்குத்திய பல இந்திய முத்திரை நாணயங்களை ஆய்வாளர் போல் பீரிஸ் கண்டுபிடித்தார். அக்காலத்தில் கந்தரோடைக்கும், வட இந்தியாவிற்கும் இடையில் நடைபெற்ற வர்த்தகத் தொடர்புகள் காரணமாக இவை கந்தரோடையை வந்தடைந்திருக்கின்றன என அவர் கருதினார் (Pieris, Paul E. 1917). அவர் கண்டெடுத்த இந்த நாணயங்கள் கொழும்பு அருங்காட்சியகத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இம்மாதிரியான முத்திரை குத்திய நாணயங்கள் வட இந்தியாவில் கி.மு. 600ஆம் ஆண்டுக் காலத்தில் வெளியிடப்பட்டிருக்கின்றன. அங்கிருந்து அவை தென்னிந்தியாவுக்கும், இலங்கைக்கும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. தமிழகத்தில் யானை, மீன் (பாண்டிய) சின்னங்களைக் காட்டும் முத்திரை நாணயங்கள் கி.மு. 400-300 ஆண்டுக் காலத்திலிருந்தும், புலி (சோழ), வில் (சேர) சின்னங்களைக் காட்டும் முத்திரை நாணயங்கள் கி.மு. 300 ஆம் ஆண்டிலிருந்தும் தயாரிக்கப்பட்டு வெளிவந்திருக்கின்றன. இவ்வகை நாணயங்களே முதன் முதலாக அரசுகள் வெளியிட்ட நாணயங்களாகும். இவ்வகை நாணயங்களைத் தயாரிப்பதற்கான சுட்ட களிமண் அச்சுகள் காஞ்சிபுரத்திலும், கரூரிலும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன (Krishnamurthy, R. 1991; Sethuraman 1994: 14).

சுட்ட களிமண் அச்சுகளில் (Terracotta moulds) வெள்ளி அல்லது செம்பை உருக்கி வார்த்து, சற்று சூடு தணிந்தபின் வேண்டிய சின்னங்களை அதில் அச்சுக் குத்தி இந்நாணயங்கள் தயாரிக்கப்படும். நாணயங்கள் அனைத்தும் ஒரே எடையில் இருக்க வேண்டும் என்பதற்காக கூடிய எடைகொண்ட நாணயங்களின்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு.
விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும்.
அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு 437.345.4203



ஆரம்பகாலக் கொற்கைப் பாண்டியர்களின் இலச்சினை யானை என நாணயவியலாளர் லொவெந்தால் குறிப்பிடுகிறார். ஆரம்பகால மதுரைப் பாண்டிய நாணயங்களில் ஒரு பக்கம் யானைச் சின்னமும் மறுபக்கம் கோடுகளால் வரைந்த மீன் சின்னமும் காணப்படுகிறது. பிற்கால மதுரைப் பாண்டிய நாணயங்களில் மீன் இலச்சினை உருவவியலாகப் பொறிக்கப்பட்டது

Image Source - H.W. Codrington




கந்தரோடையில் சேயோனால் கண்டெடுக்கப்பட்ட கி.மு. 200 ஆம் ஆண்டிற்குரிய நாக நாணயம். இதன் முன் பக்கத்தில் ஸ்ரீவஸ்தா சின்னமும், பின் பக்கத்தில் 'உதிபன்' என்ற பெயரும் காணப்படுகிறது

Image Source - ப. புஷ்பரட்ணம்

மூலைகள் வெட்டப்பட்டு எடை ஒரே சீராக்கப்படும்.

இலங்கையில் இம்மாதிரியான முத்திரை நாணயங்களை உற்பத்தி செய்யும் சுடுமண் அச்சுகள் அநுராதபுரத்திலும் (Deraniyagala, S. 1972: 150), அக்குறுகொடையிலும் (Bopearachchi, O. 1994: Plate 25) கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த முத்திரை நாணயங்களை கி.மு. 300ஆம் ஆண்டிற்கு உரியதாகப் பல ஆய்வாளர்கள் கருதியுள்ளார்கள் (Parker, H. 1981: 463-474; Codrington. H. W. 1924: 11-17; Bopearachchi, O. 1999: 21).

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேராசிரியர் செல்லையா கிருஷ்ணராசா கந்தரோடை அகழ்வாய்வுகளில் நான்கு வெள்ளியினாலான முத்திரை நாணயங்களைக் கண்டுபிடித்திருக்கிறார். இவற்றில் காணப்படும் நாக இலச்சினைகள் இவை நாகதீபத்து நாக அரசர்களால் வெளியிடப்பட்டது என்பதை எடுத்துரைக்கின்றன. இந்த நாணயங்களில் காணப்படும் கதிரவன் பன்னிரண்டு கதிர்களைக் கொண்டது. இந்திய நாணயங்களில் காணப்படும் சூரியன் பதினாறு கதிர்கள் கொண்டதாகும். கந்தரோடை நாணயங்களின் காலம் கி.மு. 300 ஆண்டு எனக் கணிக்கப்படுகிறது (கிருஷ்ணராசா, செ. 1998: 65-72).




நாகபூமி

**நாணயத் தொடர் 2**
**கந்தரோடை லக்ஷ்மி நாணயங்கள்: கி.மு. 300 – கி.பி. 500.**

இவ்வகையான நாணயங்கள் முதன் முறையாக ஆய்வாளர் போல் பீரிஸ் அவர்களினால் 1917ஆம் ஆண்டில் கந்தரோடையில் இடம்பெற்ற அகழ்வுகளில் இனங்காணப்பட்டன. இவற்றில் காணப்படும் பெண் உருவங்களின் வடிவங்களைக் கொண்டு இவற்றிற்கு லக்ஷ்மி நாணயங்கள் என்ற பெயரை அவர் கொடுத்தார். இவை உண்மையில் நாணயங்களா அல்லது சமய சம்பந்தமான பட்டயங்களா என்ற சர்ச்சை இன்னும் அறிஞர் மத்தியில் உள்ளது. ஆனால் பெரும்பாலான நாணயவியலாளர்கள் இவற்றை நாணயங்களாகவே கணிப்பிடுகிறார்கள்.

இலங்கையில் இந்த நாணயங்கள் பல மையங்களில் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இவை பல உருவ வகைகளில், செம்பு, ஈயம், சிலிக்கா, நிக்கல், இரும்பு ஆகிய பல உலோகங்களில் காணப்படுகின்றன. இவற்றின் சேகரிப்புத் திரட்டுகள் வட இலங்கையிலும், தென் இலங்கையிலும் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. கந்தரோடை அகழ்வுகளில் இவை மிகப் பழமையான குடியிருப்புகளில், கி.மு. 300ஆம் ஆண்டிற்குரிய உரோம மட்பாண்டங்கள் காணப்படும் அகழ்வுப்படிவு அடுக்குகளிலிருந்து, கி.பி. 500ஆம் ஆண்டுகள் வரையான அகழ்வுப்படிவு அடுக்குகள் வரை (Stratified layers) – 800 ஆண்டுக் காலமாகக் காணப்படுகின்றன.



பாண்டிய நாட்டு அச்சுக் குத்திய முத்திரை நாணயங்கள் : கி.மு. 400

1885ஆம் ஆண்டில் முல்லைத்தீவில் ஒரு மண் பானையில் இவ்வகையான 51 நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. 1917 ஆம் ஆண்டில் போல் பீரிஸ் நூற்றுக்கணக்கான லக்ஷ்மி நாணயங்களை கந்தரோடையில் கண்டெடுத்தார். அதன் பின்னர் வட இலங்கையில் நல்லூர், வல்லிபுரம், ஆனைக் கோட்டை, பூநகரி, உடுத்துறை, மாதோட்டம் ஆகிய மையங்களிலும், அநுராதபுரம், திஸ்ஸமகாராம, அக்குறுகொட, சிலாபம், புத்தளம், நிந்தவூர் ஆகிய இடங்களிலிருந்தும் இவ்வகை நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன (Pieris, P.E. 1917; Codrington 1924; Sivasamy 1974; Krishnarajah 1983; Bopearachchi 1998, 1999; Pushparatnam 2001, 2002: 81).



கந்தரோடையில் போல் பீரிஸ் கண்டெடுத்த உரோம நாணயங்கள்: உரோமப் பேரரசர்கள் - இரண்டாம் வலென்ரைன், ஆர்க்கேடியஸ், இரண்டாம் தியோடோசியஸ் உருவங்கள்

Image Source - H.W. Codrington



உரோமக் குடியரசு கறுப்பு வெண்கல நாணயம் : கி.மு. 300.



உரோமப் பேரரசின் தங்க நாணயம் : கி.பி. 450-500

இந்த நாணயங்களில் காணப்படும் பெண் உருவம் லக்ஷ்மி என அடையாளம் காணப்பட்டபோதிலும், எல்லா நாணயங்களிலும் காணப்படும் பெண் உருவங்களில் பொதுவான உருவக அம்சங்கள் காணப்படுவதாகக் கூற முடியாது. சில நாணயங்களில் ஓர் இளமங்கையையும், சிலவற்றில் ஒரு வயதான பெண்ணையும் காண முடிகிறது. அதிகமான நாணயங்களில் ஒரு தாமரைப்பூவில் நிற்கும் பெண் ஒரு கையில், சில சமயங்களில் இரு கைகளிலும், தண்டுடன் கூடிய தாமரை மலரைப் பிடித்திருக்கிறார். சில நாணயங்களில் தாமரைத் தண்டுக்குப் பதிலாக கையில் திரிசூலமோ அல்லது குத்துவிளக்கோ காணப்படுகிறது.


நன்றி: சிவ. தியாகராஜா – எழுநா முகநூல்



உரோமப் பேரரசின் வெள்ளி நாணயங்கள்



பிற்காலத்தைய வட்ட வடிவான மதுரைப் பாண்டிய நாணயம்



கந்தரோடை அகழ்வில் போல் பீரிஸ் 1917இல் கண்டெடுத்த சதுர வடிவான மதுரைப் பாண்டிய நாணயம்

Image Source - H.W. Codrington




கி.மு. 300ஆம் ஆண்டிற்குரிய கொற்கைப் பாண்டிய நாணயம். முன் பக்கம் யானையும், பின் பக்கம் மலைமுகடு, மேடையில் நிற்கும் திரிசூலம், சதுரத் தனம் என்பன கொண்டது




மான் உருவம் பதித்த சதுரவடிவான நாணயம்

Image Source - ப. புஷ்பரட்ணம்



யாழ்ப்பாணத்தில் வரணி கிராமத்தில் கண்டெடுத்த உரோம நாணயங்களில் ஒரு பகுதி

Image Source - செ. கிருஷ்ணராசா



உரோமப் பேரரசு நாணயம் கி.பி. 300-400 (கந்தரோடை)

# 40 ஆண்டுகளை கடக்கும் செர்னோபில் பேரழிவு: அணுக்கதிரியக்க விளைவின் தொடர் பாதிப்பு

ஹங்கரன் விக்கினேஸ்வரா–

26.04.2026

2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஏப்ரல் 26 ஆம் திகதியை சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தினத்தை அனுசரிப்பதற்கான ஒரு தீர் மானத்தை ஏற்றுக் கொண்டது.

வடக்கு உக்ரைனில் முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் செர் னோபில் (Chernobyl) நகருக்கு அருகில் கட்டப்பட்ட அணுமின் நிலையத்தில் ஒரு அணு உலை வெடித்து எரிந்தது.

இரகசியங்களால் மூடப்பட்டு மறைக்கப்பட்ட இந்த சம்பவம் மனித வரலாற்றிலேயே அழிக்க முடியாத தழும்பாக மாறிப் போன ஒரு நிகழ்வானது. அதன் பின் ஏப்ரல் 26 அன்று உலகம் முழுவதும் சர்வதேச செர்னோபில் பேரழிவு நினைவு தின மானது அனுசரிக்கப்படுகிறது.

செர்னோபில் அணு உலை விபத்து 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் 26 ஆம் நாள் அன்றைய சோவியத் ஒன்றியத்தின் உக்ரேனி லுள்ள பிப்யாட் என்னும் இடத்துக்கு அருகில் அமைந்திருந்த செர்னோபில் அணு உலையில் ஏற்பட்ட விபத்தைக் குறிக்கும். மூன்று நாடுகளில் உள்ள ஏறத்தாழ 8.4 மில்லியன் மக்கள் இந்தக் கதிர்வீச்சினால் பாதிப்புக்கு உள்ளாக்கப் பட்டனர்.

## செர்னோபில் அணு உலை விபத்து

உலக வரலாற்றில் செர்னோபில் பேரழிவு (Chernobyl Disaster) என்பது மிகப்பெரிய அணு விபத்துகளில் ஒன்றாகக் கருதப்படு கிறது. செர்னோபிலில் நான்கு அணு உலைகள் இருந்தன. அவற்றில் ஒன்றின் நீர் குளிர்வு சாதனம் செயல்படாததன் கார ணமாக, வெப்பம் அதிகரித்து, அணு உலையின் மையம் உருக ஆரம்பித்தது. 1986, ஏப்ரல் 26 அன்று அதிகாலை 1.23 மணி யளவில் நேர்ந்த இந்த சம்பவம் தொடர்ந்து மூன்று மணி நேர வெப்பத்தின் காரணமாக, உருகுதலோடு, உலையில் தீப்பற்ற செய்து வெடிக்கவும் வைத்தது. அதனால் சுமார் 20 வகையான கதிர் வீச்சுப் பொருள்கள் காற்று மண்டலத்தில் புகுந்தன. காற்று மண்டலத்தில் புகுந்த இக்கதிர் வீச்சுப் பொருள்கள் அங்கிருந்த நிலத்தில் விழுந்து சிதறின.

இந்த கதிரியக்க வீழ் பொருள்கள் பத்து ஹிரோஷிமாக் குண்டுக ளுக்கு சமமானதாக கருத்தப்படுகின்றது. இது உலகின் மிக மோசமான அணு உலை விபத்து எனச் சொல்லப்படுகின்றது. அனைத்துலக அணு ஆற்றல் நிகழ்வு அளவீட்டில் ஏழாவது நிலையை எட்டிய ஒரே விபத்தான இதன் விளைவாக மோச மான கதிரியக்கம் சூழலுக்குள் வெளியேறியது. இந்நிகழ்வின் போது ஏற்பட்ட வெடிப்பினால் பலர் இறந்தனர். எனினும் இவ் விபத்தினால் ஏற்பட்ட பின்விளைவுகளினால் இறந்தவர் தொகை அதிகமாகும்.

இரத்தக்குழாய் வெடித்து அதிக அளவு இரத்தப்போக்கு, உறுப்புச் சிதைவு, முடி கொட்டுதல், கண்புரை, இரத்தத்தில் இயல்புக்கு மாறான நிலைகள், தோல்புற்று நோய், சீழ்பிடித்து ரணமாதல், கதிர்வீச்சு நோய் முதலிய நோய்கள் உருவாகின. இதன் கார ணமாகா காற்று நீர் ஆகியவற்றில் கதிரியக்க மாசு படிந்து தாவரங்களையும், விலங்குகளையும் பாதித்தது.

## அணு உலை வெடிப்பின் காரணம்

வரலாற்றின் மிக மோசமான அணுசக்தி பேரழிவுக்கு நான் காவது ரியாக்டரில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு மற்றும் மனிதத் தவறால், ஹிரோஷிமாவை விட 400 மடங்கு அதிக கதிர்வீச்சு வெளியாகி, அந்தப் பகுதி வாழத் தகுதியற்றதாக மாறி யது. பாதுகாப்பு சோதனை முயற்சியின் போது ஏற்பட்ட தொழில் நுட்பக் கோளாறும் முக்கிய காரணமாகும்.

இந்த அணு உலையில் கதிர்வீச்சைக் கட்டுப்படுத்த "சார்க்கோ பேகஸ்" (Sarcophagus) எனும் கான்கிரீட் சுவர் மற்றும் பின்னர் புதிய பாதுகாப்பான அடைப்பு (NSC) கட்டப்பட்டது. தற்போதைய நிலையில் 30 கி.மீ சுற்றளவு பகுதி இன்றும் தடைசெய்யப்பட்ட பகுதியாக (Exclusion Zone) உள்ளது.

இந்த விபத்தினால் உடனடி உயிரிழப்புகள் மட்டுமின்றி, நீண்ட கால கதிர்வீச்சு பாதிப்புகளும், பிறவி குறைபாடுகளும் இப் பகுதியில் உள்ள மக்களுக்கு ஏற்பட்டன. இப்பகுதி தற்போது மனித நடமாட்டம் இல்லாத "கோஸ்ட் டவுன்" (Ghost Town) ஆக மாற்றப்பட்டுள்ளது. இந்த விபத்தின் காரணமாக காற்றின் மூலம் கதிரியக்கம் (Radiation) ஐரோப்பாவின் பல பகுதிகளுக் கும் பரவியது. பலர் புற்றை நோய்களுக்கு ஆளானார்கள்.

ஆனாலும் பாதிக்கப்பட்ட பெரும் பகுதி இன்னும் பாவனையற்ற பிரதேசமாக (Exclusion Zone) ஆகவே உள்ளது. சுற்றுச்சூழல் பாதிப்பு பல தசாப்தங்கள் நீடித்தது. தற்போதைய நிலை வெடித்த ரியாக்டர் மீது "Sarcophagus" மற்றும் புதிய பாதுகாப்பு அமைப்பு கட்டப்பட்டுள்ளது. இதன் விளைவாக கதிரியக்க பரவலை கட்டுப் படுத்தலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

செர்னோபில்லுக்கு அருகில் உள்ள செர்னோவ்ஸ்கி என்னும் நகரத்தில் காரணம் கண்டறியப்படாத மர்மமானதொரு









நோயின் காரணமாக பல குழந்தைகள் பாதிக்கப்பட்டு, இவர்கள் கீவ், லெனின்கிராடு, மாஸ்கோ நகர மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தனர் என்று கூறப் படுகிறது.

இந் நோய், சுமாரான தலைமுடியுள்ள, நீல விழிகளைக் கொண்ட குழந்தைகளையே அதிகம் பாதித்துள்ளது. முடி உதிருதல், எரிச்சல், பிரம்மைப் பார்வை ஆகிய அறிகுறிகளோடு இந்நோய் துவங்கியது. இந் நோயின் காரணம் பற்றி ஆராய சோவியத் அரசு பல ஆய்வுக் குழுக்களை நிறுவியது. அதில் ஒரு

**ஏப்ரல் 26 அன்று உலகம் முழுவதும் சர்வதேச செர்னோபில் (Chernobyl) பேரழிவு நினைவு தினமாக அனுசரிக்கப்படுகிறது. மனிதன் உருவாக்கிய அணு ஆயுதம் மனிதனையே பதம் பார்த்த வரலாற்றின் மோசமான நிகழ்வு உக்ரேனில் நிகழ்ந்தது. முன்னாள் சோவியத் யூனியனில் ஏப்ரல் 26, 1986 – வரலாற்றில் மிக மோசமான அணு விபத்து பதியப்பட்ட நாளாகும்.**

குழு இந்நோய் செர்னோபில் விபத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட கதிர்வீச்சின் காரணமாக இருக்கலாம் என்கிற கருத்தை முற் றாக ஏற்றுக்கொள்ள மறுத்தது.

ஆனாலும் இந்நோய் மிகமிக மெதுவாகத்தான் பரவுகிறது என் றாலும், பகுதிவாழ் மக்களிடையேயும், அரசு வட்டாரத்திலும் இது ஆழ்ந்த கவலையளிப்பதாய் உள்ளது. இந்தக் கவலையின் காரணமாகச் சுமார் 15,000க்கும் மேற்பட்ட குழந்தைகளை அதன் பெற்றோர்கள் செர்னோவ்ஸ்கி நகரத்தை விட்டு அப்பால் விலகி சென்று விட்டிருக்கிறார்கள்.

## சோவியத் யூனியனின் அணுமின் உற்பத்தி

சோவியத் யூனியனின் அணுமின் உற்பத்தி பற்றிப் பலர் பல்வேறு விதமான புள்ளி விபரங்களைத் தந்தாலும், சோவியத் யூனியனின் மொத்த மின் உற்பத்தியில் 10 சதவீதத்தை மட் டுமே அணுமின் சக்தி தருகிறது.

அணு சக்தியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்துவது என் பதன் முதன் முயற்சியாக, உலகிலேயே முதல் அணுசக்தி நிலையம் 1954இல் கலுகாவுக்கு அருகில் உள்ள ஒபினின்ஸ்க் என்னும் சிறு நகரத்தில் நிறுவப்பட்டதாக, சோவியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. என்றாலும், அமெரிக்காவைப் போலவே சோவியத் யூனியனிலும் அணுசக்தி நிலையங்களோடு அணு ஆயுதத் தொழிற் சாலைகளும், அணுமின் நிலையங்களுக்குக் கருவிகளை உற்பத்தி செய்து தரும் தொழிற்சாலைகளும் பரவ லாக விரவியுள்ளன.

சோவியத் யூனியனின் ஏற்பட்ட முதல் விபத்து 1958இல் யூரல் மலைச் சாரல் பகுதியிலுள்ள அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்து ஆகும். இங்கு அணுக்கழிவுகள் வைக்கப்பட்டிருந்த இடம் ஒன்று வெடித்ததனால் ஏற்பட்ட கதிரியக்கம் 60 கிரா மங்கள் வரை பரவியது.

இந்த 60 கிராமங்களையும் சோவியத் யூனியனின் தற் போதைய வரைபடங்களில் காணவில்லை எனவும், இந்தப் பிர தேசத்தில் புல் பூண்டுகள் கூட முளைப்பதில்லை எனவும், இதில் ஏற்பட்ட சேதம் மற்றும் இதர பின் விளைவுகளைச் சோவியத் நாட்டிலிருந்து வெளியேறிய கோராஸ் மெத்தோவ் என்பவர் 1976இல் ஆதாரங்களுடன் நிரூபித்ததாக கூறப்படுகிறது.

## செவ்செங்கோ அணு உலை

இதற்கு அடுத்த அணு விபத்து 1974இல் காஸ்பியன் கடல் பகுதியில் செவ்செங்கோ அணு உலையில் ஏற்பட்ட விபத்து என்று அறியப்படுகிறது. இங்குள்ள அணு உலையில் சோடியம் தீப்பற்றியதால் அணு உலை வெடித்தது. கதிரியக்கத்தால் ஏற் பட்ட சேதம் மற்றும் விளைவுகள் பற்றி விவரமாக எதுவும் வெளியே தெரியவில்லை.

அதற்கு அடுத்த விபத்து 1986இல் ஏற்பட்ட செர்னோபில் விபத்து. உலகில் இதற்குமுன் எவ்வளவோ அணு உலை விபத்துகள் நேர்ந்திருந்தாலும் அணுசக்தியின் ஆபத்து குறித்து உலகம் முழுவதற்கும் புரிய வைத்த நிலமை இந்த விபத்தையே சேரும் என்று சொல்லப்படுகிறது. இதில் விபத்து நடந்த உடனே இறந் தவர்கள் பலர் என்று அறிவிக்கப்பட்டது. விபத்து நடந்த சமயத் தில் சோவியத் யூனியன் செய்த ஏற்பாடுகளைப் பற்றி உலக நாடுகள் வெகுவாகப் பாராட்டின. அந்த ஏற்பாடுகளினால் உட னடி உயிர்ச் சேதம் தடுக்கப்பட்டது என்றாலும், பல தலைமுறை களுக்கு வேண்டிய நாசம் இந்த விபத்தால் விதைக்கப்பட்டு விட்டதாகச் சொல்கிறார்கள்.

விபந்து நடந்து ஒரு வருடம் கழித்து மேற்கு ஜெர்மனியில் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. மேற்கு ஜெர்மனியில் ஊனமுடன் குழந் தைகள் பிறப்பது, மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பிறப்பது போன்றவை அதிகரித்துள்ளதற்கும், செர்னோபில் விபத்துக்கும் தொடர்பு உள்ளதாக அதில் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் அடுத்தடுத்த ஆண்டுகளில் 1000 க்கும் மேற்பட்ட புற்றுநோய் மரணங்கள் ஐரோப்பாவில் நிகழ்ந்த தாகக் கூறப்படுகின்றன. இவ் விபத்து நேர்ந்த உடன் 1,35,000 மக்கள் அதைச் சுற்றி உள்ள இடங்களிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள் எனக் கூறப் படுகிறது.

மனிதன் உருவாக்கிய அணு ஆயுதம் மனிதனையே பதம் பார்த்த வரலாற்றின் மோசமான உதாரணம் உக்ரேன் சுவர்-களில் படிந்து கிடக்கிறது. ஏப்ரல் 26, 1986இல் உலக வரலாற் றில் மிக மோசமான அணு விபத்து பதியப்பட்ட நாளாக அறிவிக் கப்பட்டது.







# மாலியில் ரஷ்யச் சார்பு அரசு வீழ்ச்சி!
# தௌரேக் தனிநாடுக் கோரிக்கை சாத்தியமா?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

29.04.2026

மேற்கு ஆப்பிரிக்க நாடான மாலியில் இடம்பெற்ற தாக்குதலில், அந்நாட்டு பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் சாடியோ கமாரா உயிரிழந்துள்ளார். மாலியில் பல ஆண்டுகளாகத் தனி நாடு கோரிப் போராடி வரும் தௌரேக் (Tuareg) கிளர்ச்சியாளர்களும், முதல் முறையாக ஒருங்கிணைந்து தாக்குதல்கள் நடத்தி வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.




கடந்த சில நாட்களாக நாட்டின் பல்வேறு இராணுவ முகாம்கள் அவர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த நிலையில், தலைநகர் பமாகோ அருகே காட்டி பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்பு அமைச்சரின் இல்லத்தை குறிவைத்து தற்கொலைப்படையினர் கார் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனிடையே, வடக்கு மாலியின் முக்கிய நகரமான கிடால் நகரத்தையும் கிளர்ச்சியாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த தாக்குதல்களின் பின்னணியில் மாலி அரசுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்த ரஷியாவின் ‘ஆபிரிக்கா கார்ப்ஸ்’ படையினரும் பின்வாங்கியுள்ளதாக கூறப்படுகிறது. மாலியில் நிலவும் இந்த புதிய சூழ்நிலை, நாட்டின் பாதுகாப்பு நிலைமையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

## அஸாவாட் விடுதலை முன்னணி (FLA)

கடந்த வார இறுதியில் இராணுவத் தளங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களால் மாலி நிலைகுலைந்துள்ளது. இந்தத் தாக்குதல்களில் பாதுகாப்பு அமைச்சர் கொல்லப்பட்டார். சனிக்கிழமை தொடங்கிய, ஜமாஅத் நுஸ்ரத் அல்-இஸ்லாம் வல்-முஸ்லிமின் (JNIM) மற்றும் அஸாவாட் விடுதலை முன்னணியின் (Azawad Liberation Front - FLA) போராளிகளால் ஒருங்கிணைக்கப்பட்ட தாக்குதல்களில் குறைந்தது 16 பேர் காயமடைந்தனர்.

FLA தன்னாட்சிக்காகப் போராடி வருகிறது. வடக்கு மாலியில் தன்னாட்சி கோரும் இயக்கம் பற்றியும், அதன் சமீபத்திய நடவடிக்கை அதன் எதிர்காலத்திற்கும் மாலிக்கும் இடையே நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது. மாலியின் வடக்குப் பகுதியில் தௌரேக்குகள் நீண்ட காலமாக சுதந்திரத்திற்காகப் போராடி வருகின்றனர், மேலும் FLA பல கிளர்ச்சிகளில் சமீபத்திய ஒன்றாகும்.

அஸாவாட் என்பது 2012 மாலிய உள்நாட்டுப் போரின் போது பிரகடனப்படுத்தப்பட்ட, வடக்கு மாலியில் உள்ள ஒரு சுயமாக அறிவிக்கப்பட்ட தன்னாட்சிப் பிராந்தியம் ஆகும். இந்த சுதந்திர இயக்கத்தின் வேர்கள் பல தசாப்தங்களுக்கு முந்தையவை. தௌரேக் இன மக்கள் 1900-களின் முற்பகுதியிலிருந்து ஒரு சுதந்திர நாட்டிற்காகப் போராடி வருகின்றனர். 1960இல் பிரெஞ்சு காலனிவாதிகள் மாலியிலிருந்து அப்போதைய பிரெஞ்சு சூடான் வெளியேறிய பிறகு, அந்தக் கோரிக்கை தீவிரமடைந்தது.

தௌரேக் மற்றும் அரேபிய இன மக்கள் வடக்கு மாலியில் பெரும்பான்மையாக வசிக்கின்றனர். மாலியின் மக்கள் தொகையில் பெரும்பான்மையாக உள்ள பம்பாரா மக்களை விட, அல்ஜீரியா, வடக்கு நைஜர் மற்றும் மவுரித்தேனியாவின் சில பகுதிகளில் உள்ள மக்களுடன் அவர்களுக்கு நெருங்கிய உறவுகள் உள்ளன.

1962இல், தௌரேக் கிளர்ச்சியாளர்கள் ஒருங்கிணைக்கப்படாத தாக்குதல்கள் மூலம் வடக்கு மாலியில் உள்ள அரசாங்க நிலைகளைத் தாக்கத் தொடங்கினர். இந்தக் கிளர்ச்சி நசுக்கப்பட்டதால், பல பொதுமக்கள் அண்டை நாடுகளுக்குத் தப்பி ஓட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதுடன், அதிருப்தியும் ஏற்பட்டது. வடக்கில் ஏற்பட்ட வறட்சி, கால்நடைகளைக் கொன்றதுடன், மக்களின் நாடோடி வாழ்க்கை முறையையும் கடுமையாகப் பாதித்தது, இது கோபத்தை மேலும் அதிகரித்தது.

1990இல், கிளர்ச்சியாளர்கள் வடக்கு நைஜரைச் சேர்ந்த தௌரெக்குகளுடன் மீண்டும் தாக்கினர். மாலியில் இருந்த குழுக்கள், இயாத் அக் காலியால் நிறுவப்பட்ட அஸாவாத் விடுதலைக்கான மக்கள் இயக்கம் (MPLA) அஸாவாத்தின் அரபு இஸ்லாமிய முன்னணி (FIAA) மற்றும் அஸாவாத்தின் ஐக்கிய இயக்கங்கள் மற்றும் முன்னணிகள் (MFUA) ஆகியவை ஆகும். 1995இல் சில கிளர்ச்சியாளர்களுடன் ஒரு சமாதான ஒப்பந்தம் ஏற்பட்டது, ஆனால் வடக்கு மாலியில் தாக்குதல்கள் அவ்வப்போது தொடர்ந்தன.

## 2012 உள்நாட்டுப் போர்:

2012 ஜனவரியில், தௌரேக் மற்றும் ஆயுதக் குழுக்களின் புதிய தாக்குதல் அலை மாலி உள்நாட்டுப் போரைத் தூண்டியது. முன்னர் லிபியாவில் தஞ்சம் புகுந்து முஅம்மர் கடாஃபிக்காகப் போராடிய தௌரேக் போராளிகளைக் கொண்ட, அஸாவாத்தின் விடுதலைக்கான தேசிய இயக்கம் (MNLA) இதற்குத் தலைமை தாங்கியது. பிலால் அக் செரிஃப் இந்த இயக்கத்தை வழி நடத்தினார்.

போரின் தொடக்கத்தில், MNLA, இயாத் அக் காலி தலைமையிலான, புதிதாக உருவாக்கப்பட்ட சித்தாந்தக் குழுவான அன்சார் தினேவுடன் கூட்டணி அமைத்தது. அவர்கள் கூட்டாளிகளாக இருந்தபோதிலும், இரு குழுக்களுக்கும் இடையேயும் சண்டை மூண்டது. பமாகோவில் மார்ச் மாதம் நடந்த இராணுவப் புரட்சியால் ஏற்பட்ட அதிகார வெற்றிடத்திற்குப் பிறகு, அவர்கள் கிடால், டிம்புக்டு மற்றும் காவோ உட்பட வடக்குப் பகுதி முழுவதும் பரந்த நிலப்பரப்புகளைக் கைப்பற்றுவதில் வெற்றி பெற்றனர்.







**தௌரேக் இன மக்கள் 1900-களின் முற்பகுதியிலிருந்து ஒரு சுதந்திர நாட்டிற்காகப் போராடி வருகின்றனர். 1960இல் பிரெஞ்சு காலனிவாதிகள் மாலியிலிருந்து அப்போதைய பிரெஞ்சு சூடான் வெளியேறிய பிறகு, அந்தக் கோரிக்கை தீவிரமடைந்தது**






2012, ஏப்ரல் 6 அன்று, பிலால் அக் செரிஃப் அஸாவாத்தின் சுதந்திரத்தை அறிவித்தார். அடுத்த மாதம், இரு தரப்பினரும் ஒரு முறையான கூட்டணியை அறிவித்தனர். இருப்பினும், MNLA மற்றும் அன்சார் டின் இடையே மீண்டும் சண்டை மூண்டது. கிளர்ச்சியாளர்கள் தன்னாட்சியை அறிவிக்க விரும்பிய வேளையில், அன்சார் டின் மற்றும் இஸ்லாமிய மக்ரெபில் உள்ள அல்-கொய்தாவில் (AQIM) உள்ள அதன் கூட்டாளிகள் கடுமையான இஸ்லாமிய சட்டத்தை நிறுவ விரும்பினர். இறுதியில், அந்தக் குழுக்கள் கிளர்ச்சியாளர்களின் நோக்கத்தைக் கைப்பற்றி, MNLA-வைத் தனிமைப்படுத்தின.

2013இல், பமாகோவின் வேண்டுகோளின் பேரில் 4,000 பிரெஞ்சு வீரர்கள் மாலிக்கு அனுப்பப்பட்டனர். பமாகோ இறுதியில், மே 2015இல், ஒழுங்கமைக்கப்பட்ட துவாரெக் கூட்டணியான அஸாவாட் இயக்கங்களின் ஒருங்கிணைப்பு (CMA) உடன், அல்ஜியர்ஸ் உடன்படிக்கைகள் என்ற ஒரு நிலையற்ற அமைதி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

மாலி வடக்குப் பகுதிக்கு அதிக சுயாட்சி வழங்கவும், முன்னாள் போராளிகளை ஒருங்கிணைக்கவும், வறுமையைக் குறைக்க அப்பகுதியில் முதலீடு செய்யவும் ஒப்புக்கொண்டது. சுமார் 11,000 வீரர்களைக் கொண்ட ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் பணிப் படை அப்பகுதிக்கு அனுப்பப்பட்டது.

## FLA முன்னணி உருவாக்கம்:

கிளர்ச்சி தணிந்தபோதிலும், அன்சார் டின் மற்றும் அதுபோன்ற புதிதாக உருவாகும் குழுக்களின் சண்டை தொடர்ந்தது. 2017இல், அல்-கொய்தாவுடன் கூட்டணி வைத்துள்ள அன்சார் டின், ஏ.கியூ.ஐ.எம், கட்டினா மசினா மற்றும் அல்-மௌராபிதூன் ஆகிய நான்கு குழுக்கள் ஒன்றிணைந்து ஜே.என்.ஐ.எம் உருவாக்கப்பட்டது. இதற்கு அக் காலி தலைமை தாங்குகிறார். மாலி, நைஜர் மற்றும் புர்கினா பாசோவின் எல்லைப் பகுதிகளில் சுமார் 10,000 போராளிகளுடன் இது செயல்படுகிறது.

ஜே.என்.ஐ.எம்-இன் தாக்குதல்கள் மோசமடைந்ததாலும், அக்குழு வடக்கு மாலியின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றத் தொடங்கியதாலும், நெருக்கடிக்கு ஒரு முடிவுகட்டுவதாக உறுதியளித்து, 2020 ஆகஸ்டில் இராணுவம் மீண்டும் பமாகோவில் அதிகாரத்தைக் கைப்பற்றியது.

பிரான்ஸ் மற்றும் பல நாடுகள் இந்த ஆட்சிக்கவிழ்ப்பைக் கண்டித்ததால், பாரிஸ் மற்றும் பிற சர்வதேச கூட்டாளிகளுக்கு எதிரான பமாகோவின் நிலைப்பாடு மேலும் விரோதமானது. பாதிக்கப்பட்ட சஹேலிய நாடுகளில் பிரெஞ்சு இராணுவத்தின் பிரசன்னம் உதவவில்லை என்று பலர் கூறியதால், மக்களிடையே கோபமும் அதிகரித்து வந்தது.


2021இல் மாலியிலிருந்து பிரெஞ்சுப் படைகள் வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டபோது, பாதுகாப்பு இடைவெளியை நிரப்புவதற்காக வாக்னர் குழுவைச் சேர்ந்த ரஷ்ய படையினர் பமாகோவிற்கு வந்தனர். தற்போது மேற்கு ஆப்பிரிக்க நாடுகளின் பொருளாதார சமூகத்தால் (ECOWAS) இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள மாலி, அப்பகுதியை நிலைப்படுத்தத் தவறியதாகக் குற்றம் சாட்டி, 2023இல் ஐ.நா. அமைதிப்படையினர் வெளியேற வேண்டும் என்றும் கோரியது. அந்த நேரத்தில் ஏற்பட்ட நெருக்கடியில் சுமார் 310 அமைதிப்படையினர் கொல்லப்பட்டிருந்தனர்.

அமைதிப்படையினர் காலி செய்த தளங்களை யார் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பாக மாலிய இராணுவத்திற்கும் தௌரேக் மக்களுக்கும் இடையே சண்டை மூண்டது. இது டசின் கணக்கான பொதுமக்களின் மரணத்திற்கும், ஆயிரக்கணக்கான மக்களை மௌரித்தானியாவுக்குள் தள்ளுவதற்கும் வழி வகுத்தது.

ஜனவரி 2024இல் பமாகோ அல்ஜியர்ஸ் உடன்படிக்கை-களைக் கிழித்தெறிந்து, JNIM மற்றும் தௌரேக் நிலைகள் மீது தாக்குதல் நடத்தத் தொடங்கினார். இது மற்றொரு கிளர்ச்சியை மீண்டும் தூண்டிவிட்டது.

நவம்பர் 2024இல், கடந்தகால கிளர்ச்சிக் குழுக்களின் கூறுகளிலிருந்து அஸாவாட் விடுதலை முன்னணி உருவானது. இதற்கு அல்கபாஸ் அக் இன்டல்லா தலைமை தாங்குகிறார், மேலும் இந்தக் குழு மீண்டும் சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுக்கிறது.

தற்போதைய சண்டையில் கொல்லப்பட்ட பாதுகாப்பு அமைச்சர் ரஷ்ய சார்பானவர் என்று கருதப்படுகிறார். தொடரும் இந்த போரில் ரஷ்ய மேலும் படைகளை அனுப்புமா என்பது சந்தேகமே.



# வருகிறோம்

**சிறுகதை**

**கிளிநொச்சி மூர்த்தி**

புழுதியைக் கிளப்பிக்கொண்டு ஜீப் ஒன்று வேகமாகச் சென்றது. “இது நம்மடை பொடியளின்ரை ஜீப்” சங்கக் கடைச் சந்தியில் நின்ற செல்லத்துரையர் முகத்தில் பெருமிதம் மலரக் கூறினார்.

“முந்தியெல்லாம் ஜீப்பைக் கண்டால் ஒரு சனம் சந்தியிலை நிக்குமே? இப்ப சந்தோசத்திலை கையைக் காட்டிறம். செல்லத் துரை அண்ணர் கதைசொல்ல ஆரம்பித்தால் ஒரு நாடகத் தையோ, திரைப்படத்தையோ பார்ப்பது போன்ற சுவாரஸ்யம் இழையோடிக் கொண்டிருக்கும். பல சமயங்களில், எப்பொழு தும் கையிலிருக்கும் தினசரிப் பத்திரிகையின் செய்திகளின் விளக்கவுரையாகவும் அமைந்து விடுவதுண்டு.

வயது அறுபதைக் கண்ட செல்லத்துரையர் தீவுப் பகுதியி லிருந்து விவசாயம் செய்வதற்காக முப்பத்தைந்து வருடங்க ளுக்கு முன்பே கிளிநொச்சியில் வந்து குடியேறியவர். தீவுப் பகுதியின் வரண்ட மண்ணிலேயே வெங்காயமும், புகை யிலையும் விளைய வைத்த செல்லத்துரையருக்கு இரணைமடு நீர் பொங்கிப் பாயும் கிளிநொச்சி அள்ளி அள்ளிக் கொடுத்ததில் ஆச்சரியப்பட எதுவுமேயில்லை.

தொழில் தேடி இந்த மண்ணுக்கு வந்த செல்லத்துரையர், இதையே சொந்த மண்ணாக்கிக் குடும்பத்துடன் இங்கேயே குடியேறி விட்டார். அதனால் தான் போலும் அவர் அடிக்கடி “டேய், நான் கிளிநொச்சியை உருவாக்கினதிலை ஒருத்தனடா!” என்று கைமுஷ்டியை உயர்த்திப் பெருமையுடன் சொல்லிக் கொள்வார்.

தூரத்தே தள்ளாடியபடியே வந்து கொண்டிருந்த பாலசுந்தரம் வாத்தியாரைக் கண்ட முருகேசு பதட்டத்துடன் செல்லத்துரை யரிடம்,” அண்ணை, வாத்தி வருகிது.”

நிமிர்ந்து நோக்கிய செல்லத்துரையர், “ம்... வெறிபோலை கிடக்குது...” என்று இழுத்தார்.

முருகேசுவின் முகத்தில் வெறுப்புப் பொங்கி வழிந்தது.

“இவங்களுக்கெல்லாம் ஒரு வாத்தி வேலையும், அதிபர் பட்ட மும், தாங்களும் அழிஞ்சு பள்ளிக்கூடத்தையும் குட்டிச்சுவராக் கிறாங்கள்.”

செல்லத்துரையர் ஒரு நீண்ட பெருமூச்சொன்றை விட்டார், “ம்... மனுஷியும், பிள்ளையளும் ஷெல்லடியிலை செத்ததிலை யிருந்து மனுஷன் இந்தக் கோலம் தானே!”

“அதுக்கு உப்பிடித் தன்ரை மரியாதையை இழக்கிறதே ..?”

“உண்மைதான்... அநீதியாலை பாதிக்கப்படுகிறவை கவலைப் படுறதோடை நிண்டு விடினம். அநீதியை ஒழிக்கிற வழியைப் பாப்பமெண்டு யோசிக்கினையில்லை”

இந்த வார்த்தைகள் முருகேசுவின் மனதில் என்னவோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். முகம் ஒரு முறை திடீரெண்டு கறுத்துத் தெளிந்தது ”செல்லத்துரை, நான் துணைப் படைப் பயிற்சிக்கு வர மறுத்ததை வைச்சு நீ குத்திக் காட் டுறாய்?”

செல்லத்துரையர் மெல்லச் சிரித்தார், “பயந்தாலும், பயப்பிடாட் டியும் எதிரி தாற தொல்லை, தொல்லை தானே. ஆனால் நாங் களும் எங்கடை பிள்ளையளோடை கூட நிண்டால் பெலம் கூடின மாதிரியல்லே!”

“எனக்கேதேனும் நடந்தால் என்ரை பிள்ளை குட்டியை நீ பார்ப் பியே?”, முருகேசு சற்று ஆத்திரமாய்க் கேட்டார்.

செல்லத்துரையர் மெல்லிய புன்னகையுடன் கூறினார். “இப்ப பிள்ளை குட்டியளெல்லே எங்களைப் பார்க்குதுகள். அதுகள் இல்லாட்டில் முந்தின காலம் மாதிரி ஜீப்பைக் கண்டிட்டு ஓட வேண்டியது தான்.”

முருகேசுவுக்கோ செல்லத்துரையரின் ஒவ்வொரு வார்த்தை களும் தன்னைக் கிண்டல் செய்வது போலவே தோன்றியது. மெல்ல அவர் முகத்தில் கோபத்தின் சாயை படர்ந்தது.

“இன்னும் ஒரு மூண்டு மாதம் போகட்டும் உன்னோடை வாறனோ இல்லையோ பார்?”

“ஏன் இப்ப காலம் கூடாதே?”

“என்ரை மூத்தவளுக்கு இப்ப ஏழுமாதம். பேரப்பிள்ளையை ஒருக்கால் தூக்கிக் கொஞ்சிப் போட்டு... பிறகு பாரன்.”

இவை வெறும் ரோஷத்தில் பிறந்த வார்த்தைகள் என்பது செல் லத்துரையருக்கு விளங்கும். ஆனால் அவர் மேற்கொண்டு எதுவுமே பேசவில்லை.

மாலை மங்கி இருள் பரவத் தொடங்கியது. வானத்தில் பறந்த பறவைகளின் ஓசைகள் அடங்கிவிட்டன. ஏதோ ஒரு பயங் கரத்தை எதிர்பார்ப்பது போல் வௌவால்கள் பறந்து மரக் கிளைகளில் மோதிச் சடசடத்துக் கொண்டிருந்தன. சூழல் இருளுள் கறுத்துக் கிடந்தது.

செல்லத்துரையரும் அவரது குழுவினரும், கண்களால் கரிய இருளைத் துழாவியவாறு காவற்கடமைகளில் ஈடுபட்டிருந் தனர்.

இப்பொழுதெல்லாம் செல்லத் துரையர் சுருட்டுப் பிடிப்பதில்லை. கள்ளுக் கொட்டிலில் மணிக்கணக்காகக் குந்தியிருந்து அரசியல் வியாக்கியானம் செய்வதைக் கூட விட்டுவிட்டார். முருகேசு கூட அவருடன் சகல விஷயங்களிலும் ஒத்துப்போகக் கூடிய நண்பர் தான். ஆனால் இந்தத் துணைப்படையில் இணைவதைப் பற்றிக் கதைத்தால் மெல்ல அவ்விடத்தை விட்டு கழன்று விடுவார்.

“முருகேசு. நல்லவன் ஆனால் பயந்தாங்கொள்ளி.” இப்படி அவர் மனம் அசை போட்டது.

* * *

அன்று மிளகாய்க் கன்றுக்குப் பசளை போட்ட அலுப்பில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த முருகேசு அண்மையில் எங்கோ விழுந்து வெடித்த ஷெல் சத்தத்தினால் திடுக்கிட்டு விழித்தார்.

அவருக்கு முன்னாலேயே விழித்துப் பரபரத்துக் கொண்டு நின்ற மனைவி மனோன்மணி “ஆமி வெளிக்கிட்டிட்டாங்கள் போலை கிடக்குது.” என்றாள் பயத்துடன்.

முன் தெருவால் சனங்கள் கையில் கிடைத்ததை மட்டும் எடுத் துக் கொண்டு அவசர அவசரமாக ஓடிக்கொண்டிருந்தனர். சமீபத்துக் கொண்டிருந்த ஷெல் சத்தங்களும், வெடியோசை களும் அவர்கள் ஓட்டத்தைத் துரிதப்படுத்தின.

“வா! வா! நாங்களும் போவம்” முருகேசு பதட்டத்துடன் மனை வியைத் துரிதப்படுத்தினார்.

அவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிய ஓட்டம் அடுத்த ஊர்ப்பாடசாலை வளவுக்குள் கால் வைத்த பிறகு தான்

நின்றது. பாடசாலை ஏற்கனவே இடம் பெயர்ந்தவர்களால் நிரம்பி வழிந்தது.

“மனோன்மணி! பிள்ளையும் மருமோனும் என்னபாடோ தெரியயில்லை” அப்பொழுது தான் அவர் மனதில் மகளின் வயிற்றில் வளரும் தனது பேரப்பிள்ளையின் நினைவு தோன்றியது.

“ஒருக்கால் சனத்துக்கை பாருங்கோ எங்களுக்கு முன்னாலை வந்தினமோ தெரியேல்லை” மனோன்மணியின் வார்த்தைகளில் ஒரு நம்பிக்கை இளையோடினாலும், நெஞ்சுக்குள் ஒரு நடுக்கம் இல்லாமல் இல்லை.

முதுரைமரக் கொப்புகளைக் கீழே தள்ளி விட்டு எட்டிப்பார்த்த பின்னிலவின் மங்கிய வெளிச்சத்தில் மகளையும், மருமகளையும் தேடிய முருகேசருக்குக் கவலைப்பட்டுக் குழம்புவதைத் தவிர வேறு வழியே இருக்கவில்லை. அவர்களைக் கண்டதாகச் சொல்லும் ஒரு மனிதஜீவன் கூட அந்தப் பெரிய கூட்டத்தில் இருக்கவில்லை.

கிழக்கு மெல்ல மெல்ல வெளிக்கின்ற அந்த நேரத்தில் தான் வெடிச் சத்தங்கள் ஒருவாறு ஓய்ந்தன .

நித்திரையின்மையால் சோர்ந்திருந்த கண்களை விட மூருகேசுவின் மனம் கூடுதலாகத் தொய்ந்து போயிருந்தது. “மனோன்மணி, நான் ஒருக்கால் போய்ப்பார்த்துக் கொண்டு. வரட்டே?”

“இப்பதானே வெடிச்சத்தம் நிண்டிருக்கிது. கொஞ்சம் பொறுத்துப் போங்கோ!”

நடப்பது நடக்கட்டும் என்ற நினைவு எழும்பவே முருகேசு மனைவியிடம் எதுவும் சொல்லாமலே பாட சாலையை விட்டு வெளியே வந்தார் மனோன்மணியின் பிள்ளைப்பாசம், தடுக்க வேண்டும் என்று எழுந்த உணர்வை அப்படியே அமுக்கிவிட அவளும் அவர் போகும் பாதையைப் பார்த்தவாறே நின்று கொண்டிருந்தாள்.

* * *

குழம்பிய மனதுடன் தெருவால் நடந்து கொண்டிருந்த முருகேசுவின் கண்களில், தோளில் துவக்குகளுடன் சிலர் நடந்து வருவதைக் கண்டதும் நெஞ்சு ஒரு கணம் துணுக்குற்றது. சற்றுக் கூர்ந்து அவதானித்த பின்பு தான் அவர்கள் கட்டியிருப்பது சாரம் என்பதையும், முன்னால் வருவது செல்லத்துரையர் என்பதையும் அவரால் புரிந்து கொள்ளமுடிந்தது.

முருகேசு மெல்ல அவர்களை நெருங்கினார்.

“முருகேசு ! என்ன விடியக்காலமை ...?”

“அண்ணை! பிள்ளையையும் மருமோனையும் காணயில்லை”

“அவை பின்னாலை வருகினம்”. செல்லத்துரையர் வார்த்தைகள் முருகேசுவின் வயிற்றில் பாலை வார்த்தன் “ஆமி வெளிக்கிடயுக்கை அவையாலை இஞ்சாலை வர ஏலாமல் மாட்டுப்பட்டுப் போச்சினை. எங்கடை தம்பியவைகளையாமல் நிண்டு அடிபட்டு ஆமியைத் திருப்பிக் கலைச்சுப் போட்டினை! நாங்களும் தம்பியவையோடை பக்கத்திலை நிண்டு எல்லா உதவியும் செய்தனாங்கள்.”

செல்லத்துரையர் முகத்தில் பெருமிதம் தோன்றியது. தன்னுடைய மகளையும், மருமகளையும், பிறக்கப் போகும் பேரப்பிள்ளையும் காப்பாற்றிய அவர்களைக் கையெடுத்துக் கும்பிட வேணும் போன்ற ஒரு உணர்வு முருகேசர் மனதில் தோன்றியது.

செல்லத்துரையர் தொடர்ந்தார். “பேரப்பிள்ளையைக் கண்ட பிறகு தான் எங்களோடை வரப்போறனெண்டாய். தம்பியவையும், நாங்களும் இரவு ஆயுதமேந்தி அடிபட்டுத் திருப்பிக் கலையாட்டில் நீ எந்தப் பேரப்பிள்ளையைக் கொஞ்சியிருப்பாய்?”

முருகேசுவின் கண்களில் ஒரு புதிய ஒளி பிறந்தது. செல்லத்துரையரின், தோளில் கிடக்கும் துப்பாக்கியையும், தோளில் குறுக்காகத் நேசபாவத்துடன் பார்த்தார். அந்தத் தொங்கிய தோட்டாப் பட்டியையும் ஒரு வித துப்பாக்கி தன்னுடைய தோளில் ஏறுவதான ஒரு பிரமை தோன்றவே ஒடுங்கியிருந்த அவரது நெஞ்சு தானாகவே நிமிர்ந்தது.

-வெளிச்சம், பங்குனி 1993






**எமது தாய்நாடு விடுதலை பெறவேண்டும்; எம்மைப் பிணைத்திருக்கும் அடிமை விலங்குகள் உடைத்தெறியப்படவேண்டும்; எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமாக, பாதுகாப்பாக வாழவேண்டும்; இந்த இலட்சியம் ஈடேறவேண்டுமாயின் நாம் போராடித்தான் ஆகவேண்டும்; இரத்தம் சிந்தித்தான் ஆகவேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

# பார்சிலோனாவில் ட்ரம்ப் எதிர்ப்புக் கூட்டணி: அமெரிக்க ஆதிக்க எதிர்ப்பில் உலகத் தலைவர்கள்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா

23.04.2026

உலகின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க ட்ரம்ப் அரசை எதிர்க்கும் இடதுசாரித் தலைவர்கள் அண்மையில் ஸ்பெயின் நாட்டில் கூடினர். உலகளாவிய வலதுசாரி சக்திகளின் எழுச்சிக்கு மத்தியில், ட்ரம்ப் கொள்கைகளை மறைமுகமாகக் குறிவைத்தும், ஜனநாயகப் பின்னடைவு குறித்தும் இந்த உலகளாவிய முற்போக்கு மாநாடு எச்சரிக்கை விடுத்தது.

ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் (Pedro Sanchez) தலைமையில் பார்சிலோனா நகரில் உலக அளவிலான இடதுசாரித் தலைவர்கள் பங்கேற்ற முக்கிய உச்சி மாநாடொன்று (Global Progressive Mobilisation) கடந்த வாரம் சனிக்கிழமை ஏப்ரல் 18, 2026இல் நடைபெற்றது.

ஆரம்பத்தில் 'ஜனநாயகப் பாதுகாப்பு மாநாடு' (EN DEFENSA DE LA DEMOCRACIA) 2024 ஆம் ஆண்டில் சான்செஸ் மற்றும் பிரேசில் அதிபர் லூலாவால் உருவாக்கப்பட்டது. இந்த ஆண்டு அதன் நான்காவது அமர்வு நடைபெற்றது. சர்வாதிகார ஆட்சிகளுக்கு எதிரான, அமெரிக்கா தலைமையிலான ஒரு மேற்கத்தியக் கூட்டணியை அதன் பெயர் குறிப்பிடுகிற போதிலும், அது உண்மையில் முற்போக்கு மற்றும் இடதுசாரி அரசாங்கங்களின் ஓர் ஆலோசனைக் குழுவாகும். அது ஒத்துழைப்பை வலுப்படுத்த முயலும் அதே வேளையில், சமத்துவமின்மையைக் குறைத்தல், பன்முகத்தன்மை, பல்வகைத்தன்மை மற்றும் வன்முறையின்மை போன்ற முற்போக்கான செயல்திட்டங்களைப் பற்றி விவாதித்து வருகிறது.

## ஸ்பெயின் பிரதமரின் ராஜதந்திரம்

2024 ஆம் ஆண்டு ஸ்பெயினும் பிரேசிலும் இணைந்து தொடங்கிய இந்த மாநாட்டு முயற்சியின் நான்காவது சந்திப்பு இதுவாகும். கொலம்பியா ஜனாதிபதி குஸ்டாவோ பெட்ரோ (Gustavo Petro), மெக்சிகோ நாட்டின் தலைவி கிளாடியா ஷெய்ன்பாம் (Claudia Sheinbaum) உள்ளிட்ட பல முக்கியத் தலைவர்கள் இதில் பங்கேற்றனர்.

ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ஐரோப்பிய அரசியலில் தற்போது முக்கிய தலைவராக உருவெடுத்து வருகிறார். அவர் சீனாவுக்கு மூன்று நாள் உத்தியோகபூர்வப் பயணத்தை மேற்கொண்டு, ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் சீனாவுக்கும் இடையே நெருக்கமான வர்த்தக மற்றும் ராஜதந்திர உறவு வேண்டும் எனப் பகிரங்கமாகக் குரல் கொடுத்து விட்டுத் திரும்பிய உடனேயே இந்த மாநாட்டை அவர் கூட்டியுள்ளார். இதன் மூலம், ஐரோப்பாவில் அமெரிக்காவையும் ட்ரம்பையும் மிகக் கடுமையாக எதிர்க்கும் முதன்மைத் தலைவராகத் தன்னை அவர் நிலைநிறுத்தியுள்ளார்.

இந்த நிகழ்வை வெற்றிகரமாக ஏற்பாடு செய்த ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ட்ரம்பை மிகவும் வெளிப்படையாக எதிர்க்கும் ஐரோப்பாவின் தேசியத் தலைவர்களில் ஒருவராவார். 2023 இஸ்ரேல்-ஹமாஸ் போரிலிருந்து சமீபத்திய அமெரிக்க-இஸ்ரேல்-ஈரான் மோதல் வரை, அவர் தொடர்ந்து அமெரிக்க மற்றும் இஸ்ரேல் எதிர்ப்பு நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருகிறார்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் ஈரான் மீதான அமெரிக்க-இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்களுக்குப் பிறகு, ஸ்பெயினில் உள்ள இரண்டு அமெரிக்க கூட்டுத் தளங்களைப் பயன்படுத்த அவர் தடை விதித்தார். மேலும், அமெரிக்க இராணுவ விமானங்கள் ஸ்பானிய வான்வெளியைக் கடந்து செல்வதற்கு முன்னெச்சரிக்கையாகத் தடை விதித்தார். இது ட்ரம்பிடம் இருந்து கடுமையான எதிர்ப்பைத் தூண்டியது.

தற்போது உலகளாவிய இடதுசாரிகளின் மையப் புள்ளியாக சான்செஸ் உருவெடுத்ததற்கு அவரது அனுபவமிக்க அரசியல் திறன்களே காரணமாகும். ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் 2018இல் பதவியேற்றதிலிருந்து நாடாளுமன்றத்தில் சிறுபான்மையினராக இருந்த போதிலும், தீவிர இடதுசாரியான பொடெமோஸ் கட்சியுடனான கூட்டணிகள் உட்பட, நெகிழ்வான மற்றும் நுட்பமான கூட்டணி நிர்வாகத்தின் மூலம் எட்டு ஆண்டுகளாக அவர் ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளார்.

ஐரோப்பிய நாடாளுமன்றத்திற்குள் தீவிர வலதுசாரி சக்திகள் வேகமாக விரிவடைந்து வரும் நிலையிலும், இடதுசாரி கொள்கைகளை நிலைநிறுத்துவதன் மூலம் அவர் முற்போக்கு முகாமின் நம்பிக்கையைப் பெற்றுள்ளார். சர்வதேச அரங்கில் ஒரு "உலகளாவிய இடதுசாரித் தலைவர்" என்ற அந்தஸ்தைப் பெறுவதன் மூலம், அவர் தனது உள்நாட்டு அரசியல் நிலையை வலுப்படுத்தவும், அதே நேரத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தின் (EU) தலைமைப் பதவிக்குப் போட்டியிடவும் நோக்கம் கொண்டுள்ளார் என்று ஐரோப்பிய அரசியல் வட்டாரங்களில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

அத்துடன் அவர் சீனாவுக்கு மிகவும் ஆதரவான போக்குகளைக் கொண்ட மேற்கத்தியத் தலைவராகவும் சான்செஸ் மதிப்பிடப்படுகிறார். ஏப்ரல் 14ஆம் திகதி, அவர் சீனாவுக்குப் பயணம் மேற்கொண்டு, சீன அதிபர் ஷி ஜின்பிங்குடன் ஒரு உச்சிமாநாட்டை







நடத்தினார். கடந்த நான்கு ஆண்டுகளில் நான்கு முறை சீனாவுக்குப் பயணம் மேற்கொண்ட அவர், சீனாவிடம் பலதரப்பு ஒழுங்கைக் குலைப்பவர்களை எதிர்கொள்ள நாம் ஐ.நா.வை சீர்திருத்த வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். இந்தக் கூற்று, அமெரிக்காவின் ஒருதலைப்பட்சப் போக்கைக் கட்டுப்படுத்தவும், சீனாவால் பரிந்துரைக்கப்படும் பலமுனை அமைப்புக்கு ஆதரவளிக்கவும் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாகப் பொருள் கொள்ளப்படுகிறது.

**ஸ்பெயின் பிரதமர் பெட்ரோ சான்செஸ் ட்ரம்பை மிகவும் வெளிப்படையாக எதிர்க்கும் ஐரோப்பாவின் தேசியத் தலைவர்களில் ஒருவராவார். 2023 இஸ்ரேல்–ஹமாஸ் போரிலிருந்து சமீபத்திய அமெரிக்க–இஸ்ரேல்–ஈரான் மோதல் வரை, அவர் தொடர்ந்து அமெரிக்க மற்றும் இஸ்ரேல் எதிர்ப்பு நிலைப்பாடுகளை வெளிப்படுத்தி வருகிறார்.**

## ஜனநாயகத்தை பாதுகாக்கும் மாநாடு

உத்தியோகபூர்வமாக இது "ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கான மாநாடு" என அழைக்கப்பட்டாலும், அடிப்படையில் இது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தன்னிச்சையான கொள்கைகளுக்கு எதிரான ஒரு மாபெரும் எதிர்ப்புப் பிரசார கூட்டமாகவே அமைந்தது.

ட்ரம்ப் நிர்வாகம் இந்த ஆண்டின் தொடக்கத்தில் வெனிசுலா மற்றும் ஈரான் மீது நடத்திய தாக்குதல்களால் ஏற்பட்ட சர்வதேசக் குழப்பங்களுக்கு மத்தியில் இந்த மாநாடு நடைபெற்றது. இந்த நிகழ்வு ஒரு வலுவான "அமெரிக்க எதிர்ப்பு அணி" தன்மையைப் பெற்றுள்ளது என்ற மதிப்பீடுகளுக்கு வழிவகுத்துள்ளது. உண்மையில், கலந்துகொண்ட தலைவர்கள் பலருக்கு ட்ரம்புடன் கருத்து வேறுபாடுகள் பாரியளவில் உள்ளன.

குறிப்பாக கொலம்பியாவின் முதல் இடதுசாரி அதிபரான பெட்ரோ, ஐ.நா பொதுச் சபைக்காக நியூயார்க் சென்றிருந்த போது, அமெரிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றதால், அவரது அமெரிக்க விசா ரத்து செய்யப்பட்டு அவமானத்தைச் சந்தித்தார். தனது அரசியல் போட்டியாளரான முன்னாள் அதிபர் ஜெய்ர் போல்சனாரோவை நீதித்துறை கையாண்ட விதம் குறித்து லூலா ட்ரம்புடன் கடுமையாக மோதினார். அவரும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய கூட்டணி உருவாக்கம் :

இந்த மாநாடு வெறுமனே ஒரு சந்திப்பு மட்டுமல்ல. உலக அரங்கில் மாறிவரும் அரசியல் கூட்டணிகளின் வெளிப்பாடாகும். அமெரிக்காவின் தன்னிச்சையான முடிவுகள், மத்திய கிழக்குப் போர் விவகாரங்களில் ட்ரம்ப் தன்னிச்சையாக முடிவெடுப்பது, நேட்டோ (NATO) நாடுகளைப் "பயனற்றவர்கள்" எனத் தொடர்ந்து அவமதிப்பது, மற்றும் ஹார்முஸ் நீர்ச்சந்தியை முற்றுகையிடுவது போன்ற அண்மைய நடவடிக்கைகள் ஐரோப்பிய நாடுகளிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளன.

தொடரும் பொருளாதார அச்சுறுத்தலாக, சீனாவுடனான வர்த்




தகப் போரில், ஐம்பது சதவீத சுங்கவரி விதிப்பேன் என ட்ரம்ப் அச்சுறுத்தி வருவது உலகப் பொருளாதாரத்தைப் பாதிக்கும் என இந்த இடதுசாரித் தலைவர்கள் கருதுகின்றனர்.

அமெரிக்காவின் உலகளாவிய ஆதிக்கத்தைக் குறைப்பதற்காக, ஐரோப்பிய நாடுகளையும் இலத்தீன் அமெரிக்க (Latin American) நாடுகளையும் ஒன்றிணைத்து ஒரு புதிய மாற்றுச் சக்தியை உருவாக்கும் முயற்சியாகவே, புதிய கூட்டணி உருவாக்கம் போல இந்த ராஜதந்திர நகர்வு பார்க்கப்படுகிறது.

## ஸ்பெயினில் ட்ரம்ப் எதிர்ப்பலை:

ஸ்பெயினில் ட்ரம்ப் எதிர்ப்பு கூட்டணி என்பது, டொனால்ட் ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிரான சர்வதேச அரசியல் தலைவர்களால் முன்னெடுக்கப்பட்டது. முக்கியமாக ஈரானுக்கு எதிரான போரில் ஸ்பெயினின் இராணுவத் தளங்களைப் பயன்படுத்த ட்ரம்ப் நிர்வாகம் அனுமதி கோரியபோது, ஸ்பெயின் அதை மறுத்ததால் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டது.

இதனால் ஸ்பெயின் நாட்டுடனான வர்த்தகத்தை அமெரிக்கா துண்டிப்பதாக அச்சுறுத்தியது. அதேவேளை ட்ரம்பின் சர்வாதிகாரப் போக்கு, குடியேற்றக் கொள்கைகள் மற்றும் போர்க் கொள்கைகளுக்கு எதிராக ஸ்பெயின் உட்பட ஐரோப்பிய நகரங்களில் போராட்டங்கள் பல நடத்தப்பட்டன.

ஐரோப்பாவில் இந்த எதிர்ப்பு, ட்ரம்ப்பின் கொள்கைகளை நிராகரிக்கும் பல்வேறு சர்வதேச அரசியல் தலைவர்களின் கூட்டணியாக செயல்படுகிறது. இந்தச் சூழலில், ஸ்பெயின் அரசு மற்றும் மக்கள் ட்ரம்பின் கொள்கைகளுக்கு எதிரான நிலைப்பாட்டை தீவிரமாக வெளிப்படுத்தி வருகின்றனர்.





## கொதித்தெழுந்த பிரேசில் ஜனாதிபதி

ட்ரம்பின் மிரட்டல்களுக்கு எதிராகக் கொதித்தெழுந்த பிரேசில் ஜனாதிபதியின் உரையும் மிக முக்கியமானதாக பார்க்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா (Luiz Inacio Lula da Silva) மிகக் கடுமையான வார்த்தைகளால் அமெரிக்காவை விமர்சித்தார்.

டிரம்பின் பெயரைக் நேரடியாகக் குறிப்பிடாமல் அவர் ஆவெசமாக பேசினார். உலகை அச்சுறுத்தும் ஒரு ஜனாதிபதியின் வலைத்தளப் பதிவுக்காகக் (Tweet) காத்திருந்து, ஒவ்வொரு நாளையும் நாம் அச்சத்துடனேயே தொடங்கவோ முடிக்கவோ முடியாது. ஒரு நாடு எவ்வளவு பெரிய வல்லரசாக இருந்தாலும் சரி, மற்ற இறைமையுள்ள நாடுகள் மீது தனது சொந்த விதிகளைத் தொடர்ந்து திணிக்க எந்தவொரு நாட்டு ஜனாதிபதிக்கும் உரிமையில்லை என்று அவர் தெரிவித்தார்.



# அன்சாக் தின கலப்போலி தரையிறக்கத் தோல்வி: குழந்தைப் போர் வீரர் அலக் காம்ப்பெலின் தியாகம்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா–

24.04.2026

போரின் கொடுமை எவ்வாறு இருக்கும் என்பதை அன்றைய அவுஸ்திரேலிய பொது மக்கள் உணர்ந்து உள்ளார்கள் என்பதன் சாட்சிய வெளிப்பாடே 'அன்சாக்' (ANZAC) தினம் எனலாம். துருக்கியின் கலப்போலியில் (Gallipoli) தோல்வி அடைந்த தரையிறக்கத்தின் எட்டு மாதப் போரின் தொடக்க நாளான 1915 ஏப்ரல் 25ஆம் நாள் அவுஸ்திரேலிய தினத்தைப் போன்றே அவுஸ்திரேலியர்களுக்கு முக்கியமான மற்றொரு தினமாகும்.

தற்போது ANZAC தினமாக அனுஷ்டிக்கப்படும் ஏப்ரல் 25இல் தொடங்கிய கலப்போலி தரையிறக்க போரில் 26,000 அவுஸ்திரேலிய வீரர்கள் உயிரிழந்தனர். இதில் 8,000 பேர் காயங்கள் அல்லது நோயால் இறந்தனர்.

### கலப்போலி தரையிறக்க தோல்வி:

கலப்போலியைக் கைப்பற்றும் முயற்சி தோல்வியைத் தழுவினாலும், இப்போர்க்காலம் அவுஸ்திரேலிய நியூசிலாந்து வீரர்களின் வீரத்தையும் தியாகத்தையும், இந்நாட்டு மக்களின் ஒருமைப்பாட்டையும் வெளிக்கொணர்ந்த காலமாக அறியப்படுகிறது. அதேவேளை கலப்போலி தீபகற்பத்தில் போரிட்ட மக்களின் வீரமும் தியாகமும் காவியமாக உருவெடுத்தது என்றும் கூறலாம்.

"அன்சாக்" என்ற சொல் அவுஸ்திரேலிய வாழ்வியலின் ஒரு பகுதியாக மாறிவிட்டது. முதலாம் உலகப்போரில் பங்கேற்ற மற்றும் உயிர்நீத்தப் படைவீரர்களின் நினைவாக, போர்வீரர் நினைவு தினத்தை இரு நாடுகளிலும் ஆண்டு தோறும் ஏப்ரல் 25 ஆம் நாள் ANZAC தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.

கலப்போலி தரையிறக்கங்கள் முதன்முதலில் 1916 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, இங்கிலாந்து மற்றும் எகிப்து துருப்புக்களால் நினைவுகூரப்பட்டன. அந்த ஆண்டில் தான் ஏப்ரல் 25ஆம் தேதிக்கு "அன்சாக் தினம்" என்று பெயரிடப்பட்டது. அப்போதிருந்து, ஏப்ரல் 25 அன்சாக் தினமாக அனுசரிக்கப்பட்டு வருகிறது.


போர் முடிவின் பின்னர் இந்நாள் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய இரு நாடுகளிலும் பெருமளவில் தேசிய ஒருமைப்பாட்டு அலையை உருவாக்கியது. அத்துடன் கலப்போலி போர் நினைவிடங்கள் பலவும் அமைக்கப்பட்டன. வீரர்களுக்கான நினைவேந்தல்கள் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டன.

1916 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் நாள் முதல் ANZAC தினம் அதிகார பூர்வமாக ஏட்டில் பதிவானதும் குறிப்பிடத்தக்கது. முதலாம் உலகப் போரின் பின்னர் 1920களில் அவுஸ்திரேலியா முழுவதும் "அன்சாக்" விழாக்கள் நடத்தப்பட்டன. அன்சாக் தினம் எல்லா மாநிலங்களில் பொது விடுமுறையாக அறிவிக்கப்பட்டது. மாநிலத் தலைநகரங்களில் முக்கிய போர் நினைவுச் சின்னங்கள் நிறுவப்பட்டன.

நாடு முழுவதும் உள்ள நகரங்களில், போர்களில் இறந்த இளைஞர்கள் மற்றும் பெண்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டன. போரில் அமைதி காக்கும் பணிகளில் பணியாற்றிய அனைவரையும், அவர்களின் தோழமை, சகிப்புத் தன்மை மற்றும் கடுமையான பகையை எதிர்கொண்டு எதிர்காலத்திற்காக தியாகம் செய்த அனைவரையும் கௌரவிக்கும் நாளாக "அன்சாக் தினம்" இப்போது அவுஸ்திரேலியாவில் கொண்டாடப்படுகிறது.


போரின் பல்வேறு அர்த்தங்களை பிரதிபலிக்கும் ஒரு நாளாக "அன்சாக் தினம்" அவுஸ்திரேலியாவிலும், உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது. மோதல்களில் போராடிய வீரர்கள் மற்றும் வீரர்கள், ஒன்றாகப் போராடிய நாடுகளைச் சேர்ந்த முன்னாள் இராணுவ வீரர்கள், அமைதி காக்கும் படையினர் "அன்சாக் தின" அணிவகுப்புகளில் பெருமையுடன் அணிவகுத்து செல்வதை காணலாம்.

### முதல் உலகப்போரில் அவுஸ்திரேலியா:











**அவுஸ்திரேலியா – நியூசிலாந்து நாட்டு மக்களின் போர் நினைவு நாளே (ANZAC) அன்சாக் ஏப்ரல் 25ஆம் நாளாகும். இந்நாளில் கலப்போலி தரையிறக்க தோல்வி பற்றியும், குழந்தைப் போர்வீரர் அலக் காம்ப்பெலின் தியாகத்தையும் உலகம் மறந்துவிட்டது.**



முதல் உலகப் போரின் போது, நேச நாட்டு படைகளுக்கு ஆதரவாக, மத்தியத்தரைக்கடல் பயணப்படையின் ஒரு அங்கமாக அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து போர்வீரர் படைக் குழாம் உருவாக்கப்பட்டது.

ANZAC படைக்குழாம் உருவாக்கப்பட்டதன் நோக்கம், கூட்டுப் படைகளின் போர்க்கப்பல்கள் கருங்கடல் வழியே துருக்கியின் தலைநகரான இஸ்தான்புல்லை கைப்பற்ற ஏதுவாக கலப்போலி (Gallipoli) தீபகற்பத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதாகும்.

1914 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் எகிப்தில் உருவாக்கப்பட்ட இப்படையில் இங்கிலாந்து, இந்தியா மற்றும் இலங்கை வீரர்களும் இருந்தனர் என அறியப்படுகிறது.

சுமார் எட்டு மாதங்கள் நீடித்த போரில் இரு தரப்பிலும் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டது. சுமார் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் பேர் கொல்லப்பட்டனர். அவர்களுள் 8700 அவுஸ்திரேலிய வீரர்களும் 2800 நியூசிலாந்து வீரர்களும் இறந்தனர். காயமுற்ற இரண்டு இலட்சத்து அறுபத்திரண்டாயிரம் வீரர்களுள் இருபத்தைந்தாயிரம் பேர் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தைச் சேர்ந்த போர்வீரர்கள். அதேவேளை முதலாம் உலகப் போரில் உயிர்நீத்த அவுஸ்திரேலிய வீரர்களின் எண்ணிக்கையோ சுமார் 66,000 ஆகும்.

அவுஸ்திரேலிய நாட்டின் அமைதிக்காகவும், சமாதானத்திற்காகவும் ஏராளமான அவுஸ்திரேலிய இளைஞர்கள் அன்று தங்களைப் போராட்டத்தில் இணைத்துக் கொள்வதில் முண்டியடித்து ஆர்வம் காட்டினார்கள் என வரலாற்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமது நாட்டு மக்களுக்காகப் போராடுவதற்காக அந்த இளைஞர்கள் காட்டிய கடமை உணர்ச்சியை விளக்குவதற்கு ஒரு வரலாற்றுச் சம்பவமே (Child Soldier) குழந்தைப் போர் வீரனான (Alec Campbell) அலக் காம்ப்பெலின் வாழ்வாகும்.


### குழந்தைப் போர் வீரனான அலக் காம்ப்பெல்:

அக்காலகட்டத்தில் அவுஸ்திரேலிய நாட்டிலிருந்து சுமார் 324,000 இளைஞர்கள் தம்மை இந்த போராட்டத்தோடு இணைத்துக் கொண்டார்கள். அவர்களில் 66,000க்கு மேற்பட்ட இளைஞர்கள் போரில் மடிந்து மாவீரர்களானார்கள் என்பதை யாரும் மறக்க முடியாது.


Alec William Campbell (1899 - 2002)

1915ஆம் ஆண்டில் அலக் காம்ப்பெல் (Alec Campbell) என்கின்ற அவுஸ்திரேலியச் சிறுவனுக்கு அப்போது பதினாறு வயது தான் ஆகியிருந்தது. இராணுவத்தில் சேர்வதென்றால் இருபத்தியொரு வயதிற்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். அதற்கும் இளையவராக இருந்தால் பதினெட்டு வயதிற்கும் இருபத்தியொரு வயதிற்கு உட்பட்டவர்கள் தமது பெற்றோரின் சம்மதத்துடன்தான் இராணுவத்தில் சேர்ந்து கொள்ளலாம் என்ற சட்டம் அப்போது அவுஸ்திரேலியாவில் இருந்தது.

ஆனால் அலக் காம்ப்பெலுக்கோ 16 வயதுதான் ஆகியிருந்தது. தன்னுடைய வயது 18 ஆண்டுகள் 4 மாதங்கள் என்ற பச்சைப் பொய் ஒன்றைச் சொன்னார். தான் போர்ச் சண்டையில் இணைவதற்கும் பெற்றோர்கள் சம்மதித்து அளித்த கடிதத்தையும் இராணுவ அதிகாரிகளிடம் அவர் கையளித்து தன் தேசத்து மக்களுக்காக,ஒரு போர் வீரனாகத் தன்னை படையில் இணைத்துக் கொண்டார்.




## குழந்தைப் போர்வீரரின் தியாகம்:

குழந்தைப் போர்வீரன் (Child Soldier) என்று அழைக்கப்பட்ட திரு அலக் காம்ப்பெல் 2002ஆம் ஆண்டு மே மாதம் 16ஆம் திகதி இறந்தபோது அவருக்கு வயது 103. அச்செய்தியால் அவுஸ்திரேலியக் கண்டம் முழுவதும் அவுஸ்திரேலியத் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறந்தது. சகல தொலைக்காட்சிகளும், செய்திப் பத்திரிகைகளும் தங்களுடைய மரியாதையை அந்தக் குழந்தைப் போர்வீரனுக்கு அர்ப்பணித்தன. பூரண அரசாங்க மரியாதைகயோடு அவருடைய இறுதி ஊர்வலத்தை நடாத்தியதன் மூலம் இத்தேசம் தனது நன்றிக் கடனைச் செலுத்தியது.

தற்போதய காலத்தில் ANZAC தினம் கொண்டாடப்படுகின்ற வேளையில் அலக் காம்பெலின் நாட்டுப்பற்றை அவுஸ்திரேலிய தேசம் மதித்துத் தலை வணங்குகின்றது. அந்தக் குழந்தைப் போர் வீரனைத் தனது தேசியச் சொத்தாக அவுஸ்திரேலிய தேசம் போற்றியதும் உண்மையே. அந்தக் குழந்தைப் போர் வீரனின் அர்ப்பணிப்பை ஒரு தேசியத்தின் கடமையாக, நாட்டுப்பற்றாக, தியாகமாக, அவுஸ்திரேலிய நாடும் மக்களும் மதித்துப் போற்றுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

துருக்கி கலப்போலியில் கால் வைத்த 1915 ஆம் ஆண்டு ஏப்ரல் 25 ஆம் நாளான முதல் நாளே இரு தரப்பிலும் பெரும் உயிரிழப்புகள் ஏற்பட்ட துயரத்தை எடுத்தியம்பும் ஏப்பிரல் மாதத்து 25ஆம் திகதியானது அவுஸ்திரேலியா - நியூஸிலாந்து நாட்டு மக்களுக்கு மிகவும் முக்கியமான தினமாகும்.



1914-1918 ஆண்டுக் காலப்பகுதிகளில் நடைபெற்ற போரில் கலந்து கொண்ட இந்நாடுகளின் போர்வீரர்களின் நினைவாக இந்த இரண்டு நாடுகளின் பெயர்களில் உள்ள முதல் எழுத்துக்களையும் இராணுவ அணியினைக் குறிக்கும் முதல் எழுத்துக்களையும் சேர்த்து 'ANZAC தினம்' என்று அவுஸ்திரேலிய-நியூஸிலாந்து மக்கள் தங்கள் தேசத்துப் போர் வீரர்களைக் கௌரவிக்கும் ஏப்பிரல் 25 நாள் துயரத்தையும் தியாகத்தையும் வெளிப்படுத்துகிறது.

## போர் வீரர் அணிவகுப்புகள்:

போரின் முடிவின் பின்னர் கலப்போலி போரிலிருந்து திரும்பிய வீரர்கள் அணிவகுப்புகளில் பங்கேற்றனர். காயமுற்ற வீரர்கள் இயலாத நிலையிலும் மருத்துவ உபகரணங்களோடும் அணிவகுப்பில் கலந்துகொண்ட காட்சி மனதை நெருடும்.

இன்றைய நாளில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளில் போர் வீரர்களின் அணிவகுப்புகள் நடைபெறும். தற்போது போர் நினைவிடங்களிலும் போர்வீரர்களின் கல்லறைகளிலும் மலர்களும் மலர்வளையங்களும் வைக்கப்படுகின்றன. உயிர்நீத்த போர்வீரர்கள் பெருமையோடு நினைவுகூரப்படும் இந்நாளில் அவர்கள் செய்த தியாகத்தை இந்நாடு ஒருபோதும் மறவாது.



# ஆனையிறவு வெற்றிச் சமரின்
# 26ஆம் ஆண்டு நினைவு நாள் – 22.4.2026

22.04.2026

***தமிழீழ விடுதலைப்புலிகளால் ஆனையிறவு தளம் வெற்றி கொள்ளப்பட்டதன் 26 ஆம் ஆண்டு நிறைவு நாள். 22.04. 2000 ஆம் ஆண்டு இதேநாள் ஆனையிறவு பாரிய படைத் தளம் தமிழீழ விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்டிருந்தது.***

சிறீலங்கா அரசதரப்பால் மட்டுமன்றி உலக இராணுவ வல்லுநர்களாலும் “வீழ்த்தப்பட முடியாத தளம்” என்று கருதப்பட்டதே ஆனையிறவு இராணுவப் படைத்தளம். அதேநேரம் அத்தளம் விடுதலைப்புலிகளால் தாக்குதலுக்குள்ளாகுமென்று அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டே வந்தது. 1999இன் நடுப்பகுதியில் அப்போதைய இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க ‘புலிகள் ஆனையிறவைத் தாக்குவார்களென்பது எமக்குத் தெரியும். நாங்கள் சகல ஆயத்தங்களுடனுமே இருக்கிறோம்’ என்று ஓர் ஊடகத்துக்குச் சொன்னார். ஆனையிறவு மீதான புலிகளின் தாக்குதல் எல்லோராலும் எதிர்பார்க்கப்பட்டாலும், அது வீழ்த்தப்பட முடியாத தளமாகவே கருதப்பட்டது. வெளிநாட்டு இராணுவ வல்லுநர்களும் அதைச் சொல்லியிருந்தனர்.

1760 ஆம் ஆண்டளவில் ஒல்லாந்தரால் Bascula என்று பெயரிடப்பட்டுக் கட்டப்பட்ட ஒரு காவற்கோட்டையே அதன்பின் ஆள் மாறி ஆள்மாறி இறுதியாகச் சிங்கள இராணுவத்திடம் வந்து சேர்ந்த ஆனையிறவுப் படைத்தளமாகும். ‘ஆனையிறவு’ என்பதற்கான சரியான பெயர்க்காரணம் எனக்குத் தெரியவில்லை. யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு செல்லப்படும் யானைகள் இரவில் தங்கவைக்கப்படும் இடமாக அது இருந்ததே அப்பெயருக்குக் காரணம் என்று பரவலாகச் சொல்லப்படுவதுண்டு.

ஆனையிறவுப் படைத்தளம் தமிழரின் வாழ்வில் நீங்காத வடு. யாழ்ப்பாணத்திலிருந்து ஏனையபகுதிகளுக்குச் செல்ல இருந்த பாதைகள் இரண்டு. பூநகரி வழியான பாதையொன்று, ஆனையிறவு வழியான பாதை மற்றொன்று. இவற்றில் பூநகரிப் பாதை, மன்னார் மாவட்டத்துக்கான போக்குவரத்துக்காகப் பயன்பட்டது. ஏனையவற்றுக்கு ஆனையிறவுதான் ஒரேபாதை. அதிலிருந்த இராணுவ முகாமில் சோதனைகள் நடக்கும். காரியங்கள் நடக்கும். அந்தக் கொழுத்தும் வெயிலில் செருப்பைத் தலையில் வைத்துக்கொண்டு நடக்கவிடுவார்கள். பலர் பிடிபட்டுக் காணாமலே போய்விட்டார்கள்.

அதுவொரு சித்திரவதைக் கூடமாகவும் இருந்ததாக மூத்தோர் பலர் சொல்லக் கேள்விப்பட்டுள்ளோம். அப்பாதையால் போய் வந்த தமிழர் பலருக்கு நடுக்கத்தைத் தரும் ஓரிடமாக அது இருந்தது. ஈழப்போராட்டம் முனைப்புற்ற பின் இத்தளம் தன் கோர முகத்தை அவ்வப்போது காட்டியது. சில முன்னேற்ற நடவடிக்கைளின் மூலம் அத்தளம் விரிவடைந்து பருத்தது. இத்தளம் மீது புலிகள் பலமுறை தாக்குதல் தொடுத்துள்ளார்கள். ஆனால் எல்லாம் கைகூடிவந்தது 2000 இல்தான்.

1990 இல் இரண்டாம் கட்ட ஈழப்போர் தொடங்கியதும் யாழ் குடாநாட்டுக்கான வெளியுலகத் தொடர்புகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டன. இருந்த பாதைகளான ஆனையிறவும், பூநகரியும் மூடப்பட்டன. கொம்படி – ஊரியான் பாதை எனச் சொல்லப்பட்ட ஒரு பாதைவழியே ஏறத்தாழ 5 மைல்கள் நீருக்குள்ளால் செல்லும் பாதைவழியே பயணம் செய்தனர் மக்கள்.

உப்புவெட்டையையே பெரும்பகுதியாகக் கொண்ட இத்தளம் மீது 1991 நடுப்பகுதியில் “ஆகாயக் கடல் வெளிச் சமர்” என்ற பெயரிட்டு பாரியதொரு தாக்குதலைத் தொடுத்தனர் புலிகள். பெயரிட்டு நடத்தப்பட்ட முதலாவது தாக்குதல் இது. ஒரு மாதத்துக்கும் மேலாக நடந்தது இத்தாக்குதல். சில முகாம்கள் புலிகளிடம் வீழ்ந்தபோதும் ஆனையிறவு முற்றாக விழவில்லை. இத்தாக்குதல் நடத்தப்பட்டபோது அதைக் காக்கும் முகமாக கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் பாரிய தரையிறக்கத்தைச் செய்தது அரசபடை. அதன்மூலம் ஆனையிறவைத் தக்க வைத்துக்கொண்டது இராணுவம். அச்சமரில் புலிகள் கடுமையான இழப்பைச் சந்தித்தனர். ஏறத்தாழ 600 வரையானவர்கள் புலிகள் தரப்பில் சாவடைந்திருந்தனர்.

அத்தாக்குதலின்பின் வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு உட்பட பெரும் பகுதியைக்கொண்டு வீங்கியிருந்தது இப்படைத்தளம். மேலும் இயக்கச்சிவரை முன்னேறி தன்னை விரித்துக் கொண்டது இராணுவம். இதிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி “யாழ்தேவி” என்ற பெயரில் முன்னேறிய நடவடிக்கையை முறியடித்தனர் புலிகள். இப்போது கிழாலிக் கடல்வழிப்பாதை மட்டுமே யாழ்ப்பாண மக்களுக்கு இருந்தது. கிளாலிக்கடலிலும் பல படுகெலைகளைச் செய்தது சிங்களக் கடற்படை.

யாழ்.குடாநாடு முற்றாக இராணுவ வசம் வந்தபின் போராட்டம் வன்னியை மையமாக வைத்து நடத்தப்பட்டது. இராணுவம் பரந்தன், கிளிநொச்சி என இடங்களைப் பிடித்து, ஆனையிறவை மையமாகக் கொண்ட பெரியதொரு இராணுவ வலையத்தை ஏற்படுத்திக்கொண்டது. இந்நிலையில் 09.01.1997 அன்று ஆனையிறவு மீது பெரியதொரு தாக்குதல் நடத்தப்பட்டது. 11 ஆட்லறிகள் அழிக்கப்பட்ட போதும் ஆனையிறவு முற்றாகக் கைப்பற்றப்படாத நிலையில் தாக்குதலணிகள் திரும்பின. பின் 27.09.1998 அன்று கிளிநொச்சி நகரை மீட்டெடுத்தனர் புலிகள்.

இந்நிலையில் ஆனையிறவை முற்றாகக் கைப்பற்றும் காலமும் வந்தது. ஆனையிறவின் மீதான தாக்குதல் நேரடியாக நடத்தப்பட்டதன்று. அது பலபடிமுறையான நகர்வுகளின் தொகுப்பு.





11.12.1999 அன்று ஆனையிறவைப் பிடிக்கத் தொடங்கப்பட்டதிலிருந்து 20.04.2000 இல் இறுதித்தாக்குதல் நடத்தப்படும் வரை, நான்கு மாதங்களுக்கும் மேலாக அனையிறவு மீது புலிகள் கைவைக்கவேயில்லை.

***ஓயாத அலைகள் -3 இன் முதல் இரு கட்டங்களும் வன்னியின் தெற்கு மேற்குப் பகுதிகளை மீட்டெடுத்தபின் ஆனையிறவு மீதான கவனம் குவிந்தது. அடுத்தது ஆனையிறவுதான் என்று எல்லோருமே நம்பிய நிலையில், 11.12.1999 அன்று கட்டைக் காட்டு – வெற்றிலைக்கேணி தளங்கள் மீது ஓயாத அலைகள் – 3 இன் மூன்றாம் கட்டத் தாக்குதல் தொடங்கப்பட்டது. இப்பகுதி ஆனையிறவிலிருந்து கிழக்குப்பக்கமாக உள்ள கடற்கரைப் பகுதி. 1991 இல் ஆனையிறவு மேல் தாக்குதல் நடத்தப்பட்ட போது இராணுவத்தினர் தரையிறக்கச் செய்யப்பட்ட பகுதிதான் இது. அத்தளங்கள் கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து, தொடர்ந் தும் கடற்கரை வழியாக சில இடங்களைக் கைப்பற்றிக்கொண் டனர் புலிகள். அப்போதுகூட ஆனையிறவு வீழ்ந்துவிடுமென்று இராணுவம் நம்பவில்லை.***




பின் கண்டிவீதியில் ஆனையிறவுக்குத் தெற்குப்புறமாக இருந்த பரந்தன் தளங்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. இது முக்கியமானதொரு தாக்குதல். அதுவரை பெரும்பாலும் இரவுநேரத் தாக்குதல்களையே நடத்திவந்தனர் புலிகள். முதன்முதலாக பகலில் வலிந்த தாக்குதலொன்றைச் செய்தனர் புலிகள். அதுவும் எதிரிக்குத் தெரிவித்துவிட்டு நடத்தப்பட்ட தாக்குதல். ஒரு நாள் மதியம் இரண்டு மணிக்கு பரந்தன் தளங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அத்தாக்குதலுக்கு முன் புலிகளின் தளபதி பிரிகேடியர் தீபன், இராணுவத்தின் பரந்தன் கட்டளைத் தளபதியோடு வானொலித் தொலைத்தொடர்பு வழி கதைத்தபோது ‘முடிந்தால் தாக்குதல் நடத்தி பரந்தனைப் பிடியுங்கள் பார்ப்போம். எங்களை ஒட்டுசுட்டான் இராணுவம் என்று நினைக்க வேண்டாம்’ என்று தீபனுக்குச் சொன்னாராம். ஆனால் மதியம் தொடங்கப்பட்ட தாக்குதலில் பரந்தன் தளம் புலிகளிடம் வீழ்ந்தது. புலிகளின் கனரக ஆயுத வளத்தை எதிரிக்கு உணர்த்திய தாக்குதலென்று அதைச் சொல்லலாம்.

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, பரந்தன் உள்ளிட்ட முக்கிய முன்னணித்தளங்கள் வீழ்ந்தபின்பும் கூட, ஆனையிறவின் பலத்தில் எல்லோருக்கும் நம்பிக்கையிருந்தது. பரந்தன் கைப்பற்றப்பட்டதால் ஆனையிறவுக்கான குடிநீர் வழங்கல் வழிகளிலொன்று அடைபட்டது. சில நாட்கள் எந்த முன்னேற்றமுமின்றி களமுனை இருந்தது.

பின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ‘மாமுனைத் தரையிறக்கம்’ புலிகளால் நடத்தப்பட்டது. தரையிறக்கப்பட்ட 1200 புலிவீரர்கள், ஆனையிறவிலிருந்து யாழ்ப்பாணப் பக்கமாக 15 கிலோமீட்டரில் இருக்கும் இத்தாவில் என்ற இடத்தில் கண்டி வீதியை மறித்து நிலையெடுத்தார்கள். அதேயிரவு பளை ஆட்லறித் தளத்தினுள் புகுந்த கரும்புலிகள் அணி அங்கிருந்த 11 ஆட்லறிகளைத் தகர்ந்தது. அப்போதுதான் ஆனையிறவு மீதான ஆபத்து கொஞ்சம் புலப்பட்டது. ஆனாலும் தரையிறங்கிய புலியணிகள் எவ்வளவு காலம் தாக்குப்பிடிப்பார்களென்று சொல்ல முடியாத நிலை. மிகச்சிறிய இடம். சுற்றிவர ஏறத்தாள நாற்பதாயிரம் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ள ஆனையிறவு, யாழ்ப்பாணப் படைநிலைகள்.

முழுப்பேரையும் துவம்சம் செய்வதென்று கங்கணங் கட்டிக் கொண்டு நிற்கும் இராணுவத்தினர். மிகப்பெருமெடுப்பில் அந்நிலைகள் மீது எதிரி தாக்குதல் நடத்தினான். ஆனாலும் அவனால் அவ்விடத்தைக் கைப்பற்ற முடியவில்லை.

இதற்கிடையில் கடல் வழி மட்டுமே இத்தாவிலுடன் தொடர்பிருந்த நிலையில், தாளையடி, செம்பியன்பற்று போன்ற முக்கிய கடற்கரைப் பகுதிகளைத் தாக்கிக் கைப்பற்றியதன் மூலம் நேரடித் தொடர்பை இத்தாவில் அணியினருடன் ஏற்படுத்திக்கொண்டனர் புலிகள். முப்பத்து நான்கு நாட்கள் வரை ஆனையிறவுக்கான முதன்மை வினியோகப் பாதையை மறித்து வைத்திருந்தனர், பிரிகேடியர் பால்ராஜ் தலைமையிலான அவ்வணியினர்.

இதுவரை ஆனையிறவு மீது நேரடியான எந்தத் தாக்குதலும் நடத்தப்படவில்லை. இவை ஒருபுறம் நடந்துகொண்டிருக்க ஆனையிறவு மீதான இறுதித் தாக்குலைத் தொடுத்தனர் புலிகள். இயக்கச்சிப் பகுதியைக் கைப்பற்றியதன் மூலம் ஆனையிறவை மிக நெருங்கியதுடன், ஆனையிறவுப் படையினருக்கான குடிநீர் விநியோகத்தையும் முற்றாகக் கட்டுப்படுத்தினர் புலிகள். இயக்கச்சி முகாம் வீழ்ந்த உடனேயே ஆனையிறவைக் கைவிட்டு ஓடத்தொடங்கியது சிங்களப்படை. அவர்களுக்கிருந்த ஒரே வழி, கிளாலிக்கடற்கரை வழியாகத் தப்புவதே. தப்பியோடிய இராணுவத்தினரும் தாக்குதலுக்கு இலக்கானார்கள். அப்பாதையில் வைத்து 152 MM ஆட்லறிப் பீரங்கியொன்று கைப்பற்றப்பட்டது. ஆனையிறவுப்படைத்தளம் முழுமையாகப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. 22.04.2000 அன்று கேணல். பானு அவர்கள் ஆனையிறவில் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றிவைத்தார்.

**மக்களுக்கு ஆனையிறவு வீழ்ந்தது கனவு போலவே இருந்தது.**

ஆனையிறவு முகாம் மீதான இறுதித்தாக்குதல் வெகு சுலபமாக முடிவடைந்தது. புலிகள் தரப்பில் 34 போராளிகளே களப்பலியாகினர். ஆனால் அத்தளத்தைக் கைப்பற்ற, முற்றுகை நடத்திச் செய்த சண்டைதான் நீண்டதும் கடினமானதும். ஆனையிறவுக்காக ஈழப்போராட்டத்தில் ஏறத்தாழ 3000 புலிவீரர்கள் களமாடி வீரச்சாவடைந்ததாக தமிழீழ விடுதலை புலிகளின் குறிப்பு கூறுகிறது. ஆனையிறவின் வீழ்ச்சியை சிங்களத் தரப்பால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் சடலங்கள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள மறுத்தது. இது வழமையான ஒன்றே.

வெளித்தோற்றத்துக்கு, ஈழப்போராட்டத்தில் ஆனையிறவு மீட்பே மிகப்பெரிய வெற்றியாகத் தோன்றுகிறது. அவ்வளவுக்கு அப்பெயர் மிகப்பிரசித்தம்.

தலைவர் பிரபாகரனின் பன்னாட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டில், வெற்றிகளில் எதை முதன்மைப்படுத்துகிறீர்கள் என்று கேட்கப்பட்டதற்கு, பெரும்பாலானோர் எதிர்பார்த்த பதில் ‘ஆனையிறவு’தான். ஆனால் வந்த பதில் ‘ஜெயசிக்குறு எதிர்ச்சமர்’.



நன்றி: ஏரிமலை இணையம்


# மௌனச் சிகரங்களில் எழுந்த குரல்கள்

சிவசரவணபவன் சர்வேஸ்வரன்

22.04.2026

இலங்கையின் மலைநாடுகளின் மௌனச் சிகரங்களில், பசுமைத் தேயிலைத் தளிர்கள் காற்றில் ஆடும் ஒவ்வொரு நொடியும், ஒரு மக்களின் மறைக்கப்பட்ட வரலாறு மெதுவாகச் சலசலப்பதுபோல் ஒலிக்கிறது. அந்தத் தளிர்களின் பச்சை நிறம் இயற்கையின் அருளல்ல; அது உழைப்பின் உதிரமும் வியர்வையும் கலந்த மண்ணின் சாட்சியம். தென்னிந்தியாவின் வறுமை நிலத்திலிருந்து பிடுங்கப்பட்டு, பிரிட்டிஷ் ஆட்சியின் இரும்புச் சங்கிலியில் கட்டப்பட்டு, இலங்கையின் பசுமை மலைகளில் இறக்கிவிடப்பட்ட உழைப்பின் பிள்ளைகள் மலையகத் தமிழர்கள் தங்கள் வியர்வையால் வயல்களை வளர்த்தனர் தங்கள் இரத்தத்தால் ஒரு தேசத்தின் பொருளாதாரத்தை நிலைநிறுத்தினர். ஆனால் அவர்கள் வாழ்ந்த மண்ணில் அவர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டது; அவர்கள் கட்டிய நாட்டில் அவர்களுக்கு குடியுரிமை பறிக்கப்பட்டது.







1948 நவம்பர் 15 இலங்கை வரலாற்றின் நெஞ்சில் பொறிக்கப்பட்ட கருங்கல். பத்து இலட்சம் மலையக மக்கள் தாம் வாழும் மண்ணிலேயே நாடற்றவர்களாக அறிவிக்கப்பட்ட நாள். அதன் பின்னர் 1958, 1977, 1983 இன வன்முறைகள் அந்தக் காயங்களில் மீண்டும் மீண்டும் உப்புச் சிதறியதுபோல், மலையகத் தமிழரின் நினைவில் அழியாத வடுக்களை விட்டுச் சென்றன.

ஆனால் அந்த இருளின் நடுவே ஒரு ஒளியாகப் பிறந்தது எழுத்து. அந்த எழுத்து கலை அல்ல; அது எதிர்ப்பு. அது சாட்சி. அது சுதந்திரத்தின் சுடர். இந்தச் சுடரின் வேர்களைத் தேடி, மலையக இலக்கியத்தின் ஆளுமைகளின் வாழ்வையும் போராட்டங்களையும் ஆவணப்படுத்தும் அரிய முயற்சியாக உருவானதே "துளிர் முகிழும் மலையக கொழுந்துகள்" என்னும் மலையக எழுத்தாளுமைகள் பற்றிய இந்நூல்.

இந்த நூல், மலையக இலக்கியத்தின் பிதாமகனான கோ. நடேசய்யர் முதல், மக்கள் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளை, மலையகத்தின் வற்றாத பிரவாகமான தெளிவத்தை ஜோசப், மொழிபெயர்ப்பின் மாபெரும் சிகரமான கே. கணேஷ், ஆய்வின் அகன்ற வெளி கொண்ட சாரல் நாடன், மலையக இலக்கியத்தை உலகிற்கு எடுத்துச் சென்ற அந்தனி ஜீவா, புலம்பெயர் இலக்கியத்தின் பெருமை மாத்தளை சோமு, சமூக உணர்வின் தீப்பொறி மாத்தளை வடிவேலன், ஹைக்கூவின் மலையகச் சுவாசம் சு. முரளிதரன், போராட்டத்தின் குரல் வரதன் கிருஷ்ணா, நாடக மேடையின் முன்னோடி மாத்தளை கார்த்திகேசு, மண்ணின் மணவாசனையைச் சொற்களாக வழித்த மல்லிகை சி. குமார்-இவர்களைப் பற்றிய விரிவான, ஆழமான, வரலாற்று-இலக்கியப் பதிவாக விளங்குகிறது.

மலையக மண்ணில் முளைத்த இலக்கியத் துளிர்கள், காலத்தின் கனல் பட்டுத் தீயாகி, அன்று முதல் இன்று வரை எரிந்து கொண்டே இருக்கின்றன. அந்தத் தீயின் வெப்பத்தை உலகிற்கு உணர்த்தும் பணியாகவே இந்நூல் உதயமாகியிருக்கிறது. இந்நூல் வெறும் வரலாற்றுப் பதிவு அல்ல; இது ஒரு மக்களின் உயிர்ப்புக் குரல். இது ஒரு மக்களின் அழியாத ஆவிக்கான அஞ்சலி. ஒரு நூற்றாண்டின் சிதைக்க முடியாத சாட்சியம்.

இந்தப் பெரும் பணியின் பின்னால் நிற்பவர் ஐங்கரன் விக்னேஸ்வரா. அவர் மலையகத் தமிழர்களின் மறைக்கப்பட்ட வரலாற்றை மீட்டெடுத்து, அவர்களின் இலக்கியப் பங்களிப்பை உலகிற்கு அறிமுகப்படுத்தும் பொறுப்பு உணர்வும், சமூகப் பற்றும், அரசியல் விழிப்புணர்வும் கொண்ட எழுத்தாளர். அவரின் எழுத்து வெறும் ஆய்வு அல்ல; அது ஒரு பொறுப்பு, ஒரு பற்று, ஒரு பணிவு. சிதறிக் கிடக்கும் வரலாற்றுச் சுவடுகளை சேகரித்து, மறக்கப்பட்ட குரல்களை மீட்டெடுத்து, தலைமுறைகளுக்கிடையே ஒரு பாலம் கட்டும் அவரது முயற்சி, தமிழ்ச் சமூகத்தின் வரலாற்றுப் பொக்கிஷமாகும். கவிதையை ஆயுதமாக்கியவர்களுக்கும், நாடகத்தை நெருப்பாக்கியவர்களுக்கும், சிறுகதையை சாட்சியமாக்கியவர்களுக்கும் ஆற்றும் ஒரு புனித நன்றிக் கடன். ஒவ்வொரு ஆளுமையின் படைப்பு வாழ்க்கையையும் அவர் பேனா தீண்டும்போது, வரலாறு உயிர்பெறுகிறது; மறுக்கப்பட்ட குரல்கள் மீண்டும் ஒலிக்கின்றன. அவரது எழுத்து ஒரு சமூகத்தின் வலியை மட்டுமல்ல; அதன் உயிர்ப்பையும், பெருமையையும், எதிர்காலத்தையும் பேசுகிறது.




இந்நூலை ஈழப்புரட்சி அமைப்பின் வீரத்தோழர் பரிபூரணனுக்கு 1984 அக்டோபரில் போரில் வீரச்சாவு தழுவிக்கொண்ட அந்த உன்னத உள்ளத்திற்கு ஆசிரியர் அர்ப்பணிக்கிறார். இந்த அர்ப்பணிப்பு மட்டுமே ஐங்கரன் விக்கினேஸ்வராவின் ஆழமான சமூக உணர்வையும் விடுதலை நெஞ்சையும் நமக்கு உணர்த்தி விடுகிறது. வரலாற்றை ஆவணப்படுத்துவது மட்டுமன்று வரலாற்றில் தன்னை ஒரு பங்காளியாக நிறுத்திக்கொள்வதுதான் உண்மையான இலக்கியப் பணி என்பதை இந்நூல் நிரூபிக்கிறது.

மலையகத் தமிழரின் நூற்றாண்டுக் கஷ்டங்களையும், அவர்களின் உறுதியான உயிர்ப்பையும் அறியாமல், தமிழர் வரலாறு முழுமையடையாது. உலகின் பல மூலைகளில் வாழும் மலையகத் தமிழர்களுக்கும், தங்கள் வேர்களை அறிய விரும்பும் புலம்பெயர் தலைமுறையினருக்கும், தமிழ் இலக்கிய வரலாற்றை ஆழமாக ஆய்வு செய்யும் அறிஞர்களுக்கும் இந்நூல் இன்றியமையாத ஒரு ஆவணமாக ஜீவநதி வெளியீட்டகம் வெளியிட்டுள்ளது.

துளிர்கள் முகிழும், கொழுந்துகள் தழையும். மலையக மண்ணின் கதை எக்காலத்திலும் அழியாமல் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

# காசாவில் இஸ்ரேலின் துணைக் குழுக்கள்: மொசாட் ஊடுருவல் சிதையும் பாலஸ்தீனம்!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

22.04.2026

காசா பகுதியில் சில ஆயுத குழுக்கள் இஸ்ரேல் இராணுவத்துடன் இணைந்து செயல்பட்டதாக குற்றச்சாட்டுகள் உள்ளதாக புதிய விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விசாரணை ஆய்வில் அந்தக் குழுக்களின் பெயர்கள், நகர்வு பாதைகள், பயிற்சி நடைபெறும் இடங்கள் போன்ற முழுமையான விவரங்கள் அடங்கியுள்ளதாக கூறப்படுகிறது.

காசாவில் சில நபர்கள் எவ்வாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார்கள் மற்றும் எவ்வாறு செயல்பட்டார்கள் என்பதற்கான ஒலி மற்றும் காணொளி ஆதாரங்கள் இதில் இடம்பெற்றுள்ளதாக அல் ஜஸீரா நிறுவனம் அண்மையில் தெரிவித்துள்ளது. அல் ஜஸீரா செய்தியாளர் தாமர் அல்மிஷ்ஹால் தயாரித்த "What is Hidden is Greater" நிகழ்ச்சியில் இந்த சர்ச்சைக்குரிய விவகாரம் அண்மையில் ஒளிபரப்பானது.



நீண்ட காலமாக ஹமாஸை எதிர்க்கும் பல துணை ஆயுத குழுக்களை இஸ்ரேல் ஊட்டி வளர்த்து வருகிறது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஒருவரின் கூற்றைத் தொடர்ந்து, ஹமாஸை எதிர்க்கும் காசாவில் உள்ள ஒரு ஆயுதக் குழுவை இஸ்ரேல் ஆதரிப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஒப்புக்கொண்டுள்ளார்.

## ஹமாஸ்க்கு எதிராக உள்ளூர் ஆயுதக் குழுக்கள்:

இந்த விசாரணையின் படி, வடக்கு காசாவிலிருந்து தெற்கு காசா வரை, "மஞ்சள் கோடு" (yellow line) என அழைக்கப்படும் பாதுகாப்பு எல்லைக்குப் பின்னால் சில ஆயுதக் குழுக்கள் சுதந்திரமாக செயல்படுகின்றன என்று கூறப்படுகிறது. இந்த எல்லைப் பகுதி, காசா தற்காலிக போர்நிறுத்தத்தின் முதல் கட்டத்தின் கீழ் இஸ்ரேல் இராணுவம் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் பாதுகாப்பு வளையம் ஆகும்.

இந்த ஆயுதக் குழுக்கள் இஸ்ரேலுடன் இணைந்து செயல்பட்டதாக பல குற்றச்சாட்டுகள் தற்போது முன்வைக்கப்பட்டுள்ளன. ஆனால் குற்றச்சாட்டுக்கு உள்ளான சில குழுக்கள் இதை பொது மேடைகளில் மறுத்துள்ளன.

கடந்த 2025ம் ஆண்டு ஜூன் மாதம், காசாவில் ஹமாஸ் இயக்கத்துக்கு எதிராகப் போராட உள்ளூர் ஆயுதக் கும்பல்களை பயன்படுத்தியதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு வெளிப்படையாக தெரிவித்திருந்தார். பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் உள்ளூர் ஆயுத அமைப்புகள் பலவும் செயல்படுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இஸ்ரேல் ஆதரவு பெற்றதாக கூறப்படும் "பாப்புலர் ஃபோர்சஸ்" (Popular Forces) எனும் ஆயுதக்குழு சோதனைச் சாவடியில் தங்களை நிறுத்தி விசாரணை செய்ததாக தெரிவித்துள்ளார். குடும்பப் பெயர்கள் ஒலிபெருக்கி மூலம் அழைக்கப்பட்டு, சிலர் இஸ்ரேல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும், கண் கட்டி, கைக்கட்டுடன் விசாரிக்கப்பட்டதாகவும், ரஃபா எல்லைச் சாவடி வழியாக காசாவிற்கு திரும்பிய ஒரு பாலஸ்தீன பெண், ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம் கூறியுள்ளார்.




## முக்கிய ஆயுதக் குழுக்கள்:

காசாவில் ஹமாஸ் அமைப்புக்கு எதிராக இஸ்ரேலின் ஆதரவுடன் செயல்படும் ஒரு புதிய உள்ளூர் ஆயுதக் குழு, யாசர் அபு ஷபாப் (Yasser Abu Shabab) என்பவரால் வழிநடத்தப்படுகிறது. இந்த குழு மொசாட் உளவு அமைப்புக்கு தகவல்களை அனுப்பி, இஸ்ரேலிய படைத் தாக்குதல்களை எளிதாக்குவதோடு, தங்களின் கட்டுப்பாட்டில் நூற்றுக்கணக்கான ஆயுதமேந்திய ஆட்களைக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது, இது ஹமாஸிற்கு எதிரான ஒரு முக்கிய நகர்வாகப் பார்க்கப்படுகிறது.

இந்த துணைக் குழுவின் தலைவர் யாசர் அபு ஷபாப் என்பவரின் தலைமையில் காசாவில் ஹமாஸின் ஆதிக்கத்தை குறைத்தல் மற்றும் இஸ்ரேலின் பாதுகாப்பிற்கான நடவடிக்கைகளுக்கு உதவுதல் ஆகிய நோக்கத்தில் செயல்பட்டு வருகின்றனர்.

தற்போதைய சூழலில் இந்த குழுவிற்கு இஸ்ரேலின் மறைமுக ஆதரவு இருப்பதாகவும், இது காசாவில் உள்ளூர் மட்டத்தில் புதிய ஆயுதமேந்திய சக்தியாக உருவெடுத்துள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த துணைக்குழுவின் செயல்பாடுகள், குறிப்பாக போர் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான காசாவின் அரசியல் சூழலில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதேவேளை ஹமாஸை எதிர்க்கும் காசா குழுவை இஸ்ரேல் ஆதரிக்கும் என்று பிரதமர் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீன ஊடகங்கள் இந்தக் குழுவை யாசர் அபு ஷபாப் தலைமையிலான உள்ளூர் பெடோயின் பழங்குடியினரின் ஒரு பகுதியாக அடையாளம் கண்டுள்ளன.

ஐரோப்பிய வெளியுறவு கவுன்சில் (ECFR) அவரை "ரஃபா பகுதியில் செயல்படும் ஒரு குற்றவியல் கும்பலுக்குத் தலைமை தாங்குவதாகவும், உதவி லாரிகளைக் கொள்ளையடிப்பதாக பரவலாகக் குற்றம் சாட்டப்படுவதாகவும் விவரிக்கிறது.

நெதன்யாகுவின் உத்தரவின் பேரில் இஸ்ரேல் குற்றவாளிகள் மற்றும் குற்றவாளிகள் குழுவிற்கு ஆயுதங்களை வழங்கி வருகிறது என்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் நெசெட் உறுப்பினருமான அவிக்டர் லிபர்மேன் தெரிவித்துள்ளார்.

## மொசாட் ஆழமான ஊடுருவல்

இஸ்ரேலின் உளவு அமைப்பான மொசாட் (Mossad) மற்றும் இராணுவப் பிரிவுகளின் ஆழமான ஊடுருவல், பாலஸ்தீனத்தின் நிலப்பரப்பு, அரசியல் மற்றும் சமூகக் கட்டமைப்பை பல தசாப்தங்களாக சிதைத்து வருகிறது. 1948இல் இஸ்ரேல் உருவாக்கப்பட்டதிலிருந்து, பாலஸ்தீனப் பகுதி மீதான ஆக்கிரமிப்பு மற்றும் கண்காணிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இஸ்ரேலிய நில ஆக்கிரமிப்பு மற்றும் சட்டவிரோதக் குடியேற்றங்கள் 1967ஆம் ஆண்டு முதல், சர்வதேச சட்டங்களை மீறி மேற்குக்கரை மற்றும் காசா பகுதிகளில் இஸ்ரேல் சட்டவிரோதக் குடியேற்றங்களை அமைத்து, பாலஸ்தீன நிலங்களை ஆக்கிரமித்து வருகிறது. அத்துடன் 2007 முதல், காசா பகுதி நாலாபுறமும் இஸ்ரேலால் சுற்றி வளைக்கப்பட்டு, ஒரு திறந்தவெளி சிறைச்சாலையாக மாற்றப்பட்டுள்ளது. அங்கு வசிக்கும் 23 இலட்சம் மக்களின் அடிப்படைத் தேவைகள், வேலைவாய்ப்பு மற்றும் இயக்கம் முழுமையாக இஸ்ரேலிய கட்டுப்பாட்டில் உள்ளது.

அங்கு மொசாட் மற்றும் இஸ்ரேலிய உளவு அமைப்புகள் பாலஸ்தீனப் போராட்டக் குழுக்களின் தகவல்களை அறிந்து, அவர்களின் தலைவர்கள் மற்றும் முக்கிய உறுப்பினர்களைக் குறிவைத்துத் தாக்குதல்களை (Targeted Killings) நடத்துகின்றன. மேலும் பிரித்தாளும் சூழ்ச்சியால் ஃபதா (Fatah) மற்றும் ஹமாஸ் (Hamas) ஆகிய இரு முக்கிய பாலஸ்தீனக் குழுக்களுக்கு இடையேயான முரண்பாடுகளை இஸ்ரேல் தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி, பாலஸ்தீன ஐக்கியத்தை பலவீனப்படுத்து வருகிறது.

அத்துடன் லெபனான் மற்றும் பாலஸ்தீன அகதிகள் முகாம்களில் ஹமாஸ் உறுப்பினர்கள் பயிற்சியில் ஈடுபடுவதாகக் கூறி, இஸ்ரேல் தொடர்ந்து வான்வழித் தாக்குதல்களை நடத்தி, உள்கட்டமைப்புகளை அழித்து வருகிறது. இந்த நீண்டகால ஊடுருவல் மற்றும் இராணுவ நடவடிக்கைகளால், பாலஸ்தீன மக்கள் தங்கள் சொந்த நிலத்திலேயே அகதிகளாகவும், அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டும், சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்

## அல் ஜஸீரா நிறுவன விசாரணை

அல் ஜஸீரா தொலைக்காட்சி நிறுவன விசாரணையில் குறிப்பிடப்படும் முக்கிய குழுவாக யாசர் அபு ஷபாப் நிறுவிய Popular Forces அமைப்பு கூறப்படுகிறது. அவர் கடந்த டிசம்பரில் கொல்லப்பட்டதாகவும், பின்னர் கசான் அல்-தஹினி தலைமையை ஏற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழு, அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆதரவு பெற்ற உதவி விநியோக மையங்களுக்கு பாதுகாப்பு வழங்கியதாக முன்பு அறிவித்திருந்தது. ஆனால், ஐ.நா. அமைப்புகளை புறக்கணித்து செயல்பட்டதாகவும், உதவி மையங்களில் வன்முறை சம்பவங்கள் நடந்ததாகவும் மனிதாபிமான அமைப்புகள் குற்றம் சாட்டியுள்ளன.

மேலும் அல் ஜஸீரா விசாரணையில், காசா மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிப் பொருட்கள் திருடப்பட்டு மீண்டும் விற்பனை செய்யப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதை ஹமாஸ் இயக்கம் பலமுறை எதிர்த்து, சில குழுக்களுடன் மோதலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், "Strike Force Against Terror" என்ற பெயரில் இயங்கும் மற்றொரு குழுவும் இஸ்ரேல் ஆதரவு பெற்றதாக அறிக்கையில் கூறப்படுகிறது. இந்தக் குழுவை ஹுசாம் அல்-அஸ்தால் வழிநடத்துவதாகவும், அவர் முன்னாள் பாலஸ்தீன ஆணையத்தின் பாதுகாப்பு அதிகாரி என்றும் கூறப்படுகிறது. அவர் 1990களில் இஸ்ரேலுடன் இணைந்து செயல்பட்டதாக முன்பு குற்றஞ்சாட்டப்பட்டிருந்ததாகவும் தகவல்கள் கூறுகின்றன. இந்த குற்றச்சாட்டுகள் குறித்து சுயாதீன சர்வதேச உறுதிப்படுத்தல்கள் இன்னும் முழுமையாக வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது; விரைவில் உலக அரங்கில் வெளிப்படும்.



# கம்போடியாவைச் சுடுகாடாக்கிய போல் பாட்: வரலாற்றின் கறுப்புப் பக்க கண்ணீர் கதை!

-ஐங்கரன் விக்கினேஸ்வரா -

19.04.2026

வரலாற்றின் கறுப்புப் பக்கங்களின் கண்ணீர்க் கதையே, ஒரு நாடு நாற்பது மாதங்களில் 20 இலட்சம் பிணங்களை சுமந்த கம்போடியாவைச் சுடுகாடாக்கிய "போல் பாட்"டின் வரலாறு ஆகும்.

கம்போடியாவின் கண்ணீர் கதை வெறும் நான்கே வருடங்களில் ஒரு நாட்டின் மொத்த மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கைத் துடைத்தெறிந்த அந்தப் பயங்கரத்தின் பின்னணியில் இருந்த சூத்திரதாரிதான் போல் பாட் (Pol Pot).



வரலாற்றின் பக்கங்களில் ரத்தக் கறைகள் படிந்த அத்தியாயங்கள் பல உண்டு. ஹிட்லரின் யூத இனப்படுகொலை. அமெரிக்க அதிகார வெறி பிடித்த தலைவர்களால் வியட்நாமில் நடத்திய கோரத் தாண்டவங்களை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆனால், ஒரு நாடே தன் சொந்த மக்களால், தன் சொந்த அரசாங்கத்தால் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாகவும், பிரம்மாண்டமான சுடுகாடாகவும் மாற்றப்பட்ட ஒரு கோர வரலாறு உண்டென்றால், அது கம்போடியா நாட்டின் கதைதான்.

இது ஒரு தனிமனிதனின் பைத்தியக்காரத்தனமான, தவறாகப் புரிந்துகொள்ளப்பட்ட ஒரு சித்தாந்தம், ஒரு தேசத்தையே எப்படி அழிவின் விளிம்பிற்குக் கொண்டு செல்லும் என்பதற்கான மிகச் சிறந்த, மிகக்கொடூரமான உதாரணமே கம்போடிய வரலாறு ஆகும்.

## ஒரு சர்வாதிகாரியின் உருவாக்கம்

சலோத் சார் (Saloth Sar) 1925இல் கம்போடியாவில் ஒரு வசதியான விவசாயக் குடும்பத்தில் பிறந்தவன். இவனது இளமைக் காலம் மிகவும் சாதாரணமாகவே இருந்தது. மேல்படிப்புக்காக 1949இல் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகருக்குச் சென்றான்.

அந்த பாரிஸ் வாழ்க்கைதான் அவனது தலையெழுத்தையும், பிற்காலத்தில் கம்போடியாவின் தலையெழுத்தையும் மாற்றியது. அங்கே அவனுக்குக் கம்யூனிச சித்தாந்தத்தின் மேல் ஈர்ப்பு ஏற்பட்டது. பிரெஞ்சு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்தான். ஆனால், மார்க்ஸ் அல்லது லெனின் சொன்ன கம்யூனிசத்தை அவன் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை.

அவனுக்கென்று ஒரு விபரீதப் புரிதல் இருந்தது. படிப்பை பாதியிலேயே விட்டுவிட்டு 1953இல் கம்போடியா திரும்பினான். அங்கே காடுகளில் மறைந்து வாழ்ந்த வட வியட்நாமிய கம்யூனிஸ்டுகளுடன் இணைந்தான். மெல்ல மெல்ல வளர்ந்து, "கெமர் ரூஜ்" (Khmer Rouge) என்ற கம்போடிய கம்யூனிஸ்ட் போராளிகள் குழுவின் தலைவனானான். அவனது கட்சியின் பெயர் கம்போடிய கம்யூனிஸ்ட் கட்சி (Communist Party of Kampuchea - CPK), அவனது ஆயுதக் குழுவின் பெயர் கெமர் ரூஜ். "போல் பாட்" என்பது அவன் தனக்குத் தானே சூட்டிக் கொண்ட புனைபெயர் (இதன் அர்த்தம் "Political Potential" என்ற பிரெஞ்சு வார்த்தையின் சுருக்கம் என்றும் சொல்வார்கள்).

## விவசாய சொர்க்கம் – விபரீதக் கனவு:

போல் பாட்டின் கனவு மிகவும் விசித்திரமானது. அதே சமயம் ஆபத்தானது. அவன் கம்போடியாவை ஒரு முழுமையான, கலப்படமற்ற விவசாய நாடாக மாற்ற விரும்பினான். அவனது அகராதியில் "நாகரிகம்" என்பதே ஒரு சாபமாக இருந்தது.

அவனது சித்தாந்தத்தின் படி, நகரங்கள் என்பவை தீமையின் இருப்பிடங்கள். பணம், சந்தை, கல்வி, மதம், குடும்ப அமைப்பு- இவை அனைத்தும் முதலாளித்துவத்தின் அடையாளங்கள் என்று அழிக்கப்பட்டன.

நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் விவசாயியாக மட்டுமே இருக்க வேண்டும். அனைவரும் சமம், அனைவரும் வயலில் உழைக்க வேண்டும். இந்தக் கற்காலச் சிந்தனையை நவீனக் காலத்தில் நடைமுறைப்படுத்த அவன் தேர்ந்தெடுத்த வழிதான் நரக வேதனை.

## நரகத்தின் வாசல்கள் திறந்தன:


1975, ஏப்ரல் 17. கம்போடியாவின் தலைநகர் நாம் பென் (Phnom Penh) நகரத்தை கெமர் ரூஜ் படைகள் கைப்பற்றின. நீண்ட நாட்களாக நடந்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததென்று மக்கள் வீதிகளில் இறங்கிக் கொண்டாடினார்கள். ஆனால், அந்த மகிழ்ச்சி சில மணிநேரங்கள் கூட நீடிக்கவில்லை.

போல் பாட் ஒரு வரலாற்று விசித்திரமான உத்தரவைப் பிறப்பித்தான். "Year Zero". அதாவது, கம்போடியாவின் 2000 ஆண்டுகால வரலாறு இன்றோடு அழிக்கப்படுகிறது. இதுதான் புதிய சகாப்தத்தின் முதல் வருடம். இனி பழைய நாகரிகத்தின் எந்த எச்சமும் இருக்கக்கூடாது.











**51 வருடங்களுக்கு முன்னர் 1975, ஏப்ரல் 17இல் கம்போடியாவின் தலைநகர் நாம் பென் (Phnom Penh) நகரத்தை கெமர் ரூஜ் படைகள் கைப்பற்றின. நீண்ட நாட்களாக நடந்த உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்ததென்று மக்கள் வீதிகளில் இறங்கிக் கொண்டாடினார்கள். ஆனால், அந்த மகிழ்ச்சி சில மணிநேரங்கள் கூட நீடிக்கவில்லை.**

தலைநகரில் இருந்த சுமார் 20 இலட்சம் மக்களையும் உடனடியாக நகரத்தை விட்டு வெளியேறத் துப்பாக்கி முனையில் உத்தரவிட்டார்கள். அமெரிக்கா குண்டு போடப் போகிறது, மூன்று நாட்களில் திரும்பிவிடலாம் என்று பொய் சொல்லி மக்களை விரட்டினார்கள். இவ்வாறே இந்த மாபெரும் வெளியேற்றம் நடந்தது.

மருத்துவமனையில் இருந்த நோயாளிகள், கர்ப்பிணிகள், முதியவர்கள் என யாரும் தப்பவில்லை. மக்கள் ஆடு மாடுகளைப் போல கிராமங்களை நோக்கி நடத்தப்பட்டார்கள். அந்தப் பயணத்திலேயே பசி, தாகம், நோயால் பல்லாயிரக்கணக்கானோர் வழியெங்கும் செத்து விழுந்தார்கள். நகரங்கள் மக்கள் வாழாமல் வெறிச்சோடின.



## அறிவுக்கு எதிரான போர் :

போல் பாட்டின் புதிய ஆட்சியில், "சிந்திப்பது" ஒரு மரண குற்றம். அவனுடைய பார்வையில் படித்தவர்கள், நகரவாசிகள், அரசு

ஊழியர்கள், கலைஞர்கள், பிக்குகள் (துறவிகள்) எல்லோரும் புதிய சமூகத்திற்குத் தேவையற்றவர்கள், அல்லது எதிரிகள்.

கொடுமையின் உச்சகட்டம் என்னவென்றால், நீங்கள் ஒரு மருத்துவர், பொறியாளர், ஆசிரியர் அல்லது வழக்கறிஞர் என்றால் உங்களுக்கு மரண தண்டனை நிச்சயம். உங்களுக்குச் சொந்தமாகப் புத்தகம் இருந்தால் மரணம். நீங்கள் வெளிநாட்டு மொழி பேசினால் மரணம். ஏன் நீங்கள் கண்ணாடி (Spectacles) அணிந்திருந்தாலோ, உங்கள் கைகள் உழைக்காமல் மென்மையாக இருந்தாலோ, நீங்கள் படித்தவர் அல்லது முதலாளித்துவ வர்க்கம் என்று முத்திரை குத்தப்பட்டு அந்த இடத்திலேயே சுட்டுக் கொல்லப்பட்டார்கள்.

அறிவை அழித்துவிட்டால், மக்களை அடிமைகளாக வைத்திருப்பது சுலபம் என்பது சர்வாதிகாரிகளின் பொதுவான விதி.



## கூட்டுப் பண்ணை கொலை களங்கள்:

கம்போடிய நகரத்திலிருந்து விரட்டப்பட்ட மக்கள், “புதிய மக்கள்” என்று அழைக்கப்பட்டார்கள். அவர்கள் கிராமங்களில் அமைக்கப்பட்ட கூட்டுப் பண்ணைகளில் (Collective Farms) அடிமைகளைப் போல நடத்தப்பட்டார்கள்.

பல இலட்சம் குடும்பங்கள் பிரிக்கப்பட்டன. குழந்தைகளைத் தனியாகப் பிரித்து அவர்களுக்கு மூளைச்சலவை செய்யப்பட்டது. பெற்றோரைக் காட்டிக் கொடுக்கும்படி குழந்தைகள் பழக்கப்படுத்தப்பட்டார்கள். ஒரு நாளைக்கு 18 மணி நேரக் கடுமையான விவசாய உழைப்பு. உணவோ, ஒரு கரண்டி அரிசிக் கஞ்சி மட்டும்தான். பட்டினியால் மக்கள் எலும்புக்கூடுகளாக மாறினார்கள்.

அத்துடன் மதம் தடை செய்யப்பட்டது. கோயில்கள் இடிக்கப்பட்டன அல்லது பன்றித் தொழுவங்களாக மாற்றப்பட்டன. சின்னத் தவறு செய்தாலும், அல்லது சோர்ந்து போய் அமர்ந்தாலும் சித்திரவதைதான்.



கெமர் ரூஜ் படைகளின் ஒரு புகழ்பெற்ற வாசகம் ஒன்று உண்டு: உன்னை உயிரோடு வைத்திருப்பதால் எங்களுக்கு எந்த லாபமும் இல்லை, உன்னை அழிப்பதால் எங்களுக்கு எந்த நஷ்டமும் இல்லை. கம்போடியா முழுவதும் இப்படி மக்களைக் கொன்று குழிதோண்டிப் புதைத்த இடங்கள் “கெமர் ரூஜ் கொலைக்களங்கள்” என்று இன்றும் அழைக்கப்படுகின்றன.

பல இடங்களில் துப்பாக்கித் தோட்டாக்களின் விலையை மிச்சப்படுத்த, மண்வெட்டி, கடப்பாரை போன்றவற்றைக் கொண்டே மக்களைக் கொடூரமாகக் கொன்றார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## S 21: மரண தொழிற்சாலை (Tuol Sleng)

போல் பாட் ஆட்சியின் குரூரத்திற்கு ஒரு சாட்சி வேண்டுமென்றால், நாம் பென் நகரில் உள்ள “எஸ்-21” என்ற இடத்தைப் பார்க்க வேண்டும். அது ஒரு காலத்தில் பள்ளிக்கூடம். ஆனால், போல் பாட் ஆட்சியில் அது ஒரு சித்திரவதைக் கூடமாக மாற்றப்பட்டது.

இங்கே கொண்டுவரப்பட்டவர்கள் கற்பனைக்கு எட்டாத சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டார்கள். தாங்கள் செய்யாத குற்றங்களை, அதாவது சிஐஏ உளவாளி என்றோ, வியட்நாம் உளவாளி என்றோ ஒப்புக்கொள்ளும் வரை அவர்கள் சித்திரவதை செய்யப்பட்டார்கள். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்த பின், அவர்கள் கொலைக்களங்களுக்கு அனுப்பப்பட்டார்கள்.

இந்த எஸ்-21 சிறைக்குள் வந்த சுமார் 20,000 பேரில், உயிரோடு திரும்பியவர்கள் வெறும் 12 பேர் மட்டுமே என்றால் அந்தப் பயங்கரத்தைப் புரிந்துகொள்ளுங்கள். அவர்கள் ஒவ்வொருவரையும் புகைப்படம் எடுத்து, ஆவணப்படுத்தி, சித்திரவதை செய்து கொன்றார்கள். ஒரு பைத்தியக்காரத்தனமான அதிகார வர்க்கம் அங்கே செயல்பட்டது.

## மீளாத துயரும் முடிவும்:

இந்த நரகம் சுமார் 3 வருடம் 8 மாதங்கள் நீடித்தது. இறுதியில், போல் பாட்டின் படைகள் அண்டை நாடான வியட்நாம் எல்லையில் தொடர்ந்து சீண்டலில் ஈடுபட, 1979இல் வியட்நாம் படைகள் (வியட்நாம் கம்யூனிஸ்ட் கட்சி ) கம்போடியாவுக்குள் புகுந்து கெமர் ரூஜ் ஆட்சியைக் கவிழ்த்தன. போல் பாட் மற்றும் அவனது சகாக்கள் தாய்லாந்து எல்லையை ஒட்டிய அடர்ந்த காடுகளுக்குள் தப்பி ஓடினார்கள்.

வியட்நாம் படைகள் உள்ளே வந்தபோதுதான், கம்போடியாவில் நடந்த இனப்படுகொலையின் முழு பரிமாணம் உலகத்திற்குத் தெரிய வந்தது. சுமார் 15 முதல் 20 இலட்சம் மக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். ஒரு தலைமுறையே அழிந்து போயிருந்தது.

கிட்டத்தட்ட அப்போதைய மக்கள் தொகையில் நான்கில் ஒரு பங்கு மக்கள் கொல்லப்பட்டிருந்தார்கள். ஒரு குடும்பத்தில் நான்கு பேர் இருந்தால், அதில் ஒருவர் நிச்சயம் பலியாகியிருப்பார். அதுதான் அந்த இனப்படுகொலையின் கோர முகம்.

## வரலாற்றின் சோகம்:

ஒரு மிகப்பெரிய வரலாற்றுத் துயரம் என்னவென்றால், இவ்வளவு பெரிய இனப்படுகொலையைச் செய்த போல் பாட், கடைசி வரை எந்த ஒரு சர்வதேச நீதிமன்றத்தின் முன்பும் நிறுத்தப்படவில்லை. காடுகளில் மறைந்து வாழ்ந்து, கெமர் ரூஜ் குழுவுக்குள்ளேயே ஏற்பட்ட அதிகார மோதலில் வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டு, 1998இல் தன் 73ஆவது வயதில் இறந்து போனான். அது இயற்கையான மரணமா அல்லது தற்கொலையா என்பது இன்றும் மர்மம்.

கம்போடியாவின் வரலாறு கற்றுத்தரும் பாடம் மிக முக்கியமானது. ஒரு கட்டுக்கடங்காத அதிகாரம், ஒரு தவறான சித்தாந்தம், மற்றும் கேள்விகேட்க முடியாத ஒரு சூழல் - இவை மூன்றும் சேரும்போது, ஒரு நாடு எப்படித் தன் சுயநினைவை இழந்து தற்கொலை செய்துகொள்ளும் என்பதற்கு இதுவே சாட்சி. அந்த அப்பாவி மக்களின் நினைவுகள், எதிர்கால சந்ததியினருக்கு ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும்.





தேசக்காற்று

## தமிழீழர்கள் வாழ்ந்து இழந்துபோன தாயகத்தை காக்கவும் மீட்கவும் களமாடியவன் கதை.



தமிழீழ மண்ணின் விடுதலைக்காக 'பிரிகேடியர் தீபன்' அவர்களின் பாதம் பதிந்த களமும் - தளமும் தாங்கிய வரலாற்றுக் கதைகளுடன், அந்த வீரத்தளபதியுடன் பயணித்தவர்கள் கண்ணெதிரே கண்ட வியத்தகு சாதனைகளுடன், களத்தில் சரித்திரம் படைத்தவர் வரலாற்றை பொத்தகமாகவும், தமிழீழத்தின் புகழ்பூத்த இசையமைப்பாளர் இசைப்பிரியனின் இசையில், தமிழீழக் கவிஞர்கள் எழுத்தில் வார்த்தெடுத்த வரிகளில், தமிழீழ - தமிழக கலைஞர்களின் குரல்களில் களமுனைகளின் நாயகன் பிரிகோரியர் தீபன் மற்றும் லெப்டினன்ட் கேணல் கில்மன் (காந்தன்) ஆகியோரின் உண்மை வரலாற்றுடன் உணர்வின் வரிகளாக…,

திருமதி. **இலக்கியா தீபன்** அவர்களின் எண்ணத்திற்கும் செயலூக்கத்திற்கும் அமைவாக தேசக்காற்று ஆவணக்காப்பகத்தின் உருவாக்கத்தில் வெளியீடு காணும்,

# பிரிகேடியர் தீபன்

### களமுனைகளின் செருக்கள நாயகன்

## பொத்தகம் இறுவட்டுடன் ஒலிப்பேழை வெளியீட்டு விழா

**காலம் : 30.05.2026 (சனிக்கிழமை)** மாலை 16:00 மணிக்கு
இடம் : தமிழ் இசைக் கலாமன்றம் – ஒன்ராறியோ
**(THAMIL ISAI KALAAMANRAM OF ONTARIO)**
1120, TAPSCOTT ROAD, UNIT 3, SCARBOROUGH, ONTARIO, M1X 1E8, CANADA.

திருமதி.**லலிதாஞ்சனா கதிர்காமன்**
(அமிர்தாலயா நுண்கலைக் கல்லூரி)
திருமதி.**வனிதா குகேந்திரன்**
(கலைக்கோவில் நுண்கலைக் கல்லூரி)
திருமதி.**ஜீவிதா சிவதர்ஷன்**
(நாட்டிய வித்தியா)
செல்வி.**அஸ்வினி சத்தியமூர்த்தி**
(கலைக்கோவில் - ரோவில் வளாகம்)
செல்வி.**மேரியா நியூட்டன்**
(கலைக்கோவில் - நியூகாஸ்சல் வளாகம்)
ஆகிய ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் எழுச்சி நிகழ்வுகள்.

*… அழைத்து மகிழும் …*

## "பிரிகேடியர் தீபன்" மலராக்க குழுமம்

தொடர்புகளுக்கு :
அன்பழகி +1 (437) 225-1286 • தீபன் +1 (416) 450-6167 • விஜிதரன் +1 (647) 783-3466
மின்னஞ்சல் முகவரி : info@thesakkatru.com

தேசக்காற்று




பிரிகேடியர் தீபன்
களமுனைகளின் செருக்கள நாயகன்

# நூல் & பாடல் ஒலிப்பேழை

# வெளியீட்டு விழா

காலம் : 30.05.2026 (சனிக்கிழமை) பிற்பகல் 16:00 மணிக்கு

இடம் : தமிழ் இசைக் கலாமன்றம் – ஒன்ராறியோ

(THAMIL ISAI KALAAMANRAM OF ONTARIO)

1120 TAPSCOTT ROAD, UNIT 3, SCARBOROUGH, ON, CANADA, ONTARIO M1X 1E8.

திருமதி.**வனிதா குகேந்திரன்** (கலைக்கோவில் நுண்கலைக் கல்லூரி)
திருமதி.**ஜீவிதா சிவதர்ஷன்** (நாட்டிய வித்தியா)
திருமதி.**லலிதாஞ்சனா கதிர்காமன்** (அமிர்தாலயா நுண்கலைக் கல்லூரி)
செல்வி.**அஸ்வினி சத்தியமூர்த்தி** (கலைக்கோவில் – ரோவில் வளாகம்)
செல்வி.**மேரியா நியூட்டன்** (கலைக்கோவில் – நியூகாஸ்சல் வளாகம்)

ஆகிய ஆசிரியர்களின் நெறியாள்கையில் மாணவர்கள் வழங்கும் எழுச்சி கலை நிகழ்வுகளும்.

*வீரத்தளபதியின் நினைவுகளுடன் அனைவரையும்*
*உரிமை அன்புடன் அழைக்கின்றோம்.*

*... அழைத்து மகிழும் ...*

## “பிரிகேடியர் தீபன்” மலராக்க குழுமம்

தொடர்புகளுக்கு :
அன்பழகி +1 (437) 225-1286 • தீபன் +1 (416) 450-6167 • விஜிதரன் +1 (647) 783-3466
மின்னஞ்சல் முகவரி : info@thesakkatru.com




# எரிசக்தி அரசியலில் இஸ்ரேலின் புதிய வியூகம்!

# ஹார்முஸ்க்குப் பதிலாக நெதன்யாகு புதிய திட்டம்

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

16.04.2026

உலகளாவிய கச்சாய் எண்ணெய் விலை நாளுக்கு நாள் அதிகரித்து செல்கிறது. ஒரு பீப்பா 120 டொலரை தாண்டும் நிலையில் உள்ளது. உலகளாவிய எரிசக்தி நெருக்கடி குறித்து எச்சரிக்கை தொடர்ந்த வண்ணம் இருக்கிறது.

## நெதன்யாகுவின் புதிய எரிசக்திப் பாதை

மத்திய கிழக்கு எரிசக்தி அரசியலில் இஸ்ரேலின் புதிய வியூகம் தற்போது தெரிய வந்துள்ளது. ஹார்முஸ் நீரிணைக்கு முடிவு கட்ட நெதன்யாகு போடும் முக்கிய திட்டம் மூலம், வளைகுடா எண்ணெய் அரசியலை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கின் வரைபடத்தையே மாற்றி அமைக்கும் வல்லமை கொண்டதாக அமையும்.

கட்டார் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்து சவுதி அரேபியா, ஈராக், ஜோர்டான் மற்றும் இஸ்ரேல் வழியாக மத்திய தரைக்கடலுக்கு எண்ணெயை அனுப்பும் வளைகுடா எண்ணெய் மாற்றுப்பாதைக் குழாய்த் திட்டத்தை நெதன்யாகு அரசு அறிவித்துள்ளது.

இதன் மிகப்பெரிய முக்கியம்துவம் என்னவென்றால் ஹார்முஸ் நீரிணை, சூயஸ் கால்வாய் மற்றும் பாப் எல்-மண்டேப் வழித்தடம் ஆகியவற்றைத் தவிர்த்து, உலகளாவிய எரிசக்தி வழித்தடங்களை தன்வசப்படுத்த இஸ்ரேல் பெரும் முயற்சியை மேற்கொண்டுள்ளது. இது மூலோபாய ரீதியாக சக்தி வாய்ந்ததாக இருக்கும்.

குறிப்பாக இப்பகுதி முழுவதும் உள்ள கப்பல் போக்குவரத்துப் பாதைகள் முன்னெப்போதையும் விட அதிக பாதிப்புக்குள்ளாகும் இக்காலகட்டத்தில் இஸ்ரேலின் இந்த முயற்சி அரபு நாடுகளில் முக்கிய விடயமாக மாறியுள்ளது. பிராந்திய போர், கடல் முற்றுகைகள் அல்லது பிராந்திய பதற்றம் ஆகியவற்றால் பாதிக்கப்படக்கூடிய குறுகிய கடல்வழிப் பாதைகளைச் சார்ந்திருக்காமல், வளைகுடா உற்பத்தியாளர்களுக்கு இது ஒரு நேரடி மேற்கு நோக்கிய வழியை வழங்கக்கூடும் என இஸ்ரேல் கருதுகிறது.

ஆனால், இதன் புவியியல் அம்சங்களைப் போலவே அரசியலும் மிகப் பெரியது. இது போன்ற ஒரு வழித்தடம், ஒன்றுக்கொன்று முரண்படும் நலன்கள், பாதுகாப்பு அபாயங்கள் மற்றும் தீர்க்கப்படாத பிராந்திய பதட்டங்களைக் கொண்ட பல நாடுகளைக் கடக்க வேண்டியிருக்கும். மேலும், இஸ்ரேல் அரசியல் ரீதியாக மிகவும் சிக்கலானதாக மாறினால், அதற்குப் பதிலாக ஜோரடான் மற்றும் சிரியா வழியாக ஒரு மேற்கு நோக்கிய பாதையே பொருத்தம் என்றும் கூறப்படுகிறது.

எனவே, இந்த இஸ்ரேல் யோசனை வரைபடத்தில் சக்தி வாய்ந்ததாகத் தோன்றினாலும், அதை நிஜமாக்குவது மிகவும் சிக்கலானதாக இருக்கும். இந்த வழித்தடம் புவியியல் ரீதியாகப் பொருத்தமானதா என்பதல்ல கேள்வி அரசியல் அதை எப்போதாவது அனுமதிக்குமா என்பதுதான் முக்கியமான கேள்வியாக இருக்கிறது.

ஹார்முஸ் நீரிணை பாதை வழியாகச் செல்லும் நிலையில், அதன் முடக்கம் உலக பொருளாதாரத்திற்கு நேரடி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு வெளியிட்டுள்ள அதிரடியான “எரிசக்திப் பாதை” திட்டம் சர்வதேச அரசியலில் ஒரு புதிய விவாதத்தை கிளப்பியுள்ளது. ஈரான் மற்றும் இஸ்ரேல் இடையே போர் உச்சக்கட்டத்தை எட்டியுள்ள சூழலில், ஹார்முஸ் நீரிணை முடக்கப்பட்டிருப்பதால் ஏற்பட்டுள்ள எரிசக்தி நெருக்கடிக்கு தீர்வாக இந்தத் திட்டத்தை நெதன்யாகு முன்மொழிந்துள்ளார்.

ஈரானின் எரிவாயு உற்பத்தியில் பாரிய முடக்கம் ஏற்பட்டுள்ள நிலையில், கட்டாரின் “ராஸ் லஃபான்” (Ras Laffan) உள்ளிட்ட பாரசீக வளைகுடா நாடுகளின் எரிசக்தித் தளங்கள் மீது ஈரான் தனது பதிலடித் தாக்குதல்களை விரிவுபடுத்தியது. இது சர்வதேச எரிசக்திச் சந்தையில் பாரிய அழுத்தத்தைப் பிரயோகிக்கும் ஈரானின் திட்டமிட்ட வியூகமாகக் கருதப்படுகிறது. தற்போதைய கள நிலவரத்தின்படி, ஈரான் இனிமேலும் “விகிதாசார” பதிலடிகளை வழங்காமல், எதிரிகளின் தாக்குதல் எல்லையைத் தாண்டிய பாரிய தாக்குதல்களை முன்னெடுக்கும் புதிய வியூகத்திற்கு மாறியுள்ளது.

இஸ்ரேலின் இந்த திட்டம் ஈரானின் கட்டுப்பாட்டில் உள்ள ஹார்முஸ் நீரிணையைச் சார்ந்திருப்பதை நிரந்தரமாகத் தவிர்க்க வேண்டும் என்பதே இதன் முதல் இலக்கு. சவுதி அரேபியா போன்ற வளைகுடா நாடுகளின் எண்ணெய் மற்றும் எரிவாயுவை, அரேபிய தீபகற்பத்தின் வழியாக தரைவழியாகக் கொண்டு வந்து, இஸ்ரேலின் மத்திய தரைக்கடல் துறைமுகங்கள் வழியாக உலக நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது. இந்தக் குழாய்கள் அமைக்கப்பட்டால், உலக நாடுகளை அச்சுறுத்தும் கடல் வழித்தடத் தடைகளை என்றென்றும் ஒழித்துவிடலாம் என்று நெதன்யாகு சமீபத்திய உரையில் குறிப்பிட்டுள்ளார்.

ஹார்முஸ் நீரிணைக்கு முடிவு கட்ட நெதன்யாகு போடும் முக்கிய திட்டம் மூலம், வளைகுடா எண்ணெய் அரசியலை மட்டுமல்ல, ஒட்டுமொத்த மத்திய கிழக்கின் வரைபடத்தையே மாற்றி அமைக்கும் வல்லமை கொண்டதாக அமையும். மத்திய கிழக்கு எரிசக்தி அரசியலில் இஸ்ரேலின் புதிய வியூகம் தற்போது தெரிய வந்துள்ளது.




## வளைகுடா எரிசக்திப் போர்:

வளைகுடாவில் முழுமையான எரிசக்திப் போராக மாறிய ஈரான் நெருக்கடி தற்போது சிறிது தளர்ந்துள்ளது. ஈரானின் “சவுத் பார்ஸ்” (South Pars) இயற்கை எரிவாயு வயல் மீதான இஸ்ரேலின் தாக்குதலைத் தொடர்ந்து, மத்திய கிழக்குப் போரானது உத்தியோகபூர்வமாக ஒரு எரிசக்தி உட்கட்டமைப்புப் போராக உருவெடுத்தது. இராணுவ இலக்குகளைத் தாண்டி, பொருளாதார முதுகெலும்புகளைக் குறிவைக்கும் புதிய வியூகத்தை இஸ்ரேல் கையில் எடுத்துள்ளது.

உலகின் சுமார் இருபது சதவீத எண்ணெய் மற்றும் எரிவாயு

## ஹார்முஸ் முட்டுக்கட்டை தொடருமா?

ஈரான் அமெரிக்கா மோதலின் மிக தீவிரமான மற்றும் உடனடி தாக்கம் உலகளாவிய எரிசக்தி துறையில் வெளிப்பட்டுள்ளது. உலகின் மிக முக்கியமான கடல் வர்த்தக நரம்பு எனக்

கருதப்படும் ஹார்முஸ் நீரிணை, செயல்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, உலகளாவிய பணவீக்கம் கட்டுக்கடங்காத அளவிற்கு உயர்ந்து, ஐரோப்பாவில் எரிபொருள் விலை செலவுகள் அதிகரித்துள்ளன. ஆசிய நாடுகளில் உற்பத்தி துறைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மேலும் வளர்ந்து வரும் நாடுகள் கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்கின்றன.

நெதன்யாகுவின் இந்தத் திட்டம் நிறைவேறினால், இஸ்ரேல் ஒரு வெறும் நாடாக மட்டும் இருக்காது. உலக எரிசக்தி விநியோகத்தின் ஒரு மிகமுக்கியமான “மையமாக” மாறும். தற்போது உலக எண்ணெய் விநியோகத்தில் ஐந்தில் ஒரு பங்கு ஹார்முஸ் நீரிணை வழியாகவே செல்கிறது. ஈரான் இந்தப் பாதையை அடிக்கடி முடக்குவதால் ஏற்படும் விலை ஏற்றத்தை இத்திட்டம் தடுக்கும் என இஸ்ரேல் அரசு தெரிவித்துள்ளது.




அத்துடன் இந்த திட்டத்தின் மூலம் இஸ்ரேல் மற்றும் சவுதி அரேபியா இடையிலான உறவை மேலும் பலப்படுத்தும் ஒரு பொருளாதாரப் பாலமாக அமையும். சவுதி அரேபியா ஏற்கனவே தனது சொந்த கிழக்கு-மேற்கு குழாய் பாதையை மீண்டும் செயல்படுத்தி வருகிறது. இருப்பினும், இஸ்ரேல் வழியாக ஒரு புதிய பாதையை அமைப்பது என்பது மிகப்பெரிய ராஜதந்திர முடிவாகும்.

ஆனாலும் இவ்வளவு நீண்ட தூரக் குழாய் பாதைகளை ஈரானிய ஆதரவு குழுக்களின் தாக்குதல்களில் இருந்து பாதுகாப்பது ஒரு பெரிய சவாலாக இருக்கும். சவுதி அரேபியா தற்போது எவ்விதமான நேரடி அரசியல் அறிக்கைகளையும் வெளியிடாமல், தனது பொருளாதாரப் பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு உள்கட்டமைப்பை வலுப்படுத்துவதிலேயே முழு கவனத்தையும் செலுத்தி வருகிறது.

சவுதி அரேபியா தற்போது தனது சொந்த “யான்பு” வழித்தடத்தையே (East-West Pipeline) தனது பிரதான பாதுகாப்புக் கவசமாகக் கருதுகிறது. நெதன்யாகுவின் திட்டத்தைச் சவுதி அரசு கவனமாகப் பரிசீலித்தாலும், போருக்குப் பிந்தைய நிலையான அரசியல் சூழல் ஏற்பட்டால் மட்டுமே இது குறித்து அதிகாரப் பூர்வமான “ஆம்” என்ற பதில் கிடைக்க வாய்ப்புள்ளது என ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போதைய ஈரான் மீதான இராணுவ நடவடிக்கையின் பின்னணி வெறும் பாதுகாப்பு அச்சுறுத்தல்களைத் தாண்டி, ஒரு விரிவான புவிசார் அரசியல் வியூகத்தின் பகுதியாகவே பார்க்கப்படுகிறது. டொனால்ட் ட்ரம்ப் தலைமையிலான அமெரிக்க நிர்வாகம், இந்த தாக்குதலின் மூலம் சீனாவின் எரிசக்தி ஆதாரங்களை கட்டுப்படுத்தவும், மத்திய கிழக்கில் புதிய அரசியல் ஒழுங்கை உருவாக்கவும், மேலும் இஸ்ரேலின் பிராந்திய ஆதிக்கத்தை உறுதி செய்யவும் முயன்றதாக மதிப்பிடப்படுகிறது.

ஆனால், இந்த வியூக இலக்குகள் பல முக்கிய தவறான கணிப்புகளின் அடிப்படையில் அமைந்திருந்தன. குறிப்பாக, ஈரானின் புவியியல் அமைப்பு மலைப்பகுதிகள் மற்றும் இயற்கை பாதுகாப்பு கட்டமைப்புகள் ஒரு நேரடி தரைபடையெடுப்பை மிகவும் கடினமாக்குகின்றன. மேலும், ஈரான் தனது உள்நாட்டு இராணுவ திறன்களைப் பயன்படுத்தி நீண்டகால மோதலை தாங்கக்கூடிய நிலையிலும் உள்ளது.

## உலகப் பொருளாதார நெருக்கடி:

ஹார்முஸ் நீரிணையை தற்போது அமெரிக்க மூட முடிவு செய்துள்ளதால் உலகப் பொருளாதாரத்திற்கு பாரிய பாதிப்புகள் ஏற்பட்டுள்ளது. இதனை உடனடியாகத் திறக்காவிடில் நீண்டகால உலகளாவிய நெருக்கடி உருவாகும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

அதேவேளை ஹார்முஸ் நீரிணையை மீண்டும் திறக்கத் தவறினால், ஐரோப்பா மிக மோசமான எரிசக்தி விநியோக நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அத்தோடு, நிலவும் சூழலைக் கருத்திற்கொண்டு, தமது எரிசக்தித் தேவைகளைப் பூர்த்தி செய்ய அணுசக்தி தொழில்நுட்பத்தில் மீண்டும் முதலீடு செய்வது குறித்து சர்வதேச நாடுகள் கவனம் செலுத்தி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பிரச்சினைக்கு உள்ள ஒரே நடைமுறைச் சாத்தியமான தீர்வு, ஈரானின் அனுமதியுடன் இந்த நீரிணையை மீண்டும் திறப்பது மட்டுமே சாத்தியம் ஆகும்.

அத்தோடு, செங்கடலில் ஹூவுதி கிளர்ச்சியாளர்களின் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வர்த்தகக் கப்பல்களைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்வது எவ்வளவு கடினம் என்பது ஏற்கனவே நிரூபணமாகியுள்ளது. செங்கடல் பகுதியிலும் ஆளில்லா விமானங்கள், ஏவுகணைகள் மற்றும் வேகமான தாக்குதல் படகுகள் மூலம் எழும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் பெருமளவிலான கப்பல்களைப் பாதுகாப்பது சாத்தியமற்றது என தெரிவிக்கப்படுகிறது.

ஹார்முஸ் நீரிணை இன்று திறக்கப்பட்டாலும் கூட, ஏற்கனவே அங்கு உருவாகியுள்ள பாரிய கப்பல் போக்குவரத்து நெரிசல் காரணமாக, விநியோகச் சங்கிலி இயல்பு நிலைக்குத் திரும்ப நீண்ட காலம் எடுக்கும் என்றும் எச்சரிக்கப்படுகிறது.






– சு.லோஜிதன் –

24.04.2026

# தமிழ்மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும்

“யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்றார் மகாகவி பாரதியார். ஒரு மனிதனுக்கு இரு கண்கள் போன்றது மொழியும் நாடும். தான் பிறந்த மண்ணின் மீது காட்டும் பற்று ‘நாட்டுப்பற்று’ என்றும், தான் பேசும் தாயின் மொழியின் மீது காட்டும் பற்று ‘மொழிப்பற்று’ என்றும் அழைக்கப்படுகிறது. தமிழர்களாகிய நமக்கு இவை இரண்டும் பிரிக்க முடியாத உயிர்நாடிகள். தமிழ் மொழிப் பற்றும் நாட்டுப்பற்றும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து நமது அடையாளத்தைத் தீர்மானிக்கின்றன.

மொழி என்பது வெறும் தகவல் தொடர்பு கருவி மட்டுமல்ல; அது ஒரு இனத்தின் ஆன்மா மற்றும் பண்பாட்டின் பிரதிபலிப்பு. தமிழ்மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு மேலான நீண்ட வரலாற்றைக் கொண்டது. “தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி” என்று தமிழின் பழமை போற்றப்படுகிறது. ஒரு தமிழன் தன் மொழியை நேசிப்பதன் மூலம் தனது முன்னோர்களின் அறிவுச் சுரங்கத்தையும், அறநெறிகளையும் உள்வாங்கிக் கொள்கிறான்.

திருக்குறள், சங்க இலக்கியங்கள், சிலப்பதிகாரம் போன்ற பொக்கிஷங்கள் தமிழின் பெருமையை உலகுக்குப் பறைசாற்றுகின்றன. பிற மொழிகளின் துணை இன்றித் தனித்து இயங்கும் ஆற்றல் கொண்ட செம்மொழியான தமிழைப் போற்றுவது ஒவ்வொரு தமிழனின் கடமையாகும். மொழிப்பற்று என்பது பிற மொழிகளை வெறுப்பது அல்ல, மாறாகத் தன் தாயை நேசிப்பதைப் போலத் தன் தாய்மொழியைத் தலையாயதாகக் கருதுவதாகும்.

“பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனி சிறந்தனவே” என்பது பாரதியின் வாக்கு. நாம் வாழும் நிலம், சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு என அனைத்தையும் வழங்கும் தாய்நாட்டை நேசிப்பது ஒவ்வொரு குடிமகனின் அறம். நாட்டுப்பற்று என்பது நாட்டின் எல்லைகளைக் காப்பது மட்டுமல்ல, நாட்டின் வளத்தைப் பேணுவதும், சட்டங்களை மதிப்பதும், சக மனிதர்களிடம் சகோதரத்துவத்துடன் பழகுவதும் ஆகும்.

இந்தியா என்ற ஒருமைப்பாட்டிற்குள் தமிழ்நாடு என்ற தனித்துவமான கலாச்சாரம் நிலைபெற்றுள்ளது. இந்திய விடுதலைப் போரில் தமிழகத்தின் பங்கு அளப்பரியது. வ.உ.சிதம்பரனார், சுப்பிரமணிய சிவா, திருப்பூர் குமரன் போன்ற எண்ணற்ற தியாகிகள் தங்கள் இன்னுயிரைத் தந்து ஈட்டிய சுதந்திரத்தைப் பேணிக் காப்பதே உண்மையான நாட்டுப்பற்றாகும்.

தமிழர்களைப் பொறுத்தவரை மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் வெவ்வேறானவை அல்ல. பாரதியார் தமிழைப் போற்றிப் பாடிய அதே வேகத்தில்தான் “பாரத தேசம்” பற்றியும் பாடினார். விடுதலைப் போராட்டக் காலத்தில் தமிழ் மொழியே மக்களை ஒன்றிணைக்கும் கருவியாகத் திகழ்ந்தது. “தமிழ் வாழ்க” என்ற முழக்கம் “வந்தே மாதரம்” என்ற முழக்கத்திற்கு ஈடாக ஒலித்தது. மொழி என்பது ஒரு நிலப்பரப்பை நேசிக்கக் கற்றுக்கொடுக்கிறது. தமிழ் இலக்கியங்கள் நாட்டை “தாயாக” உருவகப்படுத்திப் போற்றுகின்றன.

நவீன உலகில் ஆங்கிலத்தின் ஆதிக்கம் அதிகரித்துள்ள நிலையில், நம் தாய்மொழியாம் தமிழைப் பிழையின்றிப் பேசவும் எழுதவும் பழகுவதே நாம் தமிழ்மொழிக்குச் செய்யும் பெரும் தொண்டாகும். நம் வீட்டுச் சுப நிகழ்ச்சிகளிலும், அன்றாட உரையாடல்களிலும் தமிழுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறைகளில் தமிழைப் புகுத்துவதன் மூலம் காலத்திற்கு ஏற்ப மொழியை வளர்க்க வேண்டும்.

இன்று எல்லைகளில் நின்று போரிடுவது மட்டுமே நாட்டுப்பற்று அல்ல. நாட்டைத் தூய்மையாக வைத்திருப்பது, நீர் நிலைகளைப் பாதுகாப்பது, வரி செலுத்துவது மற்றும் ஜனநாயகக் கடமைகளைச் சரியாக ஆற்றுவதும் சிறந்த நாட்டுப்பற்றே ஆகும். தேசத்தின் ஒருமைப்பாட்டைச் சிதைக்கும் எண்ணங்களுக்கு இடமளிக்காமல், வேற்றுமையில் ஒற்றுமை காணும் பண்பை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**முடிவுரை**

மொழி ஒரு இனத்தின் அடையாளம் நாடு அந்த இனத்தின் இருப்பிடம். மொழி அழிந்தால் இனம் அழியும் நாடு வீழ்ந்தால் மக்கள் அடிமையாவார்கள். எனவே, “தமிழை வளர்ப்போம், பாரதத்தைப் போற்றுவோம்” என்ற கொள்கையை ஒவ்வொரு தமிழனும் தன் நெஞ்சில் ஏந்த வேண்டும். மொழியின் மீது கொண்ட பற்று நம்மை அறிஞர்களாக்கும், நாட்டின் மீது கொண்ட பற்று நம்மைச் சிறந்த குடிமக்களாக்கும். இவ்விரண்டு பண்புகளையும் இரு கண்களாகக் கொண்டு செயல்பட்டால், நம் வாழ்வும் சமுதாயமும் மேன்மையடையும் என்பதில் ஐயமில்லை.

# மனிதம் தேடும் உலகம்



இயந்திரச் சக்கரம் சுழலும் உலகில்
இதயத் துடிப்புகள் கேட்கவில்லை...
பணத்தின் பின்னே ஓடும் கால்கள்
பாசத்தின் வாசலை மிதிக்கவில்லை!
ஆயிரம் உறவுகள் முகநூலில் – ஆனால்
அருகில் அமர ஆளில்லை...
பதிவுகள் போடும் ‘விருப்பக்’ குறியில் (Likes)
பகிர்ந்து கொள்ளும் கவலையில்லை!
உதிரம் சிந்தும் சாலையோரம்
உதவக் கரங்கள் நீளவில்லை...
புகைப்படம் எடுக்கும் கேமரா முன்னே
புதைந்து போனது மனிதாபிமானம்!
சாதி அழுக்கில் சாயம் பூசி
மதத்தின் பெயரால் மனிதம் கொன்று
சுவர்கள் எழுப்பி வாழ்வதற்கோ
இயற்கை நம்மைப் படைத்தது?
வாடிய பயிரைக் கண்டபோது
வாடிய வள்ளலார் வாழ்ந்த நிலம்...
பசித்தவனுக்குப் பகிரும் சோற்றில்
பரம்பொருள் காணும் பண்பு எங்கே?
ஆறாம் அறிவின் உச்சம் தொட்டும்
அன்பின் இலக்கணம் தொலைத்து விட்டோம்...

– சு.லோஜிதன் –

விண்ணைத் தாண்டிச் செல்லும் மனிதன்
மண்ணில் மனிதனைத் தேடுகிறான்!
திரும்பி வா மனிதா...
இதயத்தில் ஈரம் கொஞ்சம் வை!
அடுத்தவர் கண்ணீர் துடைப்பதில் தான்
உன் ‘மனிதம்’ உயிர்த்திருக்கும்



# ஹங்கேரிய விக்டர் ஓர்பன் தோல்வி: புதிய தலைமையின் வரலாற்று எழுச்சி!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

15.04.2026

ஹங்கேரியின் நீண்டகால தலைவரான விக்டர் ஓர்பனின் பதினாறு ஆண்டுகால ஆட்சி, எதிர்க்கட்சியான டிஸ்ஸா (Tisza) கட்சியின் தலைவர் பீட்டர் மாக்யாரிடம் (Péter Magyar) தோல்வியுற்று முடிவுக்கு வந்துள்ளது. மிதவாத-வலதுசாரி போட்டியாளரான பீட்டர் மாக்யார் தலைமையிலான ஐரோப்பிய ஒன்றிய ஆதரவுப் பாதைக்கு ஹங்கேரியர்கள் வரலாறு காணாத எண்ணிக்கையில் வாக்களித்ததால், 16 ஆண்டுகளுக்குப் பிறகு ஓர்பன் அதிகாரத்தை இழந்தார்.

ஓர்பன் தனது தோல்வியைப் வலிமையானது (Painful) என வர்ணித்ததோடு, தனது கட்சி காயங்களை ஆற்றிக்கொள்ளும் காலம் இது எனத் தெரிவித்துள்ளார்.

2026 ஏப்ரல் மாதம் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில், ஹங்கேரியின் நீண்டகால பிரதமரான விக்டர் ஓர்பன் தோல்வியடைந்தமை ரஷ்யா, அமெரிக்கா தரப்பில் பலத்த அரசியல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.

தேர்தல் முடிவுகளின்படி தோல்வியை ஏற்ற விக்டர் ஓர்பன் அரசு ரஷ்யாவுடன் தொடர்புடைய கோப்புகளை அழிப்பதாக சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

45 வயதான பீட்டர் மாக்யார் தலைமையிலான டிஸ்ஸா கட்சி, 199 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பெற்று சாதனை வெற்றி பெற்றுள்ளது. விக்டர் ஓர்பன் தனது தோல்வியை ஒப்புக்கொண்டு, எதிர்க்கட்சித் தலைவருக்கு வாழ்த்துத் தெரிவித்து உள்ளார்.




2010 முதல் தொடர்ந்து ஆட்சியில் இருந்த ஓர்பனின் ஃபைடெஸ் (Fidesz) கட்சியின் நீண்ட கால ஆட்சி முடிவுக்கு வந்தது. 1990-களில் கம்யூனிச வீழ்ச்சிக்குப் பிறகு, அதிக வாக்குப்பதிவாக சுமார் 79.5% பதிவான தேர்தல் இதுவாகும்.

## ஓர்பனை வீழ்த்திய நபர் யார்?

ஓர்பனின் ஃபிடெஸ் கட்சியின் முன்னாள் உறுப்பினரான மாஜார், ஆற்றல்மிக்க அரசியல்வாதி ஆவார். தேர்தல்கால பிரசாரத்தின் போது ஒரு நாளைக்கு நான்கு முதல் ஆறு பேரணிகளில் கலந்துகொண்டு மக்கள் மத்தியில் பிரபல்யமானார். விக்டர் ஓர்பனை போலவே, இவரும் ஒரு பழமைவாத தேசியவாதி. எந்தவொரு அரசியல் நிகழ்விற்கும் தன்னுடன் ஒரு ஹங்கேரியக் கொடியை எடுத்துச் செல்லும் வழக்கம் கொண்டவர்.

ஹங்கேரி ஒரு சமூகப் பழமைவாத நாடு. ஆட்சியில் இருந்த ஓர்பனை புறக்கணிப்பதைப் பற்றி பரிசீலிப்பதற்கு முன்பு, ஹங்கேரிய வாக்காளர்கள் ஒன்றுபடுவதற்கு ஒரு மிதவாத - வலதுசாரி வேட்பாளர் தேவைப்பட்டார் என்று கூறப்படுகிறது.

முக்கியமாக ஓர்பனின் குடியேற்ற எதிர்ப்பு மனப்பான்மைகள் புதிய அரசாங்கத்தின் கீழும் தொடரும் என்று எதிர்பார்க்கலாம்.

இருப்பினும், ரஷ்யாவுடனான உறவுகளை பலவீனப்படுத்துவது மற்றும் ஐரோப்பாவுடன் உறவுகளை மீண்டும் கட்டியெழுப்புவது உள்ளிட்ட விரிவான சீர்திருத்தங்களை புதிய அரசின் தலைவர் மாஜார் உறுதியளித்துள்ளார். தற்போதைக்கு, பெரும்பாலான ஹங்கேரியர்கள் தங்கள் முன்னுரிமைகள் உள்நாட்டு விஷயங்களே என்று கூறுகிறார்கள். தங்கள் நாட்டின் சரிந்து வரும் பொருளாதாரம் மற்றும் பொதுச் சேவைகளை மேம்படுத்துவது, பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவைக் குறைப்பது, என செய்வதற்கு நிறைய இருக்கிறது.



**புட்டினின் தோழரும், ட்ரம்பின் நண்பருமான ஹங்கேரியின் நீண்டகால தலைவரான விக்டர் ஓர்பனின் பதினாறு ஆண்டு கால ஆட்சி முடிவுக்கு வந்துள்ளது. அவரின் தோல்வி புட்டி-னுக்கு மட்டுமல்ல, ட்ரம்ப் ஆட்சிக்கும் பெரும் இழப்பாகும்.**

## ஓர்பன் தோல்வியின் முக்கிய தாக்கங்கள்:

இதேவேளை ஹங்கேரியின் புதிய அரசாங்கத்தை அமைக்குமாறு கேட்கும் வரை மாஜார் அதிகாரப்பூர்வமாக பிரதமராக மாட்டார். இது சுமார் ஒரு மாதத்தில் நடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஓர்பன் தோல்வியின் முக்கிய தாக்கங்கள் உலகளாவிய பொருளாதார விளைவுகளை உருவாக்கி வருகிறது. ரஷ்ய அதிபர் புடின் மற்றும் முன்னாள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆகியோருடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த ஓர்பனின் வீழ்ச்சி, உலக அரசியலில் முக்கியத் திருப்பமாகக் கருதப்படுகிறது.

ஐரோப்பிய ஒன்றிய உறவில் நீண்ட காலமாக மோதல் போக்கைக் கடைப்பிடித்து வந்த ஓர்பன், தற்போதைய தோல்வியால், ஹங்கேரியின் கொள்கைகளில் மாற்றம் வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய ஆட்சி மாற்றத்துடன் இந்த மாற்றம் நிகழ வாய்ப்பு உள்ளது. வெற்றி பெற்ற பீட்டர் மாக்யார் ஹங்கேரியின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்ற பிறகு ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைந்து பணியாற்ற உள்ளார்.

## புட்டினுக்கு பெரும் இழப்பு

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு மிகவும் நெருக்கமான ஐரோப்பியத் தலைவராக ஓர்பன் இருந்தார். 2022ஆம் ஆண்டு ரஷ்யாவின் படையெடுப்பிற்குப் பிறகு தற்காத்துக் கொள்ளும் உக்ரைனுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியையும் அவர் தடுத்திருந்தார்.

1989இல் அப்போதைய கம்யூனிஸ்ட் ஹங்கேரியில், சோவியத் யூனியனின் இறுதிக் கட்டத்தில் அவர் ஆற்றிய உணர்ச்சிமிக்க உரையில், ரஷ்யர்களைத் வெளியேறுமாறு கூறியதன் மூலம் அவர் புகழ் பெற்றார். 1956இல் ஹங்கேரியில் நடந்த கம்யூனிஸ்ட் எதிர்ப்பு எழுச்சியின் போது, புடாபெஸ்ட் முழுவதும் முதன்முதலில் எதிரொலித்த ஒரு சொற்றொடர் இதுவாகும். ஆனால், பல ஆண்டுகளாக, ஓர்பன் தனது அரசியல் நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டார். அவர் மேலும் வலதுசாரியாக நகர்ந்து, ஒரு ரஷ்யாவுடன் நெருக்கமான உறவுப் போக்கைக் கடைப்பிடித்தார். ஓர்பனுக்கு இது ஒரு முரண்பாடான முழுச் சுழற்சியாகும்.

இந்தத் தேர்தல் பிரசாரம் முழுவதும், ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடனான அவரது நீண்டகால, நெருக்கமான உறவால் சீற்றமடைந்த விமர்சகர்களால், அவரது இளமைக்கால முழக்கம் அவரை நோக்கியே திருப்பி வீசப்பட்டது. ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் ஒரு கூட்டாளியைக் கொண்டிருப்பதால் பயனடைந்த புட்டினுக்கு, இந்த ஆட்சி மாற்றம் ஓர் உண்மையான இழப்பாகும்.

உக்ரேன் மீதான ரஷ்யாவின் முழு அளவிலான படையெடுப்பிற்குப் பிறகு, ஓர்பன் ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடைத் திட்டங்களைத் தாமதப்படுத்தினார். மேலும், உக்ரேனுக்கு தேவையான ஒரு பெரிய ஐரோப்பிய ஒன்றியக் கடனையும் அவர் தடுத்து வந்தார்.

தற்போது ஓர்பனின் தோல்வி உக்ரேனுக்கு பெரும் சாதகமாக அமைந்துள்ளது. அதிபர் விலோடிமிர் ஜெலென்ஸ்கி புதிய தலைவர் மாஜாருக்கு உடனடியாக வாழ்த்துத் தெரிவித்தார். இணைந்து ஆக்கப்பூர்வமான பணிகளை மேற்கொள்ள ஆவலுடன் இருப்பதாக தெரிவித்தார்.

## அமெரிக்காவில் அதிர்வலை:

அதேவேளை ஹங்கேரியப் பிரதமர் விக்டர் ஓர்பனின் தோல்வியானது அமெரிக்காவிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது.





ட்ரம்ப் அரசும் தனது குடியேற்ற எதிர்ப்பு நிலைப்பாட்டிற்காக உலகளாவிய வலதுசாரிகளிடையே ஒரு சின்னமாக மாறிய ஓர்பானை நீண்ட காலமாக ஆதரித்து வந்தது.

அமெரிக்க ஜனாதிபதியின் செயல் போன்றே, ஹங்கேரியத் தலைவர் தனது கட்சியை 16 ஆண்டுகளாக ஆட்சியில் தக்கவைப்பதற்காக, அரசாங்கத்தின் அதிகாரங்களைப் பயன்படுத்தி ஊடகங்கள், நீதித்துறை மற்றும் தேர்தல் முறைகளைத் தன் பக்கம் திருப்பிய விதத்துடன் வியக்கத்தக்க வகையில் ஒத்திருக்கிறது.


அதேவேளை டிரம்பின் மறுதேர்தல் முயற்சிக்கு ஓர்பன் ஆதரவளித்தார். ஈரான் போர் நடந்துகொண்டிருந்த நிலையிலும், கடந்த வாரம் துணை ஜனாதிபதி ஜே.டி. வேன்ஸ் பிரசாரம் செய்ய புடாபெஸ்டுக்கு வந்தார். நெருக்கமான உறவை கொண்டிருந்த ஓர்பனின் தோல்வி உடனடி தாக்கங்களை அமெரிக்காவிலும் ஏற்படுத்தியது.

ஹங்கேரியப் பிரதமர் விக்டர் ஓர்பனின் தோல்வியை அமெரிக்க ஜனநாயகக் கட்சியினர் கொண்டாடினர். அதேவேளையில், அதிபர் டொனால்ட் டிரம்ப் ஆதரித்த ஓர்பனின் தோல்விக்கு குடியரசுக் கட்சி சகாக்களும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

நீண்ட காலமாக டிரம்ப், ஓர்பனை ஆதரித்து வந்தார். கடந்த வாரம் ஹங்கேரியில் நடந்த ஒரு பிரச்சாரக் கூட்டத்திற்கு அமெரிக்கத் துணை அதிபர் ஜே.டி. வேன்ஸ் சென்றிருந்தார்.

உக்ரைனில் ரஷ்யா நடத்தும் போர் உட்பட பல்வேறு விவகாரங்களில் ஓர்பன் ஐரோப்பிய ஒன்றியத்துடன் கருத்து வேறுபாடு கொண்டு வருகிறார். அத்துடன் அவர் தன்னைத்தானே தாராளவாதமற்ற ஜனநாயகம் என்று விவரித்துக் கொள்வது, குடியேற்றத்திற்கு எதிரான கடுமையான நிலைப்பாடு, உலகளாவிய நிறுவனங்கள் மீதான பகைமை, ஊடகங்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மீதான தாக்குதல்கள் உள்ளிட்ட டிரம்ப் முன்வைத்த கொள்கைகளைப் பிரதிபலிக்கிறது.

2016ஆம் ஆண்டு அதிபர் தேர்தலில் டிரம்ப் போட்டியிட்டபோது, அவரை ஆதரித்த முதல் ஐரோப்பியத் தலைவர் ஓர்பன் ஆவார். ஓர்பன் வெற்றி பெற்றால் ஹங்கேரியின் பொருளாதாரத்தை வலுப்படுத்த அமெரிக்காவின் முழுப் பொருளாதார வலிமையையும் பயன்படுத்த தனது நிர்வாகம் தயாராக இருப்பதாக டிரம்ப் தெரிவித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது.




**நாம் ஒன்றுபட்ட மக்களாக – ஒரே சக்தியாக – அணிதிரண்டு, எமது எதிரியின் சவாலை எதிர்கொள்ள வேண்டும்.**

–தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்–

**www.sangathamil.com**



# மக்கள் யுத்தமும், புரட்சிகர சித்தாந்தமும்

கெரில்லா வடிவமான ஆயுதப் போராட்டத்தை மக்கள் யுத்தம் என முதலில் வர்ணித்தவர் மாவோ. வெகுசன அரங்கில், வெகுசனப் பங்களிப்போடு நடத்தப்படும் போர் என்பதால், இப்போராட்ட முறை மக்கள் யுத்தமெனக் கொள்ளப்படுகிறது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க விடுதலைப் போராட்ட அனுபவங்களை நாம் பரிசீலிக்குமிடத்து, கெரில்லாப் போர்முறைத் திட்டத்தின் வெற்றிக்கு மக்களின் பங்களிப்புத்தான் மூலமாக இருந்தது என்பதை அறிந்து கொள்ளலாம். போராட்ட களத்தில் மக்கள் நேரடியாகக் குதிக்கும் பொழுதே கெரில்லா வடிவ ஆயுதப் போராட்டம் மக்கள் யுத்தமாகப் பரிணமிக்கிறது.



கெரில்லாப் போரின் ஆரம்ப கட்டங்களில் மக்கள் வெறும் பார்வையாளர்களாக, அவதானிகளாக மட்டும் இருந்து வருவர். காலப் போக்கில் அவதானிகள் என்ற நிலையிலிருந்து அனுதாபிகளாக, ஆதரவாளர்களாக மக்களின் நிலைப்பாடு மாறுகிறது. ஆனால் இந்த அனுதாபமும், ஆதரவும் நேரடிப் பங்களிப்பாக மாற்றம் கொள்ளும் பொழுதுதான் போராட்டத்தில் ஒரு புதிய திருப்பம் ஏற்படுகிறது் உண்மையான மக்கள் போராட்டம் உதயமாகிறது.

ஆதரவு நல்கும் நிலையிலுள்ள வெகுசனத்தை ஆயுதப் போராட்டத்தில் நேரடிப் பங்குதாரர்களாக மாற்றுவதென்பது இலகுவான காரியமல்ல. இந்தக் கைங்கரியத்தை எந்த ஒரு விடுதலை இயக்கமும் உடனடியாக, எடுத்த எடுப்பில் சாதித்துவிட முடியாது. இது நீண்ட காலக் கடின உழைப்பின் மூலம் படிப்படியாகச் சாதிக்க வேண்டிய விசயம். இது மக்களின் அரசியல் விழிப்புணர்வை, தேசாபிமானவுணர்வை தட்டி எழுப்புவதில் தங்கியிருக்கிறது. இங்குதான் ஒரு புரட்சிகர விடுதலைச் சித்தாந்தத்தின் பங்கு முக்கியமானது.

புரட்சிகர சித்தாந்தம் என்பது வெறும் கற்பனாவாதத்திலிருந்து பிறப்பதல்ல. ஏற்கனவே எழுதி வைக்கப்பட்ட தத்துவார்த்த நூல்களிலிருந்து பெறப்படுவதல்ல. புரட்சிகர சித்தாந்தமானது வாழ்வனுபவத்திலிருந்து பிறப்பெடுக்கிறது. வாழ்வோட்டத்தின் நிதர்சனத்திலிருந்து கருக்கொள்கிறது. நாளாந்த நடைமுறைப் பிரச்சினைகளிலிருந்து பிரசவம் கொள்கிறது. புரட்சிகர சித்தாந்தமானது புரட்சியின் மையத்திலிருந்து, புரட்சியின் யதார்த்த களத்திலிருந்து பிரவாகமெடுக்கிறது.

உலக விடுதலை இயக்கங்கள் பல மார்க்சீய-லெனினியத்தைத் தமது தத்துவார்த்த வழிகாட்டியாகத் தழுவிக் கொண்ட போதும், போராட்ட களத்தில் பெறப்பட்ட அனுபவத்தின் அடிப்படையிலேயே தமது புரட்சிகர சித்தாந்தத்தை நெறிப்படுத்திக் கொண்டன. மொசாம்பிக் விடுதலை இயக்கத் தலைவர் சமோரா மாசேல் சொல்கிறார்:


“செயலில் இருந்தே சிந்தனை தோன்றுகிறது. நாம் ஆரம்பத்தில் மக்களுக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க விழைந்தோம். ஆனால், மக்களே தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பின்புதான் அனுபவ வாயிலாக அறிந்து கொண்டோம். விடுதலைப் போராட்ட களத்தில் நேரடியாகப் பங்களிக்காமல் மக்கள் தங்களை விடுவித்துக் கொள்ள முடியாது என்பதை நாம் உணர்ந்து கொண்டோம். நாம் அனுபவ வாயிலாக நிறையக் கற்றறிந்தோம். நாம் தவறுகள் இழைப்பதுண்டு. ஆனால் அந்தத் தவறுகளிலிருந்து நாம் எம்மைத் திருத்திக் கொண்டோம். நாம் வெற்றிகளும் ஈட்டுவதுண்டு. அந்த வெற்றி அனுபவங்களிலிருந்து எம்மை மேலும் செழுமைப்படுத்திக் கொண்டோம். இவ்விதம் செயற்பாட்டு அனுபவங்களிலிருந்தே எமது விடுதலைச் சித்தாந்தம் பரிணாமம் பெற்றது. இவ்விதம் நாம் வரித்துக் கொண்ட எமது புரட்சிகர சித்தாந்தம், ஏற்கனவே வேறொரு சூழ்நிலையில், வேறொரு காலத்தில், வேறொரு இடத்தில் செயற்பாட்டுத் தத்துவமாக நெறிப்படுத்தப்பட்டிருக் கிறது என்பதை நாம் பின்பு அறிய முடிந்தது. அந்தத் தத்துவம்தான் மார்க்சீய-லெனினியம்.”

புரட்சிகர செயற்பாட்டிற்கு ஒரு பொதுவான சித்தாந்த வழிகாட்டியாகவே மார்க்சீய-லெனினியத்தைப் புரட்சிகர இயக்கங்கள் தழுவிக் கொள்கின்றன. ஆயினும் தமது பிரத்தியேக வரலாற்றுச் சூழ்நிலைக்கேற்ப தமது தனித்துவ யதார்த்த வாழ்வனுபவங்களின் அடிப்படையிலேயே ஒவ்வொரு விடுதலை இயக்கமும் தனது புரட்சிகர சித்தாந்தத்தை உருவாக்கிக் கொள்கிறது.

மார்க்சீயம் ஒரு சமூக, வரலாற்று விஞ்ஞானம் என்ற ரீதியில் சமுதாயக் கட்டமைப்புப் பற்றியும், மனித வரலாற்றின் போக்குப் பற்றியும் உலகளாவிய விஞ்ஞான விதிகளை எடுத்தியம்புகிறது. இந்த விஞ்ஞானக் கோட்பாடுகள் சமூகப் புரட்சிவாதிகளுக்கு இன்றியமையாத தத்துவ வழிகாட்டியாக விளங்குகின்றன. பொருள் உற்பத்தி வடிவத்தினை நிச்சயிக்கவும், சமூக, வர்க்க முரண்பாடுகளை ஆய்வு செய்யவும், சமுதாயப் புரட்சிக்கான செயற்திட்டத்தை வகிக்கவும் மார்க்சீய சமூகவியல் அடிப்படை அறிவியல் கோட்பாடுகளைத் தந்துதவுகிறது. ஆயினும், அதேவேளை ஒவ்வொரு புரட்சிகரச் சூழ்நிலையும் தனித்துவமான விசேட குணாம்சங்களையும், அதற்கேயுரிய சிக்கலான பரிமாணங்களையும் கொண்டிருப்பதை நாம் காணலாம். ஒரு சமூக தத்துவத்தின் பொது விதிகளை மட்டும் கொண்டு ஒரு புரட்சிகர சூழலின் முழுமையை நாம் தரிசித்துக் கொள்வது கடினம். அந்தச் சூழலில் செயற்பட்டு, அந்தச் செயற்பாட்டுப் பரிசோதனை அனுபவங்களின் அடிப்படையில் ஒரு புரட்சிகர கொள்கைத் திட்டத்தை நெறிப்படுத்துவது அவசியமாகிறது. ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க புரட்சிகள் இந்த உண்மையைப் பகர்கின்றன. மார்க்சீயத்தை அடிப்படை வழிகாட்டியாகக் கொண்ட போதும், ஒவ்வொரு புரட்சியும் அதற்கான சிறப்பு வரலாற்றை, அதற்கான புதிய புரட்சி அனுபவத்தை, அதற்கான புரட்சிகர சித்தாந்தத்தை சிருஸ்டிக்கத் தவறவில்லை.

ஒரு புரட்சிகர சித்தாந்தமானது வெகுஜனத்தின் நடைமுறை வாழ்வைத் தழுவி நிற்க வேண்டும். மக்களின் அபிலாசைகளை, தேவைகளை, எதிர்பார்ப்புகளை நிறைவெய்தும் இலக்குகளைக் கொண்டிருக்க வேண்டும். மக்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளின் நிதர்சனத்தில் வார்க்கப்படும் சிந்தனைகளே மக்களைக் கவர்கின்றன. ஒரு புரட்சிகர சித்தாந்தமானது செயலின் மூச்சாக, மக்களை ஈர்க்கும் சக்தியாக, மக்களை இயக்கும் சக்தியாக உருவெடுக்கும் பொழுதே விடுதலைப் போராட்டத்தில் வெகுசனப் பங்களிப்பு சாத்தியமாகிறது. சாதாரண வாழ்க்கை ஓட்டத்திற்குப் புறம்பான, மக்களின் ஜீவாதாரப் பிரச்சினைகளைத் தொட்டு நிற்காத, பூடகமான, புதிரான சிந்தனைகள் மக்களைத் தீண்டப் போவதில்லை. புரட்சிச் சிந்தனையாளர் கப்ரால் இதுபற்றிக் குறிப்பிடுகையில், ‘வெறுமையான கருத்துக்களுக்காகவோ அல்லது யாரோ ஒருவனின் மண்டைக்குள் வெடிக்கும் எண்ணங்களுக்காகவோ மக்கள் ஒரு பொழுதும் போராடப் போவதில்லை. மக்கள் வேண்டுவதெல்லாம், உருப்படியான, பயன்தரும் நலன்களையே. தமது வாழ்க்கை நிலை மாறும், மேம்பட்டதாக அமையும் என்பதற்காகவும், தமது வாழ்க்கை நிம்மதியாகக் கஸ்டமின்றி முன்னேற்றப் பாதையில் செல்லும் என்பதற்காகவும், தமது பிள்ளைகளின் எதிர்காலம் சுபீட்சமாக அமையும் என்பதற்காகவுமே மக்கள் போராட முன்வருவார்கள்’ என்கிறார்.

தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டம் இன்று மக்கள் யுத்தமாக விஸ்தரிக்கப்படும் புரட்சிகர வரலாற்றுக் காலகட்டத்தை அண்மித்துள்ளது. இதுவரை காலமும் அனுதாபிகளாக, ஆதரவாளர்களாக இருந்து வந்த எமது மக்கள், இனி நேரடிப் பங்குதாரர்களாக மாறும் பொழுதே இந்த மக்கள் யுத்தம் சாத்தியமாகும். ஆனால் புரட்சிகர விழிப்புணர்வு தோன்றாமல் மக்கள் போராளிகளாக மாறப் போவதில்லை. இந்த விழிப்புணர்வைத் தட்டியெழுப்பக் கூடிய ஒரு புரட்சிகர விடுதலைச் சித்தாந்தம் எவ்வாறு அமையப் பெற்றிருக்க வேண்டும்?



எமது மக்களின் நிதர்சன வாழ்க்கை நிலைகளைப் பிரதிபலிக்காத, அவர்களது ஜீவாதாரப் பிரச்சினைகளைத் தொட்டு நிற்காத வரண்ட கருத்துக்கள், அந்நிய சிந்தனைகள், புதிரான

**தார்மீக அடிப்படையில், நாம் ஒரு உறுதியான அத்திவாரத்தில் நிற்கிறோம். எமது போராட்ட இலட்சியம் நியாயமானது: சர்வதேச மனித அறத்திற்கு இசைவானது. எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள், தனியரசை அமைக்கும் தகுதி பெற்றவர்கள். சர்வதேச சட்டத்தின் அடிப்படையில், இந்த உரிமையை எவரும் நிராகரித்துவிட முடியாது.**

-தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-



கோட்பாடுகள் மக்களை ஒரு பொழுதும் போராட்ட களத்திற்கு ஈர்க்கப் போவதில்லை. எமது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளின் சிக்கலான பரிமாணங்களும், அதற்கான வரலாற்றுக் காரணிகளும் தனித்தன்மை வாய்ந்தவை. எமது மக்கள் அந்தக் காலத்து ரஸ்யாவிலோ, சீனாவிலோ, கியூபாவிலோ வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. பழைய மரபு மார்க்சீய வாதிகள் அப்படித்தான் நினைத்தார்கள். அதனால் அந்நிய புரட்சி வடிவங்களையும், அவற்றின் தத்துவார்த்தக் கோட்பாடுகளையும் அளவு கோலாக வைத்து எமது மக்களின் பிரச்சினைகளை அளந்து பார்க்க முனைந்தார்கள். அதனால் மக்களிடமிருந்து அந்நியப்பட்டார்கள். இந்தப் பழமைவாத மார்க்சீய வாதிகள் சிலர் இன்று ‘விடுதலை இயக்கம்’ என்ற போர்வையில் எமது புரட்சிகர சூழ்நிலைக்கு ஒவ்வாத புராதன மார்க்சீயக் கருத்துக்களை விதைத்து வருகிறார்கள். மக்கள் கிரகித்துக் கொள்ள முடியாத, மக்களுக்கு அனாவசியமான, அரூபமான, அந்நியக் கருத்துக்களை மக்களுக்குத் திணித்துவிட்டால், மக்கள் புரட்சிவாதிகளாக மாறிவிடுவார்கள் என்று எண்ணுகிறார்கள் போலும்.

எமது மக்கள் வாழும் உலகம் வேறு. அவர்களது சமூக நிதர்சனம் வேறு. அவர்களது வரலாற்றுச் சூழ்நிலைகள் வேறு. நாம் எமது மக்கள் வாழும் உலகத்தில் பிரவேசிக்க வேண்டும். அந்த நிதர்சனத்தை நேரடியாகக் கிரகித்துக் கொள்ள வேண்டும். அதன் வரலாற்று ஓட்டத்தைக் கண்டுகொள்ள வேண்டும். இந்த முழுமையான தரிசனத்திலிருந்துதான், அந்தப் புரட்சிகரப் பிரக்ஞையிலிருந்துதான் நாம் எமது விடுதலைப் பாதையை நெறிப்படுத்த முடியும். ஒரு புரட்சிகர சித்தாந்தத்தைச் சிருஸ்டிக்க முடியும்.

அரச பயங்கரவாதப் பூகம்பத்தால் எமது சமூகக் கட்டுமாணம் ஆட்டம் காண ஆரம்பித்திருக்கிறது. சமூகப் பிரச்சினைகள் சிக்கலடைந்து, முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ளன. எமது மக்களின் சாதாரண வாழ்க்கைப் பிரச்சினைகள் ஜீவமரணப் போராட்டமாகப் பேருருவம் பெற்றுள்ளன. முழுச் சமுதாயமுமே ஒரு கொந்தளிப்பான, நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறது. இன்னொரு விதத்தில் சொல்லப் போனால், எமது சமூகத்தில் புரட்சிகரப் போருக்கான புறநிலைகள் முற்றி வருகின்றன. இந்தப் புரட்சிகரமான வரலாற்றுக் காலகட்டத்தில் நிற்கும் எமது மக்கள், ஒரு புரட்சிகர விடுதலைப் போரில், அதுவும் ஆயுதம் தரித்த போராட்டத்தில் நேரடிப் பங்குகொள்ளும் தயார் நிலையில் இருக்கிறார்களா? அப்படி இல்லாத பட்சத்தில் அவர்களைத் தயார் நிலைப்படுத்துவது எங்ஙனம்?

மக்கள் விடுதலையை விரும்புகிறார்கள். தேசிய ரீதியில், இன ரீதியில் அடக்குமுறை தாண்டவமாடுவதால், முழுத் தேசிய இனத்தின் ஒட்டுமொத்தமான ஏகோபித்த விளைச்சலாக இந்தச் சுதந்திர தாகம் பிறக்கிறது. ஆனால் இந்த விடுதலையை வென்றெடுப்பது எப்படி? இந்த விடுதலையின் தன்மை எப்படியாக இருக்க வேண்டும்? என்ற விசயத்தில் மக்களிடையே வேறுபட்ட அபிலாசைகளும், கண்ணோட்டங்களும் இருப்பதைக் காணலாம். இங்கு வேறுபட்ட பார்வைகளுக்கும், அபிலாசைகளுக்கும் சாதிய நலன்களே பிரதான காரணிகளாக விளங்குகின்றன. இந்தக் குழப்பத்திலிருந்து மக்களை விடுவித்து, அவர்களது சுயநல அபிலாசைகளுக்கு மேலான பொதுநல சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தி, அவர்களின் விடுதலை எழுச்சியைப் புரட்சிகரப் போராட்டப் பாதையில் இட்டுச் செல்வதற்கு ஒரு புரட்சிகர சித்தாந்தத்தின் பங்கு முக்கியமாகிறது.

பல நூற்றாண்டுகால அந்நிய காலனித்துவ ஆதிக்கத்தால் ஊறிய அடிமைத்தனமும், அதைத் தொடர்ந்து சிங்கள அரச அடக்குமுறையால் ஊட்டப்பட்ட பயங்களும் எமது மக்களிடையே போர் உணர்ச்சியை மழுங்கச் செய்தன. ஆயினும் அண்மைக் காலத்தில் எழுந்த ஆயுத எதிர்ப்பியக்கம், புதிய பரம்பரையைப் போர்க்குணம் கொள்ளச் செய்தது. இளைஞரின் ஆயுத எதிர்ப்பியக்கத்திற்கு மக்கள் ஆதரவு நல்கிய போதும், போராட்டத்தில் தமது பங்களிப்பின் முக்கியத்துவம் பற்றி அவர்கள் உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து, விடுதலையை வென்றெடுப்பது இளைஞரின் பொறுப்பு, இயக்கங்களின் பொறுப்பு என்ற எதிர்பார்ப்பில் தமது பங்களிப்பிலிருந்து, தமது தேசியக் கடமையிலிருந்து மக்கள் விலகி நிற்கின்றனர். விடுதலை என்பது மற்றவர்கள் பெற்றுத் தரும் விவகாரம் என்ற ரீதியில் மக்களிடையே தவறான கருத்தோட்டம் வலுப்பெற்றது. இந்தப் போலி நம்பிக்கை விதைக்கப்பட்டதற்கு எமது பழைய பாராளுமன்றப் பிற்போக்குத் தலைமையும் காரணமாக இருந்தது. இந்திய உதவிக்கு இவர்கள் மண்டியிட்டு, மக்களின் சுயநம்பிக்கையைக் கொன்றனர்.

விடுதலையின் அர்த்தமென்ன? விடுதலையின் பயனாய் சமூக மாற்றத்தால் கிட்டும் அளப்பரிய பயன்கள் என்ன? என்ற ரீதியில் மக்களுக்கு விழிப்புணர்வும், தெளிவும் ஏற்படாத பட்சத்தில், அவர்களை அமைப்பு ரீதியாக அணிதிரட்டிப் போராட்டக் களத்தில் இயக்குவது இலகுவான காரியமல்ல. வெறும் அரசியல் சுதந்திரத்தைக் குறித்து நிற்கும் தமிழீழக் கோசத்தை எழுப்பி வந்தால் மட்டும் சமூகத்தின் அடித்தளத்திலிருந்து சதா நசுக்கப்பட்டுச் சுரண்டப்படும் உழைக்கும் மக்களை விடுதலைப் போராளிகளாக மாற்றிவிட முடியாது. தமிழீழத் தனியரசை அமைத்து, அரசியல் சுதந்திரம் பெறுவதை உயர்சாதி, மேற்தட்டு வர்க்கப் பிரிவினர் விரும்பலாம். இப்படியான குறுகிய வரையறுக்கப்பட்ட விடுதலையானது இவ்வர்க்கப் பிரிவினரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக அமையும். தமது அரசியல் அதிகாரத்தை நிலைநாட்டவும், பொருளாதார ஆதிக்கத்தை வலுப்பெறச் செய்யவும், சாதிய சுரண்டலை நீடிக்கவும் இவ்வகையான விடுதலை இவர்களுக்கு வாய்ப்பை அளிக்கும். இம்மாதிரியான அரசியற் சுதந்திரம், இவ்வர்க்கப் பிரிவினரின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யலாம் என்றாலும், இவர்கள் இந்த இலட்சியத்தை அடைவதற்குப் போர்க்களத்தில் குதிக்கப் போவதில்லை. ஏனெனில் இவர்கள் போராடும் புரட்சிகர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர். இவர்கள் தம்மை ஆளும் வர்க்கம் எனக் கருதுபவர்கள். மற்றவர்கள் போராடி விடுதலையை அடைய வேண்டும் தாம் ஆள வேண்டும் என எண்ணுபவர்கள்.

உழைக்கும் பாட்டாளி வர்க்கமே புரட்சிகர வர்க்கம். சமூகத்தின் கீழ்மட்டத்திலிருந்து திணறிக் கொண்டிருக்கும் இந்த ஏழைப் பாட்டாளிகளின் அபிலாசைகளோ வேறு. இவர்களது நாளாந்த வாழ்க்கையில் எதுவித மாற்றத்தையும் விளைவிக்காத அரச அதிகார மாற்றங்களில் இவர்களுக்கு அக்கறை இருக்கப் போவதில்லை. இவர்கள் நாடும் விடுதலை வேறு. இந்த விடுதலையானது அரசியற் சுதந்திரத்தோடு நில்லாது, சமூகப் பொருளாதார வாழ்க்கை நிலைகளிலும், புரட்சிகரமான அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்தி, உழைக்கும் மக்களின் விடிவுக்கு வழிகோலும் பரந்த இலட்சியங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். இந்த விடுதலை முழுமையான மனித விடுதலையைக் குறித்து நிற்க வேண்டும். சுரண்டல், ஒடுக்குதல் போன்ற சமூக அநீதிகளால் விலங்கிடப்பட்டுக் கிடக்கும் சாதாரண மனிதன், உழைக்கும் மனிதன், இந்தப் புறநிலை அழுத்தங்களிலிருந்து பூரணமாகச் சுதந்திரம் பெறுவதே உண்மையான, முழுமையான விடுதலையைக் குறிக்கும். இப்படியான முழு மனித விடுதலையைத் தழுவி நிற்கும் புரட்சிகர விடுதலை இலட்சியமே பரந்துபட்ட வெகுசனத்தைக் கவரும்.

- விடுதலைப் புலிகள் பத்திரிகை, மே 1985






# LIST YOUR BUSINESS

ON OUR BUSINESS DIRECTORY

**விளம்பரம் ஓர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஓர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்றும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது.**

**இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படிக்கற்கள்.**

விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**

www.vanikam.ca
thamilarvanikam@gmail.com



# ஈரானின் அணு ஆயுதக் கனவுக்கு முற்றுப்புள்ளி: சர்வதேச சட்டங்களை தெஹ்ரான் மீறுகிறதா?

- ஐங்ரகன் விக்கினேஸ்வரா -

20.04.2026

அமெரிக்கா அரசு ஈரானின் யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தை இருபது ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கக் கோருகிறது. ஆனால் ஈரான் ஐந்து ஆண்டுகள் மட்டுமே நிறுத்த முடியும் எனவும், யுரேனியம் செறிவூட்டும் உரிமை தங்களுக்கு உண்டு எனவும் வாதிடுகிறது.

இதன் விளைவாக ஈரானின் அணு ஆயுதக் கனவை முறியடிப்பதற்கான அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் முயற்சிகள் தீவிரமடைந்துள்ளன. கடந்த வருட ஜீன் மாத தாக்குதல்கள் ஈரானின் நடான்ஸ் (Natanz) அணுசக்தி ஆலையைத் தாக்கி, அதன் நுழைவுப் பகுதிகளைச் சேதப்படுத்தியது. இதனால் அந்த அணு ஆலைக்கான அணுகல் தடுக்கப்பட்டது.

இதன் பின்னர் முழுமையாக அணு உலைகளை தகர்க்க மத்திய கிழக்கில் ஆறு வாரங்களாக நீடித்த போர் மூண்டது. தற்போது இந்த போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மிக முக்கியமான முன்னேற்றமாக, ஈரான் தனது வசம் உள்ள செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை (Enriched Uranium) ஒப்படைக்க ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார். அணு ஆயுதத் தூசுக்களை (Nuclear Dust) (யுரேனியம்) திருப்பித் தர ஒப்புக்கொண்டுள்ளது. இதற்கான அமைதி ஒப்பந்தம் மிக விரைவில் எட்டப்படும் எனத் தெரிவித்தார். ஆனால் அதனை ஈரான் மறுத்துள்ளது.

மேலும் இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் பாகிஸ்தானுக்கு தான் நேரில் சென்று இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் தயாராக இருப்பதாகவும் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இந்த விவகாரத்தில் ஈரானின் மறுப்பு ஆணித்தரமாக உள்ளது.

நீண்டகாலமாக தொடர் தடைகளால் ஈரான் அரசு தொடர்ந்து கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருந்தது. அத்துடன் செப்டம்பர் 2025இல் ஈரானுக்கு எதிராக ஐ.நா. தடைகள் மீண்டும் விதிக்கப்பட்டன. ஈரான் தொடர்ந்து அணுசக்தி தொழில் நுட்பத்தில் முதலீடு செய்து வந்தாலும் (ரஷ்யாவுடன் ஒப்பந்தம்), இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் நேரடித் தாக்குதல்கள் மற்றும் பொருளாதாரத் தடைகள் காரணமாக அதன் அணு ஆயுதக் கனவு பெரும் சவாலைச் சந்தித்து வருகிறது. இருப்பினும், ஈரான் தனது அணுசக்தித் திட்டத்தை அமைதியான நோக்கங்களுக்காகவே பயன்படுத்துவதாகக் கூறி வருகிறது.

## ஹோர்முஸ் நீரிணை நெருக்கடி:

உலக எண்ணெய் விநியோகத்தில் இருபது சதவீதத்தைக் கையாளும் ஹார்முஸ் நீரிணையை அமெரிக்கா முழுக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர முயற்சி செய்கிறது. ஒருவேளை அமெரிக்கா அராஜகமாகச் செயல்பட்டால், அமெரிக்கக் கப்பல்களை மூழ்கடிக்கப் போவதாக ஈரானின் உயர்மட்ட இராணுவ ஆலோசகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக ஹோர்முஸ் நீரிணை பகுதியில் மூடுவதும் – திறப்பதுமாக பாரிய நெருக்கடி நிலை நிலவுகிறது. இந்த நீரிணை திறந்துள்ளது என ஈரான் கூறினாலும், கண்காணிப்புத் தகவல்களின்படி சில கப்பல்களே நகர்ந்தது தெரியவந்துள்ளது. இந்நிலையில், அமெரிக்க முற்றுகை தொடரும் என டிரம்ப் தெரிவித்துள்ளதால் மீண்டும் இந்த நீரிணையை ஈரான் மூடியுள்ளது.

இதற்கு முன்பாக போர் நிறுத்தம் நீடிக்கும் காலம் முழுவதும் ஹார்முஸ் நீரிணை வர்த்தகக் கப்பல்களுக்கு முற்றிலும் திறந்திருக்கும் என்று ஈரானின் வெளியுறவு அமைச்சர் கூறியிருந்தார். ஆனால் கண்காணிப்புத் தரவுகளின்படி மிகச் சில கப்பல்களே உண்மையில் அதன் வழியாகப் பயணித்துள்ளன. ஆனால் சமாதான ஒப்பந்தம் ஏற்றுக் கொள்ளப்படும் வரை ஈரானிய துறைமுகங்களுக்கான அமெரிக்க கடற்படை முற்றுகை தொடரும் என்று டிரம்ப் அறிவித்துள்ளார்.

வரலாற்று ரீதியாக ஈரானின் வசமுள்ள இந்த நீரிணை பாரிய முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. இதனாலேயே ஈரானிய 13 கப்பல்களை அமெரிக்க மத்திய கட்டளைகம் (CENTCOM) தடுத்து நிறுத்தி, ஈரானின் கடல்வழி வர்த்தகத்தை முடக்கியுள்ளது.

அதேநேரம், மற்றுமொரு முனையில் இஸ்ரேல் மற்றும் லெபனான் இடையே வியாழக்கிழமை முதல் பத்து நாட்களுக்குப் போர்நிறுத்தம் நடைபெற்றது. இவ்விரு நாடுகளின் தலைவர்கள் வெள்ளை மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தி உள்ளனர். இஸ்ரேலுக்கும் லெபனானுக்கும் இடையே ஆறு வார கால மோதலில் லெபனானில் 2,000க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர், மேலும் ஐந்தில் ஒருவர் இடம் பெயர்ந்துள்ளனர். இரண்டு பொதுமக்கள் மற்றும் 13 வீரர்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் கூறுகிறது.

**சர்வதேச அணுசக்தி சட்டங்களின் [Nuclear Non-Proliferation Treaty - NPT] கீழ், ஒரு நாடு தனது அணுசக்தித் தேவைகளுக்காக யுரேனியத்தை வைத்திருக்கும் உரிமைக்கும், அதனை ஆயுதமாக மாற்றும் அபாயத்திற்கும் இடையிலான போராட்டமே தற்போது ஈரானில் நடைபெற்று வருகிறது.**



## ஈரான் அணு ஆயுத முற்றுப்புள்ளி ?

சர்வதேச அணுசக்தி சட்டங்களின் (Nuclear Non-Proliferation Treaty - NPT) கீழ், ஒரு நாடு தனது அணுசக்தித் தேவைகளுக்காக யுரேனியத்தை வைத்திருக்கும் உரிமைக்கும், அதனை ஆயுதமாக மாற்றும் அபாயத்திற்கும் இடையிலான சட்டப் போராட்டமே தற்போது ஈரானில் நடைபெற்று வருகிறது.

செறிவூட்டப்பட்ட யுரேனியத்தை ஒப்படைக்க ஈரான் ஒப்புதல் என டிரம்ப் அறிவித்தாலும், ஈரான் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. மத்திய கிழக்கில் ஆறு வாரங்களாக நீடித்த போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான மிக முக்கியமான முன்னேற்றமாக, ஈரான் தனது வசம் உள்ள செறிவூட்டப்பட்ட யுரெனியத்தை (Enriched Uranium) ஒப்படைக்க ஒப்புக்கொண்டுள்ளதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளமை இதுவரை உறுதிப்படுத்தப் படவில்லை.

இரு நாடுகளுக்கும் இடையே இந்தப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கும் பாகிஸ்தானுக்கு தான் நேரில் சென்று இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## பாகிஸ்தானின் இராஜதந்திர வெற்றி:

பாகிஸ்தானில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே நடைபெற்ற 21 மணி நேரப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தற்கு முக்கிய காரணமாக அமெரிக்காவின் நிபந்தனைகளை ஈரான் ஏற்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் அமெரிக்கா எச்சரிக்கையும் அழுத்தமும் ஈரான் மீது விதித்துள்ளது. சமாதான ஒப்பந்தம் எட்டப்படாவிட்டால் விளைவுகள் கடுமையாக இருக்கும் என அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் ஹெக்செத் (Hegseth) எச்சரித்துள்ளார். அதனை தொடர்ந்து கடற்படை முற்றுகையை அமெரிக்கா தொடங்கி உள்ளது. ஈரானின் துறைமுகங்கள் மீதான முற்றுகை தொடர்கிறது. ஈரான் வழிக்கு வராவிட்டால் வான்வழித் தாக்குதல் நடத்துவோம் என்றும் மின்சாரம் மற்றும் எரிசக்தி உள்கட்டமைப்புகள் மீது குண்டுகள் வீசப்படும் என அமெரிக்கா பகிரங்கமாக எச்சரிக்கை விடுத்துள்ளது.

பாகிஸ்தான் ஒரு “மத்தியஸ்த நாடாக” (Mediator State) உலகப் போரைத் தடுக்கும் இராஜதந்திரப் பணியில் ஈடுபட்டுள்ள விதம், சர்வதேச உறவுகள் (International Relations) பாடப்பரப்பில் ஒரு முக்கியமான விடயமாக இருக்கிறது.

பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஆசிம் முனீர், ஈரான் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப்பைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். முதல் கட்டப் பேச்சுவார்த்தை தோல்வியடைந்தாலும், பாகிஸ்தானின் தொடர் முயற்சியால் தற்போது ஈரான் “நிபந்தனையுடன் கூடிய நம்பிக்கையை” (Cautiously Optimistic) வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத், அடுத்த கட்ட இராஜதந்திரப் பேச்சுவார்த்தையின் மையப்புள்ளியாக இருக்கும் என வெள்ளை மாளிகை உறுதிப்படுத்தியுள்ளது. ஆனாலும் தொடரும் பேச்சுவார்த்தைக்காக டிரம்ப் பாகிஸ்தான் செல்வாரா என்பது சந்தேகமே.

## இழுபறியில் நிபந்தனைகள்:

அமெரிக்காவின் நிலைப்பாடும் மூலோபாய அழுத்தமும் ஈரான் அணு ஆயுதக் கொள்கையில் கடினமானதாக இருக்கிறது. ஆனால் ஈரானும் விடாப்பிடியாக இருப்பதாக தெரிகிறது.

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் ஹார்முஸ் நீரிணையை கைப்பற்றி முற்றுகையிடுவது உள்ளிட்ட கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப்போவதாக எச்சரித்துள்ளார்.

இரு தரப்புக்கும் இடையே சில முக்கிய வேறுபாடுகள் இன்னும் நிலவுகின்றன. அமெரிக்கா ஈரானின் யுரேனியம் செறிவூட்டல் திட்டத்தை இருபது ஆண்டுகளுக்கு நிறுத்தி வைக்கக் கோருகிறது. ஆனால் ஈரான் ஐந்து ஆண்டுகள் மட்டுமே நிறுத்த முடியும் எனவும், யுரேனியம் செறிவூட்டும் உரிமை தங்களுக்கு உண்டு எனவும் வாதிடுகிறது.




# தமிழின அழிப்பின் நினைவாக மே 18 அன்று 'முள்ளிவாய்க்கால் கஞ்சி' உண்போம்!






நீண்ட இனவழிப்புப் போரின் இறுதி கட்டத்தில் எம் தமிழ்மக்கள் குறுகிய நிலப்பரப்பில் முடக்கப்பட்டார்கள். செல்மழையும், துப்பாக்கிச்சூடும், விமானக்குண்டுத் தாக்குதல்களும் கொத்துக்கொத்தாய் கொண்டிருக்க உணவும் மருந்தும் ஆயுதமாக்கப்பட்ட நிலையில் உண்பதற்கு எதுவுமின்றி நாட்கணக்காக பட்டினி கிடந்து பதுங்குகுழி மக்களாக அவலப்பட்டார்கள். இந்நிலையில் அவர்களின் உயிர்காத்தது போராளிகள் வழங்கிய கஞ்சிதான்.

மாத்தளன், வலைஞன் மடம், முள்ளிவாய்க்கால் என அவலப் பயணம் நகர்ந்த போது பணக்காரன் ஏழை, படித்தவன் படிக்காதவன் என்ற எந்த வேறுபாடுமின்றி அவர்களின் உயிர்காத்த இடங்கள் தான் கஞ்சிக் கொட்டில்கள். ஆரம்பத்தில் பச்சையரிசி, சிறதளவு பால், சீனி என்பன சேர்த்து தயாரிக்கப்பட்ட இக்கஞ்சி நாளடைவில் வெறும் அரிசியும் உப்பும் கலந்த உப்புக்கஞ்சியாயிற்று.

இவ்வாறு இலட்சக்கணக்கான மக்களின் உயிர்காத்த இந்த கஞ்சியை "முள்ளிவாய்க்கால் கஞ்சி" என்ற பெயருடன் அந்த மாபெரும் அவலத்தின் நினைவை வருடாந்தம் உயிர்ப்பிக்கும் உணவாக்கி எமது சந்ததிக்கு கடத்த உலகத்தமிழர் அனைவருக்கும் அழைப்பு விடுக்கிறோம்.

எவ்வாறு யூதர்கள் எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து புறப்பட்டபோது உண்ட பயண உணவை வருடாந்தம் உண்டு தம் நினைவுகளைத் தக்கவைத்து சீயோனுக்கு திரும்பினார்களோ அதுபோல் எம்மினத்தின் வீரமும் அவலமும் நிறைந்த ஒரு வரலாற்றுக்கட்டத்தை எம்மினத்தின் தேசிய இருப்பை தக்கவைக்கும் நினைவாக உயிர்ப்புடன் பேண வருடாந்தம் தமிழினவழிப்பு நினைவு நாளாகிய மே 18 இல் "முள்ளிவாய்க்கால் கஞ்சியை" உணர்வுமிகு உணவாக்குவோம்.

ஆகவே உலகெங்கும் வாழ் தமிழ் உறவுகளே!

- அன்றைய நாளில் எமது வீடுகளில் "முள்ளிவாய்க்கால் கஞ்சியை" ஒரு நேர உணவாக்குவோம். அதை உண்ணும் போது எமது தேசத்தின் வரலாற்றை எமது பிள்ளைகளுக்கு விளக்கி நினைவுகளை அடுத்த சந்ததிக்கு கடத்துவோம்!

- ஆலயங்களிலும் பொது இடங்களிலும் கஞ்சிக்கொட்டில் அமைத்து "முள்ளிவாய்க்கால் கஞ்சியை" அனைவருக்கும் வழங்கி உணர்வுகளைப்பகிர்ந்து கொள்வோம்!

நினைவுகளின் நீட்சியே தமிழினவழிப்பின் சாட்சி, இச்சாட்சியே எம்மக்களுக்கான மீட்சியின் வழியென உணர்ந்து உணர்வுபூர்வமாக இந்த நினைவேந்தலை முன்னெடுப்போம்.

இனவழிப்பின் ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட உணவையே நினைவேந்தலின் வடிவமாக்குவோம் மே 18 இல் முள்ளிவாய்க்கால் கஞ்சி உண்போம்!

## தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்



# பாகிஸ்தான் பேச்சுவார்த்தை ஏன் தோல்வி?

# ஈரான் அணு ஆயுதத் திட்டத்தைத் தொடர உறுதி!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

15.04.2026

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே கடந்த வாரம் ஏப்ரல் 10இல் நடைபெற்ற 21 மணி நேர நீண்ட அமைதிப் பேச்சுவார்த்தை எந்த உடன்பாடும் எட்டப் படாமல் தோல்வியில் முடிந்தது. அணு ஆயுதத் திட்டம் மற்றும் பிராந்தியப் பாதுகாப்பு விவகாரங்களில் இரு நாடுகளுக்கும் இடையே நிலவிய கருத்து வேறுபாடுகளால், இந்தப் பேச்சு வார்த்தை தோல்வியைத் தழுவியது.

## பாகிஸ்தான் பேச்சு தோல்வி

பாகிஸ்தானில் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியால் ஈரான் மீது கடும் பொருளாதாரத் தடைகளை விதிக்க அமெரிக்கா மீண்டும் திட்டமிட்டுள்ளது. போட்டுள்ளது. கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி முதல் அமெரிக்கா – ஈரான் இடையே போர் நடைபெற்று வந்தது. ஆனால் ஏப்ரல் 8ஆம் திகதி இரு தரப்பும் இணைந்து இரு வாரங்களுக்கு தற்காலிக போர்நிறுத்தத்தை அமல் செய்தன.



இதன் தொடர்ச்சியாக பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமா பாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சு வார்த்தை தோல்வியின் முக்கிய காரணமாக அமைந்தது ஈரான் அணு ஆயுத திட்டத்தை தொடர உறுதி செய்ததுடன், ஒரு போதும் கைவிட மறுப்பு தெரிவித்துள்ளமை தான்.

தோல்வி அடைந்த 21 மணி நேர அமைதி ஆலோசனையில் இருதரப்பு இடையே எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை. அமெரிக்கத் தரப்பில் துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் தலைமை யிலான குழுவும், ஈரான் தரப்பில் நாடாளுமன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப் தலைமையிலான குழுவும் பங் கேற்றன.

தோல்விக்கான காரணமாக ஈரான் அணு ஆயுதத் திட்டத்தைக் கைவிட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியதை, ஈரான் ஏற்க மறுத்ததால் உடன்பாடு எட்டப்படவில்லை என்று அமெ ரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த பேச்சுவார்த்தை தோல் வியடைந்ததால், மத்திய கிழக்கில் மீண்டும் போர் பதற்றம் அதிகரிக்கும் சூழல் உருவாகியுள்ளது.

## ஈரானின் உறுதியான நிலைப்பாடு:

யுரேனியத்தை செறிவூட்டும் திட்டமான அணு ஆயுத கைவிட ஈரான் திட்டவட்டமாக மறுத்துவிட்டது. ஹார்முஸ் நீரிணையின் கட்டுப்பாடு தொடர்ந்து ஈரான் கட்டுப்பாட்டில் இருக்கும். இந்த நீரிணை வழியாக செல்லும் சரக்கு, எண்ணெய் கப்பல்களுக்கு சுங்கவரி விதிப்போம் என்று ஈரான் அறிவித்துள்ளது.

அமெரிக்கா, இஸ்ரேல் தாக்குதலால் ஏற்பட்ட சேதத்துக்கு இழப் பீடு வழங்க வேண்டும் என்று ஈரான் தரப்பு கோரியது. இந்த மூன்று விவகாரங்களால்தான் அமைதிப் பேச்சு தோல்வியில் முடிந்தது.

இதன் அடுத்த கட்டமாக ஈரான் மீது கடுமையான பொருளாதார தடைகளை விதிக்க அமெரிக்க அரசு திட்டமிட்டுள்ளது என்று சர்வதேச அரசியல் நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

பேச்சுவார்த்தையை சுமூகமாக நடத்த பாகிஸ்தான் முயற்சி செய்தாலும், உடன்பாடு ஏற்படாதது ஏமாற்றத்தை அளிப்பதாக பாகிஸ்தான் அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தோல்விக்குப் பிறகு, இரு தரப்பும் தங்கள் நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளதால், அடுத்து வரும் நாட்களில் போர் சூழல் தீவிரமடைய வாய்ப்புள்ளதாக அஞ்சப்படுகிறது.

## ஈரான் அணுசக்தி திட்டம்:

தற்போது அமெரிக்கா அழித்திட முனையும் ஈரானின் அணு சக்தி திட்டம் (Nuclear program of Iran) என்பது பல ஆராய்ச்சி தளங்கள், இரண்டு யுரேனியம் சுரங்கங்கள், ஒரு ஆராய்ச்சி அணு உலை மற்றும் மூன்று அறியப்பட்ட யுரேனிய செறிவூட் டல் நிலையங்கள் உள்ளிட்ட யுரேனியம் செயலாக்க வசதிகள் ஆகியவற்றை கொண் டது ஆகும்.

சர்வதேச அணுசக்தி அமைப் பின் (IAEA) சரி பார்ப்புக்கு உட்பட்டு அதன் அணுசக்தித் திட் டத்தை உருவாக்கியது. 1970 ஆம் ஆண்டில் ஈரான் அணு ஆயுத பரவல் தடை உடன் படிக்கையை ஒப்புக் கொண்டது.

அமெரிக்காவின் உதவி யுடன் 1950 களில் சமாதான திட்டத்திற் கான அணுக் களின் பகுதியாக ஈரானின் அணு சக்தி திட்டம் பல ஆராய் ச்சி தொடங்கப்பட்டது. இதில் இரண்டு யுரேனியம் சுரங் கங்கள், ஒரு ஆராய்ச்சி அணு சக்தி மற்றும் யுரேனியம் செய லாக்க வசதிகள் ஆகியவை அடங்கும், இதில் மூன்று அறியப்பட்ட யுரேனிய செறி வூட்டல் நிலையங்கள் உள்ளன.

## உயர்மட்ட பேச்சுவார்த்தை:

அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ், ஈரான் நாடாளு மன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப் தலைமையிலான உயர் நிலைக் குழுக்கள் பல்வேறு கட்டங்களாக பேச்சு வார்த்தை நடத்தியது. இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந் ததை தொடர்ந்து அமெரிக்கா, ஈரான் குழுவினர் நாடு திரும் பினர்.

சர்வதேச அளவில் இந்த பேச்சுவார்த்தை பற்றி பெரும் எதிர் பார்ப்புகள் நிலவி வந்தன. ஈரான் உடனான நீண்ட நேர பேச்சு வார்த்தையில் எவ்வித உடன்பாடும் எட்டப்படவில்லை என்பது பல நாடுகளுக்கும் பெரும் கவலையாக இருந்தது.

இது ஈரானிய மக்களுக்கும் மோசமான செய்தி ஆகும். அணு ஆயுத திட்டத்தை கைவிட ஈரானிடம் அமெரிக்க வலியுறுத் தியது. இதற்கு ஈரான் தரப்பு எந்த உத்தரவாதமும் அளிக்க வில்லை. அணு ஆயுத திட்டத்தை ஈரான் கைவிட வேண்டும் என்பதே அமெரிக்காவின் பிரதான நோக்கமாகும். எங்கள் நிலைப்பாடு மற்றும் முடிவை தெளிவாக கூறிவிட்டோம். இனி மேல் ஈரான் தரப்பே இறுதி முடிவு எடுக்க வேண்டும். இவ்வாறு வான்ஸ் கூறினார்.

இதற்கு முன்னதாக இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் அமெரிக்க துணை அதிபர் ஜே.டி.வான்ஸ் ஹார்முஸ் நீரிணை குறித்து அவர் எந்த கருத்தையும் தெரிவிக்கவில்லை. அடுத்த கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்படுமா என்பது குறித்தும் அவர் எந்த தகவலையும் வெளியிடவில்லை. அமெரிக்க துணை அதிபர் வான்ஸுடன் பேச்சுவார்த்தை நடத்திய ஈரான் நாடாளு மன்ற சபாநாயகர் முகமது பாகர் காலிபாப் சமூக வலைதளத்தில் வெளியிட்ட பதிவில், எங்களது கோட்பாடுகளை அமெரிக்க அர சிடம் எடுத்துரைத்து உள்ளோம். ஈரானின் நம்பிக்கையை பெறு வது அமெரிக்காவின் கையில் உள்ளது. ராஜ்ஜிய ரீதியிலான அல்லது இராணுவ நடவடிக்கை மூலம் ஈரான் மக்களின் உரி மைகளைப் பாதுகாப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் துணை பிரதமர் முகமது இஷாக் டார் இஸ்லாமா பாத்தில் கூறியபோது, அமைதிப் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தாலும் போர் நிறுத்தத்தை இரு நாடுகளும் கண்டிப் புடன் அமல்படுத்த வேண்டும். பேச்சுவார்த்தையை முன் னெடுத்துச் செல்ல வேண்டும். மேற்கு ஆசியாவில் நிரந்தர அமைதி திரும்ப வேண்டும் என்றார்.



**அமெரிக்கா – ஈரான் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்ற நிலையில் முக்கிய மூன்று விவகாரங்களில் உடன்பாடு எட்டப்படாததால் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்தது.**

அதேவேளை தெஹ்ரானில் ஈரான் வெளியுறவு துறை செய்தித் தொடர்பாளர் இஸ்மாயில் பாகாயி கூறியபோது, பாகிஸ்தானில் நடந்த பேச்சுவார்த்தையில், சில விவகாரங்களில் ஒருமித்த கருத்து எட்டப்பட்டது. ஆனால் முக்கிய மூன்று விவகாரங்களில் கருத்து வேறுபாடுகள் எழுந்தன. இதன் காரணமாக பேச்சு வார்த்தை தோல்வி அடைந்தது. ஈரானின் உரிமைகள், ஈரான் மக்களின் நலன்களை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது என்றார்.

## சீனாவுக்கு ட்ரம்ப் எச்சரிக்கை

போர் தீவிரமான சூழலில் ஈரானுக்கு தேவையான ஆயுதங்கள், வான் பாதுகாப்பு கவசங்களை சீனா தொடர்ந்து வழங்கி வருவதாகக் கூறப்படுகிறது. அடுத்த வாரங்களில் ஈரானுக்கு கூடுதலாக ஆயுதங்களை அனுப்ப சீனா திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. இதுகுறித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப், வாஷிங்டனில் ஈரானுக்கு சீனா ஆயுதங்களை வழங்குவது உறுதி செய்யப்பட்டால் அந்த நாடு மிகப்பெரிய பிரச் சினைகளை சந்திக்கும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அமெரிக்க தரப்பு ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தக் கூடாது. அமெரிக்கா, ஈரான் போர் மிகவும் தீவிரமான பிரச் சினை ஆகும். இதில் பதற்றத்தை தணிப்பதில் கவனம் செலுத்த வேண்டுமே தவிர, பதற்றத்தை அதிகரிக்கும் வகையில் கருத்து வெளியிடக்கூடாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழீழத் தேசிய எழுச்சியின் வடிவம் "நாட்டுப்பற்றாளர்" அன்னை பூபதி அவர்களின் 38ஆவது நினைவு நாளை முன்னிறுத்தி நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் விடுக்கும் நினைவு நாள் செய்தி

17.04.2026



உலக வரலாற்றில் ஒரு பெண் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த வரலாறு தியாகத்தாய் அன்னை பூபதி அம்மாவுக்கு மட்டுமே உண்டு! தமிழீழத் தேசிய எழுச்சியின் வெகுசன வடிவமாக அறப்போர் புரிந்த அன்னை பூபதி அவர்களின் நினைவு நாளை "நாட்டுப்பற்றாளர்" நாளாக 2006ஆம் ஆண்டு தமிழீழத் தேசியத் தலைமை பிரகடனப்படுத்தியிருந்தது. அன்னை பூபதியின் நினைவு நாளை நாட்டுப்பற்றாளர் நாளாகத் தமிழீழத்து மக்களும், புலம்பெயர்ந்த தமிழ் மக்களும் உணர்வு பூர்வமாக நினைவுகூர்ந்து வருகின்றார்கள். விடுதலைப்போராட்டங்களின் வரலாற்றில் நாட்டுப்பற்றாளர்கள் எவ்வளவு பெரிய சத்தியாக திகழ்ந்து வந்துள்ளார்கள் என்கின்ற உண்மையை எம் மக்களும், வருங்கால எமது இளம் தலைமுறையினரும் நினைவு கொள்ள வேண்டும்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் ஊடாக தமிழீழத் தேசத்தினுள் நுழைந்த இந்திய இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாகமாறித் தமிழீழ மக்களின் உரிமை போராட்டத்தையும், தேசியத் தலைமையையும் அழித்தொழிக்கும் வன்முறையில் இறங்கியது. அவ்வேளையில் தமிழீழத் தேசியத் தலைமைக்கு ஆதரவாக தமிழீழப் பொது மக்கள் பல வகைகளில் தமது பங்களிப்பை வழங்கினார்கள். எம் தேசத்திற்கான பங்களிப்புக்களின் சிகரமாக தியாகத்தின் அதியுயர் வடிவமாக அன்னை பூபதியின் அறப்போர் அமைந்தது. இந்தியப்படை உடனடியாக போர் நிறுத்தை மேற்கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதானப்பேச்சுகளில் ஈடுபட வேண்டும் என்று கோரி மட்டக்களப்பு அன்னையர் முன்னனியின் சார்பில் திருமதி பூபதி கணபதிப்பிள்ளை அகிம்சை வழியில் உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். 1988ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 10:45 மணிக்கு மட்டக்களப்பு அமிர்தகழி சிறிமாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் முன்றலில் அன்னை பூபதி அவர்கள் தனது சாகும் வரையிலான உண்ணாவிரப்போராட்டத்தை ஆரம்பித்தார். தமிழீழப் போராட்டத்தில் எதிரியை அழிக்க ஆயுதம் ஏந்தி இரத்தம் சிந்தி உயிர்துறந்த போராளிகள் நடுவே கத்தியின்றி இரத்தம் இன்றி யுத்தம் நடாத்திய போராளிகளில் ஒருவர் தியாகி திலீபன் அடுத்தவர் அன்னை பூபதி அம்மா. அவர் காந்திய தேசத்திற்கு முன்வைத்த இரண்டு கோரிக்கைகள்:-

1. உடனடியாக போர்நிறுத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

2. விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்தை நடத்தி தீர்வு காணப்படவேண்டும்.

தமிழீழ விடுதலைப்போராட்டம் மிக நெருக்கடியான வேளையை சந்தித்தகாலம் அது! "இந்திய இராணுவம் எமது தாயக மண்ணில் காலடி எடுத்துவைத்த எமது போராட்டத்தின் இருண்ட நாளாக கருதுவேன். எமது போராட்டத்தின் இந்திய இராணுவம் செய்தது ஓர் இருண்ட அத்தியாயம் என்றே சொல்ல வேண்டும்" என்று தமிழீழத்தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு குறித்து கூறுமளவுக்கு அன்றைய காலகட்டம் பல நெருக்கடிகளை நேர்கொண்டது இத்தனை அபாயங்களுக்கும், நெருக்கடிகளுக்கும் ஒருசாதாரணப் பெண்மணி குடும்பத்தலைவி எல்லாவற்றிற்கும் அஞ்சாமல் தனது போராட்டத்தை அகிம்சை வழியில் ஆரம்பிப்பதற்கு எத்துணை நெஞ்சுரமும் தியாக மனப்பான்மையும் அவருக்கு இருந்திருக்கும் என்பதை நாம் நினைத்துப் பார்க்கின்றோம்.

எம்மை பாதுகாக்கவென வந்த இந்தியா இன்று சிறீலங்கா இராணுவத்தைக் காட்டிலும் கொடியவர்களாக மாறிவிட்டார்கள். இதனை தடுக்கலாம். என்ற மன உறுதியுடன் நாம் இந்த போராட்டத்தில் இறங்கியுள்ளோம். வீரச்சாவுகளை கண்டு நாம் பழகிப்போனவர்களே எனது இறப்பை அடுத்தும் எமது நோக்கை நாம் அடைவோம். ஒருபோதும் அன்னையர் முன்னனி தளராது! என்று அன்னை பூபதி அவர்கள் தியாக உணர்வோடு நெஞ்சுரத்தோடு முளங்கினார்.

1998ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19ஆம் திகதி சனிக்கிழமை காலை 10:45 மணிக்கு தனது சாகும்வரையிலான போராட்டத்தை ஆரம்பித்த அன்னை பூபதி அவர்களின் இறுதி மூச்சு தமிழீழக் காற்றோடு ஏப்பிரல் மாதம் 19ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 8:45 மணியளவில் இன்னுயிர் பிரிந்தது, 31 நீண்ட நாட்கள்!

எந்த ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராக போராடினாரோ அந்த இராணுவம் பாரிய இழப்புகளுடன் தமிழீழத்தை விட்டு 24-03-1996 அன்று வெளியேறிச்சென்றது. திருமதி பூபதி கணபதிப்பிள்ளை என்கின்ற ஒரு சாதாரண தமிழ் பெண் மணியின் விடுதலை வேட்கையும் அதற்கான தியாகமும் நாட்டுப்பற்றின் சிகரமாக அமைந்தது.

ஓர் இனத்தின் அரசியல் விடியலுக்காகவும் ஆக்கிரமிப்பு இராணுவத்திற்கு எதிராகவும் உண்ணா விரதப்போராட்டம் ஒன்றை நடாத்தி உயிர்த்தியாகம் செய்திட்ட உலகின் முதற் பெண்மணி என்ற வகையிலும் ஓர் சதாரண குடும்பபெண் தனது தனிப்பட்ட வாழ்வை துறந்து தனது நாட்டிற்காக முன்னெடுத்த உண்ணா விரதப்போராட்டம் என்ற வகையில் அன்னை பூபதி அவர்களின் போராட்டம் பல விழுமியங்களை தொட்டு நிற்கின்றது. இவர் ஒரு விடுதலைப் போராளி அல்லர்! விடுதலை போராளி என்ற வகையில் தியாகி திலீபன் அவர்கள் ஒரு சொட்டும் நீரும் அருந்தாமல் உண்ணாவிரதம் இருந்து தனது இன்னுயிரை ஈந்திருந்தார், ஆனால் போராளியாக இல்லாத ஒருவர் சாதாரணப் பெண்மனி, குடும்பத்தலைவி தன்னை தன் மக்களுக்காக மட்டுமன்றி தனது போராளிகளுக்காகவும் தன்னைத் தற்கொடையாக்கியது என்பதானது ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும்.




தியாகி திலீபனினதும், நாட்டுபற்றாளர் அன்னை பூபதியினதும் ஈகம் தற்கால தலைவர்களுக்கு கூறும் செய்திகள்:

1- போராட்டத்தை எந்த வடிவத்தில் எடுத்தாலும், அதி உச்ச வடிவமாக அப்போராட்டம் அமைய வேண்டும்

2- கொண்ட கொள்கையிலும், அதற்காக போராட்ட வழிமுறைகளிலும் உறுதியாக இருக்க வேண்டும்

3- ஈகங்கள் இன்றி இலட்சியத்தை முன்னோக்கி நகர்த்த முடியாது. ஈகங்கள் மக்களை அணிதிரட்டுவதற்குரிய பேராயுதமாக இருக்கும். ஈகங்களுக்கு பின்நிற்காதீர்.

4- போராட்டமின்றி எந்தவொரு அணுவும் அசையாது. களத்தில் இறங்கிப் போராடுங்கள்.

5- நீங்கள் முன்னின்று போராட்ட காலத்தில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மக்கள் உங்களுக்கு பலமாக நிற்பார்கள்

6- ஜனநாயக வழிப்பட்ட அகிம்சை வழிப் போராட்டங்களும், சில காலகட்டங்களில் தாக்கம் விளைவிக்கக்கூடியவை. தற்போதைய காலகட்டம் அத்தகையதுதான்.

தன் மக்களை காப்பாற்றுவதற்காக உயிரை தருகின்ற போராளிகளின் இலட்சியத்திற்காகத் தன் உயிரை தாரை வார்க்க முன்வந்த அன்னை பூபதியின் தியாகம் நாட்டுப்பற்றாளர்களின் தியாகத்திற்கும், அர்ப்பணிப்பிற்கும் ஓர் குறியீடாகும், அந்த வகையில் அன்னை பூபதியின் நினைவு தினம் என்பதானது "நாட்டுப்பற்றாளர் தினம்" என்று தமிழீழத் தேசியத் தலைமையினால் பிரகடனப்படுத்தப்பட்டது மிகப் பொருத்தமானதாகும்.

அதனை மையப்பொருளாக உள்வாங்கி "நாட்டுப்பற்றாளர்" அன்னை பூபதி அவர்களின் 38வது நினைவு நாளை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நினைவுகூருகின்றது.

மாவீரர்களின் தியாகங்கள், நாட்டுபற்றாளர்களின் தியாகங்கள் வீண்போகக் கூடாது; வீண்போகவிடமுடியாது. அவர்களுடனான வீரநினைவுகளுடனும், தியாக நினைவுகளுடனும், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் பெருவிருப்பான "சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத்தை நோக்கிய எமது பயணத்தை வீச்சத்துடனும், விவேகத்துடனும் தொடருவோம்.

நன்றி
தமிழரின் தலைவிதி தமிழரின் கையில்!
தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்!

விசுவநாதன் ருத்திரகுமாரன் பிரதமர்,
நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்




# பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி சர்வதேச நீதிமன்றில்: மனிதகுலத்திற்கு எதிரான படுகொலை விசாரணை!

– ஐங்கரன் விக்கினேஸ்வரா –

27.04.2026

பிலிப்பைன்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ரோட்ரிகோ டுடெர்டே (Rodrigo Duterte) ஹேக்கில் உள்ள(Hague) சர்வதேச நீதிமன்ற விசாரணைக்காக மணிலாவில் இருந்து விமானம் மூலம் கடந்த வருடம் நாடு கடத்தப்பட்டார்.

அதேவேளை சந்தேகத்திற்குரிய குற்றவாளிகளை தன் கைப்பட கொலை செய்ததாக பிலிப்பைன்ஸ் அதிபர் ரோட்ரிகோ டுடெர்டே ஒத்துக் கொண்டுள்ளது பெரும் அதிர்ச்சியை உலகளாவிய நிலையில் ஏற்படுத்தியது. இவருடைய ஆறு வருட ஆட்சிக் காலத்தில் பல ஆயிரம் மக்களை கொன்றதாக குற்றம் சுமத்தப்பட்டு இன்டபோலால் கைது செய்யப்பட்டார்.

## சர்வதேச குற்றவியல் ICC வழக்கு

போதைவஸ்து குற்றவாளிகளுக்கு எதிரான கடுமையான கொள்கைகளுக்காக (Zero Tolerance) உள்ளூரில் இவர் பெரிதும் புகழ் பெற்றார். அமெரிக்க டைம் இதழ் இவரை "கடுமையாக தண்டிப்பவர்" என பெயரிட்டு சிறப்பிதழை வெளியிட்டது. அவருடன் தொடர்புள்ள பாதுகாப்புக் குழுக்களால் போதை மருந்து கையாளுபவர்கள், குற்றவாளிகள், கும்பல் உறுப்பினர்கள், மற்றும் பிற சட்டவிரோத குழுக்களை தண்டனைக் கொலை செய்ததாக கருதப்படுகின்றது. இருபது ஆண்டுகளுக்கும் மேலான ஆட்சியில் டவாவோ நகரத்தை "பிலிப்பைன்சின் கொலைத் தலைநகரம்" என்பதிலிருந்து "தென் கிழக்கு ஆசியாவின் மிகவும் அமைதியான நகரமாக" மாற்றிய பெருமைக்கு உரியவரானார்.

மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றச்சாட்டுகள் மற்றும் போதைப் பொருள் போரில் நடந்த சட்டவிரோத கொலைகள் தொடர் பாக, இன்டர்போல் (Interpol) உதவியுடன் பின்னர் இவர் கைது செய்யப்பட்டார்.

இவர் பதவியேற்றவுடன், போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையின் பெயரால் ஆயிரக்கணக்கான மக்கள் (போலீஸ் மற்றும் கண்காணிப்புக் குழுவினரால்) கொல்லப்பட்டனர். இது "போதைப்பொருள் போர்" (War on Drugs) என்று அழைக்கப்பட்டது.

தற்போது நெதர்லாந்தில் உள்ள சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) விசாரணையை எதிர்கொண்டு வருகிறார். குற்றவாளியாக நிரூபிக்கப்பட்டால், ஆயுள் தண்டனை பெற வாய்ப்புள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

## சர்வதேச விசாரணை :

பிலிப்பைன்ஸ் நாட்டில் போதைப் பொருள் மீதான கொடிய ஒடுக்குமுறையுடன் தொடர்புடைய மனிதகுலத்திற்கு எதிரான குற்றச்சாட்டை தற்போது எதிர்கொள்கிறார். முன்னாள் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஹாங்கொங்கிற்கான ஒரு தனிப்பட்ட பயணத்திலிருந்து திரும்பிய வேளை மணிலா விமான நிலையத்தில் வைத்து கடந்த வருடம் மார்ச் 11ஆம் திகதி பொலிஸார் கைது செய்தனர்.

81 வயதான அவர் சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் விசாரணைக்கு உட்படும் முதல் ஆசிய முன்னாள் அரச தலைவராக மாறியுள்ளார். தனது நாடுகடத்தலை எதிர்த்துப் போராடிய டுடெர்ட்டே, 2016 முதல் 2022 வரை பிலிப்பைன்ஸை வழி நடத்தினார். டிகொங் என்று அழைக்கப்படும் வழக்கறிஞரான ரோட்ரிகோ டுடெர்டே பிலிப்பைன்ஸின் 16 வது ஜனாதிபதி ஆவார். அவர் 22 வருடங்களுக்கும் மேலாக 1,449,296 மக்கள் தொகை கொண்ட மிண்டானாவோ மாகாணத்தின் டவாவோ நகரத்தின் மாநகரத் தலைவராக பணியாற்றினார்.

அவரே பிலிப்பைன்ஸின் வரலாற்றில் நீண்ட காலம் பணியாற்றிய மாநகரத் தலைவர்களில் ஒருவராவார். அதற்கு முன்பு துணை மாநகரத் தலைவராகவும் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்.

பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாகப் போட்டியிட பலமுறை அவருக்கு வேண்டுகோள் விடப்பட்டும் 2015 வரை தவறான அரசமைப்பு எனக் கூறியும் குடும்ப எதிர்ப்பு காரணமாகவும் செவிமடுக்கவில்லை. இருப்பினும், நவம்பர் 21, 2015ஆண்டில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடிவு செய்தார்.

அவர் ஜனாதிபதி தேர்தலில் 39.01% வாக்குகளுடன் வெற்றி பெற்றார். அவரது துணை ஜனாதிபதி வேட்பாளர் வெற்றிபெறவில்லை. எனவே லிபரல் கட்சியின் லெனி ராப்ரெடோ துணை ஜனாதிபதியானார்.

ஆனால் அக்டோபர் 2021 இல், ரோட்ரிகோ டுடெர்டே 2022 இல் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடவில்லை என்றும் அரசியல் வாழ்க்கையிலிருந்து ஓய்வு பெறுவதாகவும் அறிவித்தார்.

ஆட்சியிலிருந்து விலகிய பின்னரே அவர் மீது பாரிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. நீண்ட காலமாக சட்ட ரீதியாக அவர்



போராடி வந்தார். ஆனால் தற்போது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் (ICC) உத்தரவின் பேரில் மணிலாவில் கைது செய்யப்பட்ட பின்னர், பிலிப்பைன்ஸின் முன்னாள் ஜனாதிபதி ரோட்ரிகோ டுடெர்டே (Rodrigo Duterte) கடந்த ஆண்டு நெதர்லாந்துக்கு நாடு கடத்தப்பட்டார்.

## நான் தான் போட்டுத் தள்ளினேன்

நான் தான் போட்டுத் தள்ளினேன் என ஒத்துக் கொண்ட முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர், சந்தேகத்திற்குரிய குற்றவாளிகளை தன் கைப்பட கொலை செய்ததாக 14 டிசம்பர் 2016இல் தெரிவித்தமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பிலிப்பைன்ஸ் நாட்டின் அதிபராக பதவி வகித்த வேளையில் டுடெர்டே, போதை மருந்து கும்பல்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்து வந்தமை அறிந்ததே.

போதை மருந்து கடத்தலுக்கு எதிராக டாவோ நகரில் பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்தார். டாவோ நகரில் இதற்கென பிரத்யேக படை ஒன்று உருவாக்கப்பட்டு, போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டவர்கள் கொலை செய்யப்பட்டனர்.

மேலும் டுடெர்டே 14டிசம்பர் 2016 மணிலாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில், டாவோ நகரில் போதை மருந்து கடத்தியதாக கருதப்பட்ட பலரை, என் கைப்பட கொலை செய்தேன். நானே இந்த காரியத்தில் இறங்கினால் தான், இதற் கென அமைக்கப்பட்ட காவல்துறை குழுவும் இது போன்ற நட வடிக்கைகளில் தாங்களும் ஈடுபட முடியும் என்ற நம்பிக்கை பிறக்கும். எனவே நான் அவ்வாறு செய்தேன் என அதிர்ச்சியளிக்கும் தகவலை தெரிவித்துள்ளார்.

டுடெர்டோ பிலிப்பைன்ஸ் அதிபராக பதவியேற்றதலிருந்து போதை மருந்து கடத்தலில் ஈடுபட்டதாக கூறி, இதுவரை பல்லாயிரக்கணக்கான பேர் கொலை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதில் சில நகர மேயர்களும் அடங்குவார்கள்.

## அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம்:

அனைத்துலக குற்றவியல் நீதிமன்றம் (International Criminal Court -ICC) நெதர்லாந்தின் டென் ஹேக் நகரில் அமைந்துள்ள ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பு ரீதியான பன்னாட்டு நீதி மன்றம் ஆகும். உலகில் இனப்படுகொலை, மானுடத்துக்கு எதிரான குற்றங்கள், போர் குற்றங்கள் செய்தவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்க உருவாக்கப்பட்டது. இது நாடுகளுக் கிடையேயான தகராறுகளை விசாரிக்கின்ற ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கமான பன்னாட்டு நீதிமன்றத்திலிருந்து வேறுபட்டது.


123 நாடுகள் இந்நீதிமன்றத்தின் உறுப்பினராக இருக்கின்றன, ஆனால் ரஷ்யா, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா போன்ற சில நாடுகள் இந்த அமைப்பை கண்டனம் செய்ததுடன் உறுப்பினராக சேரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பிலிப்பைன்ஸ் முன் னாள் ஜனாதிபதி ரோட்ரிகோ, ஆயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்ததை ஒப்புக் கொண்டுள்ளார். இத்தனைக்கும் தெற்காசிய நாடான பிலிப்பைன்சில் சட்டவிரோத போதைப் பொருள் கலாச்சாரத்தை ஒழிக்கும் முயற்சியிலேயே ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டு எழுந்தது. முன்னாள் ஜனாதிபதி துப்பாக்கியால் பலரை சுட்டுக்கொன்றதாகவும் கூறப்பட்டது. இதையடுத்து நெதர்லாந்து நாட்டின் சர்வதேச நீதிமன்றத்தில் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.

**மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை மேற்கொண்ட ஒரு ஆசிய நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு சர்வதேச நீதிமன்றில் தண்டனை வழங்கப்பட உள்ளது. இதனால் போர்க்குற்றங்களை இழைத்த மற்றய நாடுகளின் தலைவர்களும் அச்சத்தில் உள்ளனர்.**

**முக்கியமாக பர்மா, கம்போடியா, இந்தோனேசியா, சிறீலங்கா போன்ற நாடுகளிலும் பல படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. இந்நாடுகளின் முன்னாள் ஆட்சி-யாளர்களும் , பதவியில் உள்ள தலைவர்களும் பிலிப்பைன்ஸ் தலைவரின் கைதை அடுத்து கதிகலங்கிப் போயுள்ளனர்.**

ரோட்ரிகோ நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்படும்போது அவரது ஆதரவாளர்கள் திரண்டு நின்று கோஷங்களை எழுப்பினர்.




நீதிமன்றில் தன் மீதான குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பேற்பதாக ரோட்ரிகோ டியுடெர்ட் தெரிவித்தார்.

கைதான பின்னர் அவர் நாட்டு மக்களுக்கு பேசுகையில், நான் தான் நம் சட்டம் மற்றும் ராணுவத்தை வழிநடத்தினேன். உங்களை பாதுகாப்பேன் என்று கூறினேன். இதற்கான அனைத்துப் பொறுப்பையும் நானே ஏற்கிறேன் என கூறியிருக்கிறார். தற்போது ரோட்ரிகோ தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதால் அவருக்கு தண்டனை வழங்கப்படும் என்பது உறுதியாகியுள்ளது.

மனித குலத்திற்கு எதிரான குற்றங்களை மேற்கொண்ட ஒரு ஆசிய நாட்டின் முன்னாள் ஜனாதிபதிக்கு தண்டனை வழங்




கப்பட உள்ளது. இதனால் போர்க்குற்றங்களை இழைத்த மற்றய நாடுகளின் தலைவர்களும் அச்சத்தில் உள்ளனர்.

முக்கியமாக பர்மா, கம்போடியா, இநதோனேசியா, சிறீலங்கா போன்ற நாடுகளிலும் பல படுகொலைகள் நிகழ்ந்துள்ளன. இந் நாடுகளின் முன்னாள் ஆட்சியாளர்களும், பதவியில் உள்ள தலைவர்களும் பிலிப்பைன்ஸ் தலைவரின் கைதை அடுத்து கதிகலங்கிப் போயுள்ளனர்.

# தேனிசை பாடிய புலியிசைப் பாடகர்: பாசறைப் பாணர் செல்லப்பா

– நவீனன் –

28.04.2026



தேனிசை செல்லப்பா தமிழீழ விடுதலைப் போராட்ட எழுச்சிப் பாடல்களைப் பாடிய மிக முக்கியக் கலைஞர் ஆவார். 1980-களின் தொடக்கத்தில் காசியானந்தன் பாடல்களைப் பாடி, தனது முதல் ஒலிப்பேழையை வெளியிட்டார். தமிழீழ எழுச்சிப் பாடல்கள், வீரத்தின் வேர்கள், மற்றும் திலீபன் வழியில் வருகின்றோம் போன்ற பல புகழ் பெற்ற எழுச்சிப் பாடல்களை பாடியுள்ளார்.

## ஈழ தேசத்தின் பாடகக் குரல்

ஈழத்தமிழர்களின் விடுதலைக் கனலை மூட்டிய தேனிசை செல்லப்பா மறைவு தமிழ் மக்களிடையே மிகுந்த சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஈழத் தமிழர்களின் விடுதலைக் கனலை மூட்டிய புரட்சிப் பாடகர், பாசறைப் பாணர், தேனிசை செல்லப்பா 28.04.2026 அன்று தனது 85 ஆவது வயதில் காலமானார்.

செந்தமிழா மனம் பொங்குதடா..
சிங்களர் கொடுமை மிஞ்சுதடா..
இதை நேரு பண்டிதரும் பார்க்கவில்லை..
சொந்த ஊரு மந்திரியும் கேட்கவில்லை..
யாரும் துணைக்கிங்கே வரவில்லை..
ஆறுதல் வார்த்தைகள் தரவில்லை
செந்தமிழா மனம் பொங்குதடா..
சிங்களர் கொடுமை மிஞ்சுதடா..

இதனை மேடைதோறும் உணர்ச்சி மேலிடப் பாடினார் செல்லப்பா. இந்த பாடல்களை பாடும் போது ஈழவிடுதலைப் போராட்டம் தீவிரம் அடையவில்லை. அந்த நேரத்தில் தான் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தப்படி இலங்கையிலிருந்து ஐந்து இலட்சம் மலையகத் தமிழர்கள் அகதிகளாக இந்தியாவிற்கு அனுப்பப் பட்டனர்.

அந்த கொடுமைகளை எதிர்த்து அதற்காக ஏ.எல்.நாராயணனை வைத்து ஒரு பாடலை எழுதி செல்லப்பாவைப் பாட வைத்தார் தமிழ் அறிஞர் ஆதித்தனார். அன்றிலிருந்து தமிழுக்காக பாடத் தொடங்கிய குயில் ஈழப் போராட்ட வரலாற்றில் தேனிசைக் குயிலாகவே என்றும் பறந்து வந்தது.

குண்டு விழுந்தாலென்ன..
வீடு குலுங்கி இடிந்தாலென்ன.
உடல் துண்டு பறந்தாலென்ன..
நாங்கள் துடித்து மடிந்தாலென்ன..
தமிழீழத் தாகம் தணியாது...

எங்கள் தாயகம் யாருக்கும் பணியாது என முழங்கிய ஈழக் கனவின் நெருப்புப் பிழம்பாய் முழங்கிய தேனிசை செல்லப்பாவின் குரலைக் கேட்டவர் யாரும் மறந்துவிட முடியாது.

மௌனிக்கப்பட்ட ஈழப் போராட்ட வரலாற்றில் இன்னும் காற்றில் வீசிடும் ஒவ்வொரு கணங்களிலும் அவரது உயிர்க்குரல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.



**தன்னுடைய எழுத்து, இசை, குரல் என்று யாவற்றையும் தாயக விடுதலைக்கு ஒப்புவித்து, வாழ்நாள் முழுவதும் தமிழ் மண்ணிற்கும், மக்களுக்காகவுமே வாழ்ந்து மறைந்த போற்றுதற்குரிய பெருமகனே தேனிசை செல்லப்பா ஆவார். மௌனிக்கப்பட்ட ஈழப் போராட்டத்தில் இன்னும் தாயகக் காற்றில் வீசிடும் ஒவ்வொரு கணங்களிலும் அவரது உயிர்க்குரல் ஒலித்துக் கொண்டே இருக்கிறது.**

## திருநெல்வேலி தந்த செல்லப்பா

திருநெல்வேலி மாவட்டம் தென்காசி அருகிலுள்ள சிங்கிலிப்பட்டி என்னும் ஊரில் பிறந்தவர் செல்லப்பா. பதினோராவது வயதில் தன் தந்தையை இழந்த அவர்மேல் குடும்பச்சுமை ஏறியது. இளம் வயதிலேயே தனது பாட்டுத்திறன் மூலம் குடும்ப சுமையை ஏற்றுக் கொண்டார்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் அப்போதைய நாம் தமிழர் கட்சியின் தலைவர் சி.பா.ஆதித்தனாரோடு சேர்ந்து மன்னார் குடியில் பட எரிப்புப் போராட்டத்திற்கு பெரியார் ஏற்பாடு செய்திருந்தார். இந்திய தேசப்படத்தை எரிப்பதுதான் போராட்டம், போராட்ட மேடையில் எம்.ஆர்.ராதாவின் நாடகமும் நடப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

போராட்ட மேடையில் பாட்டுக் கச்சேரி ஒன்றை நடத்த ஆதித்தனார் விரும்பினார். அதற்குப் பாடகர்கள் யாரும் வராத நிலையில் செல்லப்பா மேடை யேற்றப்பட்டார். அவரது பாடல், பிடித்துப்போன ஆதித்தனார் செல்லப்பாவை நாம்தமிழர் கட்சியின் முழு நேரப் பாடகராக நியமித்து கட்சி அலுவலகத்திலேயே தங்க வைத்தார். அங்கிருந்தபடியே நாம் தமிழர் கட்சி மேடைகளிலும், திராவிடர் கழக மேடைகளிலும் பாடிக் கொண்டிருந்தார் செல்லப்பா.

## ஈழ விடுதலை திசை நோக்கி

தொடர்ந்து திராவிட இயக்க மேடைகளில் பாடிக்கொண்டிருந்த செல்லப்பாவின் குரல் ஈழ விடுதலைப் போராட்டத்தின் திசை நோக்கியும் எதிரொலித்தது. சென்னையில் ஒலிப்பதிவு செய்யப் பட்ட பாடல்கள் பிரதியெடுக்கப்பட்டு ஈழத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டன.

அங்கு களத்தில் இயங்கிய போராளிகளிடமும், பொது மக்களிடமும் அவை பெரும் வரவேற்பைப் பெற்றன.

வாருங்கள் புலிகளே தமிழீழம் காப்போம்
வாழ்வா சாவா ஒருகை பார்ப்போம்
முந்தை எங்கள் தந்தை வாழ்ந்த முற்றமல்லவா
முடிசுமந்து நாங்கள் ஆண்ட கொற்றமல்லவா
இந்த மண்ணின் மக்கள் எங்கள் சுற்றமல்லவா
தமிழீழ மண்ணை மறந்து வாழ்தல் குற்றமல்லவா

என்ற பாடல் மேதகு பிரபாகரனின் பெருவிருப்பத்திற்குரிய பாடலாகும்.

## ஈழத்தில் இசை யாத்திரை

1990ஆம் ஆண்டு தேனிசை செல்லப்பா ஈழத்திற்கு அழைக்கப் பட்டார். யாழ் கோட்டை மைதானத்தில் ஐந்து இலட்சம் மக்கள் முன்னிலையில் அவரது கச்சேரி நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து எட்டு மாவட்டங்களில் அவரது கச்சேரி சிறப்பாக நடைபெற்றது, சாவகச்சேரியில் நடைபெற்ற கச்சேரிக்கு மேதகு பிரபாகரன் நேரில் வந்திருந்ததை நெகிழ்வோடு குறிப்பிடுகிறார் செல்லப்பா.

அதன்பிறகு உலகெங்கும் தமிழர் வாழும் இடங்களிலெல்லாம் தேனிசை செல்லப்பாவின் குரல் கச்சேரிகள் நடந்திருக்கின்றன. ஆனால் பெருந்தொகை கொட்டிக் கொடுத்த போதும் கொள்கைக்கு முரணான மேடையேற மறுத்துவிட்டார் செல்லப்பா. அதனைப் போலவே திரையிசைப் பாடல்களிலும் அவர் கவனம் ஆர்வம் காட்டவில்லை, கடைசி வரைக்கும் இனத்தின், மொழியின் உணர்வெழுச்சிப் பாடல்களே போதும் என்கிறார் தேனிசை என்னும் புலியிசைப்பாடகர்.

நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்
நாட்டின் அடிமை விலங்கு தெறிக்கும்
போரில் வெற்றி முரசம் முழங்கும்
புலிகள் கழுத்தில் மாலை துலங்கும்

இப்படியாக உத்தேச தமிழீழத்தின் உதயத்தைப் பற்றிய பூரண நம்பிக்கையைத் தரும் கவிஞர் காசி ஆனந்தனின் பாடலைத் தனது மதுரக்குரலால் மக்களுக்கு எடுத்துக் கூறி வந்தவர் தேனிசை செல்லப்பா அவர்களாகும்.

ஈழத்தின் பெருங்கவி காசி ஆனந்தனால் இயற்றப்பட்ட கவிதைகளுக்கு தேனிசை செல்லப்பா அவர்கள் இசைவடிவம் கொடுத்து மேடைகள் தோறும் பாடி தமிழக மக்கள் மத்தியில் தமிழ் உணர்வையும் விழிப்புணர்ச்சியையும் வளர்த்து வந்ததோடு ஈழத் தமிழர்களது அபிலாஷைகளையும் இசைவடிவில் எடுத்துச் சொல்லலானார்.

தமிழகத்தின் கிராமங்கள், நகரங்கள் தோறும் தேனிசை செல்லப்பா அவர்களது நாவசைவில் காசி ஆனந்தன் பாடல்கள் நாத வடிவாகப் பிரவாகிக்கலாயிற்று.

மறவர் படைதான் தமிழ்ப்படை - குல
மானம் ஒன்றுதான் அடிப்படை
வெறிகொள் தமிழர் புலிப்படை - அவர்
வெல்வார் என்பது வெளிப்படை

இந்தப் பாடல் அறுபதுகளில் தமிழகத்தில் பிரபல்யமாகக் காரணமாக இருந்தவர் தேனிசை செல்லப்பா அவர்களாகும். அறுபதுகளில் தமிழகத்தில் பிரபலமான இப்பாடல் எழுபதுகளில் ஈழத்திலும் பிரபலமடையலாயிற்று.

தேனிசை செல்லப்பாவின் முக்கிய தமிழீழ விடுதலைப் போராட்ட எழுச்சிப் பாடல்கள் இன்னமும் மக்கள் மனதில் இடம் பிடித்துள்ளது. 1980-களின் தொடக்கத்தில் காசியானந்தன் அவர்களின் பாடல்கள் மூலம் அறிமுகமான அவரது பிரபலமான பாடல்கள் அனைத்தும் அவரது இசைத் திறமையை வெளிப்படுத்தி வந்தன.

விடுதலைப் போர் முரசு, புதுவேட்டு புலிப்பட்டு, புலிகள் ஓய்வதில்லை, கொடி பறந்த தேசம், வலிகளின் மொழி போன்ற பாடல்களை தமிழீழக் கலை பண்பாட்டுக்கழகத்தின் மூலம் பல பாடியுள்ளார். அவரது பாடல்கள் தமிழீழ விடுதலைப் போராட்ட உணர்வுகளை வெளிப்படுத்தும் முக்கிய கலைப்படைப்புகளாகக் கருதப்படுகின்றன. தன்னுடைய எழுத்து, இசை, குரல் என்று யாவற்றையும் தாயக விடுதலைக்கு ஒப்புவித்து, வாழ்நாள் முழுவதும் தமிழ் மண்ணிற்கும், மக்களுக்காகவுமே வாழ்ந்து மறைந்த போற்றுதற்குரிய பெருமகன், பாசறைப் பாணர் ஐயா தேனிசை செல்லப்பா அவர்களுக்கு புகழ் வணக்கம் உரித்தாகட்டும்.

# வீரவணக்கம்



பாசறைப் பாணர்

## தேனிசை செல்லப்பா

செல்லப்பா சுப்பிரமணியம்

*சிங்கிலிப்பட்டி, தென்காசி . தமிழ் நாடு*

*பிறப்பு: 21.4.1941 மறைவு: 28.04.2026*

**28.04.2026 அன்று இயற்கை எய்திய பாசறைப் பாணர் தேனிசை செல்லப்பா அவர்களுக்கு உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் விழிநீர் வணக்கம்**

எங்கள் இயக்கத்தின் வளர்ச்சிக்கு உரமளித்த விடுதலைக் கீதங்களை உணர்வோடு உரக்கப் பாடிய பாவலர் தேனிசை செல்லப்பா அவர்களின் மறைவு செய்தி எம்மை ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. இது எமது இயக்கத்திற்கும் உலகத் தமிழருக்கும் பேரிழப்பாகும்.

பாரத தேசத்தில் மட்டுமன்றி புலம்பெயர் நாடுகளிலும் தனது மகன், மகளுடன் இணைந்து பயணம் செய்து, தனது தேனிசைக் குரலால் விடுதலை உணர்வுகளை மக்களிடையே விதைத்தவர் அவர். அவரது பாடல்கள் மக்களின் உள்ளங்களில் எழுச்சியையும் உணர்வையும் உருவாக்கியவை.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிகழ்வுகளில், “நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்” என்ற பாடல் ஒலிக்காமல் எந்த நிகழ்வும் நிறைவடையாத அளவுக்கு அவரது குரல் இயக்கத்துடன் ஒன்றிணைந்தது. அந்தப் பாடலின் மூலம் அவர் எமது போராட்டத்தின் நம்பிக்கைக் குரலாக விளங்கினார்.

மேலும், எமது இயக்கத்தின் வரலாறுகள், போராளிகளின் வீரச் செயல்கள், மாவீரர்களின் தியாகங்கள் ஆகியவற்றை உலகறியச் செய்தவர் அவர். உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் எழுதிய வரிகளுக்கு உயிர் ஊட்டிய சிந்தனையாளரும் இவரே.

எமது தலைவரை நேரில் சந்தித்து பாராட்டுகளை பெற்றது அவருக்கு கிடைத்த பெரும் பாக்கியம் ஆகும். அவர் எமது இயக்கத்தாலும் உலகத் தமிழராலும் மதிக்கப்பட்டவர்.

பாவலர் தேனிசை செல்லப்பா அவர்களின் இழப்பு உலகத் தமிழினத்திற்கும் பாரத தேசத்திற்கும் மட்டுமல்ல, எமது விடுதலை இயக்கத்திற்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

அவரது மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

உலகத் தமிழர் ஒருங்கிணைப்புக் குழு World Tamil Coordination Committe (WTCC)
Bahnhofstrasse 8, 8447 Dachsen, Switzerland
info@wtcc.co
079 967 84 47



# தமிழீழ விடுதலை வரலாற்றில் மே



## தமிழினப் படுகொலை ஆரம்பம்:

22.05.1958 அன்று ஒரு தொடரூந்தில் பயணம் செய்துகொண்டிருந்த 500ற்கும் மேற்பட்ட தமிழர்களை சிங்களக் காடையர்கள் தாக்கி இனக் கலவரத்தை ஆரம்பித்தனர். அப்போதைய சிறீலங்காப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவினது குண்டர்களாலும், சிங்களக் காவல்துறையினராலும் தமிழர்களது வீடுகள், உடமைகள் யாவும் அழிக்கப்பட்டன. 300 தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.





## தமிழீழ விடுதலைப் புலிகள் என்று பெயர் சூட்டப்பட்ட நாள்:




1972ம் ஆண்டில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களினால் “புதிய தமிழ்ப் புலிகள்” என்ற பெயரில் உருவாக்கப்பட்டு வழிநடத்தப்பட்டு வந்த புலிகள் இயக்கம் “தமிழீழ விடுதலைப் புலிகள்” எனப் பெயர் மாற்றம் பெற்று இயங்கத் தொடங்கிய நாள் 05.05.1976 .

## யாழ். நூலகம் எரிக்கப்பட்ட நாள்

மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தலுக்கென வந்திருந்த அமைச்சர்களான காமினி திசநாயக்கா மற்றும் சிறில் மத்தியு முதலானவர்கள் தலைமையிலான சிங்களக் காடையர்களால் தமிழ் மக்களின் பண்பாட்டு அறிவுப்பெட்டகம் 31.05.1981 அன்று தீ மூட்டி எரிக்கப்பட்டது. தென்னாசியா விலேயே அதிக நூல்களைக் கொண்டதும் சுமார் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான பண்டைய நூல்களையும் ஏட்டுச் சுவடிகளையும் கொண்ட அழகிய அரிய கலைக்கருவூலத்தை சிங்களக் காடையர்கள் எரியூட்டி, சிங்களத்தின் எண்ணம் தமிழின அழிப்பு ஒன்றையே நோக்காகக் கொண்டது என்பதை புலப்படுத்தினர்.




## கந்தர் மடம் வாக்குச்சாவடித் தாக்குதல்

18.05.1985 அன்று நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலின் போது கந்தர் மடம் தேர்தல் சாவடியில் காவலில் ஈடுபட்ட இராணுவத்தினர் மீதும், பொலிசார் மீதும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட 10 நிமிட அதிரடித் தாக்குதலில் இராணுவக் கோப்ரல் ஜெயவர்த்தனா கொல்லப்பட்டான். ஒரு இராணுவக் கோப்ரலும், 2 பொலிசாரும் காயமுற்றனர்.

## லெப்டினன் சீலனைக் காட்டிக்கொடுத்த பொலிஸ் அதிகாரி அழிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாவது தாக்குதலணித் தளபதியான லெப்டினன் சீலனின் மறைவிற்குக் காரணமாக விளங்கிய இனத் துரோகி பொன்னையா சுப்பிரமணியம் 04.05.1984 அன்று மீசாலையில் வைத்து விடுதலைப் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டான்.

## விடுதலைப் புலிகளில் முதன் முதல் சயனைட் அருந்தி வீரச்சா வடைந்த புலிவீரன் பகீன் [செல்வம்] அவர்களின் 42ஆம் ஆண்டு வீர வணக்க நாள் 18.05.1984



விடுதலைப் புலிகளின் வரலாற்றில் எதிரியிடம் உயிருடன் பிடிபடக்கூடாது என்ற மரபுக்கமைய முதன் முதலின் சயனைட் அருந்தி வீரச்சாவடைந்த புலிவீரன் வீரவேங்கை பகீன் (வேலுப்பிள்ளை அன்னலிங்கம் பகீரதன், பிறப்பு: 02.05.1959 - மண்டைதீவு, யாழ்). வல்வெட்டித்துறையில் நடந்த ஒரு திடீர் சுற்றிவளைப்பின் போது இந்த வரலாற்று நிகழ்வு நடந்தது.

## மன்னார் சிறீலங்காப் பொலிஸ் நிலையத் தகர்ப்பு

10.05.1985 தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதலணிகளால் மன்னார் பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது. வெற்றிகரமாக நடந்து முடிந்த இத் தாக்குதலின்போது, மன்னார் பொலிஸ் நிலையத்தின் 7 கட்டிடங்கள் தகர்க்கப்பட்டன. பெருமளவிலான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பல பொலிசார் கொல்லப்பட்டனர்.

## வல்வெட்டித்துறைப் படுகொலை

09.05.1985 அன்று வல்வெட்டித்துறை நகர்பகுதியை சுற்றிவளைத்த சிறிலங்காப் படையினர் பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் உட்பட 50 பொதுமக்கள், பொது நூல் நிலையத்தினுள் அடைத்துவைக்கப்பட்டு குண்டுவைத்துக் கொல்லப்பட்டனர். தெருக்களில் வைத்தும் பொது மக்கள் சுட்டும் வெட்டியும் கொல்லப்பட்டனர். எல்லாமாக 90 பொது மக்கள் ஜே.ஆரின் ஆயுதப் படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.



## சிங்களப் படை அதிகாரி மேஜர் சிறிலால் மெண்டிஸ் பலி

12.05.1985 அன்று உடுப்பிட்டி பேரூந்து நிலையத்தினுள் தமிழின அழிப்பிற்கென தயாராக இருந்த சிங்களப்படையினர். மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட எறிகுண்டுத் தாக்குதலில் மேஜர் சிறிலால் மெண்டிஸ் உட் பட ஐவர் கொல்லப்பட்டனர்.

## வவுனியாவில் இந்தியச் சிறையுடைப்பு

01.05.1989 அன்று வவுனியாவில் இருந்த இந்தியப் படையினரின் சிறையை உடைத்து அங் கிருந்த போராளிகளும் பொதுமக்களுமாக 42 பேர் தப்பினர். இச்சிறையுடைப்பு நடவடிக்கையில் இரு போராளிகள் உட்பட நான்கு தேசத்தின் புதல்வர்கள் வீரச்சாவடைந்தனர்.

## லெப். கேணல் நவம் [டடி] அவர்களின் 37ஆம் ஆண்டு வீரவணக்க நாள்






விடுதலைப் புலிகளின் முதன் நிலைத் தளபதிகளுள் ஒருவரான நவம் (செல் லப்பெருமாள் அருமைராசா, பிறப்பு: 02.02.1961 - கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு), கை ஒன்றை இழந் திருந்த நிலையிலும் இந்திய படையின ருக்கு எதிரான புகழ்பெற்ற மணலாற் றுச் சமரில் முக்கிய பங்கு வகித்தார். முல்லை மாவட்ட தளபதியாக நியமிக் கப்பட்டிருந்த போது நெடுங்கேணி பாட சாலை இந்திய முகாம் மீதான பிரசித்தி பெற்ற தாக்குதலின் போது விழுப் புண்ணடைந்து பண்டுவத்திற்காக சென்றபோது தமிழகத்தில் 15.05.1989 அன்று வீரச்சாவடைந் தார். போரில் உறுப்புக்களை இழந்த போராளிகளின் தொழில் நுட்ப பயிற்சிக் கல்லூரிக்கு இவர் நினைவாக இவரது பெயரைச் சூட்டினார் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள்.

## அபித்தா கப்பல் தகர்ப்பு: இரு கரும்புலிகள் வீரச்சாவு

கடலில் பல போராளிகளினது அழி வுக்கும் பல பொதுமக்களது அவல இறப்பிற்கும் காரணமாக இருந்த அபித்தா கட்டளைக் கப்பல் 04.05. 1991 அன்று கடற் கரும்புலிகள் கப்டன் ஜெயந்தனன் (சம்புக்குட்டி பத்மநாதன், பிறப்பு: 05.01.1972 - சோதிபுரம் மட்டு), கப்டன் சிதம்பரம் (பெரியதம்பி சந்திரன், பிறப்பு: 26.12. 1972 - வல்வெட்டித்துறை, யாழ்) ஆகியவல்களால் அழிக்கப்பட்டது.


கப்டன் ஜெயந்தன்


கப்டன் சிதம்பரம்





## இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார் [21.05.1991]

இந்திய அமைதிப் படையை தமிழீழத்திற்கு அனுப்பி, 8000 தமிழர்கள் கொல்லப்படுவதற்கு காரணமாக இருந்த இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி 21.05.1991 அன்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். இவரால் அனுப்பிவைக்கப்பட்ட படைகளால் தமிழீழத்தின் பல கோடிப் பெறுமானமுள்ள சொத்துக்கள் அழிக்கப்பட்டன. ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

## தமிழீழ வைப்பகம் ஆரம்பம்

23.05.1994 அன்று தமிழீழ நிர்வாகக் கட்டமைப்புகளில், ஒன்றான தமிழீழ வைப்பகம் திறந்துவைக்கப்பட்டது.



யாழ் நகரில் முதலாவது தமிழீழ வைப்பகத்தை தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் திறந்து வைப்பதையும், அருகில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், தமிழீழக்காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசன், அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் கரிகாலன், நிதிப்பொறுப்பாளர் தமிழேந்தி ஆகியோருடன் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஒரு பகுதி மக்களையும் மேலுள்ள படத்தில் காணலாம்.



## லெப். கேணல் பாக்கியராஜ் அவர்களின் 29ஆம் ஆண்டு வீரவணக்க நாள்


ஜெயசிக்குறுய் களத்தில் விடுதலைப்புலிகளின் பலமான எதிர்த் தாக்குதலுக்கு வலுச்சேர்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை புளியங்குளம் - பழைய வாடிப்பகுதியில் 12.05.1997 அன்று சிறிலங்காப் படையினரின் பதுங்கித் தாக்குதலில் போது லெப். கேணல் பாக்கியராஜ் (பாலச்சந்திரன் அழகேந்திரன், பிறப்பு: 07.06.1971 - வவுனியா)வீரச்சாவடைந்தார்.



## லெப். கேணல் ரத்தி அவர்களின் 29ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

புலிகளின் கதை முடிகிறது எனக் கூறிக்கொண்டு "வெற்றி உறுதி" எனப் பெயரிட்டு பெரும் படைக்கல ஒருங்கிணைப்புடன் தொடங்கப்பட்ட ஜெயசிக்குறுய் படை யெடுப்புத் துருப்புக்கள் மீது நெருங்கேணிப் பகுதியில் 15.05.1997 அன்று நடாத்தப்பட்ட எதிரித் தாக்குதலின் போது மாலதி படையணியின் துணைத் தளபதி லெப். கேணல் ரத்தி (கிருஸ்ணபிள்ளை சுபாஜினி, பிறப்பு: 30.06.1975 - கரவெட்டி, யாழ்) வீரச்சாவடைந்தார்.

## 27.05.1997 அன்று முல்லைக் கடற்பரப்பில் ஏற்பட்ட வெடிவிபத்தின் போது வீரச்சாவடைந்த கடற்கரும்புலிகளின் வீரவணக்க நாள்



மேஜர் இளமகன்



மேஜர் அன்பு

27.05.1997 அன்று முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்கரும்புலிப் படகுகளுக்கிடையே ஏற்பட் வெடி விபத்தின் காரணமாக 8 கடற் கரும்புலிகளான மேஜர் இளமகன் (தருமலிங்கம் திருக்கணேசன், பிறப்பு: 01.01.1973 - ஆரயம்பதி, மட்டு), மேஜர் அன்பு (முத்து வேல் ரவீந்திரன், பிறப்பு: 06.10.1973 - முரங்கள், மன்னார்), மேஜர் சந்திரா (தம்புசெபஸ்ரியான் மரியகொறட்டி, பிறப்பு: 19.12.1975 - குருநகர், யாழ்), மேஜர்



மேஜர் சந்திரா



மேஜர் வினோதா



மேஜர் வலம்புரி

வினோதா (தேவ சிகாமணி விஜயகுமாரி, பிறப்பு: 12.09.1976 -வல்வெட்டித்துறை, யாழ்) மேஜர் வலம்புரி (கைலாசம்பிள்ளை புஸ்பாவதி, பிறப்பு: 18.01.1977 - அநுராதபுரம்), கப்டன் சித்தா (பாலசிங்கம் சித்றூபன், பிறப்பு: 10.11.1969 - சுழிபுரம், யாழ்), கப்டன் அருளரசன் (துங்கராசா தியாகராசா, பிறப்பு: 27.03.1977 - களுதாவளை, மட்டு), கப்டன் சுதாகர் (கனகசபை அருள்,



கப்டன் சித்தா



கப்டன் அருளரசன்



கப்டன் சுதாகர்

பிறப்பு: 25.03.1977 - மொறக்கொட்டாஞ்சேனை, மட்டு) ஆகிய கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.



## லெப் கேணல் சுகந்தன் அவர்களின் 29ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

ஜெயசிக்குறுய் களத்தில் புலிகளின் பலமான எதிர்த்தாக்குதலுக்கு வலுச்சேர்க்கும் செயற்பாட்டில் ஈடுபட்டிருந்த வேளை கோதண்ட நொச்சிக்குளம் பகுதியில் 30. 05.1997 அன்று சிறிலங்கா படையினரின் பதுங்கித் தாக்குதலின் போது லெப். கேணல் சுகந்தன் (கணபதிப்பிள்ளை உதயகாந்தன், பிறப்பு: 26.08.1974, - 3ம் வட்டாரம், முள்ளியவளை, முல்லைத்தீவு) வீரச்சாவடைந்தார்.



## லெப். கேணல் விமல் [அப்பன்] அவர்களின் 28ஆம் ஆண்டு வீர வணக்க நாள்

01.05.1998 அன்று திருகோணமலை சூரன்கல் பகுதியில் சிறீலங்காப் படையினர் பதுங்கியிருந்து நடத்திய தாக்குதலில் லெப். கேணல் விமல் (ஆயுமுகம் பரமேஸ்வரன், பிறப்பு: 14.04.1968 - திருவையாறு, கிளிநொச்சி) அவர்கள் வீரச்சாவடைந்தார்.



## லெப் கேணல் பிரசாந்தன் அவர்களின் 27ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

புல்மோட்டைக் கடற்பரப்பில் சிறீலங்கா கடற்படையுடன் இடம்பெற்ற நேரடி மோதலில் 25.05.1999 அன்று லெப். கேணல் பிரசாந்தன் (வின்சன் ஜெயச்சந்திரன், பிறப்பு: 07.07.1974 - தர்மபுரம், கிளிநொச்சி) போது வீரச்சாவடைந்தார்.



மேஜர் அரசப்பன்

## கரும்புலி மேஜர் அரசப்பன் அவர்களின் 27 ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

சிறீலங்கா இனவாத இராணுவத்துடன் இணைந்து தமிழின அழிப்பில் தீவிரமாய் ஈடுபட்டிருந்த தேசவிரோதி ராசீக் 29.05.1999 அன்று கரும்புலி வீரரால் அழிக்கப்பட்டான். மட்டு, அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் மீது நடந்துவந்த காணாமல் போதல், கொலை, கைது, சித்திரவதை என்பவற்றிற்கு காரணமாய் இருந்த துரோகி ராசீக்ஐ மட்டக்களப்பு நகரில் வைத்து அழித் தொழிக்கும் புனிதப் பணியேற்று அதனை வெற்றியுடன் செய்து முடித்து மேஜர் அரசப்பன் (மயில்வாகனம் அருட் செல்வன், பிறப்பு: 06.11.1978 - சந்திவெளி, மட்டு) வீரச் சாவடைந்தார்.

## ஓயாத அலைகள்-03 மே மாதத்தில் நகர்வு:

10.05.2000 அன்று நாவற்குழிப் பாலம் மீட்கப்பட்டது. 11.05.2000 அன்று தென்மராட்சிக் கோட்டத்தில் கோயிலாக்கண்டி தனங்கிளப்பு படைத்தளங்கள் கைப்பற்றப்பட்டன. யாழ். மாநகரை நோக்கிய நகர்வில் அரியாலைப் பிரதேசம், கொழும்புத்துறை இறங்குதுறைப் பகுதி கைப்பற்றப்பட்டது. 16.05.2000 அன்று தச்சன்தோப்பு நாவற்குழிப் பகுதி படை முகாம்கள் தகர்க்கப்பட்டன. ஓயாத அலைகள் -03 படையணிகளால் கைதடிச்சந்தியில் அமைந்திருந்த இராணுவத்தளம் விடுவிக்கப்பட்டது. 20.05.2000 ஓயாத அலைகள் -03 படையணிகளால் தென்மராட்சியின் தலைநகர் சாவகச்சேரி மீட்கப்பட்டது.



## கேணல் ரமணன் அவர்களின் 20ஆம் ஆண்டு வீரவணக்க நாள்



மட்டக்களப்பு மாவட்டத் துணைத் தளபதி கேணல் ரமணன் (கந்தையா உலகநாதன், பிறப்பு: 14.10.1965 - திருப்பளுகாமம், மட்டு) 21.05.2006 அன்று வவுணதீவு பகுதியில் அமைந்திருந்த விடுதலைப் புலிகளின் முன்னரங்க பாதுகாப்பு நிலைகளைப் மேற்பார்வை செய்து கொண் டிருந்தவேளை சிறீலங்கா இராணுவம் போர் நிறுத்த புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறி மேற் கொண்ட குறிசூட்டுத் (சினைப்பர்) தாக்குதலில் வீரச் சாவடைந்தார். தேசியத் தலைவரின் கெரில் லாத் தந்திரோ பாயங்களுக்கு மிகச் சிறந்த முறையில் களநிலை வடிவம் தந்தவர் களில் ரமணனும் ஒருவர். எந்தப் பொருள் எப்போது வெடிக்கும் எங்கிருந்து சன்னங்கள் கிளம்பும் என்று இரவும் பகலும் எதிரியை ஏங்கவைத்த பெருமை ரமணனுக்கே உண்டு.

## சமர்க்கள நாயகன் பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் 18ஆம் ஆண்டு வீரவணக்க நாள்

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் 1984 இல் தன்னை இணைத்துக்கொண்ட இவர், ஓர் ஆற்றல் மிக்க ஆளமை மிக்க இலட்சியப் போராளியாக தேசியத் தலைவர் அவர்களால் வளர்த்தெடுக்கப்பட்டவர். மணலாற்றுப் பகுதி கட்டளைத் தளபதியாகவும், சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் முதல் தளபதியாகவும், விடுதலைப் புலிகளின் இராணுவத் துணைத் தளபதியாகவும் செயலாற்றியவர். மகத்தான இமாலய இராணுவ வெற்றிகள் பலவற்றுக்கு நடு நாயகமாக நின்று சண்டையணிகளையும் மரபுப் படையணிகளையும் வழிப்படுத்தி நெறிப்படுத்தி சமராடிய தலைசிறந்த போர்த் தளபதியாக பிரகேடியர் பால்ராஜ் / லீமா (பாலச்சேகரம் கந்தையா,



பிறப்பு: 27.11.1965 - கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு) கடைசிவரை தகிழ்ந்தவர். 20.05.2008 அன்று சுகவீனம் காரணமாக வாவடைந்தார்.




## பிரிகேடியர் சொர்ணம் அவர்களின் 17 ஆம் ஆண்டு வீரவணக்க நாள்



15.05.2009 அன்று முள்ளிவாய்க்கால்ப் பகுதியில் சிறீலங்கா படைகளுக் கொதிரான நடவடிக்கையின் போது பிரிகேடியர் சொர்ணம் (ஜேசப் அன்ரனிதாஸ், பிறப்பு: 08.04.1964 – மானிப்பாய், யாழ்) வீரச்சாவு

## பிரிகேடியர் பிரிகேடியர் சசிகுமார் அவர்களின் 17 ஆம் ஆண்டு வீரவணக்க நாள்



தமிழீழ விடுதலைப் புலிகளின் முதன்மைத் தளபதிகளில் ஒருவராக விளங்கிய சசிகுமார் ‘சசி மாஸ்டர்’ என்று அழைக்கப்படும் பிரிகேடியர் சசிகுமார் அவர்கள் 15.05.2009 அன்று முள்ளிவாய்க்கால் பகுதியில் சிறீலங்காப் படையினருடனான மோதலின்போது வீரச்சாவு


## தமிழின இனப்படுகொலையின் உச்ச நாள் மே 18

சர்வதேச நாடுகளின் துணையுடன், தேசத் துரோகிகளினதும், தமிழீழ விரோதிகளினதும் முழுமையான ஒத்துழைப்புடன் பொய்மை புனைந்து உலகை ஏமாற்றி தன்னை நியாயப்படுத்தியபடி வீரமிக்க தமிழீழ தேசத்தை சிங்கள இன வெறியரசு கோழைத்தனமாக ஆக்கிரமித்துக்கொண்ட நாள் மே 18. 21ஆம் நூற்றாண்டில் மனிதம் அதன் உரிமைகள் பற்றிய புதிய கருத்தேற்றங்கள் சபைகள் தோறும் நிறைந்து விரவிக்கிடக்க இலட்சக்கணக்கான ஈழத் தமிழர்களை பலிகொண்டு பல்லாயிரம் தமிழர்களை அங்கவீனர்களாக்கி மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்களை கைதியகளாக்கி அடைத்து வைத்தபடி தமிழீழத்தை சிங்கள பௌத்த தேசம் முழுமையாக ஆக்கிரமித்துக் கொண்டது.













# முள்ளிவாய்க்கால் நினைவு நாள்

# Mullivaikkal Remembrance Day

**17** Years Mullivaikkal
Eelam Thamil Genocide
Remembrance Day
ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால்
18.05.2026 ஈழத்தமிழின அழிப்பு நினைவு நாள்

2009 ஆம் ஆண்டு, 146,679க்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் கொல்லப்பட்டனர், மேலும் 70,000க்கும் மேற்பட்ட தமிழர்கள் இன்று வரை காணாமல் போயுள்ளனர். சிறீலங்கா அரச படைகளால் 95,000க்கும் மேற்பட்ட தமிழ் பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர், மேலும் 50,000க்கும் மேற்பட்ட தமிழ் குழந்தைகள் அனாதைகளாகினர்.

In 2009, over 146,679 Eelam Thamils were killed and more than 70,000 Thamils remain unaccounted for. Over 95,000 Thamil Women were widowed by the Sri Lankan Government Forces, and more than 50,000 Thamil Children were Orphaned.

1948 ஆம் ஆண்டிலிருந்து, ஈழத் தமிழர்களுக்கு எதிரான கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு சிறீலங்கா அரசால் நடைபெற்று வருகிறது

Since 1948, Structural Genocide has Continued Against Eelam Thamils by the Sri Lankan Government

**2009 மே May 18**

## ஈழத்தமிழர் இனப்படுகொலை நாள்

## Eelam Thamil GENOCIDE DAY

## தமிழர் தேசிய துக்க நாள்

## Thamil National MOURNING DAY



**The Genocide of Thamils in Ceylon was one of the biggest tragedies of the 21st century, yet the World remains Silent.**

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற இனப்படுகொலை, 21ஆம் நூற்றாண்டின் மிகப் பெரிய துயரங்களில் ஒன்றாகும், இருப்பினும் உலகம் இன்னும் மௌனமாக உள்ளது.

We urge the Government of Canada & the United Nations Recognize Thamil Eelam Genocide and demand an International Investigation into the Genocide of Eelam Thamils

கனடா அரசு மற்றும் ஐக்கிய நாடுகள் சபை, ஈழத்தமிழர் இனப்படுகொலையை அங்கீகரித்து, அதற்கான சர்வதேச விசாரணையை நடத்த வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம்.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of Thamils is the Homeland of Thamileelam" சங்கத்தமிழ்